குடகு

ஏ.கே. செட்டியார்

தமிழ் வளர்ச்சித் துறை

குடகு

ஏ.கே. செட்டியார்

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர், சென்னை - 600 008.

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	குடகு
ஆசிரியர்	:	ஏ.கே. செட்டியார்
வெளியீட்டாளர்	:	இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம் எழும்பூர், சென்னை-600 008
பதிப்புரிமை	:	தமிழ்நாடு அரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	2017
விலை	:	100
பக்கம்	:	152
படிகள்	:	1500
தாள்	:	70 ஜிஎஸ்எம், டிஎன்பிஎல்
நூலின் அளவு	:	1/8 டெமி
அச்சிட்டோர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை சி.ஐ.டி. வளாகம், தரமணி சென்னை - 600 113
நூல் கிடைக்குமிடம்	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் வளாகம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை-600 008.

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பி எச்.டி.
இயக்குநர் (பொறுப்பு)
தமிழ் வளர்ச்சித்துறை
எழும்பூர், சென்னை-600 008

அணிந்துரை

தமிழக அரசு சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டு உடைமை ஆக்கி, அதன் மூலம் அந்நூல்கள் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துப் பயன்பெறுமாறு அவற்றை மறு அச்சுச் செய்து வெளியிட்டு வருகின்றது. இவ்வரிசையில் **'குடகு'** என்னும் இந்த நூலும் அடங்கும்.

இயற்கை வளமும் எடுப்பான தோற்றமும் உடையது குடகு நாடு. மேற்கு, வடக்கு, கிழக்குத் திசைகளில் கருநாடகமும் தெற்குப் பகுதியில் கேரளமும் எல்லைகளாக உள்ளன. 1956 வரை தமிழர்களுக்குச் சொந்தமாக இருந்த இப்பகுதி மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது கருநாடகத்துக்குச் சொந்தமாகி யுள்ளது. அதற்கு முன்புவரை அது தனிநாடாகச் சிறிய நாடாக இருந்தது அதன் தலைநகரம். மைசூரிலிருந்து சுமார் 50 மைல்களுக்கு மேல் தூரம் உள்ளது. குடகுப் பகுதியில் தலைநகரம் மெர்க்காரா என்னும் மடிக்கேரி. குடகு என்றால் மேற்கு எனப்பெயர். தென்னிந்தியாவில் தமிழகத்தின் மேற்குப் பகுதியாக அது இருந்துள்ள காரணத்தால் குடகு எனப்பட்டது போலும். எப்போதும் பனி மூட்டத்தால் புகை மண்டலம் போல் காணப்படும் பகுதி. அங்கு தான் தமிழகத்தின் உயிர் நாடியான காவிரி தோன்றுகிறது. சுமார் 765 கி.மீ. தூரம் ஓடி தமிழ்நாட்டை வளப்படுத்தி கல்லணையில் அடைக்கலம் ஆகி வங்கக் கடலில் பூம்புகாரில் சங்கமமாகிறது.

இந்தக் 'குடகு' என்னும் நூலை திரு. ஏ. கே. செட்டியார் அவர்கள் ஒரு பயண நூலாக எழுதியுள்ளார். குடகுக்குச் சுற்றுலாச் சென்று பார்த்த காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தமிழ் நாட்டுக்கும் குடகு நாட்டுக்கும் இடையேயான உயிர்த் தொடர்பை இந்த நூல் காட்டுகிறது. பயண நூல்கள், இலக்கிய ஆய்வு நூல்கள், கட்டுரைகள் எனப் பல நூல்களை எழுதி வழிகாட்டியவர். பண நூல்கள்

எழுதுவோருக்கு இந்த நூல் சிறந்த வழிகாட்டியாக அமையும் நடைத் தெளிவும் கருத்துச் செறிவும் தமிழ்ப்புலமையும், பன்னூல் வித்தகமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற தமிழ் அறிஞர். இந்த நூல் 1967ல் முதற் பதிப்பைக் கண்டுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர் நூல்கள் வரிசையில் இந்த நூல் இப்பொழுது மறுபதிப்பைக் கண்டுள்ளது.

இந்நூல் மறு அச்சாகி மக்களுக்கு எளிதில் கிடைத்திட வேண்டும் எனும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ள தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்த மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மற்றும் இந்நாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டுத் துறை, அமைச்சர் **கே. பாண்டியராஜன்** அவர்களுக்கும் நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் **இரா.வெங்கடேசன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் நன்றி.

இயக்குநர்

காணிக்கை

கருணைபொழியும்

காவிரி அன்னையின்

திருவடிகளுக்கு

★ ★ ★

நன்றி

குடகு நாட்டையும் குடகு மக்களையும் தெரிந்து யான் பெற்ற இன்பத்தைத் தமிழ் மக்களோடு பகிர்ந்து கொள்ளவே இந்நூலை ஆக்கினேன்.

குடகு சென்று, ஆறு வார காலம் தங்கி, சுமார் 1080 மைல் பிரயாணம் செய்தேன். குடகு செல்லும் முன்னரே, அந்நாட்டைப் பற்றிய நூல்கள் பலவற்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றுள் அச்சில் படாத அரிய நூல் ஒன்று.

குடகுப் பிரயாணத்தை இனிதே நிறைவேற்றித் தந்தோர் பலர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றி.

தமிழருக்கும் குடகருக்கும் இடையே நீண்ட காலமாக நிலவி-வரும் நல்லுறவை வளம்பெறச் செய்ய இந்நூல் துணைபுரிய அன்னை காவிரி அருள்வாளாக.

ஏ.கே. செட்டியார்

சென்னை,
14-1-1967

பொருளடக்கம்

குடகு 1

தண்ணீரும் காவிரியே 5

பல்லசண்ட அப்பையா 15

மங்கலா 25

ஜெனரல் கரியப்பா 42

மடிக்கேரி 51

குடகர் 67

காப்பி 81

இணைப்பு 90

தென் குடகு 109

வட குடகு 127

பொயிலே பொயிலே 136

குடகு

குடகு சிறிய பெயர்; அழகான பெயர். அதைப் போலவே குடகு சிறிய நாடு; அழகான நாடு.

அழகுக்கு அழகு செய்கிறது தமிழ். குடகு என்பதை வலமிருந்து படித்தாலும், இடமிருந்து படித்தாலும் குடகுதான்.

குடகு மலைநாடு. எல்லைகள், வடக்கிலும் கிழக்கிலும் மைசூர் ராஜ்யம்; தெற்கே மலையாளம்; மேற்கே தென் கன்னடம். மலையாளமும், தென் கன்னடமும் 1956-ஆம் ஆண்டு வரை சென்னை ராஜ்யத்தின் பகுதிகளாக இருந்தன.

குடகின் மொத்த நிலப்பரப்பு 1587 சதுர மைல் தான். மக்கள் தொகை சுமார் மூன்று லட்சத்து முப்பதாயிரம். அதாவது கோவை மாவட்டத்தின் நிலப்பரப்பில் நான்கில் ஒரு பங்கு; மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கு.

குடகு நாட்டைச் சுற்றி உள்ள மலைகளுக்கிடையே சுமார் முப்பது அல்லது நாற்பது அடி ஆழமுள்ள அகழ்கள் உள்ளன. அவற்றிற்கு ராஜ கடங்கா என்று பெயர். நாட்டுக்குள் எதிரிகள் நுழையாமல் தடுப்பதற்காக குடகு அரசர்கள் செய்த பெரு முயற்சி இது.

குடகின்மீது விமானங்கள் பறக்கலாமே தவிர, விமானங்கள் இறங்குவதற்குத் திடல்கள் இல்லை. சென்னையிலிருந்து நேராகக் குடகு செல்ல ரயில் பாதை அல்லது ஆற்று வழி கிடையாது. குடகு செல்ல சாலை வழி ஒன்று தான். சென்னையிலிருந்து குடகுக்கு, பங்களூர், மைசூர் வழியே செல்ல வேண்டும்.

சென்னையிலிருந்து பங்களூருக்குத் தினந்தோறும் பல ரயில்கள் சென்றாலும், முன் கூட்டியே நாம் இடம் பதிவு செய்து கொள்ளாவிட்டால், நின்று தவம் செய்து தான் பிரயாணம் செய்ய நேரிடும். ஒரு நாள் பிற்பகல் ரயிலில் புறப்பட்டு இரவு ஒன்பது மணிக்குப் பங்களூர் அடைந்தேன்.

பங்களூரிலிருந்து மைசூர் 85 மைல். ரயில்பாதை உண்டு; ஆனால் ரயில் வேகம் ஆமை வேகம்தான். பெரும்பாலோர் பஸ்சில் பிரயாணம் செய்தார்கள். எக்ஸ்பிரஸ் பஸ் நான்கு மணி நேரப் பிரயாணம். வெளியூர் செல்லும் பஸ்களில் பெரும்பான்மை, மைசூர் அரசாங்க பஸ்களே.

குறிப்பிட்ட நாளில் பகல் ஒரு மணிக்குப் புறப்படும் அரசாங்க பஸ்ஸுக்கு முன்கூட்டியே சீட்டு வாங்கிப் பதிவு செய்திருந்தேன். பகல் பன்னிரண்டரை மணிக்கே பஸ் நிலையம் சேர்ந்தேன். என்னைப் போலவே இடம் பதிவு செய்திருந்த பிரயாணிகள் பலர் காத்திருந்தனர். எந்தப் பஸ் வந்தாலும் உடனே ஏறத் தயாராக இருந்தேன். அதற்குக் காரணம், பெரும்பாலான பஸ்களில், பஸ் செல்லும் ஊரின் பெயர்கள் கன்னட மொழியில் மட்டுமே இருந்தன.

பகல் ஒரு மணிக்குப் புறப்பட வேண்டிய பஸ், பகல் இரண்டேகால் மணிக்கு வந்தது. வசதியற்ற பஸ்; திறமையற்ற நிர்வாக ஏற்பாடுகள்.

பஸ்ஸுக்குள்ளே ஏறுவது பெரும் பாடாகிவிட்டது. எல்லா இடங்களும் பதிவாகி இருந்தன. இடமில்லை என்று தெரிந்தும், சீட்டு வாங்காத பிரயாணிகள் சுமார் முப்பது பேர் உள்ளே ஏறி உட்கார்ந்துவிட்டனர். சீட்டு வழங்குபவர் அவர்களைத் தடுக்க வில்லை; தடுப்பதற்குச் சக்தியும் இல்லை. கால் மணி நேரம் ஒரே குழப்பம். இடம் கிடைக்காதவர்கள், மைசூர் அரசாங்கத்தையும், பஸ் நிர்வாகத்தையும் கன்னட மொழியில் உரக்கத் திட்டிக் கொண்டே கீழே இறங்கினர்.

ஒரு மணி பஸ் இரண்டரை மணிக்குப் புறப்பட்டது. அப்பொழுதும் ஐந்து பிரயாணிகள் நின்று கொண்டிருந்தனர். பின்னர்தான், மைசூர் ராஜ்யத்தில், நெடுந்தூரம் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ்களிலும் நிற்கும் பிரயாணிகள் உண்டு என்று அறிந்தேன். பாவம், நிற்கும் பிரயாணிகள் சில சமயங்களில், பிரயாணம் முழுதும் நிற்க வேண்டியிருக்கும்.

வழியில் ஒரு சிறு நகரத்தில் பஸ் நின்றது. "பத்து நிமிஷம் பஸ் நிற்கும்; அதற்குள் காப்பி சாப்பிட்டு வரலாம்" என்றார் பஸ் ஓட்டுபவர். பஸ் நின்ற நேரம் முப்பத்தைந்து நிமிஷம்.

காப்பி ஹோட்டல் கட்டிடம் பெரிது; ஆனால் உள்ளே சென்றால் சகிக்க முடியாத துர்நாற்றம். எங்கு பார்த்தாலும் ஈ மயம். பலகாரங்களைப் பார்த்ததும் பசியோடு இருப்பது மேல் என்ற முடிவுக்கு வந்தேன். கடைசியாக மைசூர் சேர்ந்தேன்.

பங்களூரைக் காட்டிலும் மைசூர் அழகானது; அமைதியானது; சுத்தமானது. நண்பர் ஒருவர் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கினேன். அதற்குள்ளாக எனது சென்னை நண்பர் தமது குழந்தைகளை அழைத்துக்கொண்டு மைசூர் வந்து சேர்ந்தார். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து குடகு செல்வதாக ஏற்கெனவே திட்டமிட்டிருந்தோம்.

மைசூரில் பார்க்க வேண்டியவற்றில் முக்கியமானவை, சாமுண்டீஸ்வரி ஆலயம், அரண்மனை, கிருஷ்ணராஜசாகர் என்னும் நீர்த்தேக்கம்.

மைசூரில் மறக்க முடியாதது சாமுண்டீஸ்வரி கோயில் தரிசனம்தான். மைசூரிலிருந்து ஒன்பது மைல் தூரத்தில் பெரிய குன்றின்மீது கம்பீரமாகக் காட்சியளிக்கிறது சாமுண்டீஸ்வரி கோயில். அங்கு கன்னடக் குருக்களைப் பார்த்ததும் நேபாளம் நினைவுக்கு வந்தது. நேபாளத்தில் பசுபதி நாதர் ஆலயத்தில் பூஜை செய்வதும் கம்பீரமான கன்னட பிராமணர்களே.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் மைசூரில் காவிரிக்குக் குறுக்கே அணை கட்டினர். இதன் உயரம் 130 அடி. நீளம் ஒன்றே முக்கால் மைல். தென்னிந்தியாவில் உள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கங்களில் ஒன்று, கிருஷ்ண ராஜசாகர் என்னும் இந்த நீர்த்தேக்கம். இது மைசூரிலிருந்து பன்னிரண்டு மைல்தூரத்தில் உள்ளது. இங்குள்ள பிருந்தாவன் தோட்டம் உலகப் புகழ் பெற்றது. பல வர்ணங்கள் உள்ள மின்சார விளக்குகளால் அலங்கரித்துள்ளனர். வாரத்தில் இரண்டு நாட்கள் தான் மின்சார அலங்கார விளக்குகள் போடுவார்கள். இதுவரை இதனை நான் பார்த்ததில்லை; இப்பொழுதுதான் முதலாவதாகப் பார்த்தேன். நன்றாக இருந்தது.

மைசூரில் ஆண்டுதோறும் நவராத்திரியின்போது நடைபெறும் தசரா ஊர்வலம் உலகப் புகழ்பெற்றது. தந்த வேலைப்பாடு, சந்தன மர வேலைப்பாடு ஆகியவற்றில் தலைசிறந்து விளங்குவது மைசூர். பட்டுக்குப் புகழ்பெற்றது மைசூர். மைசூரில் உள்ள மிருகக்காட்சிச்சாலை இந்தியாவில் உள்ள மிகச் சிறந்தவற்றுள் ஒன்று.

காலை ஏழு மணிக்கு மைசூரிலிருந்து காரில் புறப்பட்டோம். மைசூரிலிருந்து குடகின் தலைநகரான மெர்க்காரா (மடிக்கேரி) எழுபத்திரண்டு மைல். நல்ல சாலை. சுமார் ஐம்பது மைல் தூரம் சென்றதும் சாலையின் இருபுறங்களிலும் சில திபேத்தியர்களைக் கண்டோம்.

1959-ஆம் ஆண்டில் சீனர்கள் திபேத்தைத் தாக்கியதும், தலாய் லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அவருடன் தஞ்சம்

புகுந்த திபேத்திய அகதிகளின் எண்ணிக்கை சுமார் நாற்பதாயிரம்; அவர்களைக் குடியேற்றிப் புனர்வாழ்வு அளிக்க முன்வந்தது இந்திய அரசாங்கம். நாற்பதாயிரம் அகதிகளில் சுமார் மூவாயிரம் அகதிகளை மைசூர் ராஜ்யம் ஏற்றுக்கொண்டது. குடகின் எல்லையில் உள்ள பெரியபட்டணம் தாலுகாவில் சுமார் 3500 ஏகரா நிலத்தில், 3,000 திபேத்தியர் குடியேறினர். திபேத்தியர்கள் சுமார் அறுநூறு குடும்பங்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஐந்து ஏகரா நிலம் கொடுத்தனர். திபேத்தியர்களுக்கு வீடு கட்டவும், கல்வி கற்கவும், வாழ்க்கை நடத்தவும் இந்திய அரசாங்கம் இதுவரை அறுபது லட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறது. திபேத்திய அகதிகளைப் போலவே, திக்கற்ற நிலையில் உள்ள குடும்பங்கள் மைசூர் ராஜ்யத்திலேயே ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. இருந்தாலும், "தான் வருந்திப் பிறர்க்கு உதவும் தயை பிறந்த நாடு" இந்தியா.

குடகு எல்லையில் நாம் நுழைந்ததும் நம்மை வரவேற்கும் முதல் நகரம் குஷால் நகர். குஷால் என்றால் இந்துஸ்தானியில் மகிழ்ச்சி. திப்புசுல்தான் குடகின் மீது படையெடுத்தபோது இவ்வூரில் தங்கினான். அப்பொழுது அவனுக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தி கிடைத்தது. மகிழ்ச்சியில் திளைத்த திப்புசுல்தான், தான் தங்கியிருந்த ஊரின் பெயரை குஷால் நகர் என்று மாற்றியமைத்தான்.

அடுத்து நம்மை வரவேற்கும் ஊர் சுண்டிக்கோப்பா. அதனைக் கடந்து சில மைல் தூரம் சென்று மெர்க்காராவை அடைந்தபோது காலை மணி பத்தரை. பின்னர், பகல் உணவுக்குப் பெரம்புக் கொல்லி சென்றோம். பெரம்பு என்றால் மூங்கில், கொல்லி என்றால் பள்ளம்; மூங்கில் பள்ளம் என்பது பொருள்.

இந்தியாவின் மற்ற எந்தப் பகுதிகளைக் காட்டிலும், தமிழ் நாட்டுக்கும், குடகு நாட்டுக்கும் உயிர்த் தொடர்பு உண்டு. தமிழ் நாட்டின் உயிர் நாடி காவிரி; காவிரியின் பிறப்பிடம் குடகு.

★ ★ ★

தண்ணீரும் காவிரியே

"கன்னி பாளோ காவேரி
கங்கை பாளோ காவேரி.
தீர்த்த குளிச்சக்கா
ஈச்சிறு மனிசண்டா
கெச்ச பாபா போக்குலா
பொத்துன சனியல்லா
தூரநீங்கி நிக்குலா
காவேரம்மை தேவீரா
சத்தியா ஜாகது
சத்திய நடப்பக்க
அன்னத்தா நிலையப்பா" -குடகர் பாட்டு.

மொழிபெயர்ப்பு

"கன்னி காவேரி வாழ்க
கங்கை தீர்த்தம் வாழ்க
தீர்த்தத்தில் குளித்தால்
இச்சிறு மனிதனின்
எல்லாப் பாவமும் போகும்
பிடித்த சனியன் எல்லாம்
தூரநீங்கி நிற்கும்
காவேரியம்மை தாயே
சத்தியத்தின் உருவே
சத்தியமாக நடந்தால்
அனைத்துமே நிலைக்கும்."

"பூமியில் எவ்வளவு புழுதிகள், ஆகாயத்தில் எவ்வளவு நட்சத்திரங்கள் இருக்கின்றனவோ, மழையில் எவ்வளவு தாரைகள் விழுகின்றனவோ, பூமியில் எவ்வளவு செடி கொடிகள் இருக்கின்றனவோ, அவ்வளவு கோடி புண்ணிய தீர்த்தங்கள் (துலா மாதத்தில்) காவேரியைச் சேவிக்கின்றன." -துலா

புராணம்.

'தண்ணீரும் காவிரியே' என்றார் ஔவை பிராட்டியார். பொன்னி நதி என்று போற்றினார் கம்பர். காவிரியின் தெளிந்த நீரில் அப்சர ஸ்திரிகள் விளையாடினார்கள் என்றார் வால்மீகி. சோழ நாட்டைக் 'காவிரிநாடு' என்றும் சோழனைக் 'காவிரி நாடன்' என்றும் போற்றினர் புலவர்கள். 'கங்கையிற் புனிதமாகிய காவிரி' என்றும், 'சோழர் தம் தெய்வக் காவிரி' என்றும், 'வளநாடு மகவாய் வளர்க்கும் தாய்' என்றும், 'தமிழ்பாவை' என்றும், 'காவிரி மணலினும் சிறக்க நின் ஆயுள்' என்றும் பழங்காலப் புலவர்கள் போற்றியுள்ளனர்.

'அழகிய காவேரியைப் பாருங்கள். கேட்போருக்கு, அவர்கள் தகுதியைக் கருதாமல், எல்லா வரங்களையும் அளிக்கும் கருணை மிக்கவள். எல்லோரும் ராஜேஸ்வரி என்று அவளைப் போற்றுகின்றனர். அவள் கரைகளில் எத்தனை மன்னர்கள்? எத்தனை சாம்ராஜ்யங்கள்? எல்லாம் மறைந்தன. அவர்கள் உறுதியாகக் கட்டிச் சென்ற ஆலயங்கள் கூடப் பழுதடைய ஆரம்பித்துவிட்டன. ஆனால் காவேரி எப்போதும் போல கம்பீரமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறாள். எந்நாளும் அவ்வாறே பெருக்கெடுத்து ஓடுவாள்' என்று பாடி மகிழ்ந்தார் பக்திக் கவிஞர் தியாகையர். பாரதியாரும், 'காவிரி, தென் பெண்ணை, பாலாறு, தமிழ் கண்டதோர் வையை, பொருநை நதி, மேவிய ஆறு பல ஓடத் திருமேனி செழித்த தமிழ் நாடு' என்று காவிரியை முதலில் வைத்தார்.

குடகு மலையில் பிறக்கும் காவிரி, மைசூரில் தவழ்ந்து ஒளிப்பரப்பி, தமிழ்நாட்டை வளப்படுத்தி காவிரிப்பூம் பட்டினத்தில் கடலில் சேர்கிறாள். ஊற்றாக உருவெடுக்கும் காவிரி, பூமிக்கு அடியில் செல்கிறாள். சில இடங்களில் ஆடுதாண்டு காவிரியாகவும், சில இடங்களில் அகன்ற காவிரியாகவும் காட்சியளிக்கிறாள். சில இடங்களில் நீர்வீழ்ச்சியாகவும், சில இடங்களில் பிரமாண்டமான அணைக்கட்டுகளாகவும் காட்சியளிக்கிறாள். காவிரியின் நீளம் 765 கிலோ மீத்தர்; விளங்கச் சொல்ல வேண்டுமானால் 475 மைல். காவிரியின் பெருமையே ஒரு புராணம்.

பல ஆண்டுகளுக்கு முன் எங்கள் கிராமத்தில் புராணிகர் ஒருவர் ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்தில் காவிரிப் புராணம் சொல்லி வந்தார். அவருக்கு "காவேரிப் புராண ஐயங்கார்" என்றே பெயர். சிவப்பு நிறம், ஒல்லிய மேனி, மஞ்சள் நாமம் அணிந்திருந்தார். எல்லோரையும் கவரும் தன்மை அவரிடம் இருந்தது. குளக்கரையில் உள்ள அவர் வீட்டின் முன் கூடத்தில் ஒவ்வொரு நாள் காலையிலும் புராணம் நடைபெற்றது. கூடத்தில் ஐம்பது அல்லது அறுபது

பேர்தான் உட்கார இடம். கூட்டத்தினர் எல்லோரும் பெண்கள்; பெரும்பாலோர் விதவைகள். பாட்டிமார்கள் தம் பேரக் குழந்தைகளை அழைத்துச் செல்வதுண்டு. எனது பாட்டியுடன் நானும் பல முறை சென்றேன்.

பக்தர்கள் காலையில் நீராடி, சிலர் ஈர உடையுடனும் புராணம் கேட்க வந்தார்கள். ஒவ்வொருவரும் மரவை அல்லது ஓலைப்பெட்டியில் அரிசி, உப்பு, புளி, முதலியவற்றைக் காணிக்கையாகக் கொண்டு வந்தனர். கூடத்தில் நுழைந்ததும், புராணிகரைக் கீழே விழுந்து வணங்கி, தாங்கள் கொண்டுவந்த காணிக்கைகளை அங்கு ஏற்கெனவே தனித்தனியாகப் பிரித்து வைத்திருந்த பொருள்களோடு சேர்த்தனர். பக்தர்கள் காணிக்கைப் பொருள்களைச் சேர்த்தபொழுது, புராணிகரின் கண்ணும் கருத்தும் காணிக்கைப் பொருள் மீதே இருந்தது. சிலர் அஜாக்கிரதையாக உப்பு, புளி முதலியவற்றைக் கலந்து வைத்துவிடுவார்கள். அப்பொழுது புராணிகர், புராணம் சொல்லி வந்த அதே குரலில், "உப்பை உப்போடு போடுங்கள்; புளியை புளியோடு போடுங்கள்" என்று சொல்லுவார். காவிரிப் புராணப் பிரசங்கத்துக்குச் சென்றதில் இது ஒன்றுதான் என் மனத்தில் பதிந்தது.

குடகு செல்லத் திட்டமிட்டதும், காவிரி மகாத்மியத்தை அறிந்து கொள்ள முயன்றேன்.

தேவேந்திரன் சூரபத்மனுக்குப் பயந்து சீகாழியில் வந்து தங்கி சிவபெருமானுக்குப் பூஜை செய்ய நந்தவனம் அமைத்தான். நந்தவனமாகிய பூஞ்சோலையை "கா" என்று குறிப்பிடுவதுண்டு. தண்ணீர் இல்லாமையால் "கா" விரிந்து செழிக்கவில்லை. அதற்கு வேண்டிய நீர், அகஸ்தியர் கமண்டலத்தில் இருப்பதாக நாரதர் தெரிவித்தார். அதற்காக தேவேந்திரன் விநாயகரைப் பிரார்த்திக்க, விநாயகர் காகம் உருவெடுத்து அகஸ்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்தார். அந்த நீர் ஆறாகப் பெருகி வந்து இந்திரனின் "கா"வை விரிந்து செழிக்கச் செய்ததாம். அதனால்தான் காவிரி ஆறு இப்பெயர் பெற்றது என்கிறது கந்தபுராணம்.

"முன் ஒரு காலத்தில், குடகு நாட்டில் பிரமகிரி என்ற மலையில் காவேர முனியும், அவர் மனைவியும் வசித்தனர். முனிவர் பிரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். பிரமன் தோன்றினான். குழந்தை வரம் கேட்டார் முனிவர். "போன ஜன்மத்தில் செய்த பாவம் காரணமாக உமக்குக் குழந்தை இல்லை. என்றாலும் உமது பக்தியை மெச்சி, எமது வளர்ப்புப் புதல்வியாகிய லோப முத்திரையை உமக்குப் பரிசாக அளிக்கிறோம்" என்று கூறி, லோப முத்திரையைப் பரிசாகக்

கொடுத்து மறைந்தார் பிரமன். காவேர முனி வளர்த்ததால் காவேரி என்று பெயர் வந்தது.

"சிறிது காலத்திற்குப் பின், காவேர முனியும் அவர் மனைவியும் இறந்தனர். அகஸ்தியர் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்ய பிரமகிரி சேர்ந்தார். காவேரியைக் கண்டு காதல் கொண்டார். தன்னை விட்டு ஒரு கணமும் பிரிவதில்லை என்று வாக்களித்தால் மணப்பதாகக் கூறினாள் காவேரி.

"ஒரு நாள் அகஸ்தியர் ஒரு மைல் தூரத்திலுள்ள கனிகை நதியில் நீராடச் சென்றார். அப்பொழுது அவர் தம் மனைவியை ஓர் பாத்திரத்தில் அடைத்து, சிறு பிராமணச் சீடனிடம் ஒப்படைத்தார். காவேரி, அதனைக் கண்டு சீறி பிராமணச் சீடனைத் தவறி விழும்படி செய்தாள். பாத்திரம் பூமியில் விழுந்ததும், காவேரி தப்பித்துக் கொண்டு நதியாக ஓடினாள். அதனைத் தடுக்க அணை கட்டினான் சீடன். எனவே காவேரி பூமிக்கு அடியில் புகுந்து, சிறிது தூரத்தில் வெளிப்போந்தாள்.

"அகஸ்தியர் திரும்பி வந்து, நடந்ததைக் கண்டு வருந்தினார். காவேரியிடம் ஓடிச் சென்று தம்மை மன்னிக்கும்படி வேண்டினார். காவேரி மனமிரங்கி, ஒரு பாதி நதியாகவும், ஒரு பாதி லோபமுத்திரையாகவும் இருக்கச் சம்மதித்தாள். அகஸ்தியர் நதி பாயும் திசையை வகுத்து, நதிக்கரையில் நூற்றுக்கணக்கான ஆலயங்களைக் கட்டினார்" என்கிறது ஆஞ்சநேய புராணம்.

மற்றுமோர் வரலாறும் உண்டு. "தேவகாந்தன் என்ற அரசனுக்கு. பார்வதி தேவி ஐப்பசி மாதத்தில் ஒரு நாள்கனவில் தோன்றி, 'குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் உனது குடி மக்களை அழைத்துக் கொண்டு வலம்புரி வந்து சேர். அங்கு காவேரி வெள்ளப் பெருக்கெடுத்துத் தோன்றுவாள்' என்று கூறினாள். மன்னனும், தம் மக்களுடன் குறிப்பிட்ட இடம் சேர்ந்தான். குறிப்பிட்ட நேரத்தில் திடீரென்று வெள்ளம் வந்தது. வெள்ளத்தின் வேகத்தால், பெண்களின் ஆடை அவர்கள் உடம்பைச் சுற்றிக்கொண்டது. அதன் நினைவாகவே, குடகர் பெண்கள் தம் சேலையை முதுகுப்புறமாகச் சுற்றி, முன்புறத்தில் கொண்டுவந்து பொருத்துகின்றனர்" என்றும் கூறுகிறார்கள்.

காவிரி பெருகி வரும் இடமெல்லாம், சோலைகளாகவும், இயற்கை அழகு வாய்ந்த தலங்களாகவும் இருப்பதைக் காண்கிறோம். "இந்த அழகிய பெயரை இட்டவர்கள் தமிழர்களே. காவிரி என்பது தமிழ்ப் பெயரே; வடமொழியில் காணப்படும் 'காவேரி' என்னும்

சொல். காவிரி என்னும் தமிழ்ச் சொல்லின் சிதைவுதான்" என்று தமிழ்ப் பேரறிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

சோழர்களில் சிறந்தவன் கரிகால் சோழன். அவன் சிறப்புக்குக் காரணம், அவன் காவிரிக்குக் கரைகளும், அணைகளும் அமைத்ததே.

அணைக்கட்டு என்றால் என்ன என்று மற்றவர்கள் அறியாதிருந்த காலத்தில், தமிழர்கள் நீர்த்தேக்கத்தில் நிபுணர்களாய் இருந்தார்கள். சிங்கள மன்னர்கள் கூடத் தமிழர்களின் உதவியால்தான் தங்கள் நாட்டில் நீர்த்தேக்கங்களை அமைத்தார்கள்.

கிளை நதிகள் இல்லாமலும், அணைகள் இல்லாமலும், சரியான கரைகள் அமைக்கப் பெறாமலும் இருந்த காலத்தில் காவிரி வெள்ளம் சோழ நாட்டில் பெரும் சேதங்களை விளைவித்து வந்தது. அந்த அழிவுகளைத் தடுத்து, காவிரிக்குக் கரைகளும் அணைகளும் அமைத்து, காவிரியின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி உழவர்கள் நல்வாழ்வுக்கு உதவினான் கரிகாலன். நன்றி மறவாத உழவர்கள், ஆண்டுதோறும் ஆடி மாதம் பதினெட்டாம் தேதி காவிரியில் வரும் புது வெள்ளத்தின் பண்பட்ட அழகும், பெருமிதமும் கண்டு காவிரி அம்மனுக்குக் காணிக்கையாக மங்கலப் பொருள்கள் வழங்கி வழிபடுகிறார்கள். இதுவே, "ஆடிப் பெருக்கு" என்னும் நன்றி தெரிவிக்கும் நல்ல நாள்.

கரை மீறிப் பாய்ந்த காவிரியைக் கரைகட்டி, கரிகாலன் கட்டுப்படுத்தியது ஓர் அற்புதச் சாதனையேயாகும்!

★

பெரம்புகொல்லித்தோட்டத்திலிருந்து காலை ஆறரை மணிக்கு, காளியப்பன் அவர் குழந்தைகள், கல்லூரி மாணவர் முத்துவீரப்பன் ஆகியோர் தலைக் காவிரியை நோக்கிப் புறப்பட்டோம். தலைக் காவிரி செல்ல வழிகாட்டுவதற்கு அத் தருணத்தில் யாரும் கிடைக்கவில்லை. முத்துவீரப்பன் விடுமுறை கழிப்பதற்காக பெரம்பு கொல்லியில் தங்கியிருந்தார். இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் முதன் முறையாகத் தலைக் காவிரி சென்று திரும்பினார். அவர்தான் எங்களுக்கு வழிகாட்டி.

பெரம்புகொல்லியிலிருந்து மடிக்கேரி (மெர்க்காரா) சுமார் பன்னிரண்டு மைல். காலை ஏழே கால் மணிக்கு மடிக்கேரி சேர்ந்தோம். நான்கு வயதுச் சிறுவன் மனுவுக்கு வயிற்று வலி. எனவே ஒரு டாக்டரிம் செல்ல விரும்பினோம்.

சென்னையிலிருந்து புறப்படும் முன் நண்பர் ஒருவர். "சென்னையில் எங்கள் நிலையத்திலிருந்த டாக்டர் அப்பாஜி

என்பவர் குடகில் இருக்கிறார். அவர் சென்னையை விட்டுச் சென்று பத்தாண்டுகளாகி விட்டன. அவரைச் சந்திக்க நேர்ந்தால் விசாரித்ததாகச் சொல்லுங்கள்'' என்று கூறியிருந்தார். அது நினைவுக்கு வந்தது.

டாக்டர் அப்பாஜியைப் பற்றி விசாரிக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. பஸ் நிலையத்துக்கு எதிரே அவர் வைத்தியசாலை. அங்கே சென்றோம். ஆனால் வைத்தியசாலை மூடியிருந்தது. காலை 9 மணியிலிருந்து பகல் ஒரு மணி வரை வைத்தியசாலை நேரம். சென்னையைப் போல காலை ஏழரை அல்லது எட்டு மணிக்கே வைத்தியசாலையைத் திறப்பதில்லை. வீடு எங்கே என்று விசாரித்துக்கொண்டு போய்ச் சேர்ந்தோம்.

டாக்டர் கபாலி ஏ. அப்பாஜி குடகு நாட்டைச் சேர்ந்தவர். ஆனால் குடகர் அல்லர்; தேவாங்கர். நடுத்தர வயது; தமிழனைப்போல தமிழ் பேசினார். குழந்தை வைத்தியத்தில் தேர்ச்சிப் பெற்றவர். சென்னை என்றதும் அவருக்குப் பழைய நினைவுகள் தோன்றின. சென்னை வைத்தியக் கல்லூரியில் பயின்றவர்; சென்னை கிங் இன்ஸ்டியூட்டில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். மனுவைப் பரிசோதித்து மருந்து கொடுத்தார். டாக்டர் அப்பாஜியின் வைத்தியத்தாலும், காவிரி அம்மனின் கருணையாலும் மனு உடனே குணமடைந்தான். மடிக்கேரியிலிருந்து பாகமண்டலா இருபத்து மூன்று மைல். எங்கள் வழிகாட்டிக்குப் போதிய அனுபவம் இல்லாததால், மூன்று மைல் அதிகமாகப் பிரயாணம் செய்தோம்.

பாகமண்டலம் பெரிய கிராமம். ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் அங்கு இருந்தது. தேன் உற்பத்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் இருந்தது. காவிரி ஒரு சிறு ஆறாக ஓடுகிறாள். காவிரியுடன் கனிகை வந்து கலக்கிறாள். அந்த இடத்தில் பாகமண்டலேசுவரர் ஆலயம் இருக்கிறது.

காவிரிக்கு அமைந்துள்ள பாலங்கள் எத்தனை என்று எனக்குத் தெரியாது. ஆனால் பாகமண்டலத்தில் அமைந்துள்ளதுதான் முதலாவது பாலம். தினந்தோறும் மடிக்கேரியிலிருந்து பாக மண்டலத்துக்குப் பஸ் போக்குவரத்து உண்டு. ஐப்பசி மாதத்தில் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் தென்னிந்தியா முழுவதிலுமிருந்து வருவார்கள். அக்காலத்தில் விசேஷ பஸ் வசதி உண்டு.

காவிரிக் கரையில் உள்ள ஒரு மரத்தடியில் காரை நிறுத்தினோம்.

"உலகத்தில் மனித ஜன்மம் எடுத்தும், எவனொருவன் காவிரியில் ஸ்நானம் செய்யவில்லையோ, அவன் கழுதையினும் கேடானவன்''

என்று துலாக்காவேரி புராணம் கூறுகிறது. அந்த நிலையை அடைய விரும்பாததால், காவிரியில் ஸ்நானம் செய்ய முடிவு செய்தேன். ஓர் ஆற்றில் பத்துப் பேர் குளித்துக் கொண்டிருந்தனர். தண்ணீர் முழங்கால் அளவுதான் இருந்தது. எனவே மற்றோர் ஆற்றில் யாரும் இல்லாததால், அங்கே குளிக்கச் சென்றேன்.

"நீங்கள் செல்வது கனிகை நதி, கனிகை காவிரியில் கலந்த பின்னர்,ஸ்நானம் செய்தால்தான் புண்ணியம் கனிகையில் குளித்தால், காவிரிஸ்நானபலன் கிடைக்காது" என்று அங்கிருந்த ஒருவர் கூறினார். கனிகை கலந்தபின் ஓடும் காவிரியிலேயே ஸ்நானம் செய்தேன். காவிரி கனிகை ஆகிய இரு நதிகள் கூடுவதைத் தான் நாம் கண்ணால் பார்க்கிறோம். ஆனால் அங்கு மூன்று நதிகள் ஒன்றாகக் கூடுவதாக காவேரி மகாத்மியம் கூறுகிறது.

"பிரமகிரியில் சுயஜன்யா என்ற பிராமணர் விஷ்ணுவை நோக்கி தவம் செய்தார். விஷ்ணு தோன்றியதும், புத்திரப்பேறு வேண்டும் என்று வரம் கேட்டார் சுயஜன்யா. விஷ்ணு, தம் புதல்விகளில் ஒருவளாகிய சுஜோதியை அளித்தார். காவிரிக்கு அருகில், அக்கினி மலையில் வசிக்கும் இந்திரனின் வேலைக்காரி கனிகையிடம் சுஜோதியை அழைத்துச் செல்லும்படி விஷ்ணு ஆக்ஞாபித்தார். சுயஜன்யா அவ்வாறே செய்தார். சுஜோதி, கனியை ஆகிய இரு பெண்களும் பல காலம் ஊண் உறக்கமின்றி இந்திரனைக் குறித்துத் தவம் செய்தனர். இந்திரன் தோன்றினான். சுஜோதியைக் கண்டதும் காதல் கொண்டு மணந்தான்.

"சில காலம் சென்றதும், சுஜோதி, கனிகையிடம் சென்று, தனக்குக் குடும்ப வாழ்க்கை பிடிக்கவில்லை என்றும்,மனித குலத்துக்கு ஏதேனும் நன்மை செய்யவேண்டும் என்று தோன்றுவதாகவும் கூறினாள். இருவரும் நதிகளாக மாறி காவிரியை அடையலாம் என்று யோசனை கூறினாள். கனிகையும் சம்மதித்தாள். இருவரும் நதிகளாக மாறினர்.

"இந்திரன் நடந்ததை அறிந்து ஆத்திரமடைந்தான். 'எனது அனுமதி இல்லாமல் நீ நதியாக மாறியதால், வறண்டு போகக் கடவாய்' என்று சாபம் இட்டான். சுஜோதி துயரமே உருவானாள். அதனைக் கண்ட இந்திரன் மனமிரங்கி, 'பாக மண்டலத்தில் காவிரியை அடையும்வரை தண்ணீர் இல்லாமல் இருப்பாய். பின்னர் காவிரியுடனும் கனிகையுடனும் கடலில் சேர்வாய்' என்று சாபத்தைத் திருத்தி யமைத்தான்."

எனவே பாகமண்டலத்தில் மூன்று நதிகள் கூடுவதாகச் சொல்லுகிறார்கள். அலகாபாத்தில் கங்கையும் யமுனையும்

கூடும் இடத்தில், சரஸ்வதி என்ற வறண்ட நதியும் கூடுவதாகச் சொல்லுகிறார்கள் அல்லவா? அதே போலத்தான் இதுவும்.

காவிரியில் நீராடியதும் எல்லோரும் பாகமண்டலேசுவரர் ஆலயம் சென்றோம். அங்கு பாகமண்டலேசுவரர், விஷ்ணு, கணபதி, முருகன் ஆகிய சந்நிதானங்கள் இருந்தன. அர்ச்சகர்கள் கன்னடப் பிராமணர்கள். அவர்கள் ஊர் எது என்று கேட்டேன். மங்களாபுரம் என்றார்கள். மங்களூர்தான் மங்களாபுரம். தலைக்காவேரி அர்ச்சகர்களில் ஒருவரான ஸ்ரீநிவாஸ் என்பவரும் மங்களாபுரத்தைச் சேர்ந்த கன்னட பிராமணரே.

பாகமண்டலத்திலிருந்து தலைக்காவேரி சுமார் மூன்று மைல். சாலையில்லாததால், இதுவரை எல்லோரும் நடந்துதான் சென்றார்கள். இப்பொழுது நல்லதார் சாலை அமைத்திருக் கிறார்கள். தலைக்காவேரியின் வாயிற்படிவரை கார் செல்லலாம்.

தலைக்காவேரியை அடைந்த பொழுது மணி பத்தரை. தலைக்காவேரி 4,800 அடி உயரத்தில் இருக்கிறது. அதற்குமேல் முந்நூறு அடி உயரமுள்ள குன்று தான் பிரமகிரியின் உச்சி. உச்சிமீது ஏறி நின்று பார்த்தால், மப்பு மந்தாரமில்லாத நாட்களில் அராபிக் கடலைப் பார்க்கலாம் என்று கூறினார்கள்.

பாகமண்டலத்திலிருந்து பிரமகிரி செல்லும் பாதை இயற்கை அழகு நிரம்பியது. வழியில் உள்ள பாறை ஒன்றுக்குப் பீமன் கல் என்று பெயர். பாண்டவர்கள் இங்கு தங்கினார்களாம். தலைக்காவேரியை அடைவதற்கு முன், கீழே சில வீடுகள் இருந்தன. அவை அர்ச்சகர்களின் குடியிருப்புகள்.

தலைக்காவேரியை அடைந்ததும், ஒரு புனிதமான இடத்தை அடைந்தோம் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அழகும், அமைதியும் நிறைந்திருந்த அவ்விடத்தில், அப்பொழுது எங்களைத் தவிர யாத்திரிகர் நான்கு பேர்தான். அர்ச்சகர்கள் இருவர்.

நெல்லி மரத்தடியில் ஊற்றாக உற்பத்தியாகிறாள் காவிரி. ஊற்று இரண்டரை அடி சதுரம் இருக்கலாம். தண்ணீர் மூன்றடி ஆழம் இருக்கலாம். ஊற்றின் மேல் கரையில் சிறு கோயில். கோயிலில் விக்கிரகமில்லை. பூசை முழுதும் ஊற்று நீருக்குத்தான். தண்ணீரில் அர்ச்சகர் குங்குமத்தைப் போடுவார்; மலர்களைத் தூவுவார். எடுக்க எடுக்கக் குறையாமல் ஊற்றெடுக்கிறாள் காவிரி. காவிரி தீர்த்தம் பலநாள் கெடாது.

சிறு ஊற்றுக்கு முன்னே, சில அடிகள் தணிவாக பெரிய ஊற்று ஒன்று இருக்கிறது. அது சுமார் முப்பது அடி சதுரம் இருக்கும்.

அதிலுள்ள, தண்ணீர் சிறிய ஊற்றிலிருந்து வருவதாகக் கூறுகிறார்கள். ஒரே மட்டம்தான் தண்ணீர் இருக்கிறது. பின்னர் காவிரி அங்கிருந்து பூமிக்கடியில் மறைந்து பல நூறு அடிகள் சென்றபின் வெளிப்படுகிறாள். பாகமண்டலத்தில் வெளித் தோன்றும் காவிரியில்தான் மக்கள் முதலில் நீராடுகின்றனர். பின்னர் அதே ஈர உடையுடன், தலைக் காவேரி சென்று பெரிய ஊற்றில் நீராடி, சிறிய ஊற்றுக்குப் 'பூஜை செய்து, சிறிய ஊற்று நீரைத் தலையில் தெளித்துக் கொண்டு, மூங்கில் குழாய்களில் காவிரி நீரை வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர். சிறிய ஊற்று தான் மிகப் புனிதமானது.'

இரண்டு ஊற்றுகளையும் நல்ல முறையில் கற்களால் கட்டியிருக்கின்றனர். சிறிய ஊற்றுக்கு மேலேயுள்ள மேடான பகுதியில் இரண்டு சிறு ஆலயங்கள் உள்ளன. ஒன்று கணபதி, மற்றொன்று அகஸ்தியர்.

ஐப்பசி மாதம் பிறக்கும்போது, காவிரியும் ஆண்டுதோறும் பிறப்பதாக வழக்கு. ஒவ்வோர் ஆண்டும், ஆயிரக்கணக்கான பக்தர்கள் காவிரி பிறக்கும் புனித நேரத்தில் நீராடுவதற்காகக் கூடுவார்கள். இரவோ, பகலோ எந்நேரத்தில் மாதம் பிறந்தாலும், அந்நேரத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைப் பார்க்கலாம். காவிரி பிறப்பதற்கு அறிகுறி, தலைக்காவேரி சிறிய ஊற்றில் அரை அங்குலம் அல்லது ஓர் அங்குலம் தண்ணீர் பொங்குமாம். அச் சமயத்தில் அர்ச்சகர் சைகை செய்வார். உடனே ஆயிரக்கணக்கான ஆண், பெண் இளைஞர், முதியோர் அனைவரும் விழுந்தடித்து, ஒருவரோடு ஒருவர் மோதி, பெரிய ஊற்றாகிய குளத்தில் இறங்கி மூன்றுமுறை தலைமுழுகுவார்கள். ஐப்பசி மாதம் முழுவதுமே புனிதமானது. ஆனால், "நாளாக ஆகப் புண்ணியமும் கூட்டமும் குறைந்துகொண்டே வரும்" என்று கூறுகிறார்கள்.

குடகர்கள் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வோர் ஆண்மகனை ஒவ்வோர் ஆண்டும் கட்டாயமாகத் துலாக்காவிரி ஸ்தானத்துக்கு அனுப்பவேண்டும். மணமுடித்த குடகர் தம்பதிகள் அதே ஆண்டில் துலாக் காவிரி ஸ்நானம் செய்யவேண்டும். பிரார்த்தனையின் காரணமாகவோ, அல்லது குடும்பத்தில் பெரியவர்கள் காலமாகிவிட்டாலோ, குடும்பத் தலைவன் தலைக்காவேரிக்குச் சென்று, 'தலை உளுப்புவா' அல்லது முடியிறக்கி, துலாக்காவிரி ஸ்நானம் செய்ய வேண்டும். துலாக்காவிரி ஸ்நானத்துக்குச் செல்ல முடியாதவர்கள், வீட்டிலேயே காவிரி பூஜை செய்வார்கள். ஒவ்வொரு குடகர் வீட்டிலும் காவிரி பூஜை நடைபெறும்.

குடகர்கள் பாடல்களில் எப்பொழுதும் காவிரியின் புகழைக் காணலாம். குடகர்களுக்குக் காவிரியின் புகழ் பாடத் திகட்டாது.

தேன்துளி பொம்மாங்கே
திந்தினோ கொதிப்போகா
தேவதந்த பூமாலை
சூடின கொதிப்போகா
பொங்க தந்த இலை
திந்தின கொதிப்போகா
தண்ணீரும் காவிரியே
அவ்வதந்த பாக்கூழு
உண்டின கொதிப்போகா
அப்ப தந்த குப்பியா
இட்டின கொதிப்போகா
காவீரம்மை தேவினோ
பாடின கொதிப்போகா

-குடகர் பாட்டு

மொழி பெயர்ப்பு

தேன்துளி தின்னத் தின்ன
சிறிதுமே திகட்டாது
தேவர் தந்த பூமாலை
சூடவும் திகட்டாது
மனைவி தந்த வெற்றிலையின்
மகிழ்ச்சியும் திகட்டாது
தாய் ஊட்டும் பால்சோறு
சாப்பிடத் திகட்டாது
தந்தை தந்த பொன்னாடை
தரிக்கத் திகட்டாது
காவேரி தேவி புகழ்
பாடத் திகட்டாது.

குடகர்களுக்குக் காவிரியின் மீதுள்ள பக்திக்கு உதாரணம், குடகர் பெண்களில் பத்தில் ஒருவருக்குக் காவேரி என்று பெயர்! ஆண்களில் கூட சிலருக்குக் காவேரியப்பா என்று பெயர்.

வாழி காவிரி!

★ ★ ★

பல்லசண்ட அப்பையா

பல்லசண்ட கரியப்பா அப்பையாவுக்கு வயது ஐம்பத்தேழு; நடுத்தரமான உயரம்; மாநிறம். குடகு நாட்டில் நான் சந்தித்த முதலாவது குடகர் இவர்தான். பெரம்புகொல்லி காப்பித் தோட்ட சூப்பிரண்டெண்டு அப்பையா, சுமார் முப்பது ஆண்டுகளாக, கன்சாலிடேடட் என்ற மிகப் பெரிய காப்பித் தோட்டத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றவர். இரண்டு ஆண்டுகளாக பெரம்புகொல்லித் தோட்டத்தில் வேலை செய்து வந்தார். ஞாயிறு விடுமுறை நாள் தவிர, மற்ற நாட்களில் தோட்ட பங்களாவிலேயே தங்கியிருந்தார்.

முதல் இரண்டு நாட்கள், இரவுச் சாப்பாட்டுக்குப் பின், அப்பையாவோடு நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தேன் குடகு நாட்டைப்பற்றி ஓர் ஆண்டு காலமாகவே தகவல்கள் சேகரித்து வந்தேன். குடகர்பாட்டுக்கள் சிலவற்றைச் சேகரித்திருந்தேன். அவற்றை, அப்பையாவிடம் கூறியபோது, அவர் கவனத்துடன் உச்சரிப்புகளைத் திருத்தினார். குழந்தைப் பாடல், நாடோடிப் பாடல் முதலியவற்றைக் கூறியபொழுது, அப்பையாவுக்குக் குழந்தைப் பருவம் திரும்பிவிட்டது. தமது பாட்டி கதை சொல்லிய விதம், பாடிய விதம் முதலியவற்றைச் சைகைகளுடன் காண்பித்தார். கையைக் கிள்ளி (எனது கையை அன்று) ககாளி, ககாளி, ககாளி என்று பாட ஆரம்பித்தார்.

குடகர்களைப் பற்றிச் சரிவரத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் எனது ஆர்வம், அவர் உள்ளத்தைத் தொட்டது. சந்தித்த மறுநாளே, அவர் மடிக்கேரியில் உள்ள தமது வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். மடிக்கேரியின் ஒரு பகுதி தேச்சூர். அங்கே அவர் சொந்தமாக பதினேழாயிரம் ரூபாய்க்கு ஒரு வீடு வாங்கியிருந்தார். சிறிய வீடு; ஆனால் வசதியானது. வீட்டைக் காட்டிலும் தோட்டம்தான் என்னைப் பெரிதும் கவர்ந்தது. தோட்டக்கலையில் குடகர்கள் நிபுணர்கள். குடும்பமே அதில் கவனம் செலுத்துகிறது. ஓர் அங்குல நிலத்தைக் கூட வீணாக்கமாட்டார்கள். தோட்டம் அழகு மிக்கது; அதைப் போலவே வருவாயும் மிக்கது.

குடகர்களில் ஆண்கள் எல்லோரும் மேனாட்டுப் பாணியில் உடை அணிகின்றனர். கல்யாணம் முதலிய விசேஷங்களுக்கு மட்டும்தான் நாட்டு உடை, பெண்கள் எப்போதும் ஒரே மாதிரியாக-ஆனால் மற்ற இந்தியப் பெண்கள் அணிவதிலிருந்து மாறுபட்ட விதமாகச்-சேலை உடுத்துகின்றனர். நல்லதோ, கெட்டதோ, உயர்வோ, தாழ்வோ, எல்லாக் காலத்திலும் நிலையிலும் மற்றவர்களைவிடத் தாங்கள் வேறுபட்டுத் தனியாக விளங்கவேண்டும் என்ற எண்ணம் குடகர்களிடையே ஆழப்பதிந் திருக்கிறது. தாங்கள் தனிப் பழக்க வழக்கங்கள் உடையவர்கள் என்று சொல்லிக் கொள்வதிலே அவர்களுக்குத் தனிப் பெருமை.

மேனாட்டு நாகரிகத்தில் திளைக்கும் குடும்பங்கள் சில இருந்தன. ஆனால் பல்லசண்ட அப்பையா குடும்பம், தங்கள் நாட்டின் பண்பாட்டில் பற்று வைத்துக்கொண்டு, காலத்துக்கு ஏற்ற முறையில் வாழும் நடுத்தரக் குடும்பம். குழந்தைகள் விஷயத்திலும் நடுத்தரக் குடும்பம் தான். குழந்தைகள் எண்ணிக்கை எட்டு. ஐந்து கிண்ணா; மூன்று மூடி. கிண்ணா என்றால் ஆண்; மூடி என்றால் பெண்.

மூத்த பெண் தங்கம்மா; செல்லப்பெயர் தங்கமாஜி. வயது இருபத்து நான்கு. அழகும் அடக்கமுமே உருவான தங்கமாஜி, பி.ஏ. படித்து, சென்னை சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர். தங்கமாஜி படித்த காலத்தில், மடிக்கேரி அரசினர் கல்லூரி சென்னை சர்வகலாசாலையுடன் இணைந்திருந்தது. தங்கமாஜி பள்ளி ஆசிரியை; சில தினங்களில் மணமாக இருந்தது. இரண்டாவது பெண் கங்கம்மா பதினைந்து வயதுள்ள கல்லூரி மாணவி. செல்லப் பெயர் லலிதா. அரசியலும் பொருளாதாரமும் அவள் பாடம். “குடகு நாட்டை மைசூருடன் இணைத்ததால் குடகுக்கு நன்மையா, தீமையா?” என்று கேட்டேன். “நன்மையில்லை” என்றாள்.

மூன்றாவது பெண் பொல்லம்மா, சுறுசுறுப்பும் அறிவும் அடக்கமும் உள்ளவள். செல்லப் பெயர் பொல்லு. கிறிஸ்துவப் பள்ளியில் பயின்றாள். குடும்பத்தில் இவள் தான் கடைக்குட்டி எனவே ஒன்பது பேர் செல்லத்தில் வளர்கிறாள். லலிதாவும், பொல்லுவும் மேனாட்டு உடையே அணிந்திருந்தனர்.

மூத்த மகன் பூனச்சாவுக்கு வயது முப்பது. செல்லப் பெயர் பூகுஞ்ஞி என்றால் குழந்தை. கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்ற பூனச்சா பங்களூரில் மைசூர் அரசாங்கத்தில் பணியாற்றுகிறார். மேற்படிப்புக்காக அரசாங்கத்தார் அவரை ஓர் ஆண்டு பிரான்ஸ் தேசத்துக்கு அனுப்பினார்கள். வெளிநாடு சென்று வந்த சாயல், அவர் நடவடிக்கைகளில் சிறிதும் இல்லை.

சின்னப்பா என்னும் வாசு இரண்டாவது மகன். மைசூரில் படித்த பட்டதாரி. வயது இருபத்தேழு; மிக இனிய சுபாவம். பங்களூரில் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஒன்றில் வேலை செய்துகொண்டே, சட்டக் கல்லூரியிலும் பயின்று வந்தார். குடும்பத்திலேயே விளையாட்டுக்களில் சிறந்து விளங்குவது மூன்றாவது மகன் நானையா; செல்லப் பெயர் நானி. வயது இருபத்து இரண்டு. பங்களூரில் பாங்கு ஊழியர்; பட்டதாரி.

நான்காவது மகன் கணபதி; செல்லப்பெயர் கப்பு. பத்தாவதுக்கு மேல் படிப்பு வர மறுத்துவிட்டது. மடிக்கேரி தபால்நிலையத்தில் வேலை செய்து வரும் கப்பு எனக்குப் பல முறை தபால் நிலையத்தில் உதவி செய்துள்ளார். ஐந்தாவது மகன் கண்டி, தார்வாரில் பொறியியல் கல்லூரி மாணவன். பெரும்பாலான குடகர் வீடுகளில், குழந்தைகள் பெற்ற பரிசுகளைக் காட்சிப் பொருளாக வைத்திருப்பார்கள். பல்லசண்ட அப்பையா வீட்டில் சுமார் இருபது வெள்ளிக்கோப்பைகள் இருந்தன. அதில் ஒவ்வொரு குழந்தைகளின் பங்கும் இருந்தது. பெரும்பகுதி நானியின் வெற்றிச் சின்னங்கள் தாம்.

பல்லசண்ட அப்பையா, தமது மனைவி பொன்னம்மாவை அறிமுகப்படுத்தினார். பொன்னம்மாவுக்குவயது ஐம்பது இருக்கலாம். உருவத்தில் குள்ளம்; சிறந்த தாய்மை உள்ளம். அடக்கத்துடன் கதவின் பின்புறத்தில் பாதி உடலை மறைத்துக்கொண்டு நின்றார். புன் முறுவலுடன் வரவேற்றார். காட்சியிலிருந்த பெரிய வெள்ளிக் கோப்பைகளுள் ஒன்றைச் சுட்டிக்காட்டி, “இது யார் பெற்ற பரிசு?” என்று கேட்டேன். “கால்நடை வளர்ப்புக்காகக் கிடைத்தப் பரிசு” என்றார் பல்லசண்ட அப்பையா. “அப்படியானால் உங்களைப் பாராட்டுகிறேன்” என்றேன். “அது என்னுடையது” என்று ஆங்கிலத்தில் மெதுவாக ஒரு பெண்ணின் குரல் கேட்டது. பொன்னம்மாவுக்கு ஆங்கிலம் தெரியும் என்று அதுவரை எனக்குத் தெரியாது.

“ஆம், இந்தப் பரிசு அவளுடையதுதான்” என்று கூறி உண்மையை ஒப்புக்கொண்டார் பல்லசண்ட அப்பையா.

பூகுஞ்ஞி புகைப்படம் எடுப்பதில் தேர்ச்சி பெற்றவர். வெளிநாட்டுப் பிரயாணத்தின் போது எடுத்த படங்கள், குடும்பத்தில் பல ஆண்டுகளாக எடுத்த படங்கள் ஆகியவற்றை ஆல்பங்களில் ஒட்டி வைத்திருந்தனர். வாசு, லலிதா, பொல்லு ஆகியோர் உற்சாகத்துடன் விளக்கிக் கூறினார். சில நிமிஷங்களுக்குள்ளாக இனிய விருந்து ஒன்றைத் தயாரித்து விட்டார் பொன்னம்மா. குடகர் பலகாரம் ஒன்று, மேனாட்டுப் பலகாரம் ஒன்று, பழம், காப்பி முதலியவற்றைக் கொண்டு வந்து வைத்தார்.

மற்றொரு நாள் பகல் உணவுக்குச் சென்றேன். அன்று பொன்னம்மா, லலிதா, பொல்லு, வாசு தவிர மற்ற அனைவரும் வெளியூர்களுக்குச் சென்றுவிட்டனர். காவேரி என்ற கன்னிப் பெண் ஒருத்தியும் எங்கள் விருந்தில் கலந்து கொண்டாள். எல்லோரும் மேஜையில் உணவருந்தினோம். ஏழைக் குடகர்களும் கூட மேஜையில்தான் உணவருந்துகின்றனர்.

முதலாவது நூ புட்டு. இது இடியாப்பம் போன்றது. உப்பு, இனிப்பு ஒன்றுமே சேர்க்காமல், சோற்றுக்குப் பதிலாக இதனை உண்கிறார்கள். ஆனால் இது உண்ட பின்னர் சோறும் உண்டு.

"சோறு என்பதற்குக் குடகர் மொழியில் என்ன சொல்வது?" என்று கேட்டேன். "கூழு" என்றாள் லலிதா. இதனை "வெளுத்த கூழு" என்றும் சொல்லுகிறார்கள். நெய் என்பதற்குக் கன்னட மொழியில் துப்பா. ஆனால் குடகர் நெய் என்றுதான் கூறுகின்றனர். நெய் விட்ட பின் ஒரு கறி வைத்தனர். அதன் பெயர் கேட்டபோது "கூட்டுக் கறி" என்றார் வாசு. கடைசியாக மோர் சாதம் சாப்பிட்டபொழுது, "மோருக்கு என்ன பெயர்?" என்று கேட்டேன். "மோர்" என்றாள் லலிதா. "தயிருக்கு என்ன சொல்லுவீர்கள்?" என்றேன். "கட்டி மோர்" என்றாள் பொல்லு. சாப்பாடு நன்றாக இருந்தது. ஆனால் சமையலறை எப்படியிருக்குமோ என்று நினைத்தேன். கை கழுவச் சமையல் அறை வழியாகச் செல்லவேண்டியிருந்தது. அப்பொழுதுதான் குடகர் பெண்கள் சமையல் அறையை எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டேன்.

★

தங்கமாஜி கல்யாணத்திற்குச் சில தினங்களே இருந்ததால், ஆடைகள் தயாரிப்பதிலும், நகைகள் செய்வதிலும், சாமான்கள் சேகரிப்பதிலும் குடும்பத்தினர் எல்லோருமே ஆர்வம் காட்டினர். குடும்பத்தில் இதுதான் முதலாவது கல்யாணம். மணப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி கட்டுவது கிடையாது. கறுப்புக் கயிரில் தொங்கும் தங்கப் பதக்கத்தை, வயதான சுமங்கலி, மணப்பெண்ணுக்கு அணிவிப்பாள். பதக்கத்தை 'பதக்' என்கின்றனர். அதனைக் கொண்டுவந்து காட்டினார் பல்லசண்ட அப்பையா. கழுத்தில் அணியும் அணி ஒன்று உண்டு. அதன் பெயர் "கொக்கே தாதீ." காதில் அணியும் கம்மலுக்கு 'வாலை' என்று பெயர். மோதிரம் 'மொய்ரா.' கால் மோதிரம், 'கால் மொய்ரா.' மூக்கில் அணிவது 'மூக்கொத்து.' இவற்றை எல்லாம் பெருமையுடன் காட்டி விளக்கிக் கூறினர்.

குடகர்களில் ஒவ்வொரு பெண்ணும் தலையில் துணி அணிய வேண்டும். அது முக்காடு அன்று. தலையில் துணியைக்

கட்டி அதனைப் பின்புறமாகத் தொங்கவிடுவார்கள். அதனை 'வஸ்திரா' என்கின்றனர். ஆண்களும் தலையில் துணி அல்லது தலைப்பாகை அணிய வேண்டும். அதனை "மண்டைத் துணி" என்று அழைக்கின்றனர்.

"எங்கள் சமூகத்தில் வரதட்சணை கிடையாது. பெண்ணுக்குத் தம்மால் இயன்ற பொருளைப் பெற்றோர்கள் கொடுக்கலாம். சில பெற்றோர்கள் தம் பெண்களுக்கு ஒரு காப்பித் தோட்டத்தையே ஸ்ரீதனமாகக் கொடுப்பதும் உண்டு. கல்யாணத்திற்கு வரும் ஒவ்வொருவரும் ஆண், பெண், குழந்தைகள் உள்பட, மணமகனுக்கோ அல்லது மணமகளுக்கோ பரிசளிக்க வேண்டும். பெரும்பாலோர் ரூபாய்தான் கொடுப்பார்கள். பரிசுப் பொருள் களை வழங்குவோர் சிலர். யார் யார் என்ன பரிசு கொடுத்தார்கள் என்பதை நாங்கள் குறித்துக் கொள்வதில்லை. நமது முறை வரும்போது, நாம் பெற்ற பரிசைப்போலவோ அல்லது அதற்குச் சமமாக உள்ள பொருளையோ திரும்பப் பரிசாக அளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பரிசளிப்போர் எட்டணா முதல், தங்களுக்கு விருப்பமான தொகைவரை-சில சமயங்களில் ஆயிரம் ரூபாயும் பரிசளிப்பதுண்டு" என்றார் பல்லசண்ட அப்பையா.

ஆயிரம் என்பது தமிழிலும், குடகு மொழியிலும் ஒன்றே. சாதாரணமாக, மரியாதைக்காகப் பரிசளிப்பவர்கள் இரண்டு ரூபாய் அளிப்பது வழக்கம் என்று அறிந்தேன்.

★

பல்லசண்ட என்பது குடும்பப் பெயர். குடகர்களைப் பற்றி விசாரிக்க வேண்டுமானால், குடும்பப் பெயர் சொன்னால்தான் தெரியும். குடும்பத்துக்கு 'ஆதிகாரணவா' யாரோ, அவர் பெயர்தான் குடும்பப் பெயர்.

குடும்பத்துக்கு 'ஒக்கா' என்று பெயர். குடும்பத் தலைவன், அக்குடும்பத்தில் உள்ள வயதில் பெரிய ஆண். குடும்பத் தலைவனே 'எஜமானா' அல்லது 'கொருவக்கார்' அல்லது 'பட்டேதார்' என்று அழைக்கின்றனர். குடும்பத் தலைவிக்கு 'மனைப்பணிக் காரத்தி' என்று பெயர். யார் யார் எந்தெந்த வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என்று அவள்தான் உத்திரவிடவேண்டும். சில குடும்பங்களில் 40 பேர் முதல் 80 பேர் வரை உண்டு. குடும்பத் தலைவன் தவறான வழிகளில் நடந்தால், அவனை விலக்கிவிட்டு, வயதில் இளைய ஒருவனைத் தலைவனாக நியமிப்பதும் உண்டு. 'அறிவவனே பெரியவன்' அதாவது 'அறிவுள்ளவனே பெரியவன்' என்பது குடகுப் பழமொழி.

குடகர் வீடுகள் கட்டி சுமார் 150 அல்லது 200 ஆண்டுகள் இருக்கலாம். ஒரே வீட்டில் குடும்பம் முழுதும் வசிப்பதில்லை. பல்லசண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களே குழந்தை குட்டிகள் உள்பட சுமார் இருநூறு பேர் இருக்கலாம். குடகர்களில் பலர் வெளியூர்களில் வசிக்கிறார்கள். பலர் நகரங்களுக்குச் சென்று சொந்தமாக வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, முன்னோர்களின் வீட்டில் வசிக்கும் மக்கள் தொகை குறைவு. குடகர்கள் எங்கே இருந்தாலும் அவர்களுக்குப் பொதுக் குடும்பச் சொத்தில் பங்கு உண்டு. முக்கியமான விசேஷங்களுக்கும், அவசியமானபோதும் முன்னோர் வீட்டுக்குச் செல்வார்கள். முன்னோர் வீட்டுக்கு 'அயின் மனை' என்று பெயர்.

மடிக்கேரியிலிருந்து சுமார் பதின்மூன்று மைல் தூரத்திலுள்ள தமது அயின் மனைக்கு, பல்லசண்ட அப்பையா என்னை அழைத்துச் சென்றார். அயின் மனை சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் கட்டியது என்றும் கூறினார். மடிக்கேரியிலிருந்து காரில் பிரயாணமானோம். வழியில் பல இளைஞர்களைப் பார்த்து, 'என்னா', 'என்னா', என்றார். "தமிழில் என்னடா என்பதைத்தான் என்னா என்கிறோம். வயதில் இளையவர்களை உரிமையுடன் அழைக்கும்போதுதான் என்னா என்று சொல்லலாம்" என்றார் பல்லசண்ட அப்பையா.

வழியில் ஓர் ஊரில் காரை நிறுத்தினோம். எதிரில் வந்துகொண்டிருந்த ஒருவரைக் கூப்பிட்டு, "பொண்ணு மக்களைக் கூட்டிக்கிணு ஊரு கூட வந்திரு" என்றார் பல்லசண்ட அப்பையா. அப்போது தங்கம்மா திருமணத்துக்குச் சில நாட்களே இருந்தன. 'ஊரு கூடுதல்' என்பது, கல்யாணத்திற்கு முதல்நாள் இரவு ஊரிலுள்ள அனைவரும் கல்யாண வீட்டுக்கு வந்து, பந்தல் போடுதல், தோரணம் கட்டுதல் முதலிய வேலைகளைச் செய்யவேண்டும். அன்றிரவு எல்லோருக்கும் விருந்து. அந்த விருந்துக்கு நாட்டு உடை அணிய வேண்டுவதில்லை. ஊரு கூடுதலைப்பற்றி ஏற்கெனவே தெரியும் ஆதலால், பல்லசண்ட அப்பையா கூறியதைச் சுலபமாகப் புரிந்துகொண்டேன்.

முதல் தரமான சாலையை விட்டு, மூன்றாம் தரமான சாலை வழியே சென்றது எங்கள் கார். "வேண்டுமென்றே இவ்வழியில் செல்கிறேன். அப்பொழுதுதான் குடகர் வாழும் சூழ்நிலையை நீங்கள் அறியலாம். எந்த இடத்தில் வாழை, தென்னை மரங்களைப் பார்க்கிறீர்களோ, அந்த இடத்தில் ஒரு குடகர் வீடு இருக்கும். குடகர் வீட்டை ஒரு குடியிருப்பு என்று சொல்லலாம். ஒவ்வொருவரும் தமது தோட்டத்தில் குடியிருப்பார். ஒரு குடியிருப்புக்கும் மற்றொரு

குடியிருப்புக்கும் தூரம் உண்டு. பல குடியிருப்புகள் கொண்டது 'ஊர்.' பல ஊர்கள் கொண்டது 'நாடு.' பல நாடுகள் கொண்டது 'சீமை'" என்றார் பல்லசண்ட அப்பையா.

முன்னாளில் பல நாடுகள் கொண்டது ஒரு 'கொம்பு.' பல கொம்புகள் கொண்டது ஒரு 'சீமை' என்று வகுத்தனர். கொம்பு ஊதினால் எவ்வளவு தூரம் கேட்குமோ, அந்த வட்டாரம்தான் கொம்பு.12 கொம்புகள் இருந்தன. இப்பொழுது கொம்புகள் இல்லை. தற்பொழுது உள்ளவை 35 நாடுகள்; 297 ஊர்கள். ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வோர் ஆண்டிலும் ஊரிலுள்ள எல்லோரும் சேர்ந்து விருந்து உண்பார்கள். இதற்கு 'ஊர் ஒர்மை' விருந்து என்று பெயர். ஊரில் உள்ளவர்கள் சென்ற ஆண்டில் நிகழ்ந்த சண்டை சச்சரவுகளையும், மனத்தாங்கல்களையும் மறந்து, ஒன்றுபட்டு, ஊரின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதே இந்த விருந்தின் நோக்கம்.

நாங்கள் சென்ற ஊரின் பெயர் கடங்கமுரூர். அமைதியும், இயற்கை அழகும் நிரம்பிய கிராமம். கிராம தேவதையின் கோயில் வழியிலேயே இருந்தது. ஒவ்வோர் ஊரிலும், பொதுவாக மூன்று மைதானங்கள் உண்டு. மைதானத்துக்கு 'மந்து' என்று பெயர். ஊரு மந்து, தேவார மந்து, பஞ்சாயத்தி மந்து. ஊரு மந்து ஹுத்தரி என்னும் அறுவடைக்கால நடனம் ஆடுவதற்கு; தேவார மந்து உற்சவங்களின்போது ஆலயத்தின் முன் நடனம் ஆடுவதற்கு; பஞ்சாயத்தி மந்து ஊர் விவகாரங்களைத் தீர்ப்பதற்காகக் கூடும் இடம். அங்கே ஒரு சிறு மேடையும் கொட்டகையும் இருக்கும். பஞ்சாயத்தார் உட்காரும் இடத்துக்கு 'அம்பலம்' என்று பெயர்.

குடகர்கள் வீடு சிறு கோட்டையைப் போல அமைந்தது. கல் பதித்த குறுகிய சந்து வழியே சென்றோம். முதலில் ஒரு 'கேரே' அதாவது குளம். எல்லா வீடுகளிலும் குளம் இருக்காது. குளக்கரையில் ஐந்தாறு கல்தூண்கள், மாடுகள் கட்டிக் குளிப்பாட்ட, பின்னர் கோட்டை வாயிலைப் போன்ற வளைவு. உள்ளே சென்றால் முதலாவது 'கைமடா' அல்லது 'குருமடா.' நான்கு புறமும் சிறிய மதில்சுவர் எழுப்பி, அதன் நடுவே நான்கடி உயரத்தில் எழுப்பியுள்ள சிறு கோயில். சில கோயில்களில் உள்ளே வெள்ளித் தட்டில் ஆள் உருவம் செதுக்கி வைத்திருப்பார்கள். முன்னோர்கள் ஆவி அங்கு இருப்பதாக நம்பிக்கை. எந்தக் காரியமாயினும், முன்னோர்களை வணங்கி, அவர்களுக்குப் படைத்து, பின்னர்தான் தொடங்குதல் வேண்டும்.

இன்னும் சிறிது உள்ளே சென்றால், ஒரு கோட்டை வாயில். அதனைத் தாண்டினால் நூறு சதுர கஜமுள்ள காலி இடம். நாங்கள் சென்ற சமயம் ஒரு கல்யாணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நான்கு வயது முதல் எண்பது வயதுவரை உள்ள ஆண்கள் ஏழெட்டுப் பேர். ஹரிஜனங்களின் மேளத்துக்கேற்ப நடனமாடிக் கொண்டிருந்தனர். குடும்பத்தின் பட்டேதார் பெயரும் பல்லசண்ட அப்பையாதான். அவருக்கு வயது எண்பத்திரண்டு. குடகு நாட்டு உடை அணிந்திருந்தார். அன்புடன் வரவேற்று உபசரித்தார்.

வீடு பெரிய கட்டிடம். மிக உறுதியானது. சுமார் மூன்று அடி உயரத்தில் அமைந்திருந்தது. முன் தாழ்வாரத்தில் சுமார் இருபது நாற்காலிகளில், சாப்பிட்டு வந்த விருந்தினர்கள் உட்கார்ந்து, வெற்றிலை பாக்கு சுவைத்துக்கொண்டே, நடனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். வெற்றிலைக்குக் கொடிஇலை என்று பெயர். பாக்கு என்பதைத் தூள்பாக்கு என்கின்றனர். அதில் பாக்கைவிடச் சர்க்கரைஅதிகமாக இருந்தது. வெற்றிலை போடுவதில்லையாதலால், அதன் ருசி எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

வீட்டின் முன் தாழ்வாரத்துக்கு 'கையாலே' என்று பெயர். அங்கு பல பெஞ்சுக்கள் போட்டிருந்தனர். அவற்றில் ஒன்றுக்கு 'காரணாவந்தா அய்மாரா' அல்லது 'காரணவா தரை' என்று பெயர். காரண புருஷர் அமர்வதற்கான அந்த இடம் மிகப் புனிதமானது. பெண்களோ அல்லது தீட்டு உள்ளவர்களோ அங்கு உட்காரக் கூடாது. தாழ்வாரத்தில் ஏராளமான புகைப்படங்கள் தொங்க விட்டிருந்தனர். எல்லாம் பல்லசண்ட குடும்பங்கள்தான். பல்ல சண்ட குடும்பத்தைச்சேர்ந்த ஒருவர் வங்காளப் பெண்ணை மணந்திருந்தார். அவருக்குப் பதினாங்கு குழந்தைகள். அவர் இப்பொழுது பங்களூரில் வசிக்கிறார். அவர் குடும்பப்படத்தைப் பார்த்தேன். தங்கமாஜி பட்டதாரி உடையுடன் தோன்றும் படம் ஒன்றையும் பார்த்தேன்.

முகப்பு மரக்கதவில் செய்திருந்த சித்திர வேலைப்பாடுகள் கண்ணைக் கவர்ந்தன. எண்பது வயது இளைஞர் பல்லசண்ட உத்தையா என்னை உள்ளே அழைத்துச் சென்றார். உள்ளே முற்றம். சுற்றிலும் நான்குபுறம் தாழ்வாரம். முற்றத்துக்கு 'முந்து மனை' என்று பெயர். அதனைச் சுற்றியுள்ள தாழ்வாரத்துக்கு 'நடு பாடை' என்று பெயர். நடு பாடையின் மூலையில் தூங்கு விளக்கு ஒன்றும், குத்து விளக்கு ஒன்றும் இருந்தன. தூங்கு விளக்குக்குத் 'தூங்கு விளக்கு' அல்லது 'நந்தா விளக்கு' என்று பெயர். குத்து விளக்குக்கு 'குத்து விளக்கு' என்றே பெயர். ஆனால் விளக்கு என்பதைப் 'பௌக்கு' என்பர்.

வீட்டினுள்ளே பல அறைகள். ஓர் அறைக்கு 'கன்னி கோம்பரே' என்று பெயர். இது விசேஷ பூஜை அறை. எப்பொழுதும் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். தெய்வங்களின் படங்கள் சிலவற்றை மாட்டியிருந்தனர். ஆனால் விளக்குதான் முக்கியமான தெய்வம்.

மற்றோர் அறையில் மணப்பெண் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். பல்லசண்ட உத்தையா போட்ட கூச்சலில், அவள் எழுந்து நின்று வணங்கினாள். எல்லா ஆபரணங்களையும், உடைகளையும் சரிவர அணிந்து நிற்கும்படி உத்தரவிட்டார் உத்தையா. மீண்டும், வீட்டின் முன் தாழ்வாரத்துக்கு வந்ததும், "செட்டியார், கைகழுவுங்கள். சாப்பிடப் போகலாம்" என்றார் அறுபது வயது இளைஞர் ஒருவர். தமிழர்களைப் போலவே தமிழில் பேசிய அவர் பெயர் பல்லசண்ட தேவய்யா.

"நீங்கள் தமிழ் நாட்டுக்குச் சென்றிருக்கிறீர்களா? நல்ல தமிழ் பேசுகிறீர்களே?" என்றேன்.

"நான் சென்னைக்கே சென்றதில்லை. பொதுப்பணித்துறை (ஞ.று.னு) யில் பல வருஷங்கள் வேலை செய்தேன். அப்பொழுது தமிழர்கள் பலர் என்னுடன் இருந்தனர். அவர்களிடம் தமிழ் கற்றுக் கொண்டேன்" என்றார் தேவய்யா. கைகழுவ கிணற்றடிக்குச் சென்றோம். கிணற்றடியை 'கிணத்தரை' என்று குடகர்கள் கூறுகின்றனர். கிணறு பெரிதாக இருந்தது. உறுதியாகவும் நன்றாகவும் கட்டியிருந்தனர். பின்னர் வீட்டின் மேல்மாடிக்குச் சென்றோம். அங்கே போதிய வெளிச்சமில்லை. சாமான் அடைப்பதற்குத்தான் தகுதியானது. அங்கே சுமார் நூறு பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். உட்காருவதற்கு ஒரு மரப்பெஞ்சு; சாப்பிடுவதற்கு உயரமான மரப்பெஞ்சு.

குடகுப் பெண்கள் பரிமாறும் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள். குழப்பம் இல்லாமல், தேவையானவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கினர். ஆண்களும் உதவி செய்தனர். எந்த விருந்துகளிலும் வேலைக்காரர்கள்பரிமாறியதை நான் பார்த்ததே இல்லை. விருந்தோம்பலில் சிறந்தவர்கள் குடகர்கள். விருந்துக்கு இன்றியமையாதது பன்றி இறைச்சி. குடகர்களிடையே பருப்பில்லாமல்கூட கல்யாணம் நடைபெறலாம்; ஆனால் பன்றி இறைச்சி இல்லாமல் கல்யாணம் நடைபெறவே முடியாது. குடகர்களின் நல்ல குணங்களில் ஒன்று விருந்தினர்களைப் பன்றி இறைச்சி உண்ணும்படி கட்டாயப்படுத்தாதது. மது இல்லாமல் கல்யாணம் இல்லை. மதுவிலக்கு என்பது குடகைப் பொறுத்தவரை பெயரளவுக்குத்தான். ஜப்பானில் அரிசி மூலம் தயாரிக்கும் 'சாகே' என்னும் மதுவைப் போல, குடகிலும் நெல்லிலிருந்து மது தயாரிப்பதாக அறிந்தேன்.

உத்தையாவிடம் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள எனக்கு ஆசை; ஆனால் அதற்கு இடையூறாக இருந்தது அவருடைய மதுநாற்றம். "உங்களுக்கு (மது) வேண்டுமானால், சொல்லுங்கள்.

இப்பொழுது இங்கேயே கிடைக்கும்'' என்றார் ஒரு குடகர். அவருடைய அன்புக்கு நன்றி செலுத்தி, மதுவை மறுத்துவிட்டேன்.

விருந்தின்போது, தண்ணீருக்குப் பதிலாக எலுமிச்சம் பழ சர்பத்து கொடுத்தார்கள். தண்ணீர் வேண்டும் என்று கேட்டேன். "இங்குள்ள குடிதண்ணீர் நல்லதன்று; அதைச் சாப்பிட வேண்டாம். எலுமிச்சம்பழ சர்பத்தையே சாப்பிடுங்கள்'' என்றார் தேவய்யா.

விருந்து முடிந்ததும், வீட்டின் முன் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தேன். "இவர்தான் பல்லசண்ட குட்டப்பா. பெரிய கம்யூனிஸ்ட் தலைவர். அருகில் உள்ளவர் பல்லசண்ட சோமண்ணா. இவரும் கம்யூனிஸ்ட். ஆனால் குட்டித் தலைவர்'' என்று அறிமுகப்படுத்தினார் உத்தையா. பெரிய வீட்டை அடுத்து இரு சிறு வீடுகள் இருந்தன. ஒன்று நல்ல மாடி வீடு. அதில், கீழ் வீட்டில் ஒரு கூடமும், நான்கு அறைகளும்;மேல் வீட்டில் ஒரு கூடமும் மூன்று அறைகளும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனி அறை. வீட்டின் பின் கதவைத் திறந்தால், நிலம், தோட்டம் முதலியன.

பல்லசண்ட அப்பையா தமது சகோதரரின் மனைவியை அறிமுகப்படுத்தினார். "இங்குள்ள தோட்டத்தில் எனக்குப் பங்கு உண்டு. என் சகோதரன் மனைவிதான் இதனைக் கவனிக்கிறாள்'' என்றார். "வருஷத்துக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும்?'' என்று கேட்டேன்.

"என் தம்பி மனைவி ஒரு விதவை. விதவையிடம் எப்படிக் கணக்குக் கேட்க முடியும். அவள் கொடுப்பதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்கிறேன்'' என்றார். மூன்றாவது கட்டிடத்திற்குச் சென்றோம்.அதுவும்பெரிய கட்டிடம்.ஆனால்கிடங்கு(முடினடிறே) போல இருந்தது. "எனது தந்தை, தமது கடைசி நாட்களில் இங்கே தனியாகத் தங்குவது வழக்கம்'' என்றார் பல்லசண்ட அப்பையா.

வீட்டிற்குச் சிறிது தூரத்தில், வேலைக்காரர்கள் வசிக்கும் வீடுகள். மாட்டுக் கொட்டில் முதலியவை இருந்தன.

வீட்டைவிட்டு சாலைக்கு வரும் வழியில் ஊருமந்துவைக் காட்டினார் அப்பையா.

"எங்கள் குடும்பப் பெயர் பல்லசண்ட. ஆரம்பத்தில் அது பாலச்சந்திரன் என்று இருந்திருக்க வேண்டும். நாளடைவில் அது பல்லசண்ட என்று மருவியிருக்கக்கூடும்'' என்றார் பல்லசண்ட அப்பையா.

★ ★ ★

மங்கலா

மங்கலா என்றால் சுப காரியம். நாம் மங்களம் என்று சொல்லுவதைக் குடகர்கள் மங்கலா என்கின்றனர்.

ஒவ்வொரு மங்கலத்துக்கும், மங்கலத்துக்கு உரியவரை, நீராட்டி, புது உடை அணிவித்து, பந்தலில் உட்காரவைத்து, எல்லோரும் ஆசீர்வதித்து, பரிசளித்துப் பாராட்டுவது வழக்கம். மங்கலத்துக்கு விருந்து இன்றியமையாதது.

முதலாவது 'கெம்மி குத்தி மங்கலா', அதாவது காது குத்துதல், ஒவ்வோர் ஆணுக்கும் காதுகுத்து வைபவமும் விருந்தும் நடைபெறும். காது குத்திக் கொள்வது, சமூகத்தில் அவன் ஓர் ஆள் என்பதற்கு அறிகுறி. அந்நாளில் காது குத்திக்கொள்ளாமல் இறந்துவிட்டால், பிணத்திற்குக் காது குத்திப் பின்னர்தான் புதைப்பார்கள். இக்குதப்பா என்னும் முருகன் கோயிலில், காது குத்திக் கொள்ளாத ஆண்களை உள்ளே அனுமதிப்பதில்லை. ஆனால் சென்ற ஐம்பது ஆண்டுகளாக, குடகர்களில் ஆண்கள் யாரும் காதுகுத்திக் கொள்வதில்லை.

'பொலே கண்ட மங்கலா' என்பது பெண்கள் பருவமடைந்த வுடன் செய்யும் மங்களம்.

'குளியம்மை மங்கலா' என்பது பெண்கள் கருவுற்ற போது செய்யும் மங்களம்.

'பய்த்தாண்டேக் அலப்பா' என்பது, பத்து மக்களைப் பெற்ற தாய்க்குச் செய்யும் மங்களம். பத்து மக்களும் உயிருடன் இருந்தால்தான் இந்த மங்களம் உண்டு.

'மனை மங்கலா' என்பது கிரகப் பிரவேசம் அல்லது புது மனை புகுதல்.

'நரி மங்கலா' என்பது குடகுக்கே உரிய தனி மங்களம். நரி என்றால் குடகு மொழியில் புலி. புலியைக் கொல்லுபவருக்கு ஒரு மங்களம். சிறுத்தையைக் கொன்றால் 'ஊரு மந்துவில்' மங்களம் நடத்துவார்கள். புலியைக் கொன்றால் 'நாடு மந்து'வில்

மங்களம். சிறுத்தையைக் கொல்லுவதைக் காட்டிலும், புலியைக் கொல்லுவதுதான் சிறப்பு. பல்லசண்ட அப்பையா தமக்கு நரி மங்கலா நடைபெற்ற தேதியை எப்பொழுது கேட்டாலும் உடனே சொல்லுவார். அய்யண்ணா என்ற இளைஞர் சுட்ட புலியின் தோலைப் பார்த்திருக்கிறேன். "நீங்கள் நரிமங்கலா செய்து கொண்டீர்களா?" என்று கேட்டேன். அதற்கு, "எனக்கு அப்பொழுது வயது பத்தொன்பதுதான். அன்றியும் நான் நரி மங்கலா செய்துகொள்ள விரும்பவில்லை" என்றார் அய்யண்ணா.

குடகு நாட்டிலும் மற்றொரு தனி மங்களமும் நடைபெற்றது.

குல்லச்சேண்டா சோண்டு என்பவன் ஓர் அநாதைச் சிறுவன். அவனை/ அவனது நாட்டு மக்கள் நன்கு வளர்த்து ஆளாக்கிவிட்டனர். சோண்டு, வயது வந்ததும், தனது நாட்டுக்குத்தான் எவ்வளவு ஆழ்ந்த நன்றியுடையவன் என்பதைக் காட்டுவதற்கு, தான் ஒரு சிறந்த வீரனாகத் திகழவேண்டும் என்று தீர்மானித்தான். அவன் ஒவ்வொரு நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று தன்னுடன் 'ஒத்தி போயித்' அல்லது தனியாகப் போரிட எல்லோரையும் வரும்படி அறை கூவினான். எல்லோரையும் வென்றான். அவன் புகழ் சீமை எங்கும் பரவியது. அதனால் அவன் பிறந்த நாட்டின்பெருமையும் அதிகரித்தது. அவன் ஒரு பல்லக்கில் அமர்ந்துகொண்டு ஒவ்வோர் ஊராகச் சென்றான். ஓர் ஊருக்குச் சென்றதும், அங்குள்ள கோயிலுக்குச் சென்று, பூசாரி பூஜை செய்வதைத் தடுப்பான். அந்த ஊரில் உள்ளவர்கள் தன்னுடன் தனியாகப் போருக்கு வரவேண்டும் அல்லது தாங்கள் தோல்வியுற்றதாக ஒப்புக்கொண்டு அதற்கு அடையாளமாகப் பணம் செலுத்த வேண்டும்; அதன் பின்னரே பூஜை செய்யலாம் என்று உத்தரவிடுவான். பெரும்பாலான கிராமத்தினர் சண்டைக்குப் பயந்து பணம் செலுத்தினர்.

சோண்டுவுக்கு எதிராக ஒருவன் தோன்றினான். அவன் பெயர் அப்பையா. காயண்டீரா என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவன். கடியேட் நாட்டைச் சேர்ந்த அறப்பட்டு என்பது அவன் ஊர்.

அப்பையா சிறு பையன். பெயர் பெற்ற வீரன் சோண்டுவை தனது மகன் எவ்வாறு தோற்கடிக்க முடியும் என்று அப்பையாவின் தாய் அழுது புரண்டாள். "இதுவரை நீ எனக்குத் தாய்; இனி நாடுதான் எனக்குத் தாய்" என்றான் சிறுவன் அப்பையா.

சோண்டுவும் அப்பையாவும் சண்டைக்குத் தயாராயினர். அப்பையா சோண்டுவின் கண்களில் மண்ணைத் தூவி, அவனைக் குத்திக் கொன்று விட்டான். கண்ணில் மண்ணைத் தூவியது தவறு என்று யாருமே கண்டிக்கவில்லை. அதற்கு மாறாக, நன்றியுள்ள

நாடு, அப்பையாவுக்கு, இதுவரை யாருக்குமே அளிக்காத பல கௌரவங்களையும், சலுகைகளையும் அளித்தது. நாடு முழுதும் காயண்டீரா அப்பையாவுக்கு மங்கலா நடத்தினர். 'பெரிய மொலி' அதாவது 'பெரிய அண்ணன்' என்ற பட்டத்தையும் வழங்கினர். அவன் எல்லோருக்கும் பெரியவன்; யார் காலையும் பிடித்து வணங்கக்கூடாது; தீட்டாக இருந்தாலும் கோயிலுக்குப் போகலாம்; உற்சவத்தின்போது, தோல்வியுற்ற சோண்டுவின் பல்லக்கில் ஏறிக்கொண்டு கோயிலுக்குச் செல்லலாம். இவை போன்ற பல தனி உரிமைகளை அளித்தனர்.

காயண்டீரா குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு 'பெரிய அண்ணன்' என்ற பட்டம் பரம்பரையாக இருந்தது. இன்று அக் குடும்பத்தில் யாருமே இல்லை.மங்கலா என்பது எல்லாச் சுபகாரியங்களைக் குறிக்கும் சொல் என்றாலும், இப்பொழுதெல்லாம் மங்கலா என்பது திருமணத்தையே குறிக்கிறது.

திருமணங்களில் பல விதங்கள் உண்டு. ஆனால் நடைமுறையில் உள்ளதும், முக்கியமானதும் 'கன்னி மங்கலா' என்பது கன்னிப் பெண். மணமாகாத இளைஞனை மணத்தல்.

குடகர்களிடையே பல பெண்களை மணக்கும் வழக்கம் இல்லை. முதலாவது மனைவி இறந்துவிட்டால் அல்லது விவாக ரத்துச் செய்துவிட்டால் இரண்டாவது மணம் செய்து கொள்ளலாம். அப்படியே எத்தனை முறை வேண்டுமானாலும் மணம் செய்துகொள்ளலாம். மூன்றாவது மணம் செய்து கொள்வதற்கு முன், ஒரு வாழை மரத்தை மணம் செய்துகொள்ள வேண்டும். இதற்கு 'பாழை மங்கலா' அதாவது 'வாழைக் கல்யாணம்' என்று பெயர்.

குடகர்களிடையே விவாக ரத்துகள் மிகமிகக் குறைவு. சென்ற ஐம்பது ஆண்டுகளில் நடைபெற்ற விவாக ரத்துகள் சுமார் பத்துதான் என்று அறிந்தேன்.

விதவை மணம் சர்வ சாதாரணம்.ஒருத்தி விதவையாகி விட்டால், அவளுடைய கணவனின் இளைய சகோதரன் மணமாகாதிருந்தால், அவனை மணம் செய்து கொள்ளலாம். பெண்களுக்குக் குடும்பத்தில் உள்ள உரிமை கணவன் மூலமாகத் தான். கணவனின் இளைய சகோரதனைப் பெண்கள் பெயர் சொல்லி அழைப்பதில்லை. ஏனெனில் அவன் ஒரு வேளை கணவனாக வரலாம். கணவன் பெயரைச் சொல்லுவது கூடாது.

விதவைகள் அதே குடும்பத்தில் மணம் செய்து கொள்ள விரும்பவில்லையானால், வேறு குடும்பங்களில் மணம் செய்து கொள்ளலாம். விதவை மணத்திற்குக் 'குடவளி' என்று பெயர். இதற்கு மங்கலா கிடையாது.

குடகு நாட்டில் முக்கியமாகப் பார்க்க வேண்டியவை இரண்டு. ஒன்று தலைக்காவேரி; மற்றொன்று குடகர் திருமணம்.

மே மாதம்தான் திருமணக் காலம். குடகர் திருமணம் ஒன்றைப் பார்க்கவேண்டும் என்று தமிழ் நண்பர் ஒருவரிடம் கூறினேன். 'குடகர் திருமணங்களுக்கு அழைப்பே தேவையில்லை' என்றார் அவர். ஆயினும் எனக்கு ஓர் அழைப்புக் கிடைத்தது.

ஸ்ரீ

சுபமஸ்து

ஸ்ரீமதி/ ஸ்ரீ ஏ.கே. செட்டியார் நவர சங்கே
ஸ்ரீமதி மத்து ஸ்ரீ பல்லசண்ட அப்பையன் அவரு மாடுவ
விஞ்ஞாபனம்

ஸன் 1964 இசவி மே தாரிகு இருபத்தொன்பதுனே
சுக்கிரவாரா தின

அகலு 10-15 கண்டகே
சல்லுவா மிதுன லக்ன தள்ளு

நம்ம	மடிக்கேரி யல்வியருவா ஸ்ரீமதி
பிரதம புத்திரி	மத்து ஸ்ரீ காயப்பண்டா
சௌபாக்கியவதி	தேவனய்யனவரு புத்திரா சிரஞ்சீவி
தங்கம்மா நண்ணு	சிட்டியண்ண னவரிகே

கொடுவா தம்பதி விவாக மகோத்சவன்னு மடிக்கேரி கொடவ சமாஜ தள்ளி நடைசலு. குருஹரியரு நிச்சய் ஸிருதரிந்தா தாவு தம்ம குடும்ப சமேத தினமுந்தாகிதயை மாடிசு வதுவரன்னு ஆசீர்வஸிச்சு ஈ சுபகாரிய வண்ணு நிறைவேறிஸி கொடவேகாகி கோருவா.

தம்ம பிரசாபிலாசிகளு,
ஸ்ரீமதி மத்து ஸ்ரீ பி.கே. அப்பையா.

தேச்சூர்,
மடிக்கேரி
தாரிகு 1-5-64

தம்ம சுகா கமனவண்ணு பயசுவா
பி.ஏ. பூனச்சா மத்து சகோதரரு.

குடகில் ஏற்கெனவே மூன்று திருமணங்கள் பார்த்திருக்கிறேன். அவை எல்லாம் அந்நியன் என்ற முறையில் வேடிக்கை பார்க்கச்

சென்றவை. தங்கமாஜி திருமணத்தில் எனக்கு உரிமை உண்டு. நான் பெண் வீட்டுக்காரன் அல்லவா?

திருமணத்திற்கு மாப்பிள்ளை வீட்டார் தான் பெண் கேட்க வேண்டும். திருமணப் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின் மாப்பிள்ளை வீட்டார் தங்கள் 'அருவா'வுடன் பெண் வீட்டுக்குச் செல்வார்கள். அருவா என்றால் அறிந்தவர் என்று பொருள். அதாவது நண்பர். ஒரு குடும்பத்துக்கு, அருகில் உள்ள மற்றோர் குடும்பத்தைச் சேர்ந்தவர் அருவா. அதேபோல, அந்தக் குடும்பத்துக்கு, இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் அருவா, அருவா, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லர்.

ஒரு வீட்டில் நடைபெறும், நன்மை தீமை முதலியவற்றில், வீட்டுக்காரரைக் காட்டிலும், அருவா அதிகமான அக்கறை கொள்ள வேண்டும். யோசனை கூறுவது, விசேஷங்களின் போது பொறுப்பேற்று வேலை செய்வது, சடங்குகளின் போது பிரதிநிதியாகச் செல்வது போன்றவை அருவாவின் கடமை. ஒரு வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால், குடும்பம் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும். அப்பொழுது அருவா, கூடவே இருந்து எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும். பிணத்தை அகற்றும்வரையில், தம் வீட்டில் உணவு தயாரித்து வழங்கவேண்டும். துக்கநாள் முடியும்வரை வீட்டில் உள்ளவர்கள் வயலில் வேலை செய்ய முடியாது. அச் சமயத்தில் அவர்களுடைய வேலையையும் அருவா செய்ய வேண்டும்.

திருமண சமயத்திலும் அருவாவுக்கு முக்கியமான பங்கு உண்டு. தமது வீட்டுத் திருமணமாகவே கருதி எல்லா வேலைகளையும் பொறுப்புடன் முன்நின்று செய்யவேண்டும். சம்பந்தத்தை முடித்துவைப்பது அருவாதான். விவாகரத்துச் செய்தாலும் அருவாதான் முன்நின்று செய்ய வேண்டும். வாழ்க்கையில் நல்லதோ, கெட்டதோ எது நேர்ந்தாலும் அருவாதான் முன் நிற்க வேண்டும்.

மாப்பிள்ளை வீட்டாரைப் பெண் வீட்டார் மரியாதையுடன் வரவேற்பார்கள். பெண்வீட்டு அருவாவும் அங்கே இருப்பார். எல்லோரும், தூக்கு விளக்கு முன்னால் கூடிநின்று பிரார்த்தனை செய்து, பின் நிச்சயதார்த்தம் செய்து கொள்வார்கள். இதற்கு 'மங்கலக் குறிப்பு' என்று பெயர். இந்த நிகழ்ச்சிக்கு நெருங்கிய உறவினர்களையும், நண்பர்களையும்-அவர்களில் சிலர் வேறு ஜாதியினராக இருந்தபோதிலும்-அழைப்பார்கள். பிறகு ஜோஸ்யரை அழைத்து நல்ல நாள் பார்ப்பார்கள். குடகர் களிடையே ஜோஸ்யர் இல்லாமல் ஒரு காரியமும் நடைபெறாது. நாற்று நடுதல், களை வெட்டுதல், பயிர் அறுவடை செய்தல், பிரயாணம் தொடங்குதல் முதலிய எல்லாவற்றுக்கும் ஜோஸ்யரை அழைத்து நல்ல நேரம் பார்ப்பார்கள்.

திருமணத்திற்கு முதல் நாள் இரவு எல்லோரும் கூடுவார்கள். இதற்கு 'ஊருகூட' என்று பெயர். கிராமங்களில் ஊரு கூடுபவர் களுக்குச் சிறிது வேலை இருக்கும். மடிக்கேரி கொடவசமாஜம் ஒரு கல்யாண மண்டபம். ஆதலால் அங்கே ஊரு கூடுபவர்களுக்கு விருந்து உண்பது தவிர வேறு வேலை இராது. மிக வேண்டியவர்களைத்தான் ஊரு கூட விருந்துக்கு அழைப்பது வழக்கம். குடகர்கள் திருமணமே தனிப்பட்டது. முகூர்த்த நேரம் குறிப்பிடுவார்கள். ஆனால் மாப்பிள்ளையும், பெண்ணும் அவரவர் வீட்டிலேயே இருப்பார்கள். குறிப்பிட்ட நேரத்தில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் தனித் தனியே அவரவர் வீட்டில் முகூர்த்தம் நடைபெறும். சில சமயங்களில் மாப்பிள்ளை வீட்டுக்கும் பெண் வீட்டுக்கும் முப்பது மைல் தூரம் கூட இருக்கும்.

திருமணத்திற்கு முதல்நாள் இரவு, மாப்பிள்ளையும் பெண்ணும், அவரவர் வீட்டில் நடு மனையில் உள்ள தொங்கு விளக்கின் முன்னால் நின்று வணங்கி, பின்னர் பெற்றோர்களையும் பெரியோர்களையும் வணங்க வேண்டும். வணங்குதல் என்றால், குனிந்து பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டும். இம்மாதிரி மூன்று முறை செய்யவேண்டும். பெரியோர்களுக்குச் செய்யும் இந்த மரியாதை-இந்தப் பண்பாடு- என்னைப் பெரிதும் கவர்ந்தது. வணங்கியதும், பெரியவர்கள் தலையைத் தொட்டு ஆசீர்வதித்து 'நீடூழி வாழ்க' என்பார்கள். சிலர், 'ஆண்களும் பெண்களுமாக பதினொரு குழந்தைகளைப் பெற்று வாழ்வாயாக!' என்று வாழ்த்துவார்கள். ஜெனரல் கரியப்பா, கொடவ சமாஜத்தில் இரண்டு வயது முதிர்ந்த பெண்கள் கால்களைத்தொட்டு வணங்கியதைக் கண்டேன். நடுவீதியிலும் கூட, நாகரிக உடை அணிந்த பட்டம் பெற்ற குடகுப் பெண்கள், பெரியோர் கால்களைத் தொட்டு வணங்கியதைக் கண்டேன். கல்யாணவீட்டில் ஒரு குடகர், "இதற்கு 'கால்பிடிப்பு' என்று பெயர். கால் என்றால் டுநப. பிடிப்பு என்றால் கூடிரஉா" என்று மொழி பெயர்த்துக் கூறினார். தமிழனுக்குத் தமிழையே மொழி பெயர்த்துக் கூறுகிறோம் என்பது, பாவம், அந்தக் குடகருக்குத் தெரியாது.

மறுநாள் அதிகாலையில் மாப்பிள்ளை குறிப்பிட்ட நேரத்தில் க்ஷவரம் செய்துகொள்ள வேண்டும். இது ஒரு சடங்கு. பாய் விரித்து, அதன்மீது ஒரு மண் கிளிஞ்சல் விளக்கு ஏற்றி வைப்பார்கள். க்ஷவரம் செய்யும்போது தண்ணீருக்குப் பதிலாகப் பாலைத் தடவ வேண்டும். பின்னர் நீராடுதல். அதே சமயத்தில், பெண் வீட்டில் பெண்ணுக்கு வளையல் இடும் சடங்கு நடைபெறும். அது முடிந்ததும் மூன்று சுமங்கலிகள் பெண்ணை நீராட அழைத்துச் செல்வார்கள். ஒவ்வொருவரும் மூன்று குடம் தண்ணீரைப் பெண்மீது ஊற்றுவார்கள். விதவைகள், திருமணச் சடங்குகள் எதிலும்-

ஆசீர்வதிப்பது தவிர-கலந்து கொள்ளக் கூடாது. தங்கமாஜிக்கு வளையல் இடுவதைப் பார்த்தேன்.

நீராடியபின், மாப்பிள்ளையும் பெண்ணையும் அவரவர் வீட்டில் முகூர்த்தம் நடைபெறும் இடத்துக்கு அழைத்துச் செல்வார்கள். முகூர்த்தம் முடிந்ததும், மாப்பிள்ளை வீட்டார் மேளதாள வாத்தியங்களுடன், 'பாதை பாட்டு' அதாவது வழியில் உள்ள காட்சிகளை விவரிக்கும் பாட்டுகளைப் பாடிக் கொண்டு, நள்ளிரவில் பெண் வீட்டுக்குச் செல்வார்கள். வழியில் பெண் வீட்டார் யாரும் சந்திக்கக் கூடாது. அவ்வாறு நேர்ந்தால் அது கெட்ட சகுனம். பெண்ணின் வீட்டுக்குள் செல்வதற்கு முன்னே சுமார் நாலடி உயரமுள்ள வா-ழைமரத் தண்டுகளை நட்டு வைத்திருப்பார்கள். ஏழு, பதினொன்று அல்லது பதினாறு தண்டுகள் நட்டிருப்பார்கள். மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த ஒருவர் வாழைமரத் தண்டுகளை வெட்ட வேண்டும்.

இதற்கு ஒரு கதை உண்டு. மன்மதன் ரதியைக் காதலித்தான்; மணக்க விரும்பினான். ஆனால் ரதியை வேறொரு இளவரசனுக்குத் திருமணம் செய்வதாக நிச்சயித்திருந்தார்கள். மன்மதன் நள்ளிரவில் ரதி வீட்டுக்குச் சென்று, எதிரிகளைக் கொன்று, ரதியை மணந்தான். வாழைமரத் தண்டுகளை மன்மதனுடைய எதிரிகள் என்று பாவித்து, அவற்றை வெட்டி வீழ்த்துகின்றனர். நள்ளிரவில் செல்லுவதும் இதே காரணத்தால் தான் என்று கூறுகின்றனர்.

வாழை வெட்டுவதற்கு மற்றோர் காரணமும் கூறுகிறார்கள். வாழையை வெட்டுவது சுலபம் அன்று. வாழையை வெட்டத் திறமை வேண்டும். மாப்பிள்ளையின் திறமையைச் சோதிக்கவுமே இந்த முறையைக் கையாண்டனர். இப்பொழுது மாப்பிள்ளை வாழையை வெட்டுவதில்லை; மாப்பிள்ளை வீட்டாரில் ஒருவரே வாழையை வெட்டுகிறார்.

பொதுவாக திருமணங்கள் இவ்வாறுதான் நடை பெறுகின்றன. ஆனால் தங்கமாஜி திருமணம் 'தம்பதி முகூர்த்தம்' இது மிக அரிது. சென்ற ஐம்பது ஆண்டுகளாகத்தான் தம்பதி முகூர்த்தங்கள் நடைபெறுகின்றன. மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் தனித்தனியே அவரவர் வீடுகளில் முகூர்த்தம் நடத்தாமல், ஒரே சமயத்தில் நடத்துவதற்கு முக்கிய காரணம் என்னவென்று பல்லசண்ட அப்பையாவைக் கேட்டேன். "பணம், நேரம், சிரமம் எல்லாம் குறைவு" என்றார் அவர். தம்பதி முகூர்த்த விருந்துச் செலவை - சுமார் மூவாயிரம் ரூபாய் - மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர்.

மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டிலும் ஒரே சமயத்தில் தனித் தனி முகூர்த்தங்கள் நடைபெறுவதாலும் மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஒரு சிலரே பின்னர் பெண் வீட்டுக்குச் செல்வதாலும், இரு சாராரின் பந்துக்கள் அனைவரும் ஒருங்கே சந்திக்கும் வாய்ப்பில்லை.எனவே,திருமணம்நடைபெற்றஓர் ஆண்டுக்குள் மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டார் அனைவரையும் அழைத்து விருந்தளிப்பார்கள்; அது போலவே பெண்வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டார் அனைவரையும் அழைத்து விருந்தளிப்பார்கள். இந்த விருந்துகளுக்கு 'பந்து அறிவா' என்று பெயர்; அதாவது பந்துக்களை ஒருவரையொருவர் அறிந்து கொள்ளுதல்.மடிக்கேரியில்,குடகர் திருமணங்கள் பெரும்பாலும் காலை பத்து மணிக்கே நடைபெறுகின்றன. முகூர்த்தம் கால்மணி நேரம்தான். ஆசீர்வதித்தல், பரிசளித்தல் ஒன்றரை மணி நேரம். பின்னர் நல்ல விருந்து.

குறிப்பிட்ட தினத்தன்று,மடிக்கேரி கொடவ சமாஜத்தில் காலை ஒன்பது மணியிலிருந்தே விருந்தினர் வரத் தொடங்கினர். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட குடகர் ஆண்கள் திருமணத்துக்கு 'நாட்டு உடை'யில் தான் வர வேண்டும். குடகர்களில் ஆண்கள் பொதுவாக மேனாட்டு உடையே அணிகின்றனர். எனவே, அவர்களில் சிலர் கோட்டை (ஊடியவ) மட்டும் கழற்றிவிட்டு, அதற்குப் பதிலாக நாட்டு உடையான 'குப்பியா' என்ற கறுப்பு அங்கியை அணிந்து கொள்கின்றனர். அது முழங்கால்களையும், முழங்கை வரையும் நீளமாக இருக்கும். ஒரு சாதாரண அங்கி 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை விலையுள்ளது. இடையில், ஜரிகை வைத்த சிவப்பு நிறமுள்ள கொல்லேகாலம் அல்லது காசிப் பட்டு ஒன்றை அழகாக மடித்துக் கட்டிக் கொள்கின்றனர். அதில் 'ஓடிக் கத்தி'யை, வெள்ளியில் செய்த உறையில் செருகி, இடையில் மாட்டிக் கொள்கின்றனர். தலையில் ஜரிகைத் தலைப்பாகை. இது மைசூர் தலைப்பாகை போலில்லாமல், உருவில் சிறிது வேறுபட்டிருக்கும். வேறுபாடு இல்லாவிட்டால் அது குடகர்களுடையதாக எப்படி இருக்க முடியும்? நாட்டு உடை முழுதும் 400 ரூபாய்க்குமேல் 600 ரூபாய்க்குள் இருக்கும் என்று அறிந்தேன். மாப்பிள்ளையின் உடையைவிடத் திருமணத்திற்கு வருபவர்கள் அணியும் உடை அதிக விலையுள்ளவை; அதிகக் கவர்ச்சியானவை; பகட்டானவை.

மே மாதத்தில் பெரும்பாலான குடகு ஆண்கள் கையில் நீளமான துணிப்பை ஒன்றை எடுத்துச் செல்வதைப் பார்க்கலாம். பெரும்பாலும் ஒரே மாதிரியான பை. அதற்குள் இருப்பது நாட்டு உடை. வெயில் காலத்தில் நாட்டு உடை அணிந்து நடப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும்.

திருமண நாட்களில், காரில் பிரயாணம் செய்யும்போது, நாட்டு உடையுடன் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் ஆண்களையும் பெண்களையும் பார்க்கலாம். ஆண்கள் சிலர் காரைப் பார்த்ததும் - கார் முழுதுமே ஆட்கள் நிரம்பி இருந்தபோதிலும் கூட-சலாம் செய்வார்கள்; சிலர் நமஸ்காரம் செய்வார்கள்; சிலர் செய்யப் போகும் உதவிக்கு முன்கூட்டியே நன்றி தெரிவிப்பதுபோல முகம் மலர்ந்து புன்னகை செய்வார்கள். காரில் செல்லும் குடகர்கள், எவ்வளவு கூட்டமிருந்தாலும், நெருக்கியடித்துக்கொண்டு, 'கொஞ்ச தூரம்தான்' என்று சொல்லி, எல்லோரையும் ஏற்றி, புளிமூட்டை போல அடைத்துக் கொண்டு செல்வார்கள். குடகர் களிடையே சமூக ஒற்றுமை உண்டு. ஆனால் இனவெறி கிடையாது.

பல்லசண்ட அப்பையாவுடன் பல முறை காரில் சென்றபோது, பலரை ஏற்றிச் சென்றிருக்கிறோம். ஆனால் வயதானவர்களுக்குத் தான் சலுகை. எழுபது வயதுக்குமேல் ஆனால்தான் வயதானவர்கள் என்பது பல்லசண்ட அப்பையாவின் கருத்து. கொடவ சமாஜத்தில் ஒரே சமயத்தில் சுமார் முந்நூறு குடகர்கள் நாட்டு உடையில் தோன்றியது கம்பீரமான காட்சியாக இருந்தது; சிற்றரசர்கள் கூடிய சபைபோல இருந்தது. உள்ளே பெரியவர்கள் இருந்ததால், இளைஞருக்குச் சிகரெட் புகைக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே, சில இளைஞர்கள் வெளியில் வந்து சிகரெட் புகைத்தனர். திரைப்படம் எடுக்கும்போது, ராஜா வேஷம் போட்டவர்கள், படப்பிடிப்புக்கு இடைவெளியில் வெளியேவந்து, அதே வேஷத்துடன் சிகரெட் புகைப்பது போல இருந்தது அக்காட்சி.

கொடவ சமாஜத்தில் கூடத்தின் மூலையில் அமைக்கப்பெற்ற சிறு அலங்காரப் பந்தலில் இரு முக்காலிகள் இருந்தன. முக்காலிக்கு குடகு மொழியிலும் முக்காலி என்றே பெயர். ஒன்று பெண்ணுக்கு; மற்றொன்று மாப்பிள்ளைக்கு. காலை ஒன்பதரை மணி இருக்கலாம். கல்யாணக் கூடம் நிரம்பியிருந்தது. சுமார் முந்நூறு ஆண்கள் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். பந்தலுக்கு வலப்புறத்தில் இருந்த பெரிய கூடத்தில் பத்து வரிசை பெஞ்சுகள் இருந்தன. அவற்றில் சுமார் முந்நூறு பெண்கள் அமர்ந்திருந்தனர். பெண்கள் அமர்ந்திருந்த திசையை நோக்கித்தான், பந்தலின் முன்பக்கம் இருந்தது.

தங்கமாஜி, சிவப்பு நிற சேலையும், சிவப்பு நிற ரவிக்கையும் அணிந்திருந்தாள். தமது தந்தை செட்டிமார் நாட்டில் வாங்கிய ஆயிரம் ரூபாய் பெறுமான வைரத்தோடு அணிந்திருந்தாள். மணப்பெண் சிவப்பு நிற உடையும், ரவிக்கையும் தான் அணியவேண்டும். மூன்று சுமங்கலிகள் தங்கமாஜியை மணப் பந்தலுக்கு அழைத்து வந்தனர். தங்கமாஜிக்கு முன்னால், கங்கம்மாவும், அவள் வயதை ஒத்த

மற்றோர் அழகிய பெண்ணும், இரு புறங்களிலும், தத்தம் கைகளில் பித்தளைத் தட்டு ஒன்றை ஏந்தி மெல்ல நடந்து வந்தனர். பித்தளைத் தட்டுக்களில் சிறிய மண் விளக்கு ஒன்று எரிந்தது. பந்தலை மூன்று முறை வலம் வந்து, மணப்பெண்ணை இடதுபுறமுள்ள முக்காலியில் உட்காரச் செய்தனர்.

பின்னர் நான்கு ஆண்கள் கையில் சிறிய மத்தளங்களை அடித்துப் பாட்டுப் பாடிக்கொண்டே, பந்தலை மூன்று முறை வலம் வந்தனர். மணப் பந்தலின் இருபுறமும், இரு பெரிய குத்து விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. குடகர்கள் வீட்டுக் கல்யாணங் களில் புரோகிதர்களுக்கோ, சைவ உணவுக்கோ இடமே இல்லை. மாப்பிள்ளை மேளதாள வாத்தியங்களுடன் வந்தார். குடகர்கள் மேளம், நாதசுரம் அனுபவித்த தமிழ்ச் செவிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். தமிழ் நாட்டுக் கிராமப் பகுதிகளில், கிராம தேவதைகளை எழுந்தருளச் செய்யும்போது வாசிக்கும் கொம்பு, தப்பட்டையை ஒத்திருந்தது அந்த மேளம். அந்த மேள வாத்தியத்தைக் "கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி" என்றே கூறலாம்.

முப்பத்திரண்டு வயதுள்ள மாப்பிள்ளை தேவனய்யா சிட்டியண்ணா, வெள்ளை அங்கியுடன், இடையிலும் தலையிலும் சிவப்புத் துணி அணிந்து கம்பீரமாக நடந்து வந்தார். கொடவ சமாஜத்தின் வெளியில் ஏழு வாழை மரத்தண்டுகள் நடப்பெற்றிருந்தன. தண்டுகள் உயரம் நாலடி, அதன் மேல்புறத்தை வாழை மட்டையால் மூடி, அதன்மீது ஒரு பூ வைத்திருந்தனர்; அதாவது வாழையை இன்னும் வெட்டவில்லை என்று காட்டுவதற்காக.

வாழைமரத் தண்டுகளுக்கு எதிரே மாப்பிள்ளை வந்ததும், பெண்வீட்டார் சடங்குகளுடன் வரவேற்றனர். மாப்பிள்ளை உட்காருவதற்கு ஒரு நாற்காலி கொண்டு வந்து போட்டனர். ஊர் பார்க்கவந்த சில வெள்ளைக்காரர்களும், மணப் பெண்ணின் சகோதரர் பூனச்சாவும், மாப்பிள்ளையைப் படம் பிடித்தனர். மாப் பிள்ளையின் மாமன், மாப்பிள்ளைக்குக் குடை பிடித்துக் கொண்டு நின்றார். மாப்பிள்ளைக்கு அருகில், அவருடைய நெருங்கிய உறவினர்களில் ஒரு பெண், தலையில் சிறு ஓலைப் பெட்டியுடன் நின்றாள். ஓலைப் பெட்டிக்குள் பால், பழம், உணவு வகைகள் இருக்கும் என்று அறிந்தேன். பெண்வீட்டார் ஓலைப் பெட்டியை மரியாதையுடன் ஏற்க வேண்டும். ஓலைப் பெட்டிக்குச் செய்யும் மரியாதை, மாப்பிள்ளை வீட்டுக்குச் செய்யும் மரியாதைக்கு அறிகுறி.

வாழைமரத் தண்டுகளை நட்டு வரவேற்பதுதான் மிகப் பெரிய கௌரவம். இதற்கு, 'பாழை விருது' அதாவது வாழை விருது என்று பெயர்.

குடகு சென்றது முதல், வாழை வெட்டும் வைபவத்தைப் பார்க்க ஆவலாக இருந்தேன். பல்லசண்ட அப்பையா இதைப்பற்றிப் பலமுறை கூறியிருக்கிறார். வாழை வெட்டுவது, சாதாரண முகூர்த்தங்களில் நள்ளிரவில்தான் நடக்கும். தம்பதி முகூர்த்தமானதால், இங்கு பகலிலேயே நடைபெற்றது.

“சில சமயங்களில் வேடிக்கையாகவும், குறும்புத்தனமாகவும் சில காரியங்கள் செய்வோம். வாழையை ஒரே வெட்டில் வெட்டவேண்டும். சில வாழைமரத்தண்டுகளில், உள்ளே, நடுவே ஓர் உறுதியான கம்பைச் செருகிவிடுவோம். வெளியில் யாருக்கும் தெரியாது. அந்த வாழையை வெட்டும்போது, உள்ளே ஒரு கம்பு இருப்பதால், ஒரே வெட்டில் வீழ்த்த முடியாமல் போய் விடும். அப்பொழுது, மாப்பிள்ளை வீட்டாரைக் கேலி செய்வோம்” என்று பல்லசண்ட அப்பையா ஒரு முறை கூறினார். அந்த வேடிக்கையை, நல்ல காலமாக இப்போது அவர் செய்யவில்லை.

மாப்பிள்ளை வீட்டாரைச் சேர்ந்த ஒருவர், வாழைகளை வெட்ட முன்வந்தார். வாழையை வெட்டவே ஒரு தனிக் கத்தி வைத்திருக்கிறார்கள். பெண் வீட்டாரிடமிருந்து அக்கத்தியை வாங்கி, அது கூர்மையாக இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்தார். பின்னர் வாழைகளை வலம்வந்து வணங்கினார்; சூரியனை நோக்கி வணங்கினார். சில விநாடிகளில் ஆறே வெட்டுகளில் ஏழு வாழைகளையும் வீழ்த்தினார். ஆறாவது வாழையை வெட்டிய வேகத்தில், ஏழாவது வாழையும் வெட்டுண்டது. அதைக் கண்டதும், மகிழ்ச்சியும் ஆரவாரமும் பொங்கின. மாப்பிள்ளை வீட்டாரைச் சேர்ந்த, ஐம்பது வயதுள்ள ஒருவர், தன்னை மறந்து நடு வீதியில் ஆனந்தக் கூத்தாடினார்.

மாப்பிள்ளையை உரிய மரியாதைகளுடன் வரவேற்று, மணப்பந்தலில் உட்கார வைத்தனர். நடுத்தர வயதுள்ள சுமங்கலி ஒருத்தி, மணப் பந்தலுக்கு வந்தார். இருபுறங்களிலும் இருந்த குத்து விளக்குகளை வணங்கினாள்; சூரியனை வணங்கினாள். பின்னர் தட்டிலிருந்த அரிசியை எடுத்து நான்கு புறமும் தூவினாள்; மணமக்கள் மீது தூவினாள். இதுதான் முகூர்த்தம்.

முகூர்த்தம் முடிந்ததும் ஆசீர்வதிப்பும், பரிசு வழங்கலும், பெண்களுக்குத்தான் முதல் உரிமை. பத்து வரிசை பெஞ்சுகளில் பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள் அல்லவா? அதில் கடைசி வரிசைப் பெஞ்சுகளில் உள்ள பெண்கள் முதலில் வரிசைக்கிரமமாக வந்தனர். வந்தவர்கள் தங்கள் உறவு முறைக்கு ஏற்ப, மாப்பிள்ளையை மட்டுமோ அல்லது பெண்ணை மட்டுமோ அல்லது இருவரையுமோ ஆசீர்வதித்தார்கள். ஆசீர்வதிப்பவர்கள், மாப்பிள்ளை முன்னால்

போய் நின்று, தட்டிலுள்ள அரிசியை எடுத்து, மாப்பிள்ளைமீது தூவி, பின்னர் மீண்டும் சிறிது அரிசியை எடுத்து, தாம் கொண்டுவந்த பரிசுடன் மாப்பிள்ளையின் கையில் வைப்பார்கள். மாப்பிள்ளை, அப் பரிசை தம் அருகில் நாற்காலியில் அமர்ந்திருக்கும் மாமனிடம் கொடுப்பார். மாப்பிள்ளைக்குப் பின்னால் ஒரு தோல் பை அல்லது டிரங்குப் பெட்டி கொண்டுவந்து வைப்பார்கள். பரிசுகளை எல்லாம் அப் பெட்டியில் போடுவார் மாப்பிள்ளையின் மாமன்.

ஆசீர்வதிப்பவர்களில், உரிமையுடையவர்களாக இருந்தால், அருகிலுள்ள சிறு வெள்ளி 'மூக்குக் கிண்டி'யை எடுத்து, மாப்பிள்ளைக்குப் பால் ஊட்டுவார்கள். தம்மைவிட வயதானவர்களை, மாப்பிள்ளை மூன்றுமுறை காலைத் தொட்டு வணங்குவார். பெண்கள் தலையைத் தொட்டு ஆசீர்வதித்து, தமது வலது கையை மேலே தூக்குவார்கள். கையைத் தூக்குவது பெண்கள் மட்டும்தான். மாப்பிள்ளையைவிடக் குறைந்த வயதுள்ளவர்கள், பரிசைக் கொடுத்தபின்னர், மாப்பிள்ளையின் காலைத் தொட்டு மூன்று முறை வணங்கவேண்டும். சமவயது உள்ளவர்கள், ஒருவரை ஒருவர் வணங்காமல் சிரித்துக்கொண்டே போய்விடுவார்கள். மணப்பெண் ஆசீர்வதிப்பும் இம்மாதிரியேதான்.

கடைசி வரிசைப் பெஞ்சுகளில் உள்ள பெண்களின் ஆசீர்வதிப்பு முடிந்ததும், அதற்கு அடுத்த வரிசைப் பெஞ்சுகளில் உள்ள பெண்கள் வரிசையாக வந்தார்கள். இப்படியே பத்து வரிசைப் பெஞ்சுகளில் உள்ள பெண்களும், கூச்சல் குழப்பம் இல்லாமல் வந்து ஆசீர்வதித்து, மீண்டும் தம் இடங்களுக்குச் சென்றது, அவர்களுடைய ஒழுங்கு முறையைக் காட்டிற்று. பெண்கள் ஆசீர்வதிப்பு முடிந்ததும், ஆண்கள் வரிசையாக எழுந்து நின்றார்கள். ஒவ்வொருவராகச் சென்று ஆசீர்வதித்தார்கள். ஆசீர்வதிக்கும்போது காலில் செருப்போ அல்லது பூட்ஸோ அணியக்கூடாது. எனவே, எல்லோரும் தம் பூட்ஸ்களைக் கழற்றி, தாம் அமர்ந்திருந்த நாற்காலிகளுக்கு அடியில் வைத்து விட்டார்கள்.

குடகர்களிடையே ஜாதிகள் இல்லை; ஆனால் உயர்வு தாழ்வு உண்டு. செல்வம், பதவி, குடும்பம் ஆகியவற்றால் சிலரைப் பலர் உயர்வாகக் கருதுவார்கள். ஆனால் திருமணம் முதலிய எந்த விசேஷங்களிலும் எல்லோரும் சமம்; யாருக்குமே தனிச் சலுகை கிடையாது. முந்தி வருபவர்களுக்கே முதல் உரிமை. இதனை ஆசீர்வதிப்பதிலும், விருந்திலும் நன்கு காணலாம்.

விருந்தில் ஒரே கூட்டம்; முதலாவது பந்தியில் இடம் கிடைக்கவில்லை. இரண்டாவது பந்தியிலும் ஏமாற்றம். மூன்றாவது பந்தியில் சாப்பிட அன்பர் சுப்பிரமணியன் அவர்களுக்கு

விருப்பமில்லை.ஏன்? என்று கேட்டேன்.“முதலாவது பந்தியின்போது மேஜைமீது துணி விரிக்கிறார்கள். இரண்டாவது பந்தியின்போது அதே துணியைத் திருப்பி விரிக்கிறார்கள். மூன்றாவது பந்திக்குப் புதுத் துணி விரிப்பதில்லை. முதலாவது பந்தியில் போட்ட துணியின் பக்கமே திரும்ப வரும். அது அவ்வளவு கவர்ச்சியாக இராதல்லவா?” என்றார். அதை நினைத்துப் பார்த்தபொழுது, எனக்கும் விருப்பம் இல்லை. ஆனால் நல்ல வேளையாக, வெளிக் கூடத்தில், துணி விரிக்காத இடத்தில் விருந்தளித்தனர்.

“விருந்து எப்படி இருந்தது?” என்று பல்லசண்ட அப்பையா கேட்டபொழுது, “சாப்பாடு மிக நன்றாக இருந்தது; ஆனால் எங்களுக்குச் சரியாகப் பரிமாறவில்லை” என்ற உண்மையைக் கூறினார் சுப்பிரமணியன். விருந்துக்குப்பின், மாப்பிள்ளையின் தந்தை தேவனய்யாவை அறிமுகப்படுத்தினார். பல்லசண்ட அப்பையா. தேவனய்யா எண்பத்திரண்டு வயது ‘இளைஞர்.’

விருந்துக்குப் பின் கூடத்தின் ஓர் மூலையில் மேளவாத்தியங் களுக்கு ஏற்ப, ஆண்கள் (சிறுவர்களும், பெரியவர்களும்) நடனமாடினர். சிலர், சிறிதும் சளைக்காமல் மணிக்கணக்காகத் தம்மை மறந்து நடனமாடுவார்கள் என்றும், தம்மை மறப்பதற்கு வேண்டிய பான வகைகள் எப்போதும் கிடைக்கும் என்று அறிந்தேன்.

மாலையில் மீண்டும் கொடவ சமாஜம் சென்றேன். மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த நால்வரும், பெண் வீட்டைச் சேர்ந்த நால்வரும் எதிர் எதிரே நின்றனர். “இப்பொழுதுதான் ‘சம்பந்தம்’ நடைபெறுகிறது” என்றார் பல்லசண்ட அப்பையா. சம்பந்தம் மிக முக்கியமானது. முன்னோர்கள் அதன் முறையைப் பின்வருமாறு வகுத்துள்ளனர். பெண்வீட்டு அருவா: இரண்டு நாடுகளைச் சேர்ந்தவர்கள், வீட்டில் உள்ளவர்கள், உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய எல்லோரும் இரண்டு வரிசைகளில் நிற்கிறார்களா?

மாப்பிள்ளைவீட்டு அருவா: அவர்கள் எல்லோரும் நிற்கிறார்கள். பெண்வீட்டு அருவா: பல்லசண்ட குடும்பத்தைச் சேர்ந்த தங்கம்மா என்ற பெண்ணை, காயப்பண்ட குடும்பத்தைச் சேர்ந்த சிட்டியண்ணனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறோம். இப் பெண்ணுக்குச் சம்பந்தம் அதாவது குடும்பத்தில் உள்ள உரிமைகளைக் கொடுப்பீர்களா? குடும்ப நிலத்தில் விளையும் ஆயிரம் புட்டி நெல், மாடு மேயும் இடங்கள், பத்து ஜோடி மாடு, பத்து பசு, தோட்டம், வேலையாள், புதைத்து வைத்துள்ள தனம் முதலியன ஒன்று முதல் நூறுவரை, சுண்டைக்காய் முதல் எல்லா சொத்து உரிமைகளையும் கொடுப்பீர்களா?

மாப்பிள்ளைவீட்டு அருவா: நாங்கள் கொடுக்கிறோம்.

பெண்வீட்டு அருவா; கல்யாணத்தின்போது எங்கள் பெண் உங்கள் வீட்டுக்கு வரும்போது எங்கள் வேலையாட்கள் 'ஆயிரம் பிரான்' மதிப்புள்ள சாமான்களைத் தூக்கி வருவார்கள். அது காணாமல் போய்விட்டால், யார் அதற்குப் பொறுப்பு?

மாப்பிள்ளை வீட்டு அருவா: நான்.

பெண்வீட்டு அருவா: நீர் யார்?

மாப்பிள்ளை வீட்டு அருவா: நான் இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவன். காயப்பண்ட குடும்பத்தின் அருவா. பெண்வீட்டு அருவா: மண்ணருவா?. பொன்னருவா? (மண் அருவா என்பது நிலத்தில் தொடர்புடைய நண்பன். பொன் அருவா என்பது இந்தக் காரியத்துக்காகப் பொன் கொடுத்து ஏற்பாடு செய்வதன்).

மாப்பிள்ளை வீட்டு அருவா: இரண்டும்.

பெண் வீட்டு அருவா: அப்படியானால் இந்தப் பன்னிரண்டு பொற்காசுகளை எடுத்துக்கொள்.(இவ்வாறு கூறி பதினோரு கூழாங் கற்களைக் கொடுத்துவிட்டு ஒரு கூழாங் கல்லைத் தன்னிடமே வைத்துக்கொள்வார்).

மாப்பிள்ளை வீட்டு அருவா: பதினோரு பொற்காசுகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறேன். எங்கள் பையனுக்குக் கல்யாணம் செய்திருக்கும் உங்கள் கபடமற்ற பெண், "சோறு சூடாக இருக்கிறது; கறி உறைப்பாக இருக்கிறது, மாமனார் திட்டுகிறார், மாமியார் கொடுமைப்படுத்துகிறாள், கணவனுக்கு ஆண்மையில்லை, கணவன் வீட்டார் மிகவும் ஏழைகள், இங்கிருக்க மாட்டேன், தாய்வீட்டுக்குப் போக வேண்டும்" என்று கூறினால், அவளுக்கு சரி, தப்பு என்று எடுத்துச் சொல்வதற்கு யார் பொறுப்புடையவர்? அவளைத் திருப்பிக் கொண்டுவர வேலையாட்கள் செல்வதற்கும், தீப்பந்தங்கள் கொளுத்தி வழி திரும்புவதற்கும் யார் பொறுப்பு?

பெண் வீட்டு அருவா: நான்.

மாப்பிள்ளை வீட்டு அருவா: நீர் யார்?

பெண் வீட்டு அருவா: நான் இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவன். பல்லசண்ட குடும்பத்தின் அருவா.

மாப்பிள்ளை வீட்டு அருவா: மண்ணருவா? பொன்னருவா?

பெண் வீட்டு அருவா: இரண்டும்.

மாப்பிள்ளை வீட்டு அருவா: அப்படியானால் இந்த 'சாட்சிப் பணம்' எடுத்துக் கொள். (சாட்சிப் பணம் மூன்று கொடுக்கிறார்).

பெண் வீட்டு அருவா: இப்பெண்ணுக்கு ஏதேனும் துரதிர்ஷ்டம் நேர்ந்தால், இவளைத் தாய் வீட்டுக்குத் தக்க துணையுடனும், வேலைக்காரர்களுடனும் வழியில் தீப்பந்தம் காட்டி அனுப்பும் பொறுப்பு யாருடையது?

மாப்பிள்ளை வீட்டு அருவா: என்னுடையது.

பெண் வீட்டு அருவா: அப்படியானால் இந்த சாட்சிப் பணத்தை எடுத்துக்கொள். (சாட்சிப் பணம் கொடுக்கிறார்)

இத்துடன் சம்பந்தம் முடிந்தது.

சம்பந்தம் முடிந்ததும், மாப்பிள்ளை சமையல் அறையில் உட்கார்ந்திருக்கும் மணப்பெண்ணிடம் சென்று, அவளுக்கு ஒரு பண முடிப்பு அளிப்பார். அதற்குச் 'சீலைப் பணம்' என்று பெயர். பின்னர் அவள் கையைப் பிடித்து அழைத்து வருவார். அழைத்து வரும்போது, படிக்கட்டுகளில் வலது காலை முதலில் வைக்க வேண்டும். மாப்பிள்ளை பெண் கையைப் பிடித்து அழைத்து வரும்போது ஒரே ஆரவாரமாக இருக்கும். பெண் தாய் வீட்டை விட்டுப் புறப்படும்போது, கண் கலங்குவாள். வீட்டு வேலைக்காரர்கள் வழிமறிப்பார்கள். அவர்களுக்கு மணப் பெண் பரிசு வழங்க வேண்டும்.

பெண் தாய்வீட்டை விட்டுச் செல்லும்போது பாடுகின்ற உருக்கமான பாட்டுக்களில் ஒன்று:-

நா போபி நா போபி பெத்தவா தாயோ
பென்னுட்டு போபக்கா பையாத்தி தாயோ

என்னத்தே போச்சிண்டு செடியத்தி தாயோ
கொதியான மோவந்து சாக்கிர தாயோ
கல்லோணி தாட்டித்து போபினோ தாயோ
சிங்காரப் பட்டொளி தந்தீரோ தாயோ

பொஞ்சார பொம்பண இட்டீரோ தாயோ
புட்டுன தாமனே தீணித்து நாக்!
புட்டி பொலந்து ஓடாடித்துத் தாயோ
தாமனேக்கு நானு பென்னிட்டே தாயோ

நெல்லக்கி நடுபாடை முந்து மனையோ
கரிபூட்டி அய்மாரா கையாலே பட்டி
சாக்குணா ரம்பண்ண எல்லோரா புட்டு
பாமனே பாவாக்கு போரேரோட்டினோ நானு.

மொழி பெயர்ப்பு

நான் போகிறேன் நான் போகிறேன் பெற்ற தாயே
போன பிறகு என்னை ஒன்றும் வையாதே தாயே

கோபமடையாதே, தவறாக நினையாதே தாயே
அன்புடன் என்னை ஊட்டி வளர்த்தவளே
சந்துகள் வழியாகப் போகிறேன் தாயே
ஆடை ஆபரணங்கள் அணிந்துகொண்டு தாயே

பொன் ஆபரணங்களை பொழிந்தாய் தாயே
பிறந்த வீட்டுச் சுகம் இன்றோடு போயிற்று எனக்கு
பிறந்து வளர்ந்து ஓடியாடினேன் தாயே
இப்போது உன்னை விட்டுப் பிரிகிறேன் தாயே.

நந்தா விளக்கே, நடுபாடை, முந்து மனையே
கரும்பலகை அய்மாரா, தாழ்வாரமே, வீடே
தாய் கொடுத்த எல்லாவற்றையும் விட்டு விட்டு
குடி புகுந்து வாழும் வீட்டுக்குச் செல்கிறேன் நான்.

மணப் பெண், கணவன் வீட்டை அடைந்ததும் சில சடங்குகள் உண்டு. நிலத்திற்குச் சென்று ஒரு கூடை எருவைச் சுமந்து வரவேண்டும். இது அவளுக்கு வீட்டில் உரிமை உண்டு என்று காட்டுவதற்கு. பின்னர் கிணற்றுக்குச் சென்று பூஜை செய்து, ஒரு குடம் தண்ணீர் கொண்டு வர வேண்டும். அதற்கு 'கங்கா 'தங்கமாஜி, பூஜை' என்று பெயர். இது மகிழ்ச்சி ஊட்டும் சடங்கு கங்கா பூஜை' செய்ததைப் பார்த்தேன். நன்கு அலங்கரித்து, மேளவாத்தியங்களும், மைத்துனர், மைத்துனிகளின் மகிழ்ச்சி ஆரவாரங்களும் முழங்க, மணப் பெண் சமையல் அறைக்குள் நுழைவாள். சமையல் அறையில் அவளுக்கு உரிமை உண்டு என்பதைக் காட்டுவதற்கு இச் சடங்கு.

மணப் பெண் கொண்டுவந்த பெட்டியில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்கு, மாப்பிள்ளை வீட்டிலுள்ள பெண்கள் துடிப்பார்கள் அல்லவா? அதற்கும் ஒரு சடங்கு உண்டு. அதன் பெயர் 'பெட்டி நோட்டுவா.' முன் காலத்தில் பெண் கொண்டுவரும் சாமான்களுக்குப் பட்டியல் கிடையாது. துரதிர்ஷ்டவசமாகப் பெண், தாய்வீட்டிற்குத் திரும்பிப் போக நேர்ந்தால், கொண்டுவந்த சாமான்களைத் திரும்ப எடுத்துச் செல்லவேண்டும் அல்லவா? அப்பொழுது, 'பெட்டி நோட்டுவா' சடங்கில் கலந்து கொண்டவர்கள் சாட்சிகளாக இருப்பார்கள் என்றார் வயதான ஒருவர்.

'பெட்டி நோட்டுவா' சடங்கு முடிந்ததும், மாமியார் மணப் பெண்ணை நந்தா விளக்குக்கு முன்னர் அழைத்து, 'பேடா இடுவா' அதாவது பெயர் இடுவாள். மணப் பெண்ணுக்கு ஏற்கெனவே பெயர் இருந்தாலும், மணம் ஆனவுடன் அவளுக்கு மாமியார் புதுப் பெயர் சூட்டுவது வழக்கம். அதற்குக் காரணம், மாமியார், மருமகளைத் தனது சொந்த மகளாகவே கருதி, அவளுக்குப் புதிதாகப் பெயர் வைக்கிறாள் என்று சொல்லுகிறார்கள். இந்தக் காலத்துப் பெண்கள், தமது பெயரை மாற்றிக்கொள்ள விரும்புவதில்லை. மாமியார் வைக்கும் பெயரை மருமகள் ஏற்பாளா? ஆனால் மாமியாருக்குத் தனது உரிமையை விட்டுக்கொடுக்க மனம் இல்லை. எனவே, இருவருக்கும் பொதுவாக ஒரு சமரச ஏற்பாடு. பெண்ணின் பெயர் 'பொன்னக்கா' என்றிருந்தால், மாமியார் 'பொன்னவ்வா' என்று மாற்றுவார். அவ்வா என்றால் தாய். மணப் பெண் விரைவில் தாய் ஆகாவிட்டால் அவளுக்குச் சிறப்பு ஏது? வீட்டைச் சிங்காரிக்க அழகான மக்கள் வேண்டாமா?

ஒக்கக்கு சிங்கார பொம்னி மக்கா
கேரேகே சிங்கார தாவரை பூவு
பானக்கே சிங்கார மின்னுவா சுக்கி.

வீட்டைச் சிங்காரிப்பது பொன்மணி மக்கள்
குளத்தைச் சிங்காரிப்பது தாமரைப் பூ
வானத்தைச் சிங்காரிப்பது மின்னுகின்ற

நட்சத்திரங்கள்.

★ ★ ★

ஜெனரல் கரியப்பா

ஆறடி உயரம், அறுபத்து நான்கு வயது, கம்பீரமான தோற்றம், எல்லோருடனும் எளிதாகப் பழகும் இனிய சுபாவம். இவற்றைச் சுதந்திர இந்தியாவின் முதலாவது சேனாதிபதியாக இருந்த ஜெனரல் கோடான்டேர மாடப்பா கரியப்பா என்ற போர் வீரரிடம் கண்டேன்.

குடகு பெற்றெடுத்த சிறந்த புதல்வர்களுள் ஒருவர் ஜெனரல் கே.எம். கரியப்பா. மடிக்கேரி கொடவ சமாஜத்தில் நடைபெற்ற ஒரு திருமணத்தின்போது,பல்லசண்ட அப்பையா ஜெனரல் கரியப்பாவை அறிமுகப்படுத்தினார். அப்பொழுது, ஜெனரல் கரியப்பா குடகு நாட்டு உடை அணிந்திருந்தார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஜெனரல் கரியப்பாவை ஒரு முறை சந்தித்திருக்கிறேன். அதை நினைவுபடுத்தியபொழுது, "நன்றாக ஞாபகம் இருக்கிறது. நீங்கள் ஒரு முறை எனது வீட்டுக்கு வரவேண்டும்" என்றார்.

"என்னுடைய நண்பர் ஒருவர் தம் குழந்தைகளுடன் வந்திருக்கிறார். அவர்களுக்கும் தங்களைப் பார்க்க ஆவல். அழைத்து வரலாமா?" என்று கேட்டேன்.

"அவசியம் அழைத்து வாருங்கள். எப்பொழுது வருகிறீர்கள்?" என்றார்.

"தங்களுக்கு எப்பொழுது சௌகரியமோ அப்பொழுது வருகிறோம். தம்பி போப்பையாவிடம் சொல்லியனுப்பினால் போதும்" என்றேன்.

ஜெனரல் கரியப்பாவுக்கு மூன்று சகோதரர்கள். கடைக்குட்டி போப்பையா. மடிக்கேரியில் உள்ள யாத்திரிகர் நல இலாகா அதிகாரியாகப் பணியாற்றுகிறார். மடிக்கேரி செல்லும் யாத்திரிகர் எவரும் போப்பையாவைப் பார்க்காமல் இருக்க முடியாது. அன்புடன் பிறருக்கு உதவி செய்வதில் அவருக்குப் பெரு மகிழ்ச்சி. போப்பையாவை ஏற்கெனவே எனக்குத் தெரியும்.

திருமணப் பந்தலில் மாவிலைகளைத் தோரணமாகக் கட்டியிருந்தார்கள். மணமக்களை வாழ்த்தச் செல்வோருக்கு, தோரணத்தின் ஒரு பகுதி இடைஞ்சலாக இருந்தது. அதைக் கவனித்த ஜெனரல் கரியப்பா, தம் பையிலிருந்த பேனாக் கத்தியை எடுத்துச் சென்று, இடையூறாக இருந்த பகுதியை வெட்டிவிட்டார். என்னைத் தவிர இதனை யாருமே கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். பிறர் கவனத்தை ஈர்க்காமல் இயல்பாக இதனைச் செய்தார்.

சிறிது நேரம் கழித்து, தபால் நிலையத்தில் ஜெனரல் கரியப்பாவைப் பார்த்தேன். மற்றவர்களோடு வரிசையில் நின்றார். அப்பொழுது பத்திரிகையில் படித்த செய்தி ஒன்று நினைவுக்கு வந்தது.

சில ஆண்டுகளுக்கு முன், கம்யூனிஸ்டு சீனா நம் தாய்நாட்டின்மீது படையெடுத்தபோது, ஜெனரல் கரியப்பா மீண்டும் ராணுவத்தில் சேர்ந்து தொண்டு செய்ய விரும்பினார். பங்களூரில் பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கும் காரியாலயத்தில், எல்லோருடனும் வரிசையில் நின்று கொண்டிருந்தார். அவருடைய முறை வந்தபொழுது, “உங்களுக்கு வயதாகி விட்டது. பட்டாளத்தில் சேர்த்துக்கொள்ள ராணுவ விதி இடம் கொடுக்கவில்லை” என்று கூறி, மாஜி சேனாதிபதி கரியப்பாவை பட்டாளத்தில் சேர்த்துக்கொள்ள அதிகாரி மறுத்துவிட்டார்.

ஜெனரல் கரியப்பாவைச் சந்தித்த இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு, போப்பையா என்னைச் சந்தித்தார். “22 ஆம் தேதி காலை பத்து மணிக்கு உங்கள் எல்லோரையும் ஜெனரல் வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கிறார். அன்று காலை ஒன்பதரை மணிக்கு எனது காரியாலயத்துக்கு வந்துவிடுங்கள்; அழைத்துச் செல்கிறேன். பத்து மணி என்றால் சரியாகப் பத்து மணிக்கு அங்கிருக்க வேண்டும். குறித்த காலம் தவறக் கூடாது என்பதில் ஜெனரல் மிகவும் கண்டிப்பானவர்” என்றார் போப்பையா.

ஜெனரல் கரியப்பாவின் தந்தை கொடான்டேர மாடப்பா, வடகுடகில், சனிவார சந்தை என்ற ஊரில் அரசாங்க ரெவினியூ அதிகாரியாக இருந்தபொழுது, கரியப்பா பிறந்தார். சிறு வயதில் மடிக்கேரி உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர் சென்னை இராஜதானிக் கல்லூரியிலும் பயின்றார். படிப்பை முடிக்கு முன்னரே பட்டாளத்தில் சேர்ந்தார். மெஸபிடோமியா, வாஸிர்ஸ்தான், ஈரான், ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் இந்திய ராணுவத்தில் தொண்டாற்றினார். இந்தியா சுதந்திரமடைவதற்கு முன், அமெரிக்கா, கனடா, ஜப்பான், சீனா முதலிய பல நாடுகளுக்குச் சென்றார். 1949-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நான்கு ஆண்டுகள் இந்தியாவின்

சேனாதிபதியாக இருந்தார். சுதந்திர இந்தியாவின் முதலாவது இந்திய சேனாதிபதி ஜெனரல் கரியப்பாதான். புகழ்பெற்ற ஜெனரல் கே.எஸ். திம்மையாவும் ஜெனரல் கரியப்பாவின் குடும்பத்தைச் சேர்ந்தவரே.

பிரிட்டிஷார் காலத்தில் ராணுவத்துக்கும் பொது மக்களுக்கும் இடையே வெறுப்பு உணர்ச்சியும் பகைமையும் இருந்தன. ஜெனரல் கரியப்பா, அதனைப் போக்கி ராணுவத்துக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் பாடுபட்டு, ஓரளவு வெற்றியும் பெற்றார்.

அமெரிக்க அரசாங்கமும், நேபாள அரசாங்கமும், ஜெனரல் கரியப்பாவுக்கு மிக உயர்ந்த விருதுகள் அளித்துக் கௌரவித்தன. ஆக்ரா சர்வகலாசாலை 'டாக்டர்' பட்டம் அளித்தது. சேனாதிபதி பதவியிலிருந்து விலகியபின், ஜெனரல் கரியப்பா ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் இந்தியத் தூதராகப் பணியாற்றினார்.

குறிப்பிட்ட நாளில் காலை ஒன்பதரை மணிக்கு, போப்பையாவின் காரியாலயம் சென்றோம். காரியாலயம் திறக்கவில்லை. சரியாகப் பத்து மணிக்கு ஜெனரல் கரியப்பாவின் மாளிகைக்குச் சென்றோம். அவர் அங்கில்லை. அங்கிருந்த வேலையாள் ஒரு தமிழர். அன்புடன் வரவேற்றார். ஜெனரல் ஒரு திருமணத்திற்குச் சென்றிருக்கிறார் என்றும், பகல் பன்னிரண்டு மணிக்குத் திரும்புவார் என்றும் கூறினார். சிறிது ஏமாற்றத்துடன் திரும்பினோம்.

அன்று காலை கொடவ சமாஜத்தில் நடைபெற்ற திருமணத்துக்கு எங்களையும் அழைத்திருந்தார்கள். அங்கு சென்றதும் ஜெனரல் கரியப்பாவைப் பார்த்தேன். உடனே அவர் எழுந்து நின்று, எனது கைகளைப் பிடித்துக்கொண்டு "என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் எல்லோரையும் காலை பத்து மணிக்குப் பதிலாக, காலை எட்டு மணிக்கே வரும்படி தகவல் தெரிவிக்குமாறு போப்பை யாவிடம் கூறினேன். போப்பையா உங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்று தோன்றுகிறது. தவறு நேர்ந்து விட்டது, மன்னியுங்கள். நீங்கள் எல்லோரும் இன்று பகல் உணவுக்கே என் வீட்டுக்கு வரவேண்டும். நானே உங்களை அழைத்துச் செல்கிறேன்" என்றார்.

"பகல் உணவுக்கு வேறு இடத்துக்கு வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவசியம் தங்கள் வீட்டுக்கு வந்து செல்கிறோம். தங்களுக்குச் சிரமம் வேண்டாம். எந்த நேரம் என்று சொன்னால் போதும்" என்றேன்.

"பன்னிரண்டரை மணி சௌகரியப்படுமா?" என்றார் ஜெனரல்.

"அப்படியே வருகிறோம்" என்றேன்.

சிறிது நேரம் சென்றதும், போப்பையா என்னைத் தேடிப் பிடித்து, "மன்னிக்க வேண்டும். ஜெனரல் நேரத்தை மாற்றிய தகவலைத் தங்களுக்குத் தெரிவிக்க பிரயாணிகள் விடுதிக்கு டெலிபோன் செய்தேன் தாங்கள் அங்கில்லை என்றார்கள். நீங்கள் தங்கும் இடம் தெரியாததால் தகவல் தெரிவிக்க முடியவில்லை. மன்னியுங்கள்" என்றார்.

மடிக்கேரியிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள 'ரோஸ் நாரா' என்ற மாளிகையில் வசிக்கிறார் ஜெனரல் கரியப்பா. பெரிய தோட்டத்தின் நடுவே உள்ளது மாளிகை. சாலையிலிருந்து மாளிகை சுமார் ஒரு மைல் தூரம். தோட்டத்தில் எங்கு பார்த்தாலும் பசுமை; ஏராளமான கற்பூர மரங்கள்; அமைதியான சூழ்நிலை.

குறிப்பிட்ட நேரத்தில் மாளிகையை அடைந்தோம். வாசலின் முன்னால் ஜெனரல் கரியப்பாவின் கார் நிறுத்தி வைக்கப் பெற்றிருந்ததால், சிறிது தூரத்திலேயே எங்கள் காரை நிறுத்திவிட்டு நடந்து சென்றோம். வாசற்கதவை ஒருவர் திறந்தார். வேலைக்காரர்தான் திறக்கிறார் என்று நினைத்தேன். இல்லை; வாசற்கதவைத் திறந்து வரவேற்கத் தயாராகக் காத்து நின்றவர் ஜெனரல் கரியப்பாவேதான். கைகூப்பி வரவேற்றார். தமது கைக்கடிக்காரத்தைப் பார்த்து, "சரியாகப் பன்னிரண்டரை மணிக்கு வந்து விட்டீர்களே!" என்றார்.

"குறித்த காலம் தவறக் கூடாது என்பதில் ஜெனரல் மிகவும் கண்டிப்பானவர் என்று கேள்வியுற்றிருக்கிறேன்" என்றேன்.

"ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பெயர்களைச் சொல்லி அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார் ஜெனரல் கரியப்பா. நண்பர் காளியப்பனும், அவருடைய ஐந்து குழந்தைகளும், முத்துவீரப்பன் என்ற கல்லூரி மாணவரும் எங்கள் கோஷ்டியினர். ஒவ்வொருவராக தங்கள் பெயர்களைச் சொல்லியபோது, காளியப்பன் மகளுக்கு மட்டும் நமஸ்காரம் செய்தார்; மற்ற எல்லோருடனும் கைகுலுக்கினார். நான்கு வயதுச் சிறுவன் மனு தன் பெயரை ஆங்கிலத்தில் கூறியபோது, ஜெனரல் கரியப்பாவுக்கு மகிழ்ச்சி. "ஆங்கிலம் நமக்கு மிகவும் அவசியம். அதை விட்டுவிடக் கூடாது" என்றார். பின்னர் எல்லோரையும் வரவேற்புக் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்.

கூடம் ஒரு பொருட்காட்சியைப் போல இருந்தது. எத்தனை நாட்டுச் சாமான்கள்! எத்தனை விதமான சாமான்கள்! எவ்வளவு அபூர்வமான பொருள்கள்! அவை ஜெனரல் கரியப்பாவின் கலை ஆர்வத்தை எடுத்துக்காட்டின.

கூடத்தில் ஏற்கெனவே மூவர் இருந்தனர். "இவள் என் மகள் நளினி. இவர் டாக்டர் சீதாலட்சுமி, வைத்தியத் துறையில் அபாரத் தேர்ச்சி பெற்றுள்ளார். சில தினங்களில் அமெரிக்கா செல்கிறார். இவர் டாக்டர் உத்தையா" என்று மூவரையும் அறிமுகப் படுத்தினார்.

நளினி, தம் தந்தையார் பயின்ற சென்னை இராஜதானிக் கல்லூரியிலேயே பயின்று வந்தாள். "இவ்வாண்டு பி.ஏ. பரீட்சைக்குச் சென்றிருக்கிறாள். தேர்வு பெற்றுவிடுவாள் என்று நம்புகிறேன்" என்றார் ஜெனரல் கரியப்பா. குடகுப் பெண்களுக்கு இயல்பாக உள்ள அழகும், அடக்கமும் நிறைந்து விளங்கினாள் நளினி.

"காப்பி சாப்பிடுகிறீர்களா அல்லது குளிர்பானம் சாப்பிடு கிறீர்களா?" என்று கேட்டார் கரியப்பா. நாங்கள் எல்லோரும் மௌனமாக இருந்தோம்.

"இந்த சீதோஷ்ண நிலைக்குக் குளிர்ந்த பானமே நல்லது என்று தோன்றுகிறது" என்றார் கரியப்பா. நளினி உள்ளே சென்று சிறிது நேரத்தில், குளிர்பானங்கள் கொண்டு வந்து எல்லோருக்கும் வழங்கினாள். பின்னர் பிஸ்கோத்துகள் வழங்கினாள். சாப்பிட்டு முடிந்தால் மீண்டும் பிஸ்கோத்தும் குளிர்பானமும் வழங்க ஆரம்பித்துவிடுவாள்.

ஜெனரல் கரியப்பா ஆஸ்திரேலியாவில் இந்தியத் தூதராக இருந்தபோது, ஆஸ்திரேலியாவின் வெள்ளையர்களை மட்டும் அனுமதிக்கும் குடியேற்றக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். ஆஸ்திரேலியாவில் சதுர மைலுக்கு மூன்றரைப் பேர்தான் உள்ளனர். இந்தியாவிலோ சதுர மைலுக்கு 373 பேர். "ஏராளமான இடம் இந்நாட்டில் காலியாக இருக்கிறது. காமன் வெல்த் நாட்டு மக்களை இங்கு குடியேற்றினால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று கூறினார் கரியப்பா. அதனை ஆஸ்திரேலிய அரசாங்கம் விரும்பவில்லை. பிறர் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாமல், தம் மனத்தில் சரி என்று தோன்றுவதைத் தைரியமாக ஒளிவு மறைவு இல்லாமல் கூறும் இயல்புடையவர் ஜெனரல் கரியப்பா.

அதைப் பற்றி பேச்சு எழுந்தபோது, "ஆஸ்திரேலியர்கள் ஜனநாயகத்தின் எதிரிகளைக் குடியேற அனுமதிக்கின்றனர். யுத்தத்தின் போது, ஆஸ்திரேலியர்களுடன் நாம் தோளோடு தோள் நின்று போராடினோம். ஆனால் குடியேறுவதற்கு இத்தாலியர்களையும் ஜெர்மானியர்களையும் அனுமதிக்கின்றனர். கொரியா யுத்தத்திற்குச் சென்ற ஆஸ்திரேலிய சிப்பாய்களின் ஜப்பானிய மனைவிகளைக் கூட, சுமார் 25 பேர், குடியேற அனுமதித்தனர். ஆசியாக்காரர்களைக் குடியேற அனுமதிப்பதில்லை. இதற்கு, (தமது கை மணிக்கட்டைத்

தொட்டுக் காண்பித்து) இதுதான் (கறுப்பு நிறம் தான்) காரணம். இதனைக் கண்டு ஆத்திரமடைய வில்லை; ஆனால் மிக வேதனை அடைகிறேன். 'உங்களுடைய வெள்ளை உள்ளத்தைத்தான் நாங்கள் விரும்புகிறோம்; ஆனால் உங்களுடைய வெள்ளைத் தோலை நாங்கள் விரும்பவில்லை' என்று அவர்களிடமே கூறினேன். ஆஸ்திரேலியாவை விட்டு இரண்டு ஆண்டுகள் கழித்தும்கூட, முன்பின் அறியாத ஆஸ்திரேலியர்களிடமிருந்து எனக்குக் கடிதங்கள் வந்தன. 'எங்கள் கண்களைத் திறந்து விட்டதற்கு நன்றி. நாங்கள் ஆசியாக்காரர்கள் தான் என்பதை இப்பொழுது உணர ஆரம்பிக்கிறோம்' என்று சிலர் எழுதினார்கள்" என்றார் ஜெனரல் கரியப்பா.

உடனே அவர் எண்ணம். சிறுவர்கள்பால் திரும்பியது. ஒரு படத்தைக் கொண்டு வந்தார். "நேரில் பார்த்தால், காந்தி; வலதுபுறம் நின்றுபார்த்தால் நேரு; இடது புறம் நின்று பார்த்தால் ராஜன் பாபு. இந்தப் படம் செய்வது இப்படித்தான். (அதனை விளக்கிக் காண்பித்துவிட்டு) உள்ளூர்க்காரன் ஒருவன் இதனைச் செய்து கொண்டு வந்தான். விலை கேட்டதற்குப் பத்து ரூபாய் என்றான். பதினைந்து ரூபாய் கொடுத்தேன். உள்ளூர்த் தொழிலாளர்களை ஆதரிக்க வேண்டும். இதே படத்துக்கு டில்லியில் முப்பது அல்லது நாற்பது ரூபாய் கொடுக்க வேண்டும்" என்று கூறினார் ஜெனரல் கரியப்பா.

படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன், தன் கைகளைக் கால்சட்டைப் பைகளில் திணித்துக் கொண்டு, கூனி நின்றான். அதனைக் கண்டு கரியப்பா உடனே, "கைகளைக் கால்சட்டைப் பைகளில் திணிக்கக் கூடாது. கெட்ட பழக்கம், பிறரை அவமரியாதைப் படுத்துவது போலாகும். அன்றியும் கூன் விழுந்துவிடும். கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு நிமிர்ந்து நிற்கவேண்டும்" என்று கூறினார். அவ்வாறே நிமிர்ந்து நின்று காண்பித்தார். சிறுவன் மனுவைப் பார்த்து, "நீ ஒருநாள் இந்நாட்டின் சேனாதிபதியாகிவிடுவாய்" என்றார்.

எல்லோரையும் பக்கத்திலுள்ள ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார். அவர் சுட்ட புலிகளில் ஒன்று- துணியடைத்து உயிருள்ள புலியைப் போல இருந்தது. மனு அதனைக் கண்டு பயந்து அழுதான். அவனைத் தூக்கிப் 'பயப்படாதே' என்று சொல்லிப் புலியின் மீது உட்கார வைத்தார்.

"பூமராங் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டுக்கொண்டே இரண்டு பலகைகளை எடுத்தார். டு என்ற எழுத்தைப் போன்ற உருவமும், ஓர் அங்குல அகலமும் உள்ள மிகக் கூர்மையான

ஏவுகணை. "ஆஸ்திரேலியாவில் கங்காரு என்ற பிரயாணியை வேட்டையாட பெரிய பூமராங்கையும், சிறிய பட்சிகளைக் கொல்ல சிறிய பூமராங்குகளையும் பூர்வ குடிகள் உபயோகிக்கின்றனர். இதனைச் சுற்றி வேகமாக வீசினால், அது கங்காருவையோ அல்லது பட்சியையோ கழுத்தைச் சீவிக் கொன்றுவிட்டு, வேகமாக ஏவிவிட்ட இடத்துக்கே வந்து சேரும். பூமராங்கை வீசியவர், வீசியவுடன் உடனடியாகக் கீழே விழுந்து படுத்துக் கொள்வார். இல்லையேல் ஏவியவர் கழுத்தையே அது அறுத்து விடும். அதனால்தான் பூமராங் என்ற பழமொழி வந்தது" என்றார் ஜெனரல் கரியப்பா.

பின்னர், கூடத்தில் உட்கார்ந்து பேச ஆரம்பித்தோம். அமெரிக்கா செல்லும் டாக்டர் சீதாலட்சுமிக்கு அரிய புத்திமதிகள் கூறினார் கரியப்பா.

சீனாவைப் பற்றி பேச்சு வந்தபோது, "கம்யூனிசத்துக்கு விரோதமாக எனக்கு ஒன்றுமே இல்லை. ஆனால் ருஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே சண்டை இருப்பதாக நினைத்துக்கொண்டு சும்மா இருப்பது ஆபத்து. ருஷ்யாவும் சீனாவும் ஒன்றுதான். இது அவர்களுடைய திட்டங்களில் ஒன்று. 'இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் துன்பம் அடைகிறார்கள். ஆகையால் சண்டையை நிறுத்து' என்று ருஷ்யா சீனாவிடம் கூறியதா? 'நாங்கள் இந்தியாவை ஆதரிக்கிறோம்' என்று ருஷ்யா பகிரங்கமாகக் கூறியதா? ருஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே சில மனத்தாங்கல்கள் இருக்கலாம். உதாரணமாக, ஆந்திராவுக்கும் மைசூருக்கும் இடையே; சென்னைக்கும் கேரளாவுக்கும் இடையே இருப்பது போல" என்றார் கரியப்பா. 'குடகுக்கும் மைசூருக்கும் இடையே இருப்பது போல' என்றேன் நான். எல்லோரும் சிரித்தனர்.

ஜெனரல் கரியப்பா சில தினங்களுக்கு முன்னர் தான் பாக்கிஸ்தான் சென்று திரும்பினார். "அயூப்கானை உங்களுக்கு வெகு நாட்களாகத் தெரியுமல்லவா?" என்றேன்.

"சரியாகப் பதினெட்டு வருஷங்களுக்கு முன் அயூப்கான் என்னிடம் வேலை செய்தார். கிழக்கு, மேற்கு பாக்கிஸ்தான் கவர்னர்களுக்கு என்னை அறிமுகப்படுத்துகையில், இதனையே அயூப்கான் கூறினார். இந்தியாவும், பாக்கிஸ்தானும் நட்புடன் கைகோர்த்து நிற்கும் நாள்தான், என் வாழ்நாளிலேயே மிகவும் மகிழ்ச்சியான நாளாகும். அப்பொழுது நமது நாட்டின் மதிப்பு மிக உயரும். ஆண்டு தோறும் ராணுவத்துக்காக எத்தனை நூறுகோடி ரூபாய் செலவு செய்கிறோம். நம் நாட்டில் உண்ண உணவின்றித் தவிக்கும் மக்கள் எத்தனை கோடி? நாம் பாக்கிஸ்தானுடன் கட்டாயமாக நல்லுறவு கொள்ள வேண்டும். நமக்காக அன்று;

(குழந்தைகளைச் சுட்டிக் காட்டி) இவர்களுக்காக, இந்தியாவில் ஆறு கோடி குழந்தைகளும், பாக்கிஸ்தானில் இரண்டுகோடி குழந்தைகளும் இருக்கின்றனர். இவர்களுக்கு நாம் எதை விட்டுச் செல்லப் போகிறோம்? சண்டை, சச்சரவு, குரோதம் முதலியவற்றையா?" என்றார் கரியப்பா.

நாங்கள் விடைபெற முயன்றபோது, "என்ன அவசரம். இன்னும் கொஞ்சம் குளிர் பானம் சாப்பிடுங்கள்" என்றார் கரியப்பா. அவர் சொல்லும் முன்பே தயாராக இருந்தாள் நளினி.

குழந்தைகளைச் சாப்பாட்டுக் கூடத்திற்கு அழைத்துச் சென்று, இரு படங்களைக் காட்டினார். "இது எனது தந்தை, பத்து ஆண்டுகளுக்குமுன் தமது எண்பத்தாறவது வயதில் காலமானார். இவர் என் தாய். நாற்பது ஆண்டுகளுக்குமுன் தமது நாற்பத்தொன்பதாவது ஆண்டில் காலமானார். தினந்தோறும் காலையில் இங்கு வந்து தாய் தந்தையரை வணங்குவேன். மாதுரு பக்தி, பிதுர் பக்தி, குருபக்தி, தெய்வ பக்தி, மிக அவசியம். இதுவே நமது பண்பாடு. இதனை மறந்தால் நமது நாட்டின் மேன்மை குறையும். எவ்வளவு செல்வம் சேர்த்தாலும் பயனில்லை" என்றார் கரியப்பா.

நண்பரது மகள், தனது கையெழுத்துப் புத்தகத்தில் ஜெனரல் கரியப்பாவின் கையெழுத்து வாங்க விரும்பினாள். உடனே அவர், விருந்தினர் புத்தகம் ஒன்றைக் கொடுத்து, "ஒவ்வொருவரும் இதில் கையெழுத்திட வேண்டும்" என்றார். பின்னர் உள்ளே சென்று சிறிது நேரத்தில், ஏராளமான பலூன்களையும், ஒரு சிறு பையில் மிட்டாய்களையும் கொண்டு வந்தார். மிட்டாய்ப் பையைச் சிறுவன் மனுவிடம் கொடுத்து, "எல்லோருக்கும் கொடு" என்றார். மனுவுக்குத்தான் அதிகமான பலூன்கள்.

"நீங்கள் வந்தபோது நான் இங்கு இல்லாததற்கு மன்னிக்க வேண்டும்" என்றார் கரியப்பா.

ஜெனரல் கரியப்பா குறிப்பாக ஒவ்வொருவரிடமும் பேசினார். சில சமயங்களில் தமிழிலும் பேசினார். "நீங்கள் நன்றாகத் தமிழ் பேசுகிறீர்கள்" என்று குறிப்பிட்டப் பொழுது, "என்னுடைய தமிழை நீங்கள் தான் பாராட்டுகிறீர்கள். நான் சேனாதிபதியாக இருந்தபொழுது, சிப்பாய் அணிவகுப்பு ஒன்றில் தமிழ் சிப்பாய் ஒருவரைப் பார்த்தேன். "நீங்கள் நல்ல சௌக்கியமா" என்று கேட்டேன். பதிலே சொல்லாமல் கல்லைப்போல் நின்றார் சிப்பாய். இரண்டு, மூன்று முறை கேட்டேன். பதிலே இல்லை. என்னுடைய உதவியாளரைப் பார்த்து, 'ஏன் பதில் கூறவில்லை' என்று கேட்கச்

சொன்னேன். உதவியாளர், தமிழ்ச் சிப்பாயிடம் 'ஏன் பதில் சொல்லவில்லை?' என்று இந்துஸ்தானியில் கேட்டார். 'எனக்கு ஆங்கிலம் தெரியாது' என்று தமிழ்ச் சிப்பாய் இந்துஸ்தானியில் பதில் அளித்தார். எனது தமிழை ஆங்கிலம் என்று நினைத்தார் தமிழ்ச் சிப்பாய்" என்று சொல்லிச் சிரித்தார்.

எங்களை வழியனுப்ப ஜெனரல் கரியப்பாவும் நளினியும் வெளியே வந்தனர். "கவனமில்லாமல் எனது காரை வாசலில் நிறுத்தி உங்களுக்குச் சிரமம் கொடுத்து விட்டேன்" என்றார் கரியப்பா. பின்னர் எங்கள் கார் ஓட்டுபவரைப் பார்த்ததும், "நாம் எப்பொழுதும் கார் ஓட்டுபவர்களை மறந்துவிடுகிறோம். பாவம்; அவருக்குத் தாகமாக இருக்கும்.-குளிர்பானம் கொண்டுவந்து கொடு" என்று நளினியிடம் கூறினார். நளினி உள்ளே சென்றாள்.

எங்கள் கார் ஓட்டுபவருக்குப் பேச்சு என்றால் சாப்பாடே வேண்டாம். அதிலும் ஜெனரல் கரியப்பா அகப்பட்டுக் கொண்டால் விட்டுவிடுவாரா? அவர் யுத்த காலத்தில் ராணுவ லாரி ஓட்டியிருக்கிறார். அரை குறையான கன்னட மொழியில், 'சுண்டைக்காய்' அதிகாரி ஒருவரிடம் தாம் வேலை செய்த விவரத்தைக் கூறினார். பொறுமையோடு கேட்டார் தளபதி கரியப்பா. நளினி குளிர்பானம் ஒன்றைக் கார் ஓட்டுபவருக்கு வழங்கினாள்.

எல்லோரும் விடைபெற்றுக் காரில் ஏறியபோது, ஜெனரல் கரியப்பா, "நீங்கள் வந்தபோது நான் இல்லாததற்கு மீண்டும் மன்னிக்க வேண்டுகிறேன்" என்று கைகூப்பி வணங்கினார்.

ஜெனரல் கரியப்பாவின் அன்பு வெள்ளத்தில் ஒரு மணிநேரம் திளைத்திருந்தோம். எல்லோருக்கும் மகிழ்ச்சி. ஆனால் கல்லூரி மாணவர் முத்து வீரப்பனுக்கு மகிழ்ச்சியோடு வருத்தமும் கலந்திருந்தது.

"எனது கல்லூரித் தோழர்களிடம் சென்று, ஜெனரல் கரியப்பாவைச் சந்தித்துப் பேசினேன் என்றால் யாருமே நம்பமாட்டார்கள். ஜெனரல் கரியப்பாவுடன் ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள இயலாது போய்விட்டதே என்றுதான் வருந்துகிறேன்" என்றார் முத்துவீரப்பன்.

★ ★ ★

மடிக்கேரி

குடகு நாட்டின் தலைநகரம் மெர்காரா. குடகர்களைப் போலவே நாமும் இதனை மடிக்கேரி என்றே அழைப்போம்.

குடகுநாட்டு அரசர்களில் ஒருவரான முத்துராஜா வேட்டைக்குச் சென்றபோது, முயல் ஒன்று நாயைத் துரத்தியதைக் கண்டார். அந்த இடத்தில் ஒரு கோட்டையையும் அரண்மனையையும் அமைத்தார் என்பது கதை. 1681 ஆம் ஆண்டில் முத்துராஜா இந்த ஊரை உண்டாக்கினார் என்பது சரித்திரம்.

இதனையே தலைநகராகவும் கொண்டார். முத்துராஜா ஏற்படுத்தியதால் 'முத்துராஜகிரி' என்று பெயரிட்டார். பின்னர் அது 'மடிக்கேரி' ஆகிவிட்டது. மடிக்கேரியை 'மெர்காரா' ஆக்கியது பிரிட்டிஷார் உபயம்.

மடிக்கேரி என்றால், 'சுத்தமான நகரம்' என்றும் பொருள் உண்டு. மடிக்கேரி, இன்று மட்டுமன்று, தோன்றிய நாளிலிருந்தே சுத்தமாக இருந்து வந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

3800 அடி உயரத்தில் உள்ள ஊர் மடிக்கேரி. எனவே, உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்த சீதோஷ்ண நிலை. அக்டோபர் முதல் மே மாதம் வரை தான் பிரயாணத்திற்கு ஏற்ற காலம். ஜூன் ஜூலை மாதங்களில் பேய் மழை.

வெயிலுக்குப் பயந்து நம்மில் சிலர் மலைப் பகுதிகளுக்குச் செல்வதைப் போல, குடகில் உள்ளவர்களில் சிலர் மழைக்குப் பயந்து பங்களூர் மைசூர் முதலிய இடங்களுக்குச் செல்கின்றனர். ஆனால் மழை காலம் தான் உடல் நலத்துக்கு ஏற்றது என்றும் அறிந்தேன்.

மக்கள் தொகை 14,500. ஆனால் தினந்தோறும் வெளியிலிருந்து வந்து செல்லும் பிரயாணிகள் தொகை சுமார் 3000. மடிக்கேரி பஸ் நிலையத்தில் எப்பொழுதும் பஸ்கள் நிற்பதைப் பார்க்கலாம். மடிக்கேரியில் ஏழு சாலைகள் கூடுகின்றன. மைசூரிலிருந்து மங்களூருக்கு மடிக்கேரி வழியாகத்தான் செல்லவேண்டும்.

மங்களூர் 85 மைல். மடிக்கேரியிலிருந்து 80 மைல் தூரத்திலுள்ள தலைச்சேரிக்கும், கண்ணனூருக்கும் தினந்தோறும் பலமுறை பஸ் போக்குவரத்து உண்டு.

உள்நாட்டிலேயே, பாகமண்டலா, குட்டா, விராஜ்பேட், சோமவாரப்பேட்டை, சனிவார சந்தை, சுண்டிக்கோப்பா, குஷால்நகர், சம்பாஜி ஆகிய பல இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் ஏராளம். அரசாங்க பஸ்கள் மிகச் சில. பெரும்பான்மை தனியார் நடத்துபவைகளே. அவற்றில் ஒன்றின் பெயர் 'ஆதி காவேரி பஸ் சர்வீஸ்.'

குடகின் உயிர்நாடி காப்பித்தோட்டம். காப்பித் தோட்டக்காரர்கள்தான் பணக்காரர்கள். காப்பிச் செடிக்குத் தெளிக்கும் நாற்றமுள்ள மீன் எண்ணெய் முதல், 28 ஆயிரம் ரூபாய் விலையுள்ள டிராக்டர்வரை வாங்குவதற்குத் தோட்டக்காரர்கள் மடிக்கேரிக்குத்தான் வரவேண்டும். வாரந்தோறும் சம்பளம் கொடுப்பதற்குப் பணம் வாங்குவதற்கும் மடிக்கேரிக்குத்தான் வர வேண்டும். மடிக்கேரியில் ஆறு பாங்குகள் உள்ளன.

தோட்டங்களில் வசிப்போர் மடிக்கேரி வரும் போது திரைப்படம் பார்க்க விரும்புவது இயல்புதானே? காலையில் வந்து, வேலைகள் முடிந்ததும், பிற்பகலில் திரைப்படம் பார்த்துவிட்டு இரவு தோட்டத்துக்குத் திரும்பிவிடுவார்கள். மடிக்கேரியில் உள்ள ஒரே திரைப்படக் காட்சி சாலையின் பெயர், 'காவேரி மஹால் பிக்சர் பாலெஸ்.'

மடிக்கேரி செல்லும் யாத்திரிகர்கள் போப்பையாவைப் பார்க்காமல் இருக்கமுடியாது. பிரயாணிகள் நல அதிகாரியான போப்பையா,நடப்பதற்கு அஞ்சமாட்டார்.எந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டாலும் அவசரமாக ஆனால் சரியாகப் பதிலளிப்பார். அவரைப் போல சுறுசுறுப்புள்ள ஒருவரை குடகில் நான் பார்த்ததில்லை.

மடிக்கேரி சென்றதும், முதலாவது கண்களுக்குப் படுவது, 'சுதர்சன்' என்ற பெரிய விருந்தினர் மாளிகை. குடகு தனி ராஜ்யமாக இருந்தபோது, கமிஷனர் வசிக்கும் இடமாக இருந்த அந்த அழகிய கட்டிடம், தற்பொழுது மைசூர் ராஜ்யத்தை ஆளும் இருபத்தேழு மந்திரிகளில் யார் வேண்டுமானாலும் வந்து தங்கும் இடமாக இருக்கிறது. மத்திய அரசாங்க மந்திரிகள், விசேஷ விருந்தினர்கள் முதலியோரும் அங்குதான் தங்குகின்றனர்.

அடுத்தது பிரயாணிகள் விடுதி. அது மாடிக் கட்டிடம். சுமார் இருபது பேர் தங்கலாம். தினம் ஒன்றுக்கு ஒருவருக்கு மூன்று ரூபாய் கட்டணம். இடம் கிடைப்பது கடினம்.

புதிதாக இரண்டு லட்ச ரூபாய் செலவில் கட்டியுள்ள பிரயாணிகள் மாளிகை 'ஸ்டுவர்ட்ஹில்' என்ற மேட்டின் மீது அமைந்திருக்கிறது. ஊரிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம். அற்புதமான சூழ்நிலை. ஆனந்தமாக உலாவலாம். அழகும் அமைதியும் நிறைந்த இடம். அமைதியைக் குலைப்பது, பிரயாணிகளின் மோட்டார்கள் சப்தம்தான்.

பிரயாணிகள் மாளிகையில் இருவர் தங்கும் அறைக்கு ஒருநாள் வாடகை பத்து ரூபாய்; ஒருவர் தங்கும் அறைக்கு தினந்தோறும் ஆறு ரூபாய். உணவு வேண்டுமானால் முன் கூட்டியே சொல்லிவிட வேண்டும். உணவு தயாரிப்பவருக்குத் தமிழ் சுமாராகத் தெரியும். அவர் தயாரித்த உணவைக் காட்டிலும் அவர் பேசிய தமிழ் நன்றாக இருந்தது.

'சுதர்சன்', பிரயாணிகள் விடுதி, பிரயாணிகள் மாளிகை ஆகியவற்றில் இடம் ஒதுக்குவது, குடகு மாவட்டப் பொதுப் பணித்துறை உதவிப் பொறியாளரின் பணி. திறமையின்மைக்கு எடுத்துக்காட்டு அந்தக் காரியாலயம்!

குறிப்பிட்ட தினத்தில், பிரயாணிகள் மாளிகையில் இருவர் தங்கும் அறைகள் இரண்டு வேண்டும் என்றும், பத்து நாள் முன்னதாகவே பதிவு செய்து ஏற்பாடு செய்யும்படியும் எழுதியிருந்தேன். இருவர் தங்கும் அறைகள் இரண்டு கொடுக்க முடியாது என்றும், ஒன்று தான் கொடுக்க முடியும் என்றும் கூறிவிட்டார்களாம். குறிப்பிட்ட தினத்தில் மத்திய அரசாங்க மந்திரி ஒருவர் வந்தார்.

அவருடன் மைசூர் மந்திரிகள் சிலரும், அவர்களுடைய பரிவாரங்கள் சிலரும் வந்தனர். எனவே, எனக்குப் பதிவு செய்திருந்த இருவர் தங்கும் அறையை, ஒருவர் தங்கும் அறையாக மாற்றிவிட்டனர். அதனையும் வேறொருவர் எனது பெயரைச் சொல்லி வாங்கிக் கொண்டுவிட்டார்!

சில தினங்களுக்குப் பின், ஒரு ஞாயிற்றுக்கிழமை மடிக்கேரியில் தங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மூன்று தினங்களுக்கு முன்னதாகவே, பொதுப்பணித் துறை காரியாலயம் சென்று, பிரயாணிகள் விடுதியில் இடம் வேண்டும் என்று மனு எழுதிக் கொடுத்தேன்.

குமஸ்தா, பிரயாணிகள் விடுதிப் பதிவுப் புத்தகத்தை எடுத்துப் பார்த்து, "இடம் இருக்கிறது" என்று கூறி எனது பெயரை ஞாயிற்றுக்கிழமைக்கு என் எதிரிலேயே பதிவு செய்தார். அதனை என்னிடமும் காண்பித்தார்.

பதிவு செய்தால்மட்டும் போதாது. உத்தரவும் கையிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும். "இந்த உத்தரவைப் பிரயாணிகள் விடுதி நிர்வாகிக்கு அனுப்பி விடுகிறோம். நீங்கள் வீணாகக் காத்திருக்க வேண்டாம்" என்றார் குமஸ்தா. அவருடைய அன்புக்கு நன்றி செலுத்திவிட்டு, மிகவும் திருப்தியுடன் பெரம்பு கொல்லிக்குத் திரும்பினேன்.

ஞாயிற்றுக்கிழமை பிரயாணிகள் விடுதிக்குச் சென்றேன். வந்த பதிவுப் பட்டியல்களைப் பார்த்தேன். என்பெயர் இல்லை. பொதுப்பணித் துறைக் காரியாலயம் செல்லலாம் என்றால், அன்று விடுமுறை. எதிர்பாராத ஏமாற்றத்துடன் பிரயாணிகள் மாளிகைக்குச் சென்றேன். அங்கிருந்த குடகு நாட்டு முஸ்லிம் இளைஞர் பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர். வேறு நல்ல வேலை கிடைக்கும்வரை அங்கிருக்கப்போவதாகக் கூறினார்.

"இடம் காலி இல்லை. ஆனால் இன்று வருவதாக உள்ளவர்கள் யாரேனும் வரவில்லையானால் உங்களுக்கு இடம் தருகிறேன். உறுதி கூற முடியாது" என்று சொல்லி, எனது பெட்டியை வாங்கி ஓர் அறையில் வைத்துப் பூட்டும்படி வேலையாளிடம் கூறினார்.

மாலையில் வருவதாகச் சொல்லி விடைப்பெற்றேன். நிர்வாகி, எனது பெட்டியை வாங்கி வைத்துக்கொண்டதால், படுக்க அறை கிடைக்காவிட்டாலும், கூடத்திலாவது படுக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

அன்று பகல் ஒரு குடகர் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றேன். சாப்பிட்டு முடிந்து களைப்பாறிய பொழுது, இருவர் ஜீப்பில் வந்திறங்கினர். இருவரும் நடுத்தர வயதுள்ளவர்கள்; மைசூர்க்காரர்கள்; பங்களூரில், மைசூர் அரசாங்க விவசாய இலாகாவில் உள்ள அதிகாரிகள். ஒருவர் அமெரிக்கா சென்று திரும்பியவர்; மற்றொருவர் இங்கிலாந்து சென்று திரும்பியவர்.

இருவரும், தங்கள் நண்பர் ஒருவரின் திருமணத்துக்காக வந்திருந்தனர். நான் சாப்பிடச் சென்றிருந்த வீட்டுக்காரரைப் பார்க்க வந்திருந்தனர்.

அறிமுகமானதும், "எப்போது வந்தீர்கள்? எங்கே தங்கியிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"காலையில் வந்தோம். பிரயாணிகள் விடுதியில் முன்கூட்டியே பதிவு செய்திருந்தோம். எங்களுக்கு ஒதுக்கிய அறையில் உள்ளவர் காலி செய்யவில்லை; பிற்பகலில்தான் காலி செய்வார் என்றார்கள். எனவே, குளித்துவிட்டு உடைமாற்றிக்கொண்டு திருமண

வீட்டுக்குப் போய்விட்டோம். சாமான்களை விடுதி நிர்வாகியிடம் ஒப்படைத்துவிட்டு வந்திருக்கிறோம்" என்றார் அவர்களில் ஒருவர்.

இருவர்களில் ஒருவர் அன்று மாலை பஸ்ஸில் பங்களூர் திரும்புவதாகக் கூறினார். மற்றொருவர் உத்தியோக அலுவலாக வந்து, திருமணத்தையும் பார்த்துவிட்டுச் செல்லத் திட்டமிட்டவர். மறுநாள் குடகு மாவட்டத்திலுள்ள பிளாக் அபிவிருத்தி அதிகாரிகள் அனைவரையும் மகாநாட்டுக்கு வரச்சொல்லி ஏற்பாடு செய்திருந்தார்.

"இப்பொழுது பிரயாணிகள் விடுதிக்குச் செல்கிறோம். அங்கிருந்து உங்களைப் பிரயாணிகள் மாளிகையில் இறக்கி விடுகிறோம்" என்றனர். அவர்கள் அன்புக்கு நன்றி செலுத்தினேன்.

எல்லோரும் ஜீப்பில் ஏறி, பிரயாணிகள் விடுதி சேர்ந்தோம். விடுதி நிர்வாகி அவசரமாக ஓடிவந்து, கன்னடத்தில் பேசினார். சிறிது நேரத்தில் விவரம் அறிந்தேன்.

பங்களூரிலிருந்து வந்திருந்த ஐந்தாண்டுத் திட்டப் பிரசார அதிகாரியும், அவர் கோஷ்டியினரும் காலை பதினோரு மணிக்கு ஜீப்பில் பங்களூர் புறப்பட்டனர். விடுதி நிர்வாகி அப்பொழுது வெளியே சென்றிருந்தார். விடுதி வேலையாள் தவறுதலாக அந்த இரண்டு விவசாய இலாகா அதிகாரிகளின் பெட்டி படுக்கைகளை, ஐந்தாண்டுத் திட்ட அதிகாரி ஜீப்பில் வைத்துவிட்டான். அவர்களும் கவனிக்காமல் போய்விட்டனர்.

பகல் ஒரு மணிக்குத்தான் நிர்வாகிக்கு விவரம் தெரியும். உடனே முப்பது மைல் தூரத்தில், எல்லையில் உள்ள குஷால்நகர் போலீஸ் நிலையத்துக்கு டெலிபோன் செய்தார். "அந்த ஜீப் ஏற்கெனவே போய்விட்டது. மைசூருக்குத் தகவல் கொடுத்திருக்கிறோம். தெரிந்ததும் சொல்லுகிறோம்" என்றார்கள் குஷால்நகர் போலீசார். மைசூர் போலீசாரிடமிருந்து கடைசிவரை தகவலே இல்லை என்று மறுநாள் விவசாய இலாகா அதிகாரி கூறினார்.

இருவர்களில் ஒருவர் மூன்றரை மணி பஸ்ஸில் பங்களூருக்குப் புறப்பட்டார். மற்றவர்பாடு மிகப் பரிதாபமாக இருந்தது. என்னால் முடிந்தவரை ஆறுதல் கூறினேன்.

அவர் பெட்டி, படுக்கை, சோப்பு, கண்ணாடி க்ஷவரம் செய்துகொள்ளும் கருவிகள், துண்டு, வேட்டி, மறுநாள் மகாநாட்டுக்கு வேண்டிய அவசியமான அரசாங்க பைல்கள் எல்லாம் ஐந்தாண்டுத்திட்ட பிரசார அதிகாரியின் ஜீப்பில் போய்விட்டன. பெரம்புகொல்லி தோட்டத்துக்கு அழைத்துச் சென்று உதவி செய்வதாகக் கூறினேன். அவருக்கு விருப்பமில்லை.

பிரயாணிகள் மாளிகைக்கு டெலிபோன் செய்தேன். “இடம் இருக்கிறது. கவலைவேண்டாம். எப்பொழுது வேண்டுமானாலும் வாருங்கள்” என்றார் முஸ்லிம் இளைஞர்.

காலையில் பிரயாணிகள் விடுதியில் இடம் கிடைக்காதது நல்லதாயிற்று. எல்லாம் நன்மைக்கே என்று ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினேன். இல்லையேல், குடகுக்கு மிகக் குறைவாக எடுத்துச் சென்ற எனது வேட்டி சட்டைகளை, ஐந்தாண்டுத்திட்டப் பிரசார அதிகாரி பங்களூர் எடுத்துச் சென்றிருப்பார். அவை எனக்குக் கிடைக்க எத்தனை ஐந்தாண்டுகளாகுமோ?

மடிக்கேரியில் மிக உயர்ந்த இடம், மிகச் சிறந்த இடம், எல்லோரும் எப்போதும் விரும்பும் இடம், அற்புதமான இயற்கை அழகை ஆனந்தமாக அனுபவிக்கத்தக்க இடம், பொழுதுபோக்கும் இடம், நண்பர்களைச் சந்திக்கும் இடம் ‘ராஜா ஸீட்’ என்னும் மண்டபம்தான். நகரிலிருந்து அரைமைல் தூரம்; பிரயாணிகள் மாளிகையிலிருந்து கால்மைல் தூரம்.

தினந்தோறும், மழை காலம் தவிர மற்ற நாட்களில், நூற்றுக்கணக்கான மக்கள் பொழுது போக்க வரும் இடம் ராஜா ஸீட் என்னும் சிறிய மண்டபம். அதனைச் சுற்றிலும் சிறு சம வெளி. ஒரு புறத்தில் பெரும் பள்ளத்தாக்கு. வளைந்து, வளைந்து நெளிந்து செல்லும் மங்களூர் சாலையைப் பார்க்கலாம். குடகில் உள்ள மிகச் சிறந்த இயற்கைக் காட்சிகளுள் ஒன்று, ராஜா ஸீட்டிலிருந்து காணும் தோற்றம்.

இயற்கைக் காட்சிகளை உட்கார்ந்து அனுபவிக்க பெஞ்சுகள் அமைத்திருக்கின்றனர். நான் இருந்த பெஞ்சில், வயதான ஒருவர் தம் பேரக் குழந்தையுடன் தமிழில் கொஞ்சினார். அவர் யார் என்று விசாரித்தேன்.

“சொந்த ஊர் திண்டுக்கல். எனது மகன் இங்கே ஒரு கம்பெனியில் வேலை செய்கிறான். வந்து ஒரு மாதம் ஆகிறது. அடுத்த மாதம் நல்ல மழை பெய்யும் என்கிறார்கள். என்னால் குளிர் தாங்க முடியாது. அதற்குள் ஊருக்கு ஓடிப்போக வேண்டும்” என்றார் வயதான தமிழர்.

வயது முதிர்ந்த இரண்டு குடகர் பெண்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தாம் ஒரு காலத்தில் ஓவியத்துக்கும் நடனத்துக்கும் உலகப் புகழ்பெற்ற பூவையா சகோதரிகள் என்று அறிந்தேன்.

ஒரு முறை எழுபத்திரண்டு வயதான பண்டியண்ட அய்யப்பா பெள்ளியப்பாவை, ராஜா ஸீட் செல்லும் வழியில் சந்தித்தேன்.

பருவாங்கடா குஷாலப்பாவும், பண்டியண்ட பெள்ளியப்பாவும் தாம் குடகு நாட்டில் காங்கிரஸ் தேசீய இயக்கத்தை முன் நின்று நடத்தியவர்கள். இருவரும் பலமுறை சிறை சென்றவர்கள். பெள்ளியப்பாவின் குடும்பமே சிறை சென்றது.

குஷாலப்பா இறந்து சில ஆண்டுகள் ஆயின. பெள்ளியப்பா, சில மாதங்களுக்கு முன்னர்தான் தம் மனைவியை இழந்தார். நாற்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் 'குடகு' என்னும் சிறந்த கன்னட வாரப் பத்திரிகையின் ஆசிரியர் பெள்ளியப்பா. குடகு நாட்டில் சுதந்திர இயக்கத்தின் தந்தையான பண்டியண்டா பெள்ளியப்பாவை, ஒரு முறை 'காந்தி பவனா' என்னும் அவர் வீட்டில் சந்தித்தேன்.

பெள்ளிப்பா ஒரு காலத்தில் குடகு நாட்டின் முடிசூடா மன்னராக விளங்கினார். ஒரு முறை பெள்ளியப்பாவை யானைமீது வைத்து, பொது மக்கள் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர் என்றும் அறிந்தேன். அண்மையில் மனைவியை இழந்த பெள்ளியப்பா, உலகத்தையே இழந்தவர்போல துயரத்தில் ஆழ்ந்திருந்தார்.

1923 ஆம் ஆண்டில் பெல்காம் நகரில் காந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதியாகச் சென்றார். பல முறை சிறை சென்ற தேச பக்தர். பெள்ளியப்பாவின் மனைவியும் பல முறை சிறை சென்றவர். கடைசிமுறை சிறை சென்றபொழுது, லலிதா, குசும் என்ற இரண்டு சிறு பெண் குழந்தைகளையும் தம்முடன் எடுத்துச் சென்றார்.

ராஜா ஸீட்டிலிருந்து நகருக்கு வரும் வழியில், மகாத்மா காந்தி மண்டபத்தைப் பார்க்கலாம். காந்தியடிகளின் அஸ்தியைப் புதைத்து, அதன்மீது அழகிய சிறு மண்டபம் ஒன்றை எழுப்பியுள்ளார்கள். 1857 ஆம் ஆண்டில் சிப்பாய் கலகம் என்னும் தேசீயப் போரில் பிரிட்டிஷாருக்கு உறுதுணையாக நின்றனர் குடகர்கள்.

அது முதல் பிரிட்டிஷாரின் செல்லப் பிள்ளைகளாக வளர்ந்தவர்கள் குடகர்கள். அப்படியிருந்தும், இந்திய சுதந்திரப்போராட்டத்தில் குடகர்கள், ஆண்களும், பெண்களும், சுமார் நூற்றைம்பது பேர் சிறை சென்றனர். காந்தியடிகள் 1937 ஆம் ஆண்டில் இந்த அழகிய நாட்டுக்கு விஜயம் செய்தார்.

மகாத்மா காந்தி மண்டபத்தைத் தாண்டி வந்தால், மாவட்டக் கூட்டுறவு பாங்கியின் பெரிய கட்டிடம் இருக்கிறது. மடிக்கேரியில் உள்ள புதிய, பெரிய, குறிப்பிடத்தக்க கட்டிடங்களுள் அது ஒன்று. காப்பிச் செடியைப் போல, கூட்டுறவும் குடகு நாட்டில் வேரூன்றி விட்டது.

மடிக்கேரியில் மட்டும் பலவிதமான கூட்டுறவுச் சங்கங்கள் பத்துக்குமேல் இருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும், குறைந்தது ஒரு கூட்டுறவுச் சங்கத்தைப் பார்க்கலாம். வாழ்க்கையில் பல திறப்பட்டவர்களும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். குடகில் மொத்தம் 428 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அங்கத்தினர் தொகை சுமார் எண்பதாயிரம்; அதாவது ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்கு.

கூட்டுறவுச் சங்கங்களை 'சகாகார' என்றழைக்கின்றனர் குடகர்கள். "கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி நடைபெறுகின்றன?" என்று குடகர்கள் பலரைக் கேட்டேன்.

"கூட்டுறவோடு கூடவே பிறந்த குறைபாடுகள் இங்கும் உண்டு; ஆனால் மற்ற இடங்களைக் காட்டிலும் இங்கே மிக மிகக் குறைவு. பொதுவாக வெற்றி என்றே சொல்லவேண்டும்" என்றனர்.

கூட்டுறவுப் பாங்குக்கு எதிர் வரிசையில் அமைந்துள்ளது 'டவுன் ஹால்' என்னும் நகர மண்டபம். ஒரு முறை நகர மண்டபத்தின் வழியாகச் சென்றபோது, கன்னட நாடகம் ஒன்று நடைபெற்றதைப் பார்த்தேன். மக்கள் அமைதியாக இருந்தனர். கூச்சல், குழப்பம், ஆரவாரம் ஒன்றுமே இல்லை.

மேலை நாடுகளில் நாடக மன்றங்கள் எவ்வாறு ஆரவாரமின்றி இருக்குமோ, அவ்வாறு இருந்தது அந்த நாடக மன்றம். அங்கு காணப்பட்ட அமைதி, தமிழனாகிய எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. காரணம் என்ன வென்று யோசித்தேன். தமிழ் நாட்டில் எங்கும் அலறும் ஒலிபெருக்கி அங்கில்லை. திருமணங்களிலும் நாடக மன்றங்களிலும் குடகில் ஒலிபெருக்கியின் அலறலை நான் கேட்டதே இல்லை.

நகர மண்டபத்தை அடுத்துச் செல்லும் வீதியின் பெயர் அப்பாச்சிக்கவி வீதி. காலஞ்சென்ற அப்பாச்சிக்கவி ஒரு குடகர். குடகு மொழியில் அவர் எழுதிய, 'யயாதி', 'சுப்பிரமணியம்' முதலிய நாடகங்கள் பிரபலமானவை. இன்றும் கூட பள்ளிகளில் மாணவர்கள் அந்த நாடகங்களை நடிக்கின்றனர். ஹரிகதா காலட்சேபத்திலும் சிறந்து விளங்கியவர் அப்பாச்சிக்கவி. கவிஞரின் பெயரை வீதிக்குச் சூட்டியது, குடகர்களின் பண்பாட்டுக்குச் சான்று.

நகர மண்டபத்தை அடுத்து, யுத்தத்தில் மாண்டவர்கள் நினைவுக் கம்பம் ஒன்றை நிறுவியுள்ளனர். குடகர்களில் இரண்டு ஜெனரல்கள், ராணுவ அதிகாரிகள் 105 பேர் உள்பட சுமார் 5,000 பேர், அதாவது குடகர்களில் வயதுவந்த ஆண்களில் மூன்றில் ஒரு பங்கினர்

ராணுவத்தில் பணியாற்றுகின்றனர். இரண்டு ஜெனரல்களான ஜெனரல் கரியப்பா, ஜெனரல் திம்மையா ஆகியோர் பெயரில், மடிக்கேரியில் இரண்டு பெரிய வீதிகள் உள்ளன.

யுத்த நினைவுக் கம்பத்துக்கு அடுத்தது, திப்புசுல்தான் கட்டிய கோட்டை. உள்ளே நுழைந்ததும், நம்மை முதலில் வரவேற்பது சிறைச்சாலை. சிறைச்சாலையைத் தாண்டிச் சென்றால், குறுகிய வாயிலின் ஒருபுறத்தில் சிறு ஆலயம் ஒன்று உண்டு. அதில் வீற்றிருப்பவர் கணபதி.

குடகு நாட்டில் எங்கு பார்த்தாலும் கணபதி கோயில்களைப் பார்க்கலாம். ஆனால் பெருமையெல்லாம் இக்குதப்பா என்னும் முருகன் கோயிலுக்குத்தான்.

கணபதி என்ற பெயர், தமிழ்நாட்டைப் போலவே குடகு நாட்டிலும் சாதாரணம். கணபதி, சுப்பையா, சோமையா, வீரப்பன், பொன்னப்பன், முத்தையா போன்ற பெயர்கள் தமிழ் நாட்டுக்கும் குடகு நாட்டுக்கும் பொது.

கணபதியை வணங்கி உள்ளே சென்றால், ஒரு பெரிய மைதானம். அதன் நடுவே ஓர் அரண்மனை, மைசூர் மகாராஜா அரண்மனையின் அழகும், பொலிவும், கம்பீரமும், குடகு அரண்மனையில் சிறிதும் இல்லை. கட்டிடம், குடகு நாட்டில் பெரிது. அரசர்கள் வாழ்ந்த அரண்மனையில், தற்பொழுது மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும், ஜில்லா கோர்ட்டும் நடைபெறுகின்றன.

பெரும்பாலான வழக்கறிஞர்கள் குடகர்கள், சமீபகாலம் வரை, குடகு நாட்டு நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு அப்பீல், சென்னை உயர் நீதிமன்றம்தான். குடகில் நடைபெறும் வழக்குகளுக்குச் சென்னையிலிருந்து பிரபல வழக்கறிஞர்கள் செல்கின்றனர். இன்றும்கூட, குடகர்கள் சிலர் சென்னையிலுள்ள பிரபல வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெறுகின்றனர்.

பொதுப் பணித் துறை உதவிப் பொறியாளரின் அலுவலகமும் இந்த அரண்மனையில்தான் இருக்கிறது.

அரண்மனைக்கு எதிரே இரண்டு மண் யானைகள். லிங்க ராஜேந்திரா என்னும் குடகு மன்னன் அமைத்த இரு மண் யானைகளும், உயிருள்ள யானைகளைப் போலக் காட்சியளிக்கின்றன. இவற்றைச் சரித்திரச் சின்னங்களாகப் பாதுகாக்கின்றனர்.

அரண்மனைக்கு அருகே, ‘மகாத்மா காந்தி நினைவு நூல் நிலையம்’ இருக்கிறது. கட்டிடம் புதிது. புத்தகங்களின் எண்ணிக்கை சுமார் 7,500. ஆனால் குடகைப் பற்றிய புத்தகம் ஒன்றுதான்.

அரைமணி நேரம் இரண்டு பேர் தேடியும் அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. "உங்களுடைய குடைகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்தேன். ஆனால் ஒரு குடையைக் கூடக் காணோம். மழை காலத்தில் ஒரே குடைமயமாக இருக்குமாம்.

கோட்டைக்கு எதிரே உள்ளது 'கொடவ சமாஜம்' குடகு நாட்டிலுள்ள கல்யாண மண்டபம் அது ஒன்று தான். கல்யாணம் செய்பவர்கள் முதல்நாள் மாலையில் வந்து, மறுநாள் பிற்பகலில் சென்று விடுகின்றனர். ஒரு கல்யாணத்திற்கு கட்டிட வாடகை, நாற்காலி, சமையல் பாத்திரங்கள் உள்பட சுமார் 250 ரூபாய் என்று அறிந்தேன்.

'நார்த் கொடகு கிளப்' என்னும் பிரபலமான பொழுது போக்குச் சங்கம், அப் பகுதியில்தான் இருக்கிறது. அந்நாளில் தோட்டக்காரர்களில்மிகப் பெரும்பாலோர் வெள்ளைக்காரர்கள். இரண்டு வெள்ளைக்காரர்கள் ஓரிடத்தில் வசித்தால், ஒரு பொழுதுபோக்குச் சங்கம் ஏற்படுத்தி விடுவார்கள்.

தோட்டக்காரத்துரைகள் மடிக்கேரிக்கு வந்தால், வசதியாகத் தங்கவும், குடிக்கவும், சாப்பிடவும், விளையாடவும், படிக்கவும், ஊர்வம்பு பேசவும் ஒய்வு எடுத்துக்கொள்ளவும், அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கவும் ஏற்ற இடம் 'நார்த் கொடகு கிளப்'. அந்நாளில், குடகு நாட்டின் கமிஷனர், உதவி கமிஷனர், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர், தலைமை வைத்தியர், காட்டிலாகாத் தலைமை அதிகாரி ஆகியோர் வெள்ளைக் காரர்களே. சங்கத்தில், வெள்ளைக்காரர்களைத் தவிரவேறு யாரையும் அனுமதிப்பதில்லை.

ஒரே விதிவிலக்கு சீதவ்வா என்னும் குடகர் பெண். மேனாட்டு நாகரிகத்திலே மூழ்கி வளர்ந்த சீதவ்வா பெரும் பணக்காரியாக இருந்தாள். ஜெனரல் கோரெண்டா சுப்பையா திம்மையாவின் தாயார்தான் சீதவ்வா. இன்றும் சங்கம் இருக்கிறது; ஆனால் வெள்ளைக்காரர்களைக் காணவில்லை.

சிறிது தூரம் சென்றால், தபால் தந்தி நிலையம், டெலிபோன் நிலையம். இன்னும் சிறிது தூரம் சென்றால் பஸ் நிலையம். சென்னையிலுள்ள பெரிய ஆங்கில வியாபாரக் கம்பெனிகள் சிலவற்றின் கிளைகள் மடிக்கேரியில் உள்ளன.

பஸ் நிலையத்திலிருந்து மேட்டுப் பாங்காகச் செல்லும் சாலையின் பெயர் 'மெயின் ரோடு'. அதில், பாங்குகள், லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் கிளைக் காரியாலயம், உணவுச்

சாலைகள், வியாபார நிலையங்கள், மருந்துக் கடைகள் முதலியன உள்ளன. மடிக்கேரியிலுள்ள வைத்தியர்களில் பெரும்பாலோர் குடகர்கள். அவர்களிலே சிலர், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலே பயின்றவர்கள்.

சிறிது மேலே சென்றால், 'மார்க்கெட்' இருக்கிறது. ஷுகார் ஷெட்டி முகமது ஹுசேனுக்குச் சொந்தமான இடத்தை, காலஞ்சென்ற செப்பூடீர சோமையா என்பவர் விலைக்கு வாங்கி, தமது மனைவி பொள்ளவா பேரால் சந்தைக் கட்டிடத்தைக் கட்டி, அதனை 1959 ஆம் ஆண்டில் மடிக்கேரி நகரசபைக்கு இனாமாக வழங்கினார்.

மடிக்கேரிக்கு குடிதண்ணீர் தர்மம் செய்த பெருமையும் இக் குடும்பத்தையே சாரும். இரண்டு குன்றுகளுக்கு இடையே நீரைத் தேக்கி, சுத்தப்படுத்தி, குழாய்கள் மூலம் வழங்குகின்றனர். பஸ் நிலையத்திலிருந்து கீழ்ப் புறமாக இறங்கினால், முதலாவது பெரிய கட்டிடம், 'காவேரி மஹால் பிக்சர் பாலெஸ்' சிறிது தூரத்தில் உயர்நிலைப் பள்ளி. அதற்கு அருகே 'குடகு' பத்திரிகையின் காரியாலயம்.

குடகில் பல பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. 1884 ஆம் ஆண்டில், 'குடகு சந்திரிகே' என்னும் பத்திரிகையை 'மைசூர் புக் டெப்போ' என்னும் ஸ்தாபனம் வெளியிட்டது. குடகு நாட்டில் முதலாவது பத்திரிகை ஆசிரியர், அம்மத்தி என்ற ஊரைச் சேர்ந்த ஜனாப் அப்துல் கபார்கான் என்பவர்.

இவர் 1918 ஆம் ஆண்டில் 'குடகு போதினி' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். 1921 ஆம் ஆண்டில் தொடங்கிய 'குடகு' என்னும் வாரப் பத்திரிகைதான் இன்னும் உயிரோடு இருக்கிறது. 1925 ஆம் ஆண்டில், 'காவேரி பிரிண்டிங் பிரஸ்' தொடங்கிய 'ஜன்ம பூமி' என்ற கன்னட தேசீய வாரப் பத்திரிகை பல ஆண்டுகள் நடைபெற்று, சமீபத்தில் நின்று விட்டது. அதனை நடத்தியவர் பல்லசண்ட பெள்ளியப்பா. குடகில் வெளியாகும் இரண்டு தினசரிகளில் ஒன்று 'சக்தி'.

அதனை நடத்தும் நடுத்தர வயதுள்ள பி.ஜி. கோபாலகிருஷ்ணா என்பவர், குடகில் பிறந்த கன்னட பிராமணர். அவர் பத்திரிகைக் காரியாலயம் தான், சுதந்திரக் கட்சியின் காரியாலயமும். மற்றொரு தினசரியான 'ஹிதவாணி' விராஜ்பேட்டிலிருந்து வெளியாகிறது. அதன் ஆசிரியர் கோவிந்தராஜுவும், குடகில் பிறந்த கன்னட பிராமணர்.

'குடகு' காரியாலயத்தில், அதன் நிர்வாகி பாச்சமடா தேவய்யா கணபதியைச் சந்தித்தேன். நாற்பது வயதுள்ள கணபதி,

பண்டியண்ட பெள்ளியப்பாவின் மருமகன்; சென்னை ஆங்கில தினசரி 'ஹிந்து'வின் குடகு நாட்டு நிருபர். 'குடகும் அதன் மக்களும்' என்று அவர் எழுதிய கன்னடப் புத்தகம், மைசூர் அரசாங்கப் பரிசு பெற்றது. 'கன்னி காவேரி' என்ற நவீனம் ஒன்றும் எழுதியுள்ளார்.

இதைத் தவிர சுமார் பத்து நூல்கள் எழுதியுள்ளார். சுதந்திரப் போரில் சிறை சென்ற கணபதியின் அழகிய சிறு வீட்டுக்குச் சென்று, அவரையும் அவர் மனைவி லலிதாவையும், நான்கு வயதுள்ள லாஜ் என்னும் அவர் புதல்வியையும் சந்தித்தேன்.

குடகின் முதலாவது முதன் மந்திரியாக இருந்த செப்பூடிரா முத்தண்ணா பூனச்சா என்பவர், 'குடகு' காரியாலயத்தில் எட்டு ஆண்டுகள் உதவி ஆசிரியராக இருந்தவர் 'குடகு' காரியாலயத்திலிருந்த அப்பாஜி என்ற இளைஞர், தாம் அமர்ந்திருந்த நாற்காலியைச் சுட்டிக்காட்டி, "இதே நாற்காலியில் தான் பூனச்சா எட்டு ஆண்டுகள் உதவி ஆசிரியராக இருந்தார்.

ஆனால் அவர் படித்தவர் அல்லர்" என்றார். பூனச்சா பள்ளிக்கூடமே சென்றதில்லையோ, ஒருவேளை படிக்காத மேதையோ என்று யோசித்தேன். "பூனச்சா பட்டதாரி அன்று; வெறும் இண்டர் மீடியட்தான் படித்திருக்கிறார்" என்று குறையாகக் கூறினார் அப்பாஜி.

'குடகு' காரியாலயத்தை விட்டு வெளிவந்தபோது, 'ஜன்ம பூமி' ஆசிரியராக இருந்த பல்லசண்ட பெள்ளியப்பாவைச் சந்தித்தேன். வயது எழுபத்து நான்கு; உயரம் ஆறரை அடி; முரட்டு கதர் கோட்டு அணிந்திருந்தார். எனது கையைக் கெட்டியாகப் பிடித்துக் குலுக்கினார். அந்த வலி தீருவதற்குச் சிறிது நேரமாயிற்று. குடகு நாட்டைப் பற்றி எழுத வந்திருக்கிறேன் என்பதில் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவரைப் பல முறை சந்தித்திருக்கிறேன். எப்பொழுதும் மிக்க அன்புடன் பழகினார். அவருடைய அன்பிலிருந்தும், கைப்பிடிப்பிலிருந்தும் விடுபட பலமுறை முயன்று தோல்வியுற்றேன்.

குடகு நாட்டிலுள்ள சிறந்த எழுத்தாளர்களைச் சந்திக்க வேண்டும் என்று ஆவல். நடிக்கேரியண்ட சின்னப்பா 'பட்டோலை பழமை' அதாவது பழமையைக் கூறும் பாட்டு ஓலை என்ற நூல் எழுதியுள்ளார். அவரைப் பற்றி விசாரித்தேன். "அவர் இருந்தது உண்மை; ஆனால் இப்பொழுது இல்லை. அவர் காலமாகிப் பல ஆண்டுகள் ஆயின" என்றார்கள்.

யாரைப்பற்றிக் கேட்டாலும், அவர் காலமாகிவிட்டதாகவே கூறினார்கள். பெரிதும் ஏமாற்றமடைந்தேன். பத்தாண்டுகளுக்கு

முன் குடகைப் பற்றி ஆங்கிலத்தில் நூல் எழுதிய ஐ.எம். முத்தண்ணா இருக்கிறாரா என்று விசாரித்தேன். "இருக்கிறார்" என்று பதில் கிடைத்தது. "ஏதோ அதிர்ஷ்டமிருக்கிறது" என்று மகிழ்ச்சியடைந்து, "எங்கே இருக்கிறார்?" என்று கேட்டேன். "எதியோப்பியாவில்" என்று பதில் கிடைத்தது.

மடிக்கேரி நகரத்துக்கு அமெரிக்க நாட்டில் ஒரு சகோதரி உண்டு. அமெரிக்காவில் கன்னெடிகட் ராஜ்யத்தைச் சேர்ந்த டேரியன் என்பது ஓர் அழகிய சிறு நகரம். அங்கு வசிப்போரில் பெரும்பாலோர் வசதியுள்ளவர்கள். 1954 ஆம் ஆண்டு, டேரியன் நகரில் ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாட ஒரு குழுவினர் ஏற்பாடு செய்தனர்.

அப்போது இந்தியாவில் தங்களைப் போன்ற ஒரு சிறு நகரத்தைச் சுவீகாரச் சகோதரியாகக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. மடிக்கேரியைத் தேர்ந்தெடுத்தனர். மடிக்கேரி நகரசபைத் தலைவருக்குக் கடிதம் எழுதினர். மடிக்கேரி மகிழ்ச்சியுடன் சம்மதித்தது.

முதலாவது, மடிக்கேரி மாணவ மாணவிகள், டேரியன் மாணவ மாணவிகளுக்குக் கடிதம் எழுதினார்கள். கடிதப் போக்குவரத்து ஆரம்பமாயிற்று. ஜெனரல் கரியப்பா, ஜெனரல் திம்மையா போன்றவர்கள் டேரியனுக்கு விஜயம் செய்தனர். டேரியன் வாசிகள் சிலர் மடிக்கேரிக்கு விஜயம் செய்தனர்.

மடிக்கேரி மாணவ மாணவிகள் பணம் சேர்த்து ஒரு யானைக் குட்டியை டேரியனுக்கு அன்பளிப்பாக அனுப்பினர். யானைக் குட்டியின் பெயர் சகுந்தலா. நன்றியுள்ள டேரியன் மக்கள் நன்கொடை வசூலித்து, மடிக்கேரியில் உள்ள அரசாங்க வைத்தியசாலையில் ஒரு 'வார்டு' கட்டினர். அதற்கு டேரியன் வார்டு என்று பெயர்.

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் முதல் தேதி மடிக்கேரி வாசிகள் டேரியன் நாள் கொண்டாடுகின்றனர். அதே நாளில் டேரியன் வாசிகள் மடிக்கேரி நாள் கொண்டாடுகின்றனர்.

★

"குடகில் குடியேறிய தமிழர்கள் யாரும் இருக்கிறார்களா?" என்று போப்பையாவைக் கேட்டேன்.

"ஆம் வெகுநாட்களாகக் குடியேறியுள்ள முதலியார் குடும்பம் ஒன்று இருக்கிறது. இப்பொழுது இருப்பவர் பெயர் முனுசாமி

முதலியார். கல்லூரித் தெருவில் லாரி ஆபீஸ் நடத்துகிறார்" என்றார் போப்பையா.

வி.பி. முனுசாமி முதலியாரைச் சந்தித்தேன். நாற்பது வயதிருக்கும். "எங்கள் பூர்வீகம் ராய வேலூர். எனது தகப்பனார் இங்கு பி.டபிள்யூ.டி. ஆபீசில் ஸ்டோர்கிளார்க்காக வேலை செய்தார். நாங்கள் இங்கேயே குடியேறிவிட்டோம். மூன்று நான்கு குடும்பங்கள் இருக்கிறோம். சிவகுமார் என்னும் இவன், எனது சகோதரியின் குமாரன்" என்றார் முனுசாமி முதலியார்.

சிவகுமார், மடிக்கேரி அரசினர் கல்லூரியில் பயிலும் மாணவன், அவனுக்கும், அவன் தம்பி நந்தகுமாருக்கும் தமிழ் பேசத் தெரியுமே தவிர எழுதத் தெரியாது; கன்னடம் பேசவும், எழுதவும் மிக நன்றாகத் தெரியும்.

சிவகுமார் வீட்டுக்குச் சென்று, அவன் தந்தை தியாகராஜ, முதலியாரைச் சந்தித்தேன். 'கூர்க் ஸ்டோர்ஸ்' என்ற மளிகைக் கடை நடத்தி வந்தார். ராணுவத்தில் சேர்ந்து, யுத்த காலத்தில் மலேயா சென்றார். சிங்கப்பூர் வீழ்ந்தபோது, இந்திய தேசீய ராணுவத்தில் (ஐ.சூ.ஹ.) சேர்ந்து, பின்னர் ஒய்வு பெற்றவர். நேதாஜியின் படம் அவர் வீட்டை அலங்கரித்தது. நேதாஜியின் பெயரைச் சொன்ன உடனேயே அவர் கண்களில் நீர் ததும்பியது.

கந்தசாமி என்னும் எண்பது வயதான தமிழரைச் சந்தித்தேன். கடைத் தெருவில் உள்ள உறுதியான கட்டிடம் எல்லாம் தாம் கட்டியவை என்று பெருமையோடு கூறினார். மடிக்கேரி பெருமாள் கோயில் நிர்வாகத்தில் பங்கு கொண்டிருந்தார்.

மடிக்கேரியில் உள்ள பெரிய கோயில் ஓம்காரேஸ்வரா ஆலயம். அது மசூதியைப் போல நான்கு புறங்களிலும் ஸ்தூபிகள் எழுப்பிக் கட்டப்பெற்றது. கோயிலுக்கு எதிரே பெரிய குளம். குளத்தின் நடுவே மண்டபம். அதற்குச் செல்ல ஒரு பாதை.

கடைத் தெருவின் கோடியில் உள்ள மேடான பகுதியில் இரண்டு பெரிய சமாதிகள் உள்ளன. இஸ்லாமிய முறைப்படி அமைக்கப்பெற்ற அந்தச் சமாதிகளில், குடகை ஆண்ட வீர ராஜேந்திர ராஜாவையும், அவர் மனைவியையும் ஒரு சமாதியிலும், வீர ராஜேந்திராவின் இளைய சகோதரர் லிங்க ராஜேந்திராவை ஒரு சமாதியிலும் அடக்கம் செய்துள்ளனர்.

வீர ராஜேந்திராவைத் தெய்வமாகச் சிலர் வணங்குகின்றனர். லிங்காயத்துப் பூசாரிகள் இன்றும் அச் சமாதிக்குப் பூஜை செய்கின்றனர். அப்பகுதிக்கு மகாதேவப்பேட்டை என்று பெயர்.

ஒரு காலத்தில் மடிக்கேரியில் குடகுப் பட்டாளம் ஒன்று இருந்தது. அவர்கள் அணிவகுத்த மைதானத்தை இன்றும் காணலாம்.

போலவே ஒரு காலத்தில் மடிக்கேரியில் குதிரைப் பந்தயம் நடைபெற்றது. இப்பொழுது குதிரைகளைக் காண்பதே குதிரைக் கொம்பாக இருக்கிறது. மைதானத்தை அடுத்து அரசாங்கக் கல்லூரிக் கட்டிடம் கம்பீரமாகத் தோற்றமளித்தது. கல்லூரிக்குச் செல்லும் வழியில் ஐயச் செட்டீர சுப்பையா என்ற குடகர் வீட்டுக்குச் சென்றேன். செட்டியார்களுடன் குடகர்கள் சிலர் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை அப் பெயர் காட்டிற்று. குடகு, தனி ராஜ்யமாக இருந்த பொழுது, ஐ.சி.சுப்பையா, எம்.ஏ.பி.எல்; ஐ.எ.எஸ், பிரதம காரியதரிசியாக இருந்தவர். இப்பொழுது ஒய்வு பெற்றுள்ளார்.

ஒய்வு பெற்ற மற்றோர் அரசாங்க அதிகாரி நெரவண்ட குட்டப்பா வீட்டுக்குச் சென்றேன். அறுபத்து மூன்று வயதுள்ள குட்டப்பா, சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் பயின்றவர். பண்பாடுள்ள குடும்பங்களில் ஒன்று குட்டப்பா குடும்பம். குட்டப்பாவின் அழகான பெண்களில் ஒருத்தி, திறமையுள்ள திருநெல்வேலி பிராமண இளைஞரை மணந்துள்ளார்.

ஊரெல்லாம் சுற்றி அலைந்த பின்னர், மாலை ஏழு மணிக்குப் பிரயாணிகள் மாளிகைக்குத் திரும்பினேன். செல்லும் வழியில் டவுன் ஹாலுக்கு அருகில் மூன்று இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர்.

டவுன் ஹாலின் உள்ளே கூட்டம் நிறைய இருந்தது. "இங்கு என்ன நடைபெறுகிறது?" என்று இளைஞர்களைக் கேட்டேன்.

"உள்ளூர்க்காரர்களின் கன்னட நாடகம் நடைபெறுகிறது. வேண்டுமானால் போய்ப் பாருங்கள்" என்று கேலியாகச் சொன்னார் அவர்களில் ஒருவர்.

"அப்படியானால் நீங்கள் எல்லோரும் வெளியூர்க் காரர்களா?" என்று கேட்டேன்.

"ஆம்" என்று பெருமையுடன் கூறினார் ஓர் இளைஞர். மூவர்களில் ஒருவர் கொல்லேகாலம்; ஒருவர் நஞ்சன்கூடு; பிறிதொருவர் அதற்கு அருகில் உள்ள ஊர். மூவரும் பொதுப் பணித் துறை உதவிப் பொறியாளரின் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள்.

"இவ்வூரில் நல்ல சாப்பாடு எங்கே கிடைக்கும்?" என்று கேட்டேன்.

"நல்ல சாப்பாடு என்பதே இந்த ஊரில் இல்லை. மூன்று வருஷங்களாக நாங்கள் காட்டில் விட்டமாதிரி கஷ்டப்படுகிறோம்.

எங்களை வேறு இடங்களுக்கு மாற்ற மாட்டேன் என்கிறார்கள். இந்த ஊரை விட்டு மாற்றினால், எங்கள் செலவிலேயே வெளியூர் செல்லத் தயாராக இருக்கிறோம்" என்றார் ஒருவர். மற்ற இருவரும் ஆமோதித்தனர்.

"சுமாரான இடம்" என்று அவர்கள் நற்சாட்சி அளித்த உணவுச் சாலைக்குச் சென்றேன். உணவைப் பார்த்ததும் பசி பறந்துவிட்டது.

உணவைவிட மோசமாக இருந்தது பிரயாணிகள் பங்களாவில் இருந்த மின்சார வெளிச்சம். மின்சார விளக்குகள் மண்ணெண்ணெய் விளக்குகள் போல எரிந்தன. மைசூரின் ஒளிக்குக் காரணமான குடகு, இருளில் ஆழ்ந்திருந்தது.

மறுநாள் பிற்பகல் பஸ்ஸில் ஏறி பெரம்புகொல்லி சென்றேன். நான் ஏறிய குட்டா செல்லும் பஸ் மோசமானது; வசதிகளில் மட்டும் அன்று; உருவத்திலும் கூட, குடகிலேயே குட்டையான பஸ் அது ஒன்றுதான். பஸ்ஸிலேயே ஒரு மணி நேரம் காலை முடக்கிக்கொண்டு தவம் செய்தேன். பஸ் பிரயாண நேரத்தைவிட, பஸ்ஸுக்குள் ஏறிக் காத்திருந்த நேரம் தான் அதிகம்.

பெரம்புகொல்லிக்குப் பஸ் கட்டணம், தனியார் பஸ்களில் அறுபத்தைந்து காசு; அரசாங்க பஸ்ஸில் அறுபது காசு.

"அரசாங்க பஸ்களில் ஐம்பதுகாசு கொடுத்தால் போதும்; ஏற்றிக் கொள்வார்கள்; பிரயாணச் சீட்டுக் கொடுக்க மாட்டார்கள். சில சமயங்களில் அறுபது காசு வாங்கிக்கொண்டு, பாதி தூரம் சென்றதும், முப்பது காசுப் பிரயாணச் சீட்டு ஒன்று கொடுப்பார்கள். தனியார் பஸ்கள், நாகரிக உடையணிந்த பிரயாணிகளைக் கண்டால்தான் பஸ்ஸை நிறுத்தி ஏற்றிக்கொள்வார்கள்" என்று பெரம்புகொல்லி அன்பர்கள் சிலர் தங்கள் அனுபவங்களைக் கூறினார்கள்.

பெரம்புகொல்லி எஸ்டேட்டின் முன்னால் பஸ் நின்றது. சிரமத்துடன் இறங்கினேன். சாலையிலிருந்து எஸ்டேட் பங்களாவுக்கு ஒரு மைல் தூரம் நடக்க வேண்டும். கையில் பெட்டி இருந்ததால், ஒரு மைல் ஐந்து மைல் தூரம் போலத் தோன்றியது.

★ ★ ★

குடகர்

பொம்மாலே கொடவுலு
என்னத்த நிலையப்பா
தேசக்கொரு மாகேவி
காவேரம்மை மாதாயி
நாடுக்கொரு மாதேவா
ஊருக்கொரு பூபதி
கேரிக்கொரு ஐயப்ப
ஒக்கக்கொரு காரண
ஓடைக்கொரு நாதனு
ஓணிக்கொரு பூதனு
இன்னத்த நிலையப்பா

-குடகர் பாட்டு

பொன்மலையாம் குடகின்
நிலை என்னப்பா
தேசத்துக்கொரு மாதேவி
காவேரியம்மை தாய்
நாடுக்கொரு மகாதேவா
ஊருக்கொரு பகவதி
குளத்துக்கொரு ஐயப்பன்
குடும்பத்துக்கொரு காரணவன்
சேரிக்கொரு நாகம்
சந்துக்கொரு பூதம்
இதுதான் நிலையப்பா

குடகு நாட்டில் வாழும் எல்லோரும் குடகர் அல்லர். குடகர் என்போர் ஒரு குறிப்பிட்ட, மிகச் செல்வாக்குள்ள ஒரு சமூகத்தினர். அவர்கள் தாம் நாட்டின் ஆணிவேர். குடகர்களின் எண்ணிக்கை 1931 ஆம் ஆண்டு ஜனக்கணிதத்தின்படி 41,206. பின்னர் எடுத்த ஜனக்கணிதங்களில், அவர்களைப் பற்றிய தனிப்புள்ளி விவரம் கிடையாது. 1931 ஆம் ஆண்டில் குடகின் மொத்த ஜனத்தொகை 163,327 தான்.

1947 ஆம் ஆண்டில் மலேரியாவை அடியோடு ஒழித்தனர். 1951 ஆம் ஆண்டில் ஜனத்தொகை 229,255. ஆனால் 1961 ஆம் ஆண்டு ஜனக் கணிதப்படி ஜனத்தொகை 322,829.

குடகர்களின் ஜனத்தொகை தற்பொழுது சுமார் ஐம்பதாயிரம் இருக்கலாம். குடகிலேயே, குடகர்களை அண்டிப் பிழைக்கும் ஹொலையா என்னும் தாழ்த்தப் பெற்றோரின் தொகை சுமார் முப்பதாயிரம்.

மலைஜாதியினர்களின் தொகை சுமார் இருபத்தேழாயிரம். காப்பித் தோட்டங்களில் வேலை செய்யும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் வெளியே இருந்து வந்தவர்கள்.

மைசூரிலிருந்து குடகில் குடியேறிய ஒக்கலிகர்களும், துளுபேசும் கௌடர்களும் சுமார் பத்தாயிரம் பேர் இருக்கலாம். அவர்களில் சிலருக்குக் குடகு மன்னர்கள் ஜம்மா பூமி அளித்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு "ஜம்மா கொடகு" என்று பெயர். அவர்கள் குடகர்களைப் போலவே உடை அணிந்து, குடகர்கள் பழக்கவழக்கங்களையே பின்பற்றி வருகின்றனர். அவர்கள் பேசுவதும் குடகு மொழியே.

1931 ஆம் ஆண்டில் குடகில், குடகர் தொகை 41,026. ஆனால் குடகு மொழி பேசுவோர் தொகை 44,585. குடகர்கள் எண்ணிக்கையைவிட, குடகு மொழி பேசுவோர் எண்ணிக்கை அதிகமாக இருந்ததற்குக் காரணம். ஒக்கலிகர்களும், கௌடர்களும் குடகு மொழி பேசுவதுதான்.

ஒக்கலிகர் வடகுடகில்தான் குடியேறியுள்ளனர். அவர்களில் சிலர் குடகர் குடும்பங்களில் திருமணம் செய்து கொண்டுள்ளனர். ஆனால் இப்பொழுது, 'ஜம்மா குடகர்'களுக்கும், குடகர்களுக்கும் இடையே நடைபெறும் திருமணங்கள் மிக மிகக் குறைவு சமீபகாலம்வரை, மடிக்கேரிக்குத் தெற்கே உள்ள குடகர்களும், மடிக்கேரிக்கு வடக்கேயுள்ளவர்களும் திருமணம் செய்து கொள்வதில்லை.

குடகர்கள் சிறந்த போர் வீரர்கள்; ஆனால் அவர்கள் தங்கள் நாட்டைத் தாங்களே ஒரு பொழுதும் ஆண்டதில்லை. குடகு மன்னர்கள் அனைவரும் லிங்காயத்துக்கள். குடகர்கள் போர் வீரர்களாகவும், திவான்களாகவுமே இருந்திருக்கின்றனர்.

மலேயாவில் உள்ள மலேயர்கள் தங்கள் நாட்டில் சிறுபான்மையினராக இருப்பதுபோல, குடகில் உள்ள குடகர்கள் தங்கள் நாட்டிலேயே சிறுபான்மையினராக இருக்கின்றனர்.

ஆனால் குடகர்கள்தான் நாட்டின் முதுகெலும்பு, விவசாயம் அவர்கள் கையில்தான். குடகர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது ஐந்து ஏகரா நிலமாவது இருக்கும்.

மைசூரிலிருந்து வந்த லிங்காயத்துக்கள், தென் கன்னடத்தி லிருந்து வந்த பிராமணர்கள், தென்னிந்தியாவிலிருந்து வந்த 'கோமுட்டி'கள் முதலிய சிறுபான்மையினரைத் தவிர, குடகில் குடியேறிய பிறர், குடகர் பழக்க வழக்கங்களையே பின்பற்றத் தொடங்கினர் என்று வரலாறு கூறுகிறது. அது குடகர்களின் செல்வாக்கைக் காட்டியது.

குடகர்களின் ஆதி வரலாறு யாருக்குமே சரியாகத் தெரியவில்லை. குடகர்களைப் பார்த்து, "உங்கள் ஆதிவரலாறு என்ன?" என்று கேட்டுவிட்டால் போதும், நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடுவார்கள். குடகர் ஆதிவரலாறு பற்றிக் குடகர்களும், மற்றவர்களும் கூறியவை:

1. ஆரியர்களுக்கு முன் வந்தார்கள்.
2. இண்டஸ் பள்ளத்தாக்கிலிருந்து வந்து குடியேறிய ஆரியர்கள்.
3. திராவிடர்கள்.
4. கன்னடத்தில் உள்ள 'மங்கராஜ நிகண்டு' என்னும் நூலின்படி 'மிலேச்சர்கள்'- அதாவது அந்நியர்கள்.
5. அரேபியாவிலிருந்து வந்து குடியேறிய முஸ்லீம்கள்.
6. மலையாளத்தில் குடியேறிய நாயர்களில் ஒரு பகுதியினர்.
7. அஸர்பைஜானிலிருந்து குடியேறியவர்கள்.
8. சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள்.
9. பூர்வ குடிகள்.
10. காவேரி மகாத்மியத்தின்படி சந்திரவர்மா என்ற க்ஷத்திரியருக்கும், அவருடைய சூத்திர மனைவிக்கும் பிறந்த "உக்ரர்"கள்.
11. கடம்பா அரசன் படை எடுத்தபோது, அவன் சேனையிலிருந்து தங்கிய சிலரின் சந்ததியினர்.
12. குடகர் ஆண்கள் ராமபிரான் சேனைகள்; பெண்கள் மட்டும் தேவ கன்னிகைகள்.

குடகர்களிலே ஜாதிகள் இல்லாவிட்டாலும், உயர்வு தாழ்வு உண்டு. ஆரம்பத்தில் சன்னா மல்லா, பொத்து, அம்மா என்ற நான்கு பிரிவினர் இருந்ததாகச் சொல்லுகிறார்கள்.

சன்னா என்றால் சிறிது, மல்லா என்றால் பெரிது. சன்னா, மல்லா என்ற சொற்களே கன்னடச் சொற்கள்; குடகுச் சொற்கள் அல்ல என்கின்றனர் குடகர்கள்.

ஏழைகள் மல்லா குடகர்கள்; அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருந்தவர்கள் சன்னா குடகர்கள். இவர்களிடையே திருமணம் நடைபெற்றதில்லை. ஆனால் இப்பொழுது இந்த வேறுபாடு இல்லை என்றே கூறலாம்.

பொத்தூ என்றால் முட்டாள் என்றுபொருள். பிற வகுப்பினர் குடகர்களாக நடித்ததனால், அவர்களைப் பொத்தூ என்று வேடிக்கையாக அழைத்தனர்.

'அம்மா குடகு' என்பவர்கள் எண்ணிக்கை தற்பொழுது சுமார் இரண்டாயிரம். அவர்கள் தங்களை பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். தங்கள் பெயர்களுக்கு முன்னால் அம்மா என்பதைச் சேர்த்துக் கொள்வார்கள். உதாரணமாக, ஆண்களுக்கு, கிருஷ்ணம்மா, நானம்மா என்று பெயர். தற்பொழுது கிருஷ்ணம்மையா, நானம்மையா என்று தங்கள் பெயர்களைச் சிறிது மாற்றிக் கொண்டுள்ளனர்.

அம்மா என்பது பெண்ணை-அதிலும் தாயைக் குறிக்கும் சொல். குடகு மொழியில் தாயை அவ்வா என்கின்றனர்.

அம்மா என்பது காவேரி அம்மன் பெயர்; எனவே தாங்கள் காவேரி பிராமணர்கள் என்கின்றனர்; அம்மா குடகர்கள். தங்களைப் பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்வதோடு நில்லாமல்,1834ஆம் ஆண்டில் காவேரிக் கரையில் உள்ள பால்முரி என்னும் இடத்தில் பூணூலும் அணிந்துகொள்ள ஆரம்பித்தனர்.

சிலர் மைசூர் ராஜ்யத்தில் ஷிமோகா ஜில்லாவில் ராமசந்திரபுரத்தில் உள்ள பிராமண மடத்தில் சேர்ந்தனர். மற்றும் சிலர் உடுப்பியில் கானூர் என்னும் இடத்தில் உள்ள பிராமண மடத்தில் சேர்ந்தனர்.

அம்மா குடகர்கள் பெரும்பாலும் விவசாயிகள். அவர்கள் மது அருந்துவதில்லை; மாமிசம் சாப்பிடுவதில்லை.

குடகர்களை அண்டிப் பிழைக்கும் ஜாதியினர் பலர். முக்கியமானவர்கள் ஹொலையர்கள் என்னும் ஹரிஜனங்கள். தமிழ் நாட்டில் ஹரிஜனங்கள் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருந்தாலும், ஹொலையர்கள் இன்னும் பிற்போக்கான நிலையிலேயே உள்ளனர். அவர்களில் ஒரு பட்டதாரியோ அல்லது அரசாங்க அதிகாரியோ இல்லை என்று கேள்வியுற்றேன்.

பண்ணா, பணிக்கர் என்னும் இரண்டு ஜாதியினர் உண்டு. அவர்கள் ஆரம்பத்தில் மலையாளத்திலிருந்து குடியேறியவர்கள். கிராம உற்சவங்களில் அவர்களுக்குப் பல உரிமைகள் உண்டு. துணி வெளுப்போர், ஆசாரி, கொல்லர் போன்ற இனத்தவர்களும் உண்டு. துணி வெளுப்போருக்கு மடிவாள என்று பெயர். மடி என்றால் சுத்தம்; சுத்தமாக வெளுப்பவர் மடிவாள.

குடகர்களுக்கு ஜோஸ்யத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. எந்தக் காரியம் செய்யவேண்டுமானாலும், நல்ல நாள், நல்ல நேரம் என்ன என்று ஜோஸ்யரைக் கேட்டுத்தான் செய்வார்கள்.

முன்னோர்களை வணங்குவதோடு மட்டுமல்லாமல், பல் காரியங்களில் முன்னோர்களின் கருத்து என்ன என்பதை அறிவதிலும் குடகர்களுக்கு ஆர்வம் அதிகம். பண்ணாக்கள் அந்த வேலையைச் செய்வார்கள். ஆவேசம் கொண்டு, கேட்கும் கேள்விகளுக்கு முன்னோர்களின் கருத்தைச் சொல்லுவார்கள். அவர்களில் ஆண்களுக்குத் 'திருவுளக்காரன்' என்றும், பெண்களுக்குத் 'திருவுளக்காரச்சி' என்றும் பெயர்.

ஆனால் தற்பொழுதுள்ள இளைஞர் சமூகம் திருவுளக்காரர் கூற்றை நம்புவதில்லை. ஒரு திருவுளக்காரர் முன்னோர்களுடன் ஆவியுலகில் தொடர்புகொண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்த பொழுது, ஓர் அரசாங்க அதிகாரி அந்த இடத்துக்கு வந்தார். உடனே திருவுளக்காரர் அந்த அதிகாரியை வணங்கினார்.

முன்னோர்கள் பால் தொடர்புகொண்டுள்ள நிலையில் உள்ள திருவுளக்காரர் எப்படி ஓர் அதிகாரியை அறிந்து வணங்க முடியும் என்று இளைஞர்கள் கேலி செய்கின்றனர்.

குடகர்களின் பழக்க வழக்கங்கள் சில மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவை. நாட்டின் தலைவர்களுக்கும் மன்னர்களுக்கும்தான் வேட்டு மரியாதை உண்டு. ஆனால் குடகர் குலத்தில் உயிருடன் பிறக்கும் ஒவ்வோர் ஆண் குழந்தைக்கும் வேட்டு வெடித்து மரியாதை செய்வார்கள். துப்பாக்கியால் ஒரு வேட்டு வெடிப்பார்கள்.

குடகர்களிலே வயது வந்த ஆண்கள் ஒவ்வொருவரும் அரசாங்க அனுமதி பெறாமலேயே துப்பாக்கி வைத்துக் கொள்ளலாம். சீக்கியர்களைப் போலவே அவர்களும் அரசாங்க அனுமதியில்லாமல் கத்தி வைத்துக் கொள்ளலாம். இந்தச் சலுகைகள் எல்லாம் பிரிட்டிஷார் வழங்கியவை. தற்பொழுது குடகர்களும் துப்பாக்கி வைத்துக்கொள்ள அரசாங்க அனுமதி பெறவேண்டும். என்ற நிலை ஏற்படலாம் என்று அறிந்தேன்.

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டால், அயலார்கள் உடனே அறிவார்கள். நிலத்தில் உழுது கொண்டிருப்பதை அப்படியே நிறுத்திவிட்டு, வேட்டு வந்த திசையை நோக்கி விரைந்து செல்வார்கள்.

ஆண் குழந்தை பிறந்தால், இந்த உலகில் புதிதாக ஒரு வீரன், ஒரு வேடன் பிறந்திருக்கிறான் என்பதை உலகுக்கு அறிவிக்கவே துப்பாக்கி வேட்டு. செடிக்கம்பால் செய்த வில் ஒன்றையும், இலைக் கொத்து அம்பு ஒன்றையும், குழந்தையின் கையில் வைப்பார்கள்.

குடகர் பேசும் மொழி குடகு மொழி. அது தனி மொழி அன்று. தமிழ், கன்னடம், துளுவம் ஆகிய பல திராவிட மொழிகளின் கலப்பே குடகு மொழி. அதற்குத் தனி எழுத்துக்கள் கிடையா. கன்னட எழுத்துக்களையே உபயோகிக்கின்றனர். குடகு மொழியைக் கன்னடர்கள் படிக்கலாமே தவிர சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. அதற்கு, குடகு மொழியில் பல மொழிச் சொற்கள் கலந்திருப்பதே காரணம்.

குடகு மொழியில் நூற்றுக்கு முப்பது வார்த்தைகள் தமிழாக இருக்கலாம். வேறு எந்த மொழியிலும் இவ்வளவு தமிழ் வார்த்தைகள் இருப்பதாகத் தெரியவில்லை. வ என்பதை ப என்று உச்சரிப்பார்கள். உதாரணம் விளக்கு-பெளக்கு, வாழை-பாழை, வெள்ளியப்பா-பெள்ளியப்பா.

குடகர் தாலாட்டுகளில் ஒன்று

ஜொவா ஜொவா குஞ்ஞியே
ஜொவா ஜொவா

1. ஈமனைரே பெளக்காகி
தேசக்கொரு துணையாகி
கீர்த்தி நல்ல பெதப்போகி
தேவங்கொத்து பாளுளோ - ஜொவா

2. காவேரம்மை மாதாயி
வீரிய தந்து போத்துலா
தேச நல்ல கொடவுடா
நல்லங் காயி பாளுளோ - ஜொவா

3. பிரீதி நல்ல பாளுளு
நாலுதிக்கு சொல்லுறா
சத்துருக்கு பொத்ததே
மித்துராயி பாளுளோ - ஜொவா

4. எச்சகால பத்தினோ
சாவதொந்து தப்புலே
நீதிபீதி பட்டேளு
தேவங்கொத்து பாளுளோ - ஜூவா

5. காவேரம்மை மாதாயி
தேசக் கொத்த ஆளாயி
நல்லங்காயி பாளுன
தேஞ்சிகொண்டு பாளுளோ - ஜூவா

6. அப்பங்கொடு பெதலாகி
அவ்வங்கொரு நிழலாகி
அண்ண தங்கை ஒக்ககு
நல்லதாயி பாளுளோ - ஜூவா

மொழிபெயர்ப்பு

ஜூவா ஜூவா குழந்தையே

ஜூவா ஜூவா

1. இவ்வீட்டின் விளக்காகி
தேசத்துக்கொரு துணையாகி
கீர்த்தி நல்ல பேரெடுத்து
தேவர் மகிழ வாழியோ - ஜூவா

2. காவேரியம்மை மாதாயி
வீரியம் தந்து காப்பாள்
தேசம் நல்ல கொடவுடா
நாட்டு நலனுக்கு வாழியோ - ஜூவா

3. வாழ்க்கையில் நல்ல பிரீதி
நாலுதிக்கும் புகழ
சத்துருவுக்கு அஞ்சாதே
மித்துரு மகிழ வாழியோ - ஜூவா

4. எவ்வளவு காலம் வாழ்ந்தாலும்
சாவு என்பது தப்பாது
கடவுளுக்குப் பயந்து நீதியாய்
தேவர் மகிழ வாழியோ - ஜூவா

5. காவேரியம்மை மாதாயி
தேசபக்தி உள்ளவனாய்
நன்மைக்காக வாழ்வாய்
தேய்ந்துகொண்டு வாழியோ - ஜூவா

6. தந்தைக்கு ஒரு பேரெடுத்து
தாய்க்கு ஒரு நிழலாகி
அண்ணன் தங்கை சுற்றத்துக்கு
நல்லவனாக வாழியோ — ஜீவா

பாட்டிமார் குழந்தைகளுக்குக் கதையும் பாட்டும் சொல்லுவது எல்லா நாடுகளிலும் உண்டு.

1. குட்ரு குட்ரு தோரெக்கா
எச்சக் மக்கள பெடுத்தியா
நாலைஞ்சு மக்களே பெத்தா
பெத்தா மக்க ளேலியோ
கொம்பர கொடில் பேச்சா
காக்கை கொண்டோச்சோ போல (கொண்டாச்சோ

2. காக்கு காக்கேகா
காக்கேர மங்கள் எக்கேகா
நாளே போலாக்கா நாராசே
ககாளி! ககாளி! ககாளி!

3. காக்கு மல்லக்க
எண்ணின கி சின்னக்கா
காக்கேர குஞ்ஞா போல குத்தா போச்சி
கட்வண்டா குஞ்ஞா போலே மரியாபோச்சி
ககாளி! ககாளி! ககாளி!

மொழிபெயர்ப்பு

1. குட்ரு குட்ரு என்று பாடும் புறாவே
எத்தனை மக்களைப் பெற்றாய்
நாலைந்து மக்களைப் பெற்றேன்
பெற்ற மக்கள் எங்கே
மரத்தின் கிளையில் விட்டேன்
அவற்றை காக்கை கொண்டு போச்சோ(தெரியாது.

2. காக்கை அக்கா
காக்கைக்கு கல்யாணம் எப்போ
நாளைக் காலை ஞாயிறு
ககாளி! ககாளி! ககாளி!

3. காக்கை மல்லக்கா
எண்ணெய் நக்கும் சின்னக்கா
காக்கைக் குஞ்சு ஆற்றுக்குப் போச்சு

கருடன் குஞ்சு ஆற்றுமேலே பறந்து
ககாளி! ககாளி! ககாளி!

எல்லாக் குழந்தைகளுமே அநேகமாகப் பள்ளிக் கூடம் செல்கின்றன. ஊருக்கு ஒரு பள்ளி நிச்சயம் உண்டு. படிப்பின் அவசியத்தை - ஆண்களுக்கும் பெண்களுக்கும் - குடகர்கள் நன்கு உணர்ந்தவர்கள். அரசாங்க உதவியை அவர்கள் எதிர்பார்த்து நிற்பதில்லை.

குடகில் உள்ள முப்பது உயர்நிலைப் பள்ளிகளில் ஐந்து பள்ளிகள் தான் அரசாங்கத்தார் கட்டியவை.எஞ்சிய இருபத்தைந்தும் தனிப்பட்டவர்களும், பொதுமக்களும் கட்டியவை.

ஹர்தூர் என்ற இடத்தில் கர்னல் பசப்பா என்பவர் தமது தாயின் பெயரால் ஓர் உயர்நிலைப் பள்ளி கட்டிக் கொண்டிருந்தார். கர்னல் பசப்பா ஒரு ஒக்கலிகர்; குடகர் பெண்ணை மணந்தவர். ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். குடகில் உள்ள மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவர்.

எதிலும் கண்டிப்பானவர். பங்களூரில் வசிப்பவர். ஸ்ரீ மஞ்சுநாதையா அவர்களுடன் கர்னல் பசப்பாவைப் பார்க்கச் சென்றேன்.

“எனது தாயின் பெயரால் இரண்டு லட்சம் ரூபாய் தர்மம் செய்வது என்று முடிவு செய்தேன். இந்த ஊரில் உள்ள எனது சொந்தக்காரர்களும், சில பெரிய மனிதர்களும் என்னிடம் வந்து, நமது ஊரில்தான் உயர்நிலைப்பள்ளி கட்டவேண்டும்; ரூபாய் ஐம்பதாயிரத்துக்குமேல் கட்டிடத்துக்குச் செலவு ஆகாது என்றனர்.

என்றாலும் இப்பள்ளிக்காக ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கினேன். மற்றொரு லட்ச ரூபாயை மைசூரில் ராமகிருஷ்ணா மடத்து ஷாம்புவாநந்த சுவாமியிடம் கொடுத்தேன். அவர் ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் மிகவும் உபயோகமுள்ள விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை அமைத்திருக்கிறார்.

“உயர்நிலைப் பள்ளி கட்ட அரசாங்க அனுமதி கேட்டேன். ‘பதினையாயிரம் ரூபாய் டிபாசிட் செய்ய வேண்டும்’ என்றார்கள். அவ்வாறே செய்தேன். மீதி எண்பத்தைந்தாயிரம் ரூபாயையும் செலவு செய்து இக்கட்டிடத்தைப் பூர்த்தி செய்ய இன்னும் பத்தாயிரம் ரூபாய் வேண்டும். லட்ச ரூபாய்க்குமேல் நான் ஒரு ரூபாய் கூடச் செலவு செய்ய மாட்டேன்.

ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டிடம் முடியும் என்று என்னை இதில் இழுத்துவிட்ட சொந்தக்காரர்களும், பெரிய மனிதர்களும், ஒருவராவது இதுவரை இந்தப் பக்கம் எட்டிப்

பார்க்கவே இல்லை. எனவே நீங்கள் இப் பள்ளிக் குழுவின் தலைமைப் பதவி ஏற்று, கட்டிடத்தை முடிக்கத் தேவையான பணம் ஏற்று, கட்டிடத்தை முடிக்க தேவையான பணம் வசூல் செய்து, பள்ளிக்கூடத்தை நடத்திவர வேண்டும்" என்று கர்னல் பசப்பா மஞ்சுநாதையாவைக் கேட்டுக்கொண்டார்.

ஒரு லட்ச ரூபாய் தர்மத்துக்காகப் பணம் செலவு செய்துவிட்டு, அவ்வளவு பரிதாபமான நிலையிலிருந்த ஒருவரை அதுவரை நான் பார்த்ததில்லை.

★

குடகர்களில் உயிருடன் பிறக்கும் ஆண்களுக்கு வேட்டு மரியாதை உண்டு. ஆனால் குடகர்களில் இறந்ததும், ஆண், பெண் அனைவருக்கும் வேட்டு மரியாதை உண்டு. மணமானவர் அல்லது வயோதிகர் இறந்தால் இரட்டை வேட்டு; மற்றவர்களுக்கு ஒரு வேட்டு.

இறந்தவர்களை எரிப்பதும் உண்டு; புதைப்பதும் உண்டு. இறந்தவர்களைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும்போது பாடுவார்கள். அதற்கு 'சாவுப் பாட்டு' என்று பெயர். அதில் இறந்தவரின் குணங்களை எடுத்துரைப்பாாகள். சாவுப்பறைக்கு, சாவுப்பறை என்றே பெயர். குடகர்களுடைய சாவுப்பாட்டில் ஒன்று:-

சத்தல்லி பறையதி அஜ்ஜையா
சத்தல்லி பறைவேங்கி ,,

மண்ணாகப் பறையதி ,,
மண்ணாகிப் பறைந்தினு ,,
மண்ணொட்ட மக்களு ,,
மண்ணின கலக்குலா ,,
போஜி மேலு நோவுலா ,,

கல்லாகிப் பறையதி ,,
கல்லாகிப் பறைந்தினு ,,
கல்லொட்ட மக்களு ,,
கல்லு பணி கெய்யுலா ,,
போஜி மேலு நோவுலா ,,

பையுவாகிப் பறைந்தினு ,,
பாப்பிகெட்ட பொங்களோ ,,
பாலுக்காசை மாடித்து ,,

பாக்கறந்து கொவ்வுலா ”
போஜிமேலு நோவுலோ ”

எத்தாய் பறைந்தினு ”
சண்டாளப் பொலைமக்க ”
உக்கூலா தயக்கூலா ”
போஜிமேலு நோவுலா ”

ஆடாகிப் பறைந்தினு ”
பத்திரகாளி தேவிக்கு ”
ஆடறுத்து நீக்குலா ”
போஜிமேலு நோவுலா ”

கோழியாகிப் பறைந்தினு அஜ்ஜையா
ஓடிவீர மன்னங்கு ”
கோழியறுத்து நீக்குலா ”
போஜிமேலு நோவுலா ”

பந்தியாகிப் பறைந்தினு ”
அக்னிவாய் சவுண்டிக்கு ”
பந்திக்கெத்தி நீக்குலா ”
போஜிமேலு நோவுலா ”

சத்தல்லி பறையதி ”
ஆனகொண்டு நீங்களே ”
நாராயண தேவண்டோ ”
மண்டைக்கிட்ட பூபோல ”
மாடத்தே ஒணங்கத்தே ”
வைகுண்ட நகரத்து ”
தண்ணனை பொலரீரோ ”

மொழிபெயர்ப்பு

செத்தபின் பிறக்காதே அஜ்ஜையா
செத்தபின் பிறந்தால் ”

மண்ணாகப் பிறக்காதே ”
மண்ணாகப் பிறந்தால் ”
மண் ஒட்டர் மக்கள் ”
மண்ணைக் கலக்கையில் ”
அழகான நின்மேனி நோவுமே ”

கல்லாகப் பிறக்காதே ,,
கல்லாகப் பிறந்தால் ,,
கல் ஒட்டர் மக்கள் ,,
கல்லுப்பணி செய்கையில் ,,
அழகான நின்மேனி நோவுமே ,,

பசுவாகப் பிறந்தால் ,,
பாவியான பெண்களோ ,,
பாலுக்கு ஆசைப்பட்டு ,,
பால் கறந்து விடுவார்கள் ,,
அழகான நின்மேனி நோவுமே ,,

எருவாய்ப் பிறந்தால் ,,
சண்டாளப் புலையர்கள் ,,
உழுதடித்துக் கொல்வார்கள் ,,
அழகான நின்மேனி நோவுமே ,,

ஆடாகப் பிறந்தால் ,,
பத்திரகாளி தேவிக்கு ,,
ஆடறுத்துக் கொல்லுவார் ,,
அழகான நின்மேனி நோவுமே ,,

கோழியாய்ப் பிறந்தால் ,,
ஓடிவீரன் சாமிக்கு ,,
கோழியறுத்துக் கொல்லுவார் ,,
அழகான நின்மேனி நோவுமே ,,

பன்றியாய் பிறந்தால் ,,
அக்னிவாய் சாமுண்டிக்கு ,,
பந்தியிலே உனைப் பரிமாறுவார் ,,
அழகான நின்மேனி நோவுமே ,,

செத்தபின் பிறக்காதே ,,
ஆகையால் நீங்களோ ,,
நாராயண தேவரிடம் ,,
மண்டையில் இடம் பூபோல ,,
வாடாமல் வதங்காமல் ,,
வைகுண்ட நகரத்தில் ,,
மனம் குளிர வாழீரோ ,,

அம்மா இறந்தால் அப்பா சிற்றப்பா ஆகிவிடுவார் என்பதுகுடகுப் பழமொழி. அதாவது அப்பா வேறு மணம் செய்துகொள்ளும்போது, "அவ்வ செத்தக அப்ப சிக்கப்ப."

இன்னும் பல பழமொழிகளும் உண்டு.

"ஆனை தளந்தக்க கொட்டுக்குக் கூடுளை"

யானை தளர்ந்தாலும் மாட்டுக்கொட்டத்தில் நுழையாது.

"கொண்டாடிச் சேங்கி கூளியு தேவர"

புகழ்ச்சி செய்தால் பிசாசும் கடவுளாகிவிடும்.

"அரைப்பவன் அரைக்கு குடிப்பவன் பேரிச்சிண்டு"
அரைப்பவன் அரைக்கலாம்; ஆனால் குடிப்பவன்தான்
யோசிக்க வேண்டும்.

"கொக்கைப் புள்ளி உலைக்காகா
கோலைக் கண்ணி மனைக்காகா"

சுள்ளி விறகு உலைக்கு ஆகாது
மாலைக் கண்ணி மனைக்கு ஆகாள்

"அடைக்கக் கட்டா மானக்கேடு
ஆனை கொடுத்தக்கலு போகா"

பாக்குத் திருடுவதால் உண்டாகும் மானக்கேடு
யானையைக் கொடுத்தாலும் போகாது.

"அவ்வ இரந்து காக்கு
அப்பன் கெட்டி மாரு"

தாய் பிச்சை எடுத்தாகிலும் காப்பாற்றுவாள்
ஆனால் தந்தை விற்றுவிடுவார்.

சந்திரனின் பின்புறத்தைக் கண்டவன் எவனோ
அவனே பெண்களின் மனத்தைக் கண்டவன்.

குடகர் பாடும் கோழிப் பாட்டு இனிமையானது.

கோழி குஞ்ஞா கோழி குஞ்ஞா நாக்கோர் பாட் பாடு நானெந்த பாட்டுப் பாடுவா பியோ பியோ

செம்பா செம்பா செம்பெடுத்தா
செம்பட மந்தி துடியெடுத்தா
மாணிக்கா மண்ட மணி எடுத்தா
பொள்ளி பணிக்கா திரை எடுத்தா
காப்பலாக் குட்டா கொம்பெடுத்தா
அய்யப்பர் கண்ணா கோலெடுத்தா
பூவக்கா மூடி துணி யெடுத்தா
நானோர் சட்வா புட்டு எடுத்தா
பால கடப்பக்கா புத்தே போச்சி.

மொழிபெயர்ப்பு

கோழி குஞ்சே கோழிக் குஞ்சே எனக்கோர் பாட்டு பாடு

நானெந்த பாட்டுப் பாடுவா பியோ பியோ

வேலையாள் ஒரு செம்பு எடுத்தாள்
வேலையாள் மனைவி மத்தளம் எடுத்தாள்
மாடு சலங்கை எடுத்தது
பணிக்கன் பொள்ளிமுடி எடுத்தான்
காப்பாலப் பையன் கொம்பு எடுத்தான்
அய்யப்பன் கோல் எடுத்தான்
பூவக்கா துணி எடுத்தாள்
நான் ஓர் சட்டி புட்டு எடுத்தேன்
பாலத்தைக் கடக்கும் போது எல்லாம் கொட்டிப் போச்சு.

★ ★ ★

காப்பி

தலைவர் ராஜாஜி அவர்களுக்குக் காப்பி என்றால் மிகப் பிரியம். டில்லிப் பத்திரிகை நிருபர் ஒருவர், பல ஆண்டுகளுக்குமுன், ராஜாஜிக்குக் காப்பியின் மீதுள்ள பிரியத்தைச் சுட்டிக் காட்டுவதற்காக, "காவேரி நதியே காப்பியாக ஓடினாலும் ராஜாஜிக்குப் பிரியம் தான்" என்று எழுதினார். காவேரிக்கும் காப்பிக்கும் உள்ள தொடர்பு டில்லிப் பத்திரிகை நிருபருக்குத் தெரியுமோ என்னவோ?

காவேரியும் காப்பியும் தற்காலத் தமிழர்களின் இரு கண்கள். இரண்டும் உற்பத்தியாவது குடகில்தான்.

காப்பியின் கதையே ருசியானது.

காப்பியின் தாயகம் ஆப்பிரிக்காவிலுள்ள அபீசினியா நாடு. நான்காவது நூற்றாண்டிலேயே அரேபியாவில் காப்பியை விற்றது அபீசினியா. அரேபிய மார்க்கெட்டில் விற்பனையானதால், 'அராபிக்கா' என்ற பெயர் உண்டாயிற்று. அரேபியாவில் புகுந்த காப்பிப் பயிர், கீழை நாடுகள் எங்கும் பரவ ஆரம்பித்தது.

ஆறாவது நூற்றாண்டில், அரேபியாவில் உள்ள பழங்குடி மக்கள் காப்பிக் கொட்டையை அரைத்து, மிருகக் கொழுப்புடன் சேர்த்து உருண்டையாக்கி, அவற்றைத் தங்கள் பிரயாணத்தின் போது உண்டனராம்.

துருக்கியின் தலைநகரமான கான்ஸ்டாண்டி நோபிளில் 1551 ஆம் ஆண்டிலேயே ஒரு காப்பி ஹோட்டல் இருந்தது.

1652 ஆம் ஆண்டில், டேனியல் எர்வர்ட் என்ற துருக்கி வியாபாரி, கார்ன்ஹில் என்ற இடத்தில் பாங்குவா என்ற கிரேக்கர் நடத்திய காப்பி ஹோட்டலை விலைக்கு வாங்கினார்.

பிரான்ஸ் நாட்டில் 1671 ஆம் ஆண்டில் மார்செய்ல்ஸ் துறைமுகத்திலும், 1672 ஆம் ஆண்டில் பாரிஸ் நகரிலும் காப்பி ஹோட்டல்கள் தோன்றின.

ஆனால் உலகம் முழுதும் தெரிந்த பிரபலமான பழங்கதை ஒன்று உண்டு. அரேபியாவில் கால்டி என்னும் இடையன் தனது ஏழு ஆடுகளை அருகிலுள்ள காட்டுக்கு ஓட்டிச் சென்று மேயவிட்டு வந்தான். ஒரு நாள் கால்டி, ஒரு மரத்தின் அடியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பொழுது, அவனது ஆடுகள் அலைந்து திரிந்துவிட்டு, ஆனந்தமாக நடனமாடிக் கொண்டு வந்தன. ஒவ்வொரு நாளும், ஆடுகள் அடர்ந்த காட்டுக்குள் சென்று, திரும்பி வந்தபோது ஆனந்தமாக நடனமாடிக்கொண்டு வந்ததைப் பார்த்த கால்டி மிகவும் அதிசயித்தான். காரணம் தெரிந்துகொள்ள ஆவல் கொண்டு, ஒரு நாள் ஆடுகளைப் பின்தொடர்ந்தான். அங்கு ஆடுகள் விநோதமான ஒரு செடியிலிருந்த சிவப்புப் பழங்களைச் சாப்பிட்டதைக் கண்டான். தானும் சிலப் பழங்களைப் பறித்துச் சாப்பிட்டான். அவை இனிப்பாகவும் ருசியாகவும் இருந்தன. சிறிது நேரத்துக்குப் பிறகு அற்புதமான விறு விறுப்பு ஏற்பட்டது. ஆடுகளும் அம்மாதிரி ஆனந்த மடைந்ததைக் கண்டான்.

ஒரு நாள் ஓர் இமாம் (முஸ்லிம் மத குரு) காட்டின் வழியே சென்றபோது, இடையனும் ஆடுகளும் ஆனந்த பரவசத்தால் ஆடிக்கொண்டிருந்ததைக் கண்டார். இமாம் மிகுந்த ஆச்சரியத்துடன், மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன என்று கேட்டார். இடையன் விவரத்தைக் கூறி, இமாமுக்குச் சில பழங்களைக் கொடுத்தான். அன்றிரவு இமாமும், இடையனுடனும் ஆடுகளுடனும் சேர்ந்து ஆனந்தமாக ஆட ஆரம்பித்தார். அப் பழங்களின் அற்புதமான விறுவிறுப்பு உணர்ச்சியை அறிந்த இமாம், அதனை நகரத்துக்கு எடுத்துச் சென்று, காப்பிப் பயிரைப் பரப்பினார்.

இந்தியாவுக்குக் காப்பி வந்த கதை இதுதான். பாபு புடான் சாஹிப் என்று பொது மக்களால் அழைக்கப் பெற்ற ஹாஜரத் ஷா க்ஷகாப் அல்லா மகாதாபி என்ற முஸ்லிம், மெக்காவுக்குத் தல யாத்திரை சென்று திரும்பியபொழுது அற்புதமான ஏழு மோச்சா விதைகளைக் கொண்டு வந்தார். அவற்றை மைசூர் ராஜ்யத்தில் உள்ள சந்திரகிரியில், தமது வீட்டுத் தோட்டத்தில் பயிராக்கினார். இந்தியாவுக்கு முதன் முதலாகக் காப்பியைக் கொண்டுவந்த பெருமை பாபு புடான் சாஹிப்பையே சேரும். அது நிகழ்ந்தது பதினேழாம் நூற்றாண்டில். ஆனால் எந்த ஆண்டில் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. இன்றும்கூட மைசூரில் பாபு புடான் காப்பி பயிராக்கிய இடத்துக்கு பாபு புடான் மலை என்று பெயர்.

வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த வியாபாரிகள், காப்பியின் மணத்தையும், குணத்தையும் கண்டு, காப்பி விதைகளைத் தங்கள் நாடுகளுக்கு எடுத்துச் சென்று பயிராக்கினார்கள்.

இவ்விதமாக தென் அமெரிக்காவில் உள்ள பிரேஸில் நாட்டிலும், ஜாவா, சுமத்ரா தீவுகளிலும் காப்பிப் பயிர் பரவியது.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான், ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரும், பின்னர் தனிப்பட்ட ஆங்கிலேயர்களும் காப்பியை இந்தியாவில் பரவச் செய்தனர். அந்தப் பெருமை முற்றிலும் பிரிட்டிஷாரையே சேரும்.

உலகத்தில் இன்று முப்பத்திரண்டு நாடுகளில், மொத்தம் ஒரு கோடியே எண்பது லட்சம் ஏகராவில் காப்பி பயிராகிறது. இந்தியாவில் காப்பிப் பயிர் மூன்று லட்சம் ஏகரா; குடகில் மட்டும் சுமார் எழுபதாயிரம் ஏகரா.

உலகின் காப்பி உற்பத்தியில் தென் அமெரிக்க நாடுகள் 64 சதவிகிதம்; மத்திய அமெரிக்க நாடுகள் 17 சதவிகிதம்; ஆப்பிரிக்க நாடுகள் 13 சதவிகிதம்; பசிபிக் தீவுகள் 4 சதவிகிதம்; இந்தியா ஒரு சதவிகிதம் தான். என்றாலும் இந்தியக் காப்பியின் மணமும் குணமும் உலகப் புகழ் பெற்றவை.

உலகில் உற்பத்தியாகும் காப்பியில் பாதியை அமெரிக்கர்களே அருந்தி விடுகின்றனர். காப்பியே முக்கிய பானமாக உள்ள மற்ற நாடுகள் பிரான்ஸ், ஹாலந்து, ஆஸ்திரியா, துருக்கி போன்றவை. தேநீரையே முக்கிய பானமாகக் கொண்ட நாடுகளில், தலைசிறந்து விளங்குவது இங்கிலாந்து.

தென்னிந்தியாவில் முக்கிய பானம் காப்பி; வட இந்தியாவில் தேநீர்; தென்னிந்தியாவிலும், கேரளாவில் மிகப் பெரும்பாலோர் தேநீர் அருந்துகின்றனர்.

தமிழர்களுக்குக் காப்பி பானமாக மட்டும் இல்லை; உணவாகவும் இருக்கிறது. விருந்தினர்களை வரவேற்றுச் செய்யும் உபசாரம் காப்பி கொடுப்பதுதான். காப்பி சாப்பிடுவதற்கு இரவு பகல் என்ற நேரமே இல்லை. என்றாலும் அதிகாலையில் காப்பி சாப்பிடாவிட்டால், பலருக்கு நாளே உதயமாவதில்லை.

திருமணங்களில் முக்கியமானது காப்பி, காலை ஐந்து மணிக்கு நல்ல காப்பி கொடுக்காவிட்டால், சம்பந்திகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.

தமிழ் நாட்டில், ‘தேநீர் விருந்து’ என்று அச்சடித்து அழைப்பு அனுப்பினாலும், விருந்தில் வழங்குவது காப்பிதான்.

பல ஆண்டுகளுக்குமுன் மாணவனாக இருந்த பொழுது, எனது பள்ளியில் ஆண்டு விழா. நாடகமும் நடைபெற்றது. நாடகத்தில்

பங்கு கொண்டேன். நாடகத்துக்கு முன்னர், மாணவர்கள் பேச்சுப் போட்டி. எனது ஆசிரியர் எழுதிக் கொடுத்த 'காப்பியின் தீமைகள்' என்ற சொற்பொழிவை மனப்பாடம் செய்து ஒப்புவித்தேன். "காப்பியில் காபின் ஒன்ற விஷம் இருக்கிறது. அது தீங்கிழைக்கும்" என்பது பேச்சின் சாரம். காபின் என்றால் என்ன வென்று எனக்கு அப்பொழுதும் தெரியாது. இப்பொழுதும் தெரியாது. எனக்கு முதல் பரிசு கிடைத்தது.

நாடகம் முடிய இரவு பத்து மணி ஆயிற்று. நாடகம் முடிந்ததும் நடிகர்களுக்கு உப்புமாவும் காப்பியும் கொடுப்பது வழக்கம். பேச்சுப் போட்டியில் எனக்கு முதல் பரிசு கிடைத்ததைக் கண்டு பொறாமை கொண்ட மாணவர்கள் சிலர் ஒன்று சேர்ந்து, "காப்பியின் தீமையைக் குறித்து மிக நன்றாகப் பேசினாய். உனக்குக் காப்பி வேண்டாம்; அது தீங்கிழைக்கும்" என்று கூறி எனக்கு உப்புமாவை மட்டும் வழங்கினர். காப்பி கிடைக்காமல் வீடு திரும்பினேன். பேச்சுப் போட்டியில் முதல் பரிசு கிடைத்த மகிழ்ச்சியை காட்டிலும் காப்பி கிடைக்காததால் உண்டான துக்கம் தான் அதிகம்.

அந்நாளில் காப்பி ஹோட்டல்களில் அரை கப், முக்கால் கப் காப்பி என்றெல்லாம் இருந்தன. இப்பொழுது அவை பழங்கதையாகிவிட்டன. இப்பொழுது பழைய அரை கப் காப்பியைத்தான், ஒரு கப் காப்பி என்று தருகிறார்கள். அதுவும் மருந்தைப் போல அளந்து தருகிறார்கள்.

காப்பியிலேயே ஸ்பெஷல் காப்பி உண்டு. பெரும்பாலும் விலைதான் ஸ்பெஷலாக இருக்கும். தமிழ் நாட்டில் ஒரு பகுதியில் 'டிகிரிக் காப்பி' என்று உண்டு. 'டிகிரி' பாலைக் கொண்டு தயாரிப்பதாகக் கூறப்படும் காப்பி 'டிகிரிக் காப்பி.'

அமெரிக்காவில் முட்டையின் விலை இரண்டு காசு ஏறிவிட்டால் பொது மக்கள் கிளர்ச்சி செய்வார்கள். தமிழ் நாட்டில் காப்பியின் விலை இரண்டு காசு ஏறிவிட்டால், பொது மக்கள் கிளர்ச்சி செய்வார்கள்.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் காப்பி தயாரிக்கும் விதத்தில் வித்தியாசமுண்டு. பிரான்ஸ், துருக்கி ஆகிய நாடுகளில் பாலே இல்லாமல் காப்பி சாப்பிடும் வழக்கமும் உண்டு. தமிழ்நாட்டிலும் சில வீடுகளில் பால் கலக்காமல் தயாரிக்கும் காப்பியை 'வறக் காப்பி' என்று சொல்லுவார்கள். தமிழ்நாட்டில் பெரும்பாலும் காப்பிக்குச் சர்க்கரைதான் சேர்ப்பார்கள். சிலர் சர்க்கரைக்குப் பதிலாக வெல்லம் அல்லது பனை வெல்லம் உபயோகிப்பார்கள்.

இந்தியா தவிர மற்ற நாடுகளில் நாம் சாதாரணமாக 'டிக்காஷன்' என்று சொல்லும் 'டிக்காக்ஷன்' அதிகமிருக்கும். பால் மிக மிகக் குறைவு. பெரும்பாலும் கெட்டிப்பால் அல்லது புட்டிப் பாலாக இருக்கும். இந்தியாவில்தான் பால் அதிகம்; டிக்காக்ஷன் குறைவு.

துருக்கியில் காப்பி தயாரிக்கும் முறையே தனி விதம், காப்பி கெட்டியாக இருக்கும்.

காப்பியின் ருசியை அடியோடு கெடுப்பதில் தலை சிறந்தவர்கள் குஜராத்திகள், காப்பியில் மசாலாவைக் கலந்து விடுவார்கள்.

வெளிநாடுகளில் காப்பி, பால், சர்க்கரை ஆகியவற்றைத் தனித் தனியாக வைத்து வழங்குவார்கள். ஒவ்வொருவரும் தம் விருப்பப்படி தேவையான அளவு கலந்து கொள்ளலாம். தமிழ் நாட்டில் மூன்றையும் ஒன்றாகக் கலந்து வழங்குகின்றனர். காப்பி நன்றாக இருப்பது, அதைக் கலப்பவரின் ருசியைப் பொறுத்திருக்கிறது. என்றாலும் பொது மக்கள் சில சமயங்களில் தங்கள் விருப்பத்தை வற்புறுத்துகிறார்கள். 'லைட் காப்பி' 'மீடியம் காப்பி' 'ஸ்ட்ராங் காப்பி' 'டபிள் ஸ்ட்ராங்' என்று காப்பி ஹோட்டல்களில் சொல்லுவதைக் கேட்கிறோம். இவற்றுக்குத் தமிழில் இன்னும் கலைச் சொற்கள் தயாராகவில்லை.

வெளி நாடுகளிலும், வட இந்தியாவிலும் கூட, காப்பியைக் கோப்பைகளில்தான் வழங்குகின்றனர். தமிழ் நாட்டில் மட்டும்தான் காப்பியைத் தம்ளரில் வழங்கும் பழக்கம் உண்டு. அதற்குக் காரணம் தம்ளரை எச்சில் செய்யாமல், உயரத் தூக்கி அருந்தும் நல்ல பழக்கம் தான்!

காப்பியிலேயே, ஐஸ் காப்பி, காப்பி ஐஸ்கிரீம், காப்பி ஜெல்லி முதலியவை வந்துவிட்டன.

காப்பியின் நிறத்துக்கே 'காப்பிக் கலர்' என்று மக்கள் கூறுவர். தமிழ்ப் பெண்களில் சிலருக்குக் 'காப்பிக்கலர்' சேலை பிடிக்கும். அமெரிக்கப் பெண்கள் தங்கள் உடல் நிறத்தைக் 'காப்பிக்கலர்' ஆக்கிக்கொள்ள மணிக் கணக்கில் வெயிலில் படுத்திருப்பார்கள்.

தமிழ் நாட்டில் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட காப்பியைப் பற்றி ஒரு புராணமே எழுதலாம்.

இந்தியாவில் காப்பி உற்பத்தி முழுதும் தென்னாட்டில்தான். அதுவும் குடகு, மைசூர், சென்னை, கேரள ராஜ்யங்களில் தான்.

இந்தியாவில் உள்ள காப்பி எஸ்டேட்டுகள் சுமார் 47 ஆயிரம். அவற்றில் குடகில் உள்ளவை மட்டும் சுமார் 10 ஆயிரம்.

1854 ஆம் ஆண்டில் பௌலர் என்ற ஐரோப்பியர் குடகு நாட்டில் 'மெர்க்காரா எஸ்டேட்' என்ற காப்பித் தோட்டத்தை ஆரம்பித்தார். ஆரம்ப காலத்தில் தோட்டங்களை விலை கொடுத்து வாங்குவதில்லை. காடு வெட்டி, நிலம் திருத்தி தோட்டங்களை உண்டாக்க வேண்டும். குடகில் மட்டும் நாளடைவில் சுமார் நூறு ஐரோப்பியர்கள் தோட்டங்களை உண்டாக்கினர். குடகர்களும் காப்பிப் பயிரில் முனைந்தனர். அந்நாளில், காப்பித் தோட்டம் உண்டாக்குபவர்களுக்கு அரசாங்கம் ஊக்கம் அளித்தது. பெரும்பாலான ஐரோப்பியர்கள், பெயருக்காக ஏகரா ஒன்றுக்கு ஒரு ரூபாய் விலை கொடுத்து அரசாங்கத்திடமிருந்து நிலத்தை வாங்கினர். லண்டனிலுள்ள 'பாங்க் ஆப் இங்கிலாந்து' ஆண்டு ஒன்றுக்கு நூற்றுக்கு ஒரு வட்டிக்குக் கடன் கொடுத்தது. காப்பிப் பயிரில் நூற்றுக்கு நூறு லாபம் கிடைத்தது. ஆனால் அந்த அதிர்ஷ்டம் நிலைக்கவில்லை.

1884 ஆம் ஆண்டில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்தியாவில் தேவைக்கு அதிகமாக காப்பி உற்பத்தியாயிற்று. அதே சமயத்தில் தென் அமெரிக்காவில் பிரேஸில் நாட்டில் உற்பத்தியான காப்பி, முதன் முதலாக உலகச் சந்தைக்கு வந்தது. அத் தருணத்தில் குடகில் சுமார் நூறு ஐரோப்பியர் தோட்டங்கள் இருந்தன. குடகர்களும் காட்டை அழித்துக் காப்பிப் பயிர் செய்தனர்.

முதலாவது உலக யுத்தம் தொடங்கியதும், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இயலாததால், காப்பியின் விலை குறைந்து கொண்டே வந்தது. அன்றியும் ஒரு விதப் பூச்சிகள் காப்பிச் செடியை நாசப்படுத்தின. இரண்டாவது உலக யுத்தம் தோன்றியதும் நிலைமை இன்னும் மோசமாயிற்று. நஷ்டம் அதிகரித்தது. பராமரிக்க இயலாமல் சிலர் காப்பித் தோட்டங்களை அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர். பலர் காப்பிப் பயிர் செய்வதை நிறுத்திவிட்டனர். 1940 ஆம் ஆண்டில் காப்பிப் பயிர் செய்யும் நிலம் மூன்று லட்சம் ஏகராவிலிருந்து ஒரு லட்சத்து எண்பதாயிரம் ஏகராவாகக் குறைந்தது.

1940 ஆம் ஆண்டில் 'காப்பி மார்க்கெட் விஸ்தரிப்பு போர்டு' அரசாங்கச் சட்டத்தின் மூலம் உருவாயிற்று. அதுதான் பின்னர் 'காப்பி போர்டு' என்று மாறியது. காப்பி உற்பத்தியாளர் எல்லோரும் தங்கள் பயிர் முழுவதையும் 'காப்பி போர்டு'க்கே கொடுக்க வேண்டும். விற்பனை முழுவதையும் காப்பி போர்டு மேற்கொண்டது.

காப்பி பயிரிடுபவர், காப்பித் தோட்டத் தொழிலாளர், காப்பி வியாபாரம் செய்வோர், காப்பி அருந்துவோர் ஆகியோரின் பிரதிநிதிகள் கொண்டது காப்பி போர்டு. காப்பி விளையும்

ராஜ்யங்களின் பிரதிநிதிகளும் காப்பி போர்டில் உள்ளனர். அதன் தலைமைக் காரியாலயம் பங்களூர்.

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் காப்பி போர்டு செய்த வேலையின் காரணமாக, காப்பி பயிரிடும் நிலங்கள் பழைய மூன்று லட்சம் ஏகராவுக்கே வந்துவிட்டன. பல ஆராய்ச்சி நிலையங்களை காப்பி போர்டு நிறுவியுள்ளது. அந்த ஆராய்ச்சி நிலையங்கள் காப்பிச் செடியை அழித்த பூச்சிகளை விஞ்ஞான முறையில் ஒழிக்க உதவி செய்தன.

இந்தியா சுதந்திர மடைந்த பின்னர், ஐரோப்பியர்கள் தங்கள் தோட்டங்களை நல்ல விலைக்கு விற்று வெளியேறினர். இப்பொழுது மருந்துக்குத்தான் ஒன்றிரண்டு பேர் இருக்கிறார்கள்.

குடகில் உள்ள சுமார் பத்தாயிரம் காப்பித் தோட்டங்களில், நூறு ஏகராவுக்கு மேல் உள்ளவை, சுமார் நூறு தான் இருக்கும். மிகப் பெரும்பான்மை ஐந்து முதல் இருபது ஏகரா வரையுள்ள தோட்டங்கள், மைசூர், தென் கன்னடம், கேரளம், சென்னை ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் அங்கு தோட்டங்கள் வாங்கியிருக் கிறார்கள். வடநாட்டார் சிலரின் தோட்டங்களும் உள்ளன. தோட்டங்களில் மூன்றில் ஒரு பகுதி குடகர்களைச் சேர்ந்தது என்று கூறலாம்.

1960-61 ஆம் ஆண்டில் இந்தியாவில் உற்பத்தியான காப்பி சுமார் 68 ஆயிரம் டன். அதில் 24 ஆயிரம் டன் குடகில் உற்பத்தி யாயிற்று. அதாவது இந்திய உற்பத்தியில் நாற்பது சதவிகிதம்.

இந்தியாவில் உற்பத்தியாகும் காப்பியில் சுமார் ஐம்பது சத விகிதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இந்தியக் காப்பியை வாங்கும் முக்கிய நாடுகள், மேற்கு ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம், இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன், சுவிட்சர்லாந்து ஆகியவை. ஏற்றுமதியின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஏழு கோடி முதல் பத்து கோடி ரூபாய்வரை அந்நிய நாட்டுச் செலவாணி கிடைக்கிறது.

குடகு நாட்டின் முக்கிய வருமானங்களில் ஒன்று, விவசாய வருமான வரி. அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் எண்பது லட்சம் ரூபாய் கிடைக்கிறது.

கூலிக்குத் தோட்ட வேலை செய்பவர்களில் குடகர்களே இல்லை. குடகு நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டோரும் மலையாளம், தென் கன்னடம், மைசூர், தமிழ்நாடு ஆகிய பகுதிகளிலிருந்து வரும் தொழிலாளரும் தான் தோட்ட வேலைக்கு வருகின்றனர். நாட்டின் ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்கு தோட்ட வேலை செய்பவர்கள்.

தோட்ட வேலை செய்வோர்களில் பெரும்பாலோர் மலையாளிகள். தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் தனித்தே வாழ்ந்தார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்தோர் இதுவரை சுமார் இருபது தோட்டங்கள் வாங்கியுள்ளனர்.

தொழிலாளருக்குத் தினம் ஒன்றுக்கு ஒரு ரூபாய். அறுபத்தைந்து பைசா கூலி. விடுமுறை, புராவிடண்ட் பண்டு முதலிய நன்மைகள் உண்டு. அந்த நன்மைகள் பெறாத தொழிலாளருக்குத் தினம் ஒன்றுக்குக் கூலி ஒன்றே முக்கால் ரூபாய். தொழிலாளர் வசிக்க வீடுகள் தோட்டங்களிலேயே உள்ளன. எல்லாத் தொழிலாளர்களுக்கும் மருத்துவ உதவி இலவசம்.

தோட்டத் தொழிலில் நீண்ட கால அனுபவமும், நுட்பமும் பெற்ற தனிப்பார்வையாளர் (ஏளைவைபே ஹபநவே) பெரும்பாலான பெரிய தோட்டங்களுக்கு ஒவ்வொரு மாதமும் சென்று இரண்டு அல்லது மூன்று நாள் தங்குவார். தோட்ட நிர்வாகிகளின் மாதச் சம்பளத்தைக் காட்டிலும் பார்வையாளரின் இரண்டு நாள் வேலைக்குக் கிடைக்கும் ஊதியம், சில சமயங்களில் அதிகமாக இருக்கும்.

பெரம்புகொல்லியில் நான் தங்கியிருந்தபோது, ராமுண்ணி என்ற பார்வையாளர் வந்தார். மூன்று நாட்கள் தங்கினார். அவர் மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

ராமுண்ணி என்ற பெயரே மலையாளி என்று சொல்லும்; பெரம்புக்கொல்லி எஸ்டேட்டிலேயே முப்பத்திரண்டு ஆண்டுகள் வேலைசெய்து ஒய்வு பெற்றவர். காப்பிப் பயிரில் முதிர்ந்த அனுபவமுள்ள ஒரு சிலரில் ராமுண்ணி ஒருவர். ராமுண்ணியின் வயது அறுபத்திரண்டு; சொந்த ஊர் தலைச்சேரி. ஒவ்வொரு மாதமும் தமது காரில் குடகுக்கு வந்து பதினைந்து தினங்கள் பல தோட்டங்களுக்குச் செல்வார். பின்னர் ஊருக்குச் சென்று பதினைந்து நாட்கள் ஓய்வு பெறுவார். தோட்டத்தைப் பார்க்கக் காலை ஏழு மணிக்குப் புறப்படும் ராமுண்ணி, நாள் முழுதும் ஓய்வில்லாமல் உழைப்பார். ஒவ்வொரு செடியின் கதையும் அவருக்குத் தெரியும். கடமையைச் சரிவரச் செய்வதில் மிகச் சிறந்தவர் என்ற புகழ் அவருக்கு உண்டு.

“மலேரியா தாண்டவமாடிய காலத்தில் நீங்கள் இங்கு வந்ததில்லை. தொழிலாளரின் துன்பங்கள் எண்ணற்றவை. பலருக்கு வயிறு பெரிதாக வீங்கியிருக்கும். உடல் நலமுள்ள தொழிலாளர் மிகக் குறைவு. கூலியோ தினந்தோறும் மூன்றணா” என்றார் ராமுண்ணி.

காப்பிப் பயிரில் இருவகை உண்டு. ஒன்று அராபிகா; மற்றொன்று ரோபஸ்டா. அராபிகா டன் விலை சுமார் மூவாயிரம் ரூபாய்; ரோபஸ்டா டன் விலை சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்.

"மழையை நம்பும் பயிர் காப்பி. ஆண்டுக்கு ஒரு முறைதான் அறுவடை. ஒவ்வோர் ஆண்டிலும் அறுவடை நம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. குறிப்பிட்ட காலத்தில் சுமார் முக்கால் அல்லது ஓர் அங்குலம்வரை மழை பெய்ய வேண்டும். மழை பெய்ததும் காப்பிச் செடியில் உள்ள அரும்பு பூக்கும். காப்பி பூத்த அன்று மழை கூடாது. அன்று மழை பெய்தால், மழைத் துளி பூவுக்குள் புகுந்து மகரந்தப் பொடியைச் சேதமாக்கி விடும். மழை பெய்த நாளிலிருந்து ரோபஸ்டா எட்டாவது நாளிலும், அராபிகா ஒன்பதாவது நாளிலும் பூக்கும். பூப்பதற்குமுன் பெய்த மழை (க்ஷடடிளளடிஅ ளாடிறநச) முக்கால் அங்குலமாய் இருந்தால், பூத்தபின் ஒரு வாரத்திற்குள் மழை பெய்ய வேண்டும். பூப்பதற்குமுன் பெய்த மழை ஓர்அங்குலமாய் இருந்தால், பூத்தபின் இரண்டு வாரத்திற்குள் (ஞடிளவ க்ஷடடிளளடிஅ ளாடிறநச) மழை பெய்ய வேண்டும். பின் மழை குறையக் குறைய காப்பிச் செடியின் பூக்களில் நான்கில் ஒரு பங்கு சேதமாகிவிடும். அம்மாதிரிச் சேதத்தைத் தவிர்ப்பதற்காகச் சில தோட்டங்களில் செயற்கை மழையை உண்டு பண்ணுகிறார்கள். மின்விசையால் தண்ணீர் இறைத்து, எல்லாப் பக்கங்களிலும் சுழன்று தெளிக்கும் வகையில் பெரியகுழாய்களை மின்வரிசையால் இயக்குகின்றனர். அவற்றைத் தோட்டத்தில் ஒவ்வொரு பகுதியாக எடுத்துச் சென்று உபயோகிக்கின்றனர். சுழல் குழாய்களின் மூலம் இவ்வளவு நேரம் தண்ணீர் தெளித்தால், இத்தனை அங்குலம் மழை பெய்த பலன் என்று கணக்கு உண்டு. அம்மாதிரி அவசியம் நேரும்போது செய்கிறார்கள். கருவிகளின் விலை சுமார் எழுபத்தைந்தாயிரம் ரூபாய்" என்றார் ராமுண்ணி.

"இவ்வளவு தொகை செலவு செய்யக் கட்டுமா?" என்று கேட்டேன்.

"பயிர் பிழைத்தால் இரண்டு லட்ச ரூபாய் கிடைக்கும். இல்லையேல் அடியோடு பாழ். எனவே, ஏன் எழுபத்தையாயிரம் முதலீடு செய்யக் கூடாது?" என்றார் ராமுண்ணி.

வேலையாள் எங்கள் இருவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தார். காப்பி உற்பத்தியாகும் குடகு நாட்டில், மக்கள் அதிகமாகப் பருகுவது தேநீர்!

★ ★ ★

இணைப்பு

"இந்தியாவில் ராம ராஜ்யம் என்று சொல்லக்கூடிய ஓர் இடம் இருக்குமானால், அது குடகுதான். அங்கிருந்து எந்தவிதமான புகாரும் எதுவுமே இல்லை. அவர்களுக்கு அரசியல் அமைப்பே ஏற்படவில்லை; அதைக் குறித்தும் புகார் செய்வதில்லை. அங்கே திருட்டு கிடையாது; கொள்ளை கிடையாது; குற்றம் கிடையாது."

அசோகச் சக்கரவர்த்திக்குப் பிறகு, சிதறிக் கிடந்த இந்திய நாட்டை, ஒரு தேசமாக உருவாக்கிய சரித்திரப் புகழ் பெற்ற சர்தார் வல்லபாய் படேல், இந்தியப் பார்லிமெண்டில் 1949 ஆம் ஆண்டில், குடகு பற்றிய விவாதத்தின்போது இவ்வாறு கூறினார்.

குடகர்கள் சிறந்த போர் வீரர்கள்; ஆனால் அவர்கள் ஒரு நாளும் சுதந்திரமாக இருந்ததில்லை. அதற்கு அவர்களுடைய சரித்திரமே சான்று.

"ஆண் போர்க்களத்தில் சாகவேண்டும்

பெண் பிள்ளைப்பேற்றில் சாகவேண்டும்"

என்பது குடகர் பழமொழி.

ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்துதான் குடகின் சரித்திரமே சிறிது புலனாகின்றது. அதற்குமுன் உள்ள வரலாறு ஊகம்தான்.

மைசூரைச் சேர்ந்த சங்கலவ வம்சத்து அரசர்கள், மைசூர் நகருக்கு மேற்கே உள்ள பகுதியையும், குடகு நாட்டில் கிழக்கு, வடக்குப் பகுதிகளையும், ஒன்பதாம் நூற்றாண்டிலும், பத்தாம் நூற்றாண்டிலும் ஆண்டு வந்தனர். ஆனால் மைசூரை ஆண்ட கங்கா மன்னர்களுக்குக் கப்பம் கட்டிவந்தனர்.

பதினோறாவது நூற்றாண்டில் சோழர்கள் சங்கலவ வம்சத்து அரசர்களைத் தோற்கடித்தனர். அதுமுதல் சங்கலவர்கள் சோழர் களுக்குக் கப்பம் கட்டி அவர்களின் கீழ் ஆண்டனர்.

சோழர் சேனைத் தலைவர்களில் ஒருவரான மனிஜா என்பவருக்கு, ராஜராஜ சோழன், 'க்ஷத்திரிய சிகாமா கொங்கலவா'

என்ற பட்டத்தைச் சூட்டி, குடகு நாட்டில் சனிவாரச் சந்தை பகுதியையும் ஆறுகல் நாடு என்ற தாலுகாவையும் கொடுத்துத் தனக்குக் கீழ் ஆளும்படி செய்தான்.

சங்கலவர், கொங்கலவர் ஆகிய இருவரும் ஜைனமதத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் சோழர் பெயரைத் தங்கள் பெயருடன் சேர்த்துக் கொண்டனர். நன்னி சங்கலவ ராஜேந்திர சோழன் என்பது ஒரு சங்கலவ அரசனின் பெயர். சோழர் படையெடுப்பால், குடகு நாட்டில் கல்வி, வாணிபம் முதலியன வளர்ச்சியடைந்தன. அந்நாளில் சோழர்களின் தலைநகரான புகார் நகரம்தான், பண்பாட்டின் தலைநகராக விளங்கியது.

சோழர் காலத்தை நினைவூட்டும் சின்னங்கள், குடகு நாட்டில் பல. மலைகளில் அநேக இடங்களில் உள்ள 'பாண்டவ பாறைகள்' 'வீரக்கல்'கள். கொடிலிபேட் அருகில் உள்ள பரசுராமர் கோயில், குஷால் நகர் அருகில் உள்ள ரங்கசுவாமி கோயில், தித்தி மத்தி அருகில் உள்ள பசுமையான 'சீதா பனா' (சீதை வனம்) பாலூர், பாகமண்டலா கோயில்கள் ஆகியவை சோழர் ஆட்சியில் கட்டப் பெற்றவை.

பன்னிரண்டாவது நூற்றாண்டில் மைசூர் ராஜ்யத்தில் ஹாஸன் ஜில்லாவில் தோன்றிய ஹோய்சாலா என்ற அரசவம்சம், சோழர்களைக் கன்னட தேசத்திலிருந்து விரட்டியடித்தது. ஹோய்சாலாக்களைச் சங்கலவர்கள் எதிர்த்தனர். ஹோய்சாலா சேனைத் தலைவன் பெத்தராசா, சங்கலவ அரசன் மகாதேவனைக் குடகில் பால்பாறை என்ற இடத்தில் தோற்கடித்து, பால் பாறையையே தனது தலைநகராக்கினான்.

மகாதேவாவின் புதல்வன் பெம்ப வீரப்பாவும், குடகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும், பெத்த ராசாவை மீண்டும் தாக்கித் தோல்வியடைந்தனர். தோல்விக்குப்பின் சங்கலவர்களும், கொங்கலவர்களும், ஹோய்சாலா மன்னர்களின் முடி வணங்கிக் கப்பம் கட்டினர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் லிங்காயத்து அல்லது வீர சைலம் என்ற புதிய மதம் தோன்றியது. ஹோய்சாலாக்கள் தங்கள் மதத்தை விட்டு, லிங்காயத்துக்களாக மாறினர். அதுமுதல் ஸ்ரீ கிரி என்னும் பெட்டாடூர் மலையில் எழுந்தருளியுள்ள அன்னதானி மல்லி கார்ஜுனாவைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டனர்.

ஹோய்சாலாக்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, விஜயநகர சாம்ராஜ்யம் தென்னிந்தியா முழுதும் பரவியது. சங்கலவர்கள் விஜயநகர ராஜாவுக்குக் கப்பம் கட்டி, அவர்களின் கீழ் ஆண்டனர்.

1565 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் தாலிகோட்டா என்ற இடத்தில் விஜயநகர அரசர்களை முறியடித்தார்கள். விஜய நகர காலத்தில், ராணுவத்திலும் மற்ற விதங்களிலும் தொண்டு செய்த சிலருக்குப் பட்டங்கள் அளித்து, சிறு சிறு பகுதிகளை ஆண்டு வரும்படியும், ஸ்ரீரங்கபட்டணத்திலுள்ள தங்கள் அரசப் பிரதிநிதி ஸ்ரீரங்கராயலுவுக்குக் கப்பம் கட்டும்படியும் ஏற்பாடு செய்திருந்தனர்.

தாலிகோட்டா வீழ்ச்சிக்குப் பின், பெட்னூர் நாயக்கர்கள், சங்கலவர்கள், மைசூர் உடையார்கள் முதலியோர் சுதந்திர மடைந்தனர். விஜயநகர வீழ்ச்சிக்குப் பின், மைசூர் உடையார்கள், விஜயநகர ஆதிக்கத்திலிருந்த பகுதிகளை எடுத்துக்கொண்டு, பலமுள்ள அரசாக விளங்கினர். கடைசி சங்கலவ மன்னர் 1644 ஆம் ஆண்டில் மைசூர்க்காரர்களுடன் நடத்திய போரில் மடிந்தார்.

பதினாறாம் நூற்றாண்டில், குடகில் பல 'நாயக்'குகள் விஜய நகரத்துக்குக் கப்பம் கட்டி ஆண்டு வந்தனர். நாயக் என்றால் கன்னட மொழியில் தலைவன் என்று பொருள்.

விஜயநகர வீழ்ச்சிக்குப்பின், பெட்னூர் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளவரசன், அன்றையக் குழப்பத்தையும் சூழ்நிலையையும் நன்கு பயன்படுத்திக் கொண்டான். அவன் லிங்காயத்து மத குரு போல வேஷம் அணிந்து லிங்காயத்துக்கள் அதிகமாக வசிக்கும் வட குடகில், ஹலேரி என்னும் ஊரில், ஒரு சாவடியில் தங்கி குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான். பெற்றோர், அரிசியும் ரொக்கமும் காணிக்கையாகச் செலுத்தினர். சிறிது நாளில், அதைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டதோடு, சாவடியைப் பாதுகாக்க தினந்தோறும் இத்தனை பேர்களை அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவிட்டான். அவர்களுக்குச் 'சாவடிக்காரர்' என்று பெயர். அவர்களே பின்னர் சேனையாகப் பெருகினர். பலமில்லாத நாயக்குகளைப் பயமுறுத்தி, அவர்கள் வருமானத்தில் நாலில் ஒரு பங்கு கட்டும்படி உத்தரவிட்டான். எதிர்த்தவர்களைப் போரிட்டு வென்று, நாட்டுக்கே அரசனானான். அந்தப் பரம்பரைதான் குடகு ராஜாக்கள், ஆனால் உண்மையில் அவர்கள் குடகர்கள் அல்லர்.

மாறுவேஷத்தில் 1600 ஆம் ஆண்டில் நாட்டைப் பிடித்த முதலாவது குடகு ராஜாவின் பெயர் வீர ராஜா. அந்த வம்சத்தில் மொத்தம் பன்னிரண்டு ராஜாக்களும், ஒரு ராணியும் ஆண்டனர். அவர்கள் ஆண்ட காலம் 234 ஆண்டுகள். அவர்கள் பேட்னூர் சங்கலவ அரசர்களின் பங்காளிகள். வீர ராஜாவுக்குப் பின் அப்பாஜி ராஜாவும் முத்து ராஜாவும், தொத்த வீரப்பா, சிக்க வீரப்பா முதலியோரும் ஆண்டனர். சிக்க வீரப்பா, குழந்தைகள் இல்லாமல்

இறந்தார். எனவே ஹலேரி, ஹொரமலை ஆகிய இரு குடும்பங்களின் பிரதிநிதிகளாக இரண்டாவது முத்து ராஜாவும், முத்தையாவும் ஆண்டனர். அந்நாளில் படையெடுத்து வந்த ஹைதர் அலியை அவர்கள் தோற்கடித்தனர்.

முத்தையா இறந்தபின், தேவப்ப ராஜா நான்கு ஆண்டுகள் ஆண்டார். முத்தையாவுக்குப் பின் அரசுரிமை யாருக்கு என்பதில் சண்டை உண்டாயிற்று. ஹோரமலை மக்கள் தேவப்பாவை ராஜாவாக்கினர். அது, ஹலேரி லிங்க ராஜாவுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த ஹைதர் அலி குடகின் மீது படையெடுத்தான். தேவப்பா உயிருக்குப் பயந்து ஓடினார். ஹைதரின் படைகள் தேவப்பாவைக் கைது செய்து, ஸ்ரீரங்கப் பட்டணத்துக்குக் கொண்டுவந்தனர். தேவப்பாவின் குடும்பத்தாரைக் கைது செய்து ஏற்கெனவே, ஸ்ரீரங்கப்பட்டணத்திற்குக் கொண்டு வந்திருந்தனர். எல்லோரையும் கொன்று குவித்தன ஹைதரின் படைகள். குடகு ராஜ குடும்பத்தின் ஹொரமலைப் பிரிவு அத்துடன் பூண்டில்லாமல் போயிற்று.

லிங்கராஜா 1780 ஆம் ஆண்டில் காலமானார். லிங்கராஜாவின் மூத்த மகன் வீரராஜா உடையாருக்கு அப்பொழுது வயது பதினாறு. வீரராஜாதான் குடகு சரித்திரத்தின் வீரன். அரசிளங் குமாரனுக்கு வயதாகவில்லை என்றும், தானே கார்டியனாக இருப்பதாகவும் கூறி, ஹைதர் அலி குடகைக் கைப்பற்றினான். மடிக்கேரியில் முஸ்லிம் பட்டாளம் ஒன்றைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

குடகு மக்கள் ஆத்திரம் தாங்காமல் பகிரங்கமாக ஹைதரை எதிர்த்துக் கலகம் செய்தனர். வீர ராஜாவையும் அவர் குடும்பத்தினரையும் கோரூர் சிறையில் வைத்தான் ஹைதர்.

ஆறு ஆண்டுகள் சிறை வாசத்துக்குப் பின், வீர ராஜாவும், அவருடைய சகோதரர்கள் லிங்கராஜாவும், அப்பாஜியும் குடகு நாட்டுக் 'காரியக்காரர்' சிலர் உதவியினால் கோரூர் சிறையிலிருந்து தப்பியோடி, குடகில் குறிச்சி என்னும் ஊரில் யாரும் அறியாமல் தங்கினர்.

அந் நிலையில் பிரிட்டிஷாரோடு போராடிக் கொண்டிருந்த ஹைதர், ஆற்காட்டில் புற்று நோயால் மாண்டான். குடகிலிருந்த முஸ்லிம்களை வீர ராஜாவின் துணைவர்கள் விரட்டியடித்தனர்.

ஹைதர் இறந்த செய்தி கேட்டு, பிரிட்டிஷாரின் பட்டாளங்கள் மங்களூரில் கொடியால் நகரையும் கோட்டை களையும் கைப்பற்றின. ஹைதர் அலி குமாரன் திப்பு சுல்தான் குடகை வெல்வது என்று கங்கணம் கட்டிக் கொண்டான். 1874 ஆம் ஆண்டில் திப்பு சுல்தான்

பிரிட்டிஷாரைத் தோற்கடித்து, கொடியால் நகர் கோட்டைகளைக் கைப்பற்றினான். பின்னர் குடகைக் கைப்பற்ற ஒரு சேனையை அனுப்பினான் வீர ராஜாவின் சேனைகள் திப்பு சுல்தான் சேனையை முறியடித்தன.

குடகில் ஏற்பட்ட கலகங்களில் ஒன்றை அடக்குவதற்கு ஒரு முறை திப்பு சுல்தானே ஒரு படையுடன் வந்தான். சமாதான உடன்படிக்கை செய்வதுபோலப் பாசாங்கு செய்து, குடகர்களைப் பாகமண்டலாவுக்கு அருகில் தன்னைச் சந்திக்கும்படி கூறினான். வஞ்சகம் அறியாத குடகர்கள் அதனை உண்மை என்று நம்பி அவ்வாறே கூடினர். அவ்வாறு கூடிய ஆயிரக்கணக்கான குடகர்களையும், அவர்கள் மனைவி மக்களையும் திப்பு சுல்தான் ஆட்டு மந்தையைப் போல மடக்கி, அவர்களை ஸ்ரீரங்கப் பட்டணத்துக்கு ஓட்டிச் சென்றான். அங்கு அவர்களை முஸ்லிம்களாக மதம் மாற்றி, கஞ்சம் என்ற இடத்தில் குடியேற்றினான். அவ்வாறு சென்றவர் தொகை எழுபதாயிரத்துக்கு மேல் ஒரு லட்சத்துப் பத்தாயிரத்துக்குள் இருக்கலாம் என்று பலவிதமாகச் சொல்லுகிறார்கள்.

மூன்றாவது மைசூர் யுத்தத்தில், திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப்பட்டணத்திலுள்ள தனது கோட்டைக்குள்ளே ஒளிந்து கொண்டான். அப்போது, ஆண் பெண் குழந்தை உள்பட சுமார் பன்னிரண்டாயிரம் குடகர்கள் தப்பியோடி குடகு சேர்ந்தனர். அவர்களில் பெரும்பாலோர் மீண்டும் இந்துக்களாயினர். ஒரு சிலர் மட்டும் முஸ்லிம்களாகவே இருந்தனர். அவர்களுக்கு 'ஜம்மா மாப்பிள்ளா' என்று பெயர்.

1789 ஆம் ஆண்டில் வீர ராஜா கோரூர் கோட்டையிலிருந்து தப்பி வந்ததும், குடகர்களிடையே அவருக்கிருந்த செல்வாக்கை, திப்பு சுல்தானுக்கு எதிராகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர் பிரிட்டிஷார். 1790 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினைந்தாம் தேதி. ஈஸ்ட் இந்தியா கம்பெனி, தலைச்சேரித் தலைவர் ராபர்ட் டெய்லரும் குடகு ராஜா வீர ராஜேந்திர உடையாரும் செய்து கொண்ட ஒப்பந்தம் வருமாறு:-

1. சூரிய சந்திரன் உள்ளவரை, இரண்டு தரப்பினரும் ஒப்பந்தத்தை மீறுவதில்லை.

2. திப்புவையும், அவனை ஆதரிப்போரையும் பொது எதிரிகளாக நடத்த வேண்டும். திப்புவுக்குத் தீங்கிழைக்க ராஜா தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் ஆங்கிலேயர்களுக்குச் செய்ய வேண்டும்.

3. தமது நாட்டில் உற்பத்தியாகும் தானியங்களை ஆங்கிலேயர்களுக்கு ராஜா நியாய விலைக்குக் கொடுக்க வேண்டும். மற்ற 'தொப்பி வாலாக்'களுடன் (பிரஞ்சுக்காரர்) ராஜாவுக்குத் தொடர்பு கூடாது.

4. கம்பெனி குடகின் சுதந்திரத்திற்கு உறுதி அளிக்கிறது. திப்பு சுல்தானுடன் சமாதானம் செய்து கொள்ள நேர்ந்தாலும், குடகு ராஜாவின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதி கூறுகிறது.

5. சமாதானம் உண்டாகும்வரையும், ராஜாவும் அவர் குடும்பத்தினரும் தலைச்சேரியில் கம்பெனியின் விருந்தினர்களாகத் தங்க அழைக்கிறது.

கடவுள், சூரியன், சந்திரன், பூமி, சாட்சிகள்.

திப்பு சுல்தானுடன் பிரிட்டிஷார் போராடிய இரண்டு சண்டைகளிலும், வீர ராஜேந்திர ராஜா, ஆங்கிலேயர் படைகளுக்கு உணவளித்து உதவி செய்தார்.

வீர ராஜேந்திர ராஜாவை, ஈஸ்ட் இந்தியா கம்பெனி பம்பாய் தளபதி ஸர் ராபர்ட் அபெர்குரோம்பி, மைசூர் யுத்தத்தின் போது குடகில் சந்தித்தார். அதன் நினைவாக வீர ராஜேந்திர ராஜா, தாம் அபெர்குரோம்பியைச் சந்தித்த இடத்தில் ஓர் ஊரை உண்டாக்கி, வீர ராஜேந்திர பேட் என்று தம் பெயரையே சூட்டினார். அதுதான் இப்போது விராஜ்பேட் என்பது.

வீர ராஜேந்திரன் இறந்தபின், அவனுடைய பிரியமான புதல்வி தேவம்மாஜி அரசியானாள். அவளுக்கு அப்பொழுது வயது பத்து. குடகர் தலைவர்கள் ஒன்றுகூடி, தேவம்மாஜியின் மாற்றாந்தாயின் சகோதரியின் கணவன் சோடே பசவலிங்க ராஜாவைத் திவானாக நியமனம் செய்தனர். ஆனால் வீர ராஜேந்திர ராஜாவின் இளைய சகோதரன் இரண்டாவது லிங்கராஜா, சோடே பசவலிங்க ராஜாவுக்குப் பதிலாகத் தன்னையே திவானாக நியமிக்கும்படி குடகர் தலைவர்களை வற்புறுத்தினான். சில நாட்களில் அவனே திவானாக வந்து எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றினான். உதவியற்ற தேவம்மாஜி தன் பதவியைத் துறந்தாள். இரண்டாவது லிங்கராஜா பத்து ஆண்டுகள் (1811-1820) அரசாண்டான்.

குடகை ஆண்ட சிறந்த அரசர்களில் இரண்டாவது லிங்கராஜாவும் ஒருவன். நல்ல அரசாங்கத்தை ஏற்படுத்த ஐம்பத்து நான்கு உத்தரவுகள் போட்டான். மடிக்கேரி கோட்டையை இடித்துக் கட்டினான். ஓம்காரேஸ்வரர் கோயிலைக் கட்டியதும் அவனே.

1820 ஆம் ஆண்டு இரண்டாவது லிங்கராஜா இறந்ததும், அவனுடைய புதல்வன் சிக்க வீர ராஜேந்திர ராஜா பதவிக்கு வந்து, 1834 ஆம் ஆண்டில் பதவியிலிருந்து நீக்கப்பட்டான். குடகு ராஜாக்களில் கடைசி அவனே.

சிக்க வீர ராஜேந்திரன் பதவிக்கு வந்தபொழுது அவனுக்கு வயது பதினைந்து; அனுபவம் இல்லை. நொண்டி பசவன்னாவும், அப்பாஸ் அலியும் துன்மந்திரிகளாக வாய்த்தனர். 1825 ஆம் ஆண்டில் சென்னவீரா என்ற உறவினனை, ராஜத்துரோகம் செய்தான் என்று கூறி, அவனையும், அவன் குடும்பத்தினரையும் கொல்லும்படி உத்தரவிட்டான் சிக்க வீர ராஜேந்திரன். மைசூரிலிருந்து பிரிட்டிஷ் ரெசிடெண்டு, சிக்கவீர ராஜேந்திரனுக்கு ஒரு கடிதம் எழுதி, அதுவரை அவன் எத்தனை பேர்களுக்கு மரண தண்டனை விதித்திருக்கிறான் என்ற பட்டியல் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். தான் சுதந்திர மன்னன் என்றும், பட்டியல் அனுப்ப முடியாது என்றும் கூறினான் சிக்க வீர ராஜேந்திரன்.

தேவம்மாஜியின் கணவன் சென்ன பசவப்பாவும், நிர்வாகத்தில் அதிருப்தியுற்ற குடகர்களும் சேர்ந்து சிக்கவீர ராஜேந்திராவைக் கவிழ்க்க முயன்றனர். அதையறிந்த அரசன் சென்ன பசவப்பாவைக் கைது செய்து தண்டிக்க விரும்பினான். சென்ன பசவப்பாவும், தேவம்மாஜியும் தப்பியோடி மைசூர் பிரிட்டிஷ் ரெசிடெண்டிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்களைத் திருப்பியனுப்பும்படி சிக்கவீர ராஜேந்திரன் கேட்டான். பிரிட்டிஷார் மறுத்துவிட்டனர். அதனால் ஆத்திரம் கொண்டு பிரிட்டிஷார் மீது போர் தொடுத்தான் சிக்கவீர ராஜேந்திரன்.

1834 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் படைகள் குடகில் நுழைந்தன. அதன் தலைவர் கர்னல் பிரேஸர். குஷால் நகர் வழியாக நுழைந்தார். அதனால்தான் குஷால்நகர் பிரேஸர்பேட் ஆயிற்று. சிக்கவீர ராஜேந்திரன் தனது பலவீனத்தையும், அறியாமையையும் உணர்ந்து, தனது திவானையும் நண்பன் ஒருவனையும் சமாதானம் பேச அனுப்பினான்.

கர்னல் பிரேஸர் 1834 ஏப்ரல் நாலாந்தேதி பிற்பகல் நான்கு மணிக்கு, அரண்மனையிலிருந்த ராஜாவின் கொடியை இறக்கி, 21 குண்டு மரியாதையுடன் பிரிட்டிஷ் கொடியை உயர்த்தினான். ராஜா பதவி இழந்தான். அவனைக் காசிக்கு நாடு கடத்தினார்கள்.

குடகர் தலைவர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் சபை கூட்டி, எதிர்காலத்தில் எப்படி நிர்வாகம் செய்ய வேண்டும் என்று யோசனை கேட்டான் கர்னல் பிரேஸர். அதுவரை அடிமைகளாக

இருந்த தங்களுக்கு, சுதந்திர அந்தஸ்து கிடைத்துள்ளது என்று கருதி, மகிழ்ச்சியடைந்த குடகர் தலைவர்களும் மற்றவர்களும், குடகு கம்பெனியின் ஆட்சியிலேயே இருக்க வேண்டும் என்று ஏகமனதாக ஆமோதித்தனர். மக்களுடைய விருப்பப்படி குடகு நாடு பிரிட்டிஷ் ஆட்சியில் இணைக்கப் பெற்றது என்று பிரகடனம் செய்தான் கர்னல் பிரேஸர். குடகு, பிரிட்டிஷ் ஆட்சியில் வந்த வரலாறு இதுதான்.

காசிக்கு நாடு கடத்திய சிக்கவீர ராஜேந்திராவும், அவனுடைய மகள் கௌரம்மாவும், பிரிட்டிஷ் அரசாங்க அனுமதி பெற்று, இங்கிலாந்து சென்றனர். அங்கு விக்டோரியா மகாராணியைப் பேட்டிக் கண்டனர். விக்டோரியா மகாராணி, கௌரம்மாவைக் கிறிஸ்துவ மதத்தில் சேர்த்து; கௌரம்மா விக்டோரியா என்ற பெயர் கொடுத்து, அவளுக்குப் படிப்புச் சொல்லித்தர ஆங்கில ஆசிரியை ஒருத்தியை அமர்த்தினாள். கௌரம்மாவைத் தனது வளர்ப்புப் புதல்வியாகவே கருதினாள்.

விக்டோரியா மகாராணியின் ஆதரவு கிடைக்கும் என்ற தைரியத்தில், ஈஸ்ட் இந்தியாக் கம்பெனி குடகு நாட்டைத் தனக்கே திருப்பித்தர வேண்டும் என்று கோரி, சிக்கவீர ராஜேந்திரா விக்டோரியா மகாராணியிடம் மனு ஒன்றைக் கொடுத்தார். அதனைப் பிரிட்டிஷ் அரசாங்கம் நிராகரித்தது.

கௌரம்மா, பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி ஒருவரை மணந்தாள். ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பின்னர் அவள் இறந்தாள். சிறிது காலத்தில் அவள் கணவனும் இறந்தார். சிக்க வீர ராஜேந்திராவும் இறந்தார். கௌரம்மாவின் புதல்வன் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்து, ஆஸ்திரேலியாவில் ஒரு விபத்தில் மாண்டான்.

பிரிட்டிஷார் ஆட்சியில், குடகு, அரசியல்துறையில் பிரிட்டிஷ் இந்தியாவைப் போல முன்னேறவில்லை.

பிரிட்டிஷார் குடகர்களுக்குச் சில சலுகைகள் அளித்தனர். குறிப்பாக, குடகர்கள் அனுமதி பெறாமலேயே கத்தியும் துப்பாக்கியும் வைத்துக் கொள்ளலாம். கத்தியும் துப்பாக்கியும் வைத்திருந்தும் கூட, குடகர்களிடையே கொலை, கொள்ளை முதலியன இல்லை என்றே கூறலாம். குடகர்களின் குணத்துக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

குடகு நாட்டில் அடிமை முறை இருந்தது. அதனை ஒழித்த பெருமை பிரிட்டிஷாரையே சாரும். பிரிட்டிஷார் குடகு நாட்டைத் தங்களுடன் இணைத்துக் கொண்ட பொழுது, அந் நாட்டில் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை சுமார் ஆறாயிரம். அடிமைகளில் இருவகை, ஒன்று 'பூமி ஜம்மடா ஆளு'; மற்றொன்று 'ஒக்கலு ஜம்மடா ஆளு.' ஆளு என்றால் பணியாள். பூமி ஜம்மடா ஆளுவைப்

பூமியோடுதான் விற்கலாம்; தனியே விற்க முடியாது. ஒக்கலு ஜம்மடா ஆளுவை இஷ்டப்படி விற்கலாம். அடமானம் வைக்கலாம். அந்த அடிமைகள், எஜமானன் எங்கு சென்றாலும், அங்குக் கூடவே செல்லவேண்டும். எஜமானர்கள், அந்த அடிமைகளைத் தங்களுடைய முன்னோர்களின் சொத்துக்களைப் போலவே கருதினர்.

அடிமைகளில் பெரும்பாலோர் ஹரிஜனங்கள், ஆதிவாசிகளான ஏரவர், அடியர், குடியர், குருபர் முதலியோரும் அடிமைகளாக இருந்தனர்.

குடகர்கள், தங்கள் அடிமைகளைக் கொடுமைப் படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்களுக்குத் தங்கள் வீட்டுக்கு அருகிலேயே வீடு கட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அனைத்தையும் வழங்கி, அவர்கள் குடும்பங்களில் நேரும் சுகதுக்கம் ஆகிய எல்லாக் காரியங்களையும் தாங்களே தங்கள் செலவில் செய்து, அவர்களைத் தங்கள் குடும்பத்தாரைப் போல அன்புடன் நடத்தினர். அடிமை ஓடி விட்டால் விவசாயம் நடக்காது. ஒரு விவசாயி எத்தனை அடிமைகளை வைத்திருக்கிறான் என்பதைப் பொறுத்துத்தான் அவனுக்குச் சமுதாயத்தில் மதிப்பு.

அடிமை முறையை ஒழிக்க விரும்பிய பிரிட்டிஷார், முதலாவதாக ராஜாக்களின் நிலங்களில் வேலை செய்த சுமார் ஆயிரத்து ஐந்நூறு அடிமைகளை விடுதலை செய்தனர். அதனால் நாடு முழுதும் அடிமை விடுதலை இயக்கம் பரவிற்று.

காப்பித் தோட்டங்கள் தோன்றியதும், பண்ணைகளில் வேலை செய்த அடிமைகள் பலர், அதனை விட்டு விட்டுக் காப்பித் தோட்ட வேலைக்குச் சென்றனர். அடிமை முறை விரைவில் ஒழிந்ததற்குக் காரணம் காப்பித் தோட்டங்கள்தாம்.

குடகு பிரிட்டிஷ் ஆட்சிக்கு வருமுன், குடகு மக்கள் தாங்கள் செலுத்தும் வரியைத் தானியங்களாகவே செலுத்தி வந்தனர். வரியைத் தானியங்களாகச் செலுத்தாமல், பணமாகச் செலுத்த வேண்டும் என்று பிரிட்டிஷார் உத்தரவிட்டனர்.

ஒரு காலத்தில் நூற்றுக்கணக்கான ஆங்கிலேயர்கள் குடகில் வசித்தனர். குடகின் பொருளாதார முன்னேற்றத்துக்கு மூலாதாரமான காப்பித் தோட்டங்களை உண்டாக்கியவர்கள் ஆங்கிலேயர்களே.

இந்தியாவின் ஏனைய பகுதிகளுடன் சேர்ந்தால்தான் தங்களுக்கு அரசியல் முன்னேற்றம் உண்டு என்று குடகர்கள் கருதினர். 1918 ஆம் ஆண்டு மடிக்கேரியில் நடைபெற்ற அரசியல் மகாநாட்டில்,

குடகை ஆளும் பிரிட்டிஷ் சீப் கமிஷனருடைய ஆட்சி சர்வாதிகார ஆட்சியாக இருப்பதால், குடகை சென்னை மாகாணத்துடன் இணைக்கும்படி கவர்னர் ஜெனரலைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். பிரிட்டிஷார் அதற்கு இணங்கவில்லை. ஆனால் வரையறுக்கப்பட்ட அதிகாரங் களுடைய ஓர் ஆலோசனை சபையை ஏற்படுத்தினர்.

1928 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசியல் மகா நாட்டில் பண்டியாண்ட பெள்ளியப்பா, குடகைக் கர்நாடக மாகாணத்துடன் இணைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால் அதே பண்டியாண்ட பெள்ளியப்பா 1931 ஆம் ஆண்டுமுதல் இணைப்பு கூடாது·என்ற கட்சியின் முக்கிய தலைவருள் ஒருவர் ஆனார்.

1940 ஆம் ஆண்டில் காந்தியடிகள் தனிப்பட்ட நபர் சத்தியாக்கிரகம் தொடங்கியபோது, குடகிலிருந்து சிறை சென்றோர் முப்பது மூன்று பேர்.

1946 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் நிர்ணயசபைக்குக் குடகிலிருந்து செப்புடீர பூனச்சாவை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தனர்.

கெட்ரோலிரா செங்கப்பா என்ற குடகர், குடகு நாட்டின் சீப் கமிஷனராக நியமிக்கப் பெற்றார்.

1834, ஏப்ரல் மாதம் நாலாம் தேதி பிற்பகல் நான்கு மணிக்கு ஏற்றிய பிரிட்டிஷ் கொடியை, 1947 ஆகஸ்டு பதினான்காம் தேதி இரவு பன்னிரண்டு மணிக்கு இறக்கினர். அந்நியர் ஆட்சி முடிந்தது. குடகர்கள் தங்கள் வாழ்நாளிலேயே அப்பொழுதுதான் உண்மையில் சுதந்திர மக்கள் ஆயினர்.

1947 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரையில் குடகு அரசியல் அமைப்பில் எவ்வித மாறுதலும் இல்லை. 1951 ஆம் ஆண்டில், குடகு, ஆஜ்மீர், போபால், டில்லி, ஹிமாசல பிரதேஷ், விந்திய பிரதேஷ் ஆகிய ஆறு ‘சி’ ஸ்டேட்டுகளிலும் ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேறியது.

குடகில் இரண்டு மாத காலம் தேர்தல் பிரசாரம் நடைபெற்றது. இந்தியாவின் பிரதம தேர்தல் கமிஷனர் சுகுமார் சென், தேர்தல் ஏற்பாடுகளை நேரில் பார்வையிட்டார். நூறு வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தினர். வாக்காளர் பட்டியல் தயாராயிற்று. மொத்த வாக்காளர் எண்ணிக்கை 95,000. (1951 ஆம் ஆண்டில் ஜனத்தொகை

2 லட்சத்து 29 ஆயிரம் பேர். அவர்களில் சுமார் 50 ஆயிரம் பேர், வெளியிலிருந்து ஓர் ஆண்டில் சில மாதங்கள் மட்டும் தோட்ட வேலை செய்து விட்டுத் திரும்புபவர்கள்.)

காங்கிரஸ் கட்சியின் சார்பில், அபேட்சகர்களை கர்நாடக மாகாண காங்கிரஸ் கமிட்டி தேர்ந்தெடுத்தது. காங்கிரஸ் அபேட்சகர்களில், குடகை மைசூருடன் இணைக்க விரும்பினர் சிலர்; அதனை எதிர்த்தனர் சிலர். இவர்களுக்குள் பெரும் பிளவு ஏற்பட்டது. இணைப்பை எதிர்த்த அபேட்சகர்கள், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, தனியாகப் போட்டியிட்டனர். தேர்தல் முடிவு; இணைப்பை ஆதரித்தோர் பதினைந்து; எதிர்த்தோர் ஒன்பது. காங்கிரஸ் கட்சியினர் தேர்தலில் இணைப்புப் பிரச்சனையைக் கொண்டுவரவில்லை. இணைப்புப் பிரச்சனை வந்தால், மக்கள் வாக்கு எடுக்க முடியாதென்றும், சட்டசபையின் தீர்ப்பே முடிவானதென்றும் இந்திய அரசாங்கம் தெளிவாகக் கூறிவிட்டது.

“புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற சட்டசபையில் இணைப்புப் பிரச்சனை சம்பந்தமாக அபிப்பிராயம் கேட்டால், அது சம்பந்தமாக பொது மக்கள் வாக்கெடுப்பு வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வற்புறுத்தும், எதிர்பாராத விதமாக அது முடியாமல் போய்விட்டால் சட்டசபையைக் கலைத்துப் புதுத் தேர்தல் நடத்தும்படி செய்வோம். அதற்காக எங்கள் ஸ்தானங்களை ராஜிநாமாச் செய்யத் தயாராக இருக்கிறோம்” என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கை கூறியது.

1952 ஆம் ஆண்டில் குடகு நாட்டில் முதலாவதும் கடைசியானதுமான பொதுமக்கள் மந்திரி சபை ஏற்பட்டது. செப்புடீர பூனச்சா முதன் மந்திரி; கித்தூர் மல்லப்பா சட்ட மந்திரி; இரண்டே மந்திரிகள். ஆனால் இருவரும் நாட்டின் முன்னேற்றத்துக்கு அயராது உழைத்தனர். நாடு அதிசயிக்கத் தக்கவாறு முன்னேறியது. எத்தனை பள்ளிகள், எத்தனை சாலைகள், எத்தனை பாலங்கள்! நாடு சிறிது. மந்திரிகளே நேரில் சென்று கவனித்தனர். லஞ்சம் புகாத இடம் குடகு; எனவே பொது நலனுக்குச் செலவு செய்த பணத்தில் விரயமே இல்லை என்று கூறினர். குடகு நாட்டில் கருத்து வேறுபாடு இல்லாத விஷயங்களில் ஒன்று, மந்திரி சபை ஆற்றிய அருந்தொண்டு.

குடகு மைசூருடன் இணைய வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடத்திலிருந்து வற்புறுத்தினர். இணைப்பு எதிர்க்கட்சித் தலைவர் பண்டியாண்ட பெள்ளியப்பா, எந்தக் காரணத்தாலோ மீண்டும் காங்கிரஸில் சேர்ந்தார். எதிர்ப்புக் கட்சியில் தலைவர் இல்லை. ஆளும் கட்சியினரை எப்படியாவது ஒழித்தால் போதும் என்ற எண்ணத்தில் இணைப்பை எதிர்த்த எட்டு அங்கத்தினர்

களும், இணைப்பு வேண்டும் என்று வாக்களித்தனர். மொத்தம் 24 அங்கத்தினர்களும் ஏகமனதாகத் தீர்மானித்ததால், குடகை மைசூருடன் இணைத்தது இந்திய அரசாங்கம். பல நூற்றாண்டு களாகத் தனித் தன்மையோடு வாழ்ந்து வந்த குடகு, இப்பொழுது மைசூர் ராஜ்யத்திலுள்ள பத்தொன்பது மாவட்டங்களில் ஒன்று.

இணைப்பினால் நன்மையா தீமையா என்று பலரைக் கேட்டேன். இணைப்பினால் குடகுக்குத் தீமைதான் அதிகம் என்பது பெரும்பாலோர் கருத்து.

"குடகு இணைப்பினால் ஒரே ஒரு நன்மை உண்டு. படித்த குடகர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டு. குடகு தனி நாடாக இருந்தால், ஒரு கமிஷனர், ஒரு போலீஸ் அதிகாரி, ஒரு காட்டிலாகா அதிகாரிதான்-ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர்தான் இருக்கலாம். இப்பொழுது குடகர்கள் மைசூர் ராஜ்ய முழுவதிலும், பல்வேறு பதவிகளிலும் பலர் இருக்கிறார்கள். என்றாலும் இணைப்பினால் ஏற்பட்ட நன்மையைக் காட்டிலும் தீமைதான் அதிகம்" என்றார் ஓர் ஓய்வுபெற்ற பெரிய நிர்வாக அதிகாரி.

"1956 ஆம் ஆண்டில், டில்லியில் நேருவிடம் 'மைசூர் என்ற பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் குடகு என்ற கடைந்த வெண்ணையைப் போடுகிறீர்கள்' என்றேன். 'எல்லாம் முடிந்து விட்டது; சட்டசபை ஏகமனதாகத் தீர்மானித்து விட்டது' என்றார் நேரு. 'ஆனால் மக்கள் தீர்மானிக்க வில்லை' என்றேன் நான்" என்று கூறினார் ஜெனரல் கரியப்பா.

இணைப்பினால் ஏற்பட்ட பெரும் அபாயம் அணைக்கட்டு! தங்கள் பகுதியில் அணைக்கட்டுகள் வேண்டும் என்று மக்கள் விரும்பி ஆவலுடன் கேட்பது வழக்கம். ஆனால் அணைக்கட்டு வேண்டாம், அது தங்கள் நாட்டைப் பாழாக்கிவிடும் என்று குடகர்கள் அஞ்சுகின்றனர். அதில் எவ்வளவோ உண்மை இருக்கிறது.

இணைப்புக்குப்பின், மைசூருக்கும் குடகுக்கும் இருந்துவரும் பெரும் தகராறு அணைக்கட்டுத்தான். குடகில், காவேரியைத் தடுத்து, பெரிய அணைகட்ட வேண்டும் என்று மைசூர்க்காரர்கள் துடிக்கிறார்கள். அணைகட்டுவது குடகின் நன்மைக்கு அன்று; மைசூரின் நன்மைக்கு. குடகில் பெரிய அணைகட்டினால், குடகின் ஒரு பகுதி-சுமார் பத்தொன்பது கிராமங்கள்-தண்ணீரில் மூழ்கிவிடும். 'காவேரித் தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால் குடகு நாட்டைப் பாழ்படுத்தாதீர்கள்' என்பது குடகு மக்களின் நியாயமான வாதம். அணைக்கட்டுத் தகராறு சம்பந்தமாக மத்திய அரசாங்க மந்திரி டாக்டர் கே.எல். ராவ் குடகுக்கு வந்திருந்தார். அப்பொழுது குடகில் இருந்தேன். அணைக்கட்டுப் பற்றித் தெரிந்துகொள்ள

விரும்பினேன். "மஞ்சுநாதய்யாவைப் பார்த்தால் விவரமாகச் சொல்லுவார்" என்று எல்லோரும் ஒருமுகமாகச் சொன்னார்கள்.

சுண்டிக்கோப்பா என்ற ஊரிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள, குண்டுக்குட்டி மஞ்சையா மஞ்சுநாதய்யா வீட்டுக்குச் சென்றேன்; என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன். மஞ்சுநாதய்யா என்னை வரவேற்றார். அவருக்கு அப்பொழுது வயது ஐம்பத்தொன்பது. மெலிந்த உடல், மாநிறம். மஞ்சுநாதய்யாவின் மூதாதையர் தென் கன்னடத்திலிருந்து வந்து குடகில் குடியேறி நாலைந்து தலைமுறைகளாயின. மஞ்சுநாதய்யா ஹாவலரி பிராமணர். அவர் வீட்டின் முகப்பை ராஜாஜியின் அழகிய பெரிய வர்ணப்படம் அலங்கரித்தது. சுதந்திரக் கட்சியின் குடகு நாட்டுக் கிளையின் தலைவர் மஞ்சுநாதய்யா.

மஞ்சுநாதய்யாவின் வீடு, ஒரு பெரிய பண்ணைக்காரரின் வீடு. ஒரு புறம் மாடுகள்; ஒரு புறம் டிராக்டர்கள்; இரண்டு மூன்று கார்கள். விருந்தினருக்கென்றே வசதியான தனி வீடு.

"காந்திஜி குடகுக்கு வந்திருந்தபோது அவருடன் பிரயாணம் செய்தேன். காந்திஜி ஓர் இரவு எனது வீட்டில் தங்கும் பாக்கியம் கிடைத்தது. இந்த இடத்தில் தான் அவர் தங்கினார்" என்று கூறி, மேல்மாடியிலுள்ள ஓர் அறையைக் காட்டினார் மஞ்சுநாதய்யா.

அணையைப் பற்றி யாராவது கேட்டுவிட்டால் போதும்; மஞ்சுநாதய்யாவுக்குச் சாப்பாடுகூட வேண்டியதில்லை. உற்சாகமாக ஆனால் அமைதியாகக் காரணங்கள் கூறி விளக்குவார். அணைக்கட்டு கட்டுவதற்கு அணை போடுவதைப் புனிதமான சுதந்திரப் போராட்டமாகக் கருதினார்.

"குடகில் நான்கு ஆண்டுகள் மந்திரி சபை இருந்தது. அப்போதிருந்த சட்டசபையில் நான் ஓர் அங்கத்தினன். குடகில் பற்றாக்குறைகளில் ஒன்று மின்சாரம். அருகிலுள்ள மைசூர் ராஜ்யம் உதவி செய்ய மறுத்துவிட்டது. நம் நாட்டிலேயே ஜீவ நதியை வைத்துக்கொண்டு மின்சாரத்துக்கு அலைவானேன் என்று கருதினோம். ஹாரங்கி என்னும் இடத்தில் எண்பது அடி உயரத்தில் ஓர் அணை கட்டினால் நாட்டுக்குப் போதிய மின்சாரம் கிடைக்கும்; குடகிலேயே ஆறாயிரம் ஏகராவுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். அதற்கு சர்வே நடைபெற்றது. இந்திய அரசாங்க நிபுணர்களும் திட்டத்தைப் பரிசோதித்துச் சம்மதம் அளித்தனர். ஆனால் மைசூர்அரசாங்கம் குறுக்கே நின்றது. ஹாரங்கியில் உயரமான அணை கட்டினால், கிருஷ்ணராஜ சாகருக்கு வரும் தண்ணீர் குறைந்து விடும் என்று மைசூர் அரசாங்கம் கூறியது. அணைக்கட்டுக்குக் கோடிக் கணக்கான

ரூபாய் செலவாகும் என்று தெரிந்தது. கிடைக்கும் நன்மைகளைப் பார்க்கும்போது, அவ்வளவு பெரும் தொகை செலவு செய்வது விரும்பத்தக்கதன்று என்று கருதி குடகு மந்திரிசபை திட்டத்தைக் கைவிட்டது.

"இப்பொழுது மைசூர் அரசாங்கம் ஹரதூர் என்னும் இடத்தில் (இதனை ஹாரங்கி என்று மைசூர்க்காரர்கள் தவறாகக் கூறுகிறார்கள்) 192 அடி உயரத்தில் அணைகட்ட வேண்டும் என்று 1960 ஆம் ஆண்டு முதல் முயன்று வருகின்றனர். 80 அடி அணை கட்டினால் தங்களுக்குத் தீங்கு நேரும் என்று கூறியவர்கள், இப்பொழுது 192 அடி உயரமுள்ள அணை கட்ட வேண்டும் என்கிறார்கள். அதோடு, கம்படகடா என்ற இடத்தில் மற்றோர் அணை கட்டி, அங்கிருந்து 24 மைல் தூரம் வாய்க்கால்கள் வெட்டித் தண்ணீரைக் கொண்டு போக வேண்டும் என்கிறார்கள். அதற்குச் செலவு மொத்தம் பதினான்கு கோடி ரூபாய் ஆகும்.

"பழைய ஹாரங்கி (இப்போது இண்டிமடா என்று அழைக்கின்றனர்)யில் சிறு அணை கட்டினால், அங்குள்ள சிறு மூங்கில் காடுகள் மட்டும்தான் தண்ணீரில் மூழ்கும். ஹரதூரில் அணை கட்டினால் என்ன ஆகும்? சுமார் 2,000 ஏகரா காப்பித்தோட்டம், 2,250 ஏகரா நன்செய் நிலம், 2,000 ஏகரா காடு ஆகியவை தண்ணீரில் மூழ்கும். காப்பித் தோட்டம் ஏகரா விலை ரூபாய் 7,000. நன்செய் நிலம் ஏகரா விலை ரூபாய் 2,500. காட்டுச் செல்வமும் மதிப்புள்ளது. இது தவிர பத்தொன்பது கிராமங்கள், இரண்டு நகரங்கள், ஒரு வீரசைவ மடம், இரண்டு புதிய பெரிய பாலங்கள், பல மைல் நீளமுள்ள சாலைகள் ஆகியவை நீரில் மூழ்கும். நீர்த்தேக்கம் காப்பிப் பயிருக்குக் கேடு செய்யும். நீர்த்தேக்கம் காரணமாகச் சுற்றிலும் உள்ள சுமார் 3,000 ஏகரா காப்பித் தோட்டங்கள் பாழாகும். 15,000 தோட்டத் தொழிலாளர் வேலை இழப்பர். இவ்வளவும் எதற்காக? மைசூர் ராஜ்யத்தில் ஏற்கெனவே நல்ல விளைச்சல் உள்ள புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற. இவ்வாறு செய்தால் ஒரு லட்சத்து ஐயாயிரம் ஏகரா நிலத்துக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும் என்று மைசூர் மந்திரிகள் கூறுவதும் முற்றிலும் பொய். 25 ஆயிரம் ஏகரா நிலத்துக்குத்தான் நீர்ப்பாசனம் கிடைக்கும். ஒரு லட்சம் ஏகரா என்று கணக்குக் காட்டினால்தான், மத்திய அரசாங்கம் இத்திட்டத்தை அங்கீகரிக்கும்.

"1924 ஆம் ஆண்டில் மைசூர் அரசாங்கமும் சென்னை அரசாங்கமும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி காவேரித் தண்ணீரிலிருந்து, மைசூர் ராஜ்யத்தில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ஏகரா நிலத்துக்கு நீர்ப்பாசனம் செய்ய உரிமை உண்டு என்கின்றனர்

மைசூர்க்காரர்கள். இந்த ஒப்பந்தம் செய்துகொண்டபோது குடகு மைசூர் ராஜ்யத்தின் பகுதியன்று. ஏதோ துரதிர்ஷ்டவசமாக இம்மாதிரி இணைப்பு ஏற்பட்டுவிட்டது. மைசூர்- சென்னை ஒப்பந்தம் குடகைக் கட்டுப்படுத்தாது. அப்படியே மைசூர் ராஜ்யத்துக்கு உரிமை இருந்தாலும், குடகுக்கு வெளியில் மைசூர் எல்லையில்தான் அணைகட்டலாம்.

“காவேரி குடகில் உற்பத்தியானாலும், அதனை நீர்ப்பாசனத்துக்கு நாங்கள் மிகக் குறைவாகவே உபயோக்கிறோம். மைசூர்க்காரர்கள் தண்ணீரை எடுத்துக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் எங்கள் ஊரைப் பாழ்படுத்த வேண்டாம் என்றுதான் கூறுகிறோம்:

“காப்பித் தோட்டங்கள் கைமாறினால் அதைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. ஆனால் தோட்டங்கள் என் கண்ணெதிரே அழிவதை நான் சகித்துக் கொண்டிருக்க முடியாது. நான் இந்த மண்ணில் பிறந்த விவசாயி” என்றார் மஞ்சுநாதய்யா.

பகல் உணவு தயாராக இருந்தது. வானொலியில் செய்திகளைக் கேட்டுக்கொண்டே உணவருந்தினோம். மஞ்சுநாதய்யா வீட்டில் எப்பொழுதும் விருந்தினர்களைப் பார்க்கலாம். உணவுக்குப்பின் மீண்டும் உரையாடினோம்.

“ஹரதூர் அணைக்கட்டினால் என்னுடைய நிலம் சுமார் நாற்பது ஏகரா நீரில் மூழ்கும். ஆண்டவன் கிருபையால் எனக்கு நிலம் நிறைய உண்டு. நாற்பது ஏகரா நிலம் போய்விட்டால் அது என்னைப் பாதிக்காது. இருந்தாலும் எனக்கு இதில் சிறிது சுயநலம் இருப்பதால், இதற்காகச் சண்டை போடுவது நியாயமா என்ற போராட்டம் என் மனத்தில் ஏற்பட்டது. உடனே ராஜாஜி அவர்களுக்கு எழுதினேன். ராஜாஜி அவர்களைப் போல உடனுக்குடன் யார் பதில் எழுதுவார்கள்? ‘உனது காரியம் நியாயமானது; போராடு’ என்று எழுதி, ‘இதற்காக குடகு நாட்டுப் பாதுகாப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசியல் நோக்கம் கூடாது. குடகைப் பாதுகாப்பது ஒன்றுதான் நோக்கமாக இருக்க வேண்டும். எல்லா அரசியல் கட்சிகளில் உள்ளவர்களையும் அதில் சேர்க்க வேண்டும்’ என்றும் ராஜாஜி அவர்கள் யோசனை கூறினார்கள்.

“அதன்படியே ஜெனரல் கரியப்பா தலைமையில் குடகு நாட்டுப் பாதுகாப்புக் குழு அமைத்தோம். காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட், சுதந்திரா கட்சிகளைச் சேர்ந்தவர்கள், குடகிலுள்ள சட்டசபை அங்கத்தினர்கள், குடகின் மூன்று தாலுகாக்களில் உள்ள தாலுகா போர்டு தலைவர்கள், உப தலைவர்கள், பிரபல என்ஜினியர்கள்

ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரிகள் தோட்டச் சொந்தக்காரர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோர் அடங்கிய 69 அங்கத்தினர் கொண்ட குழுவை ஏற்படுத்தினோம். 1960 நவம்பர் 15 ஆம் தேதி. மடிக்கேரி டவுன் ஹாலில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. குடகில் அதுவரை அம்மாதிரி ஒற்றுமையுடன் ஒரு காரியமும் செய்ததில்லை'' என்றார் மஞ்சு நாதய்யா.

“கம்யூனிஸ்ட் தலைவர் பல்லசண்ட குட்டப்பா. அரசியல் காரணங்களுக்காக இணைப்பை ஆதரித்தாலும், அணைக் கட்டினால் குடகுக்குத் தீங்கு நேரும் என்று என்னிடம் கூறினார்'' என்றேன்.

“இந்த விஷயத்தில் குடகில் கருத்து வேற்றுமையே கிடையாது. கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றினோம்.

“முதலாவது தீர்மானம்: மைசூர் அரசாங்கம் குடகு நாட்டில் காவேரி, ஹேமாவதி முதலிய இடங்களில் பெரிய அணைகள் கட்டத் திட்டமிட்டிருப்பது குறித்து குடகு மக்கள் அதிர்ச்சியடைகிறார்கள். இம்மாதிரித் திட்டத்தால், குடகின் வளப்பமான நிலத்தில் மூன்றில் ஒரு பகுதி தண்ணீரில் மூழ்கும்; பயிர்கள் நாசமாகும்; சுற்றுப்புறங்கள் எல்லாம் வசிப்பதற்குத் தகுதியற்ற சதுப்பு நிலங்களாகிவிடும். குடகின் போக்குவரத்து, குடகின் வாழ்வு, குடகின் பெயரே அடியோடு மூழ்கிவிடும். போதிய பொருளாதார வசதி இல்லாத மைசூர் அரசாங்கம், தேவையில்லாத தீங்கிழைக்கும் திட்டங்களில் பெரும் தொகை செலவிடுவது முற்றிலும் தேவையில்லாதது; நாட்டின் நலனுக்குப் பாதகமானது. எனவே இத் திட்டங்களை உடனே கைவிட்டு, குடகைக் காப்பாற்றுமாறு இம் மகாநாட்டினர் பணிவுடன் வேண்டுகின்றனர்.

“இரண்டாவது தீர்மானம்: குஷால்நகர் மக்கள் நிலையைக் கண்டு இம் மகாநாடு அனுதாபம் கொள்கிறது. ஹாரங்கியில் ஏற்கெனவே குடகு மந்திரிசபை திட்டமிட்டபடி, அதிக நிலங்கள் தண்ணீரில் மூழ்காத வகையில், சிறிய அணை கட்டி நீர்ப்பாசன வசதி செய்யும்படி மைசூர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

“இத்தீர்மானங்களால், அணைக்கட்டுகளுக்கு நாங்கள் விரோதமாக இல்லை என்பது தெரியும். பெரிய அணைக்கட்டு வேண்டாம், அது முட்டாள் தனம் என்று தான் கூறுகிறோம்.

“எல்மர் டி.பீட்டர்சன் என்ற அமெரிக்கர் ‘பெரிய அணை முட்டாள்தனம்’ என்ற புத்தகம் எழுதியுள்ளார். நண்பர்கள் மூலம் அதனை வரவழைத்துப் படித்தேன்'' என்றார் மஞ்சுநாதய்யா.

பெரிய அணைகட்டுவதுபற்றியஶ்ரீ பீட்டர்சன் கருத்தை,அவரது புத்தகத்திலிருந்து எடுத்து, 'மல்நாடு வர்த்தா' என்ற பத்திரிகையில் ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்தார்கள். அதன் தமிழாக்கம்:

1. பெரிய அணைத் திட்டங்கள், ஒன்றாகப் பின்னியுள்ள பெரிய கிராமங்களை அடியோடு அழித்துவிடுகின்றன. ஊர்களை அழிப்பது அபகீர்த்தியை உண்டாக்கும்.

2. நல்ல விளைநிலங்களைப் பாழ்படுத்துவது தேசத்துரோகம்.

3. ஜனத்தொகைப் பெருக்கத்தினால் ஓர் ஏகரா விளைநிலத்தைக் கூட நாம் இழக்க முடியாது.

4. தண்ணீர்த் தேக்கத்தால் நல்ல விளைநிலங்களுக்குப் பெரும் கெடுதல்கள் நேரிடுகின்றன.

5. பெரும் திட்டங்களுக்கான செலவின் மதிப்பு ஆரம்பத்தில் சிறு தொகையாகத் தோன்றும்; கடைசியில் அக்கிரமமான பெரும்தொகையாக ஆகிவிடும்.

6. பெரும் அணைத் திட்டம் ஜனநாயகத்துக்கு முரண். சம்பந்தப்பட்ட மக்களின் விருப்பத்துக்கு மாறாக சர்வாதிகார முறையில் செயல்படுவது.

7. பெரிய அணைகள், அணு ஆயுதயுகத்தில் அணுகுண்டு போடுவதற்கு ஏற்ற இலக்குகளாக ஆகிவிடும். அதனுடன், அணை உடைவதால் ஏற்படும் வெள்ளச் சேதம் கட்டுக் கடங்காது.

8. மின்சார உற்பத்திக்கு அணைக்கட்டுகள் தேவை இல்லை. நீர்த் தேக்க மின்சாரத்தைவிட, அணு உதவி சமீபத்திலிருப்பதால் ஸ்டீம் ஜெனரேட்டர் மூலம் கிடைக்கும் மின்சாரம் மலிவு.

9. பெரிய அணைகள் பெரும் பணத்தைச் சாப்பிடும். தற்கால அணைகளில், ஓர் அணையின் வயது ஐம்பது ஆண்டுகள் தான்.

10. பெரிய அணை கட்டுவதால், லஞ்சம், ஊழல், அரசியல் முதலியவை நுழைகின்றன.

இன்னும் விஞ்ஞான ரீதியான பல காரணங்களையும் விளக்கியிருந்தார் பீட்டர்சன்.

"இன்று மாலை ஒரு நண்பரைப் பார்க்கச் செல்கிறேன். நீங்களும் என்னுடன் வாருங்கள். நாளைய தினம் உங்களை ஹாரங்கி, ஹரதூர் ஆகிய அணைகட்டும் இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுகிறேன்" என்றார் மஞ்சுநாதய்யா.

சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டதும், மஞ்சுநாதய்யாவுடன் பிரயாணமானேன். சுமார் பத்து மைல் தூரத்தில் உள்ள ஒரு குடகர் வீட்டில் கார் நின்றது. அறுபது வயதான ஒருவர் எங்களை வரவேற்றார்.

"இவர்தான் சி.பி.சுப்பையா" என்று அறிமுகப்படுத்தினார் மஞ்சுநாதய்யா.

செப்புடீரா சுப்பையாவுடன் ஆங்கிலத்தில் பேச முயன்றேன். அதற்குள்ளாக அவர் நல்ல தமிழில் அழகாகப் பேசினார்.

"சென்னை அரசாங்கத்தில் பொதுப் பணித் துறையில் (ஞ.று.னு) உதவி என்ஜினீயராகப் பல ஆண்டுகள் இருந்திருக்கிறேன். தமிழ் நாட்டில் உள்ள பல பாலங்கள் நான் கட்டியவை. பின்னர் மத்திய அரசாங்கத்திலும், ரூர்கேலாவிலும் வேலை செய்தேன். இடையில் அமெரிக்கா சென்று வந்தேன். இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறேன்" என்றார் சி.பி. சுப்பையா.

நல்ல பலகாரவகைகளையும், சுவைமிக்க இளநீரையும் கொண்டுவந்தனர் சுப்பையாவின் இரு பெண்கள்.

"எனக்கு குழந்தைகள் ஒன்பது பேர். அவர்களிலே ஏழு பேர் பட்டதாரிகள்" என்று பெருமையுடன் கூறினார் சுப்பையா.

மஞ்சுநாதய்யா அனுபவமிக்க விவசாயி. பலர் அவரிடம் விவசாயம் சம்பந்தமாக யோசனை கேட்க வருவார்கள். முகம் கோணாமல் உதவி செய்யும் பண்புள்ளவர் மஞ்சுநாதய்யா. சுப்பையாவின் காப்பித் தோட்டத்தில் சில செடிகள் நோயுற்றன. அதனைக் கண்டு பரிகாரம் கூறவே மஞ்சுநாதய்யா அங்குச் சென்றார். இருவரும் தோட்டம் பார்க்கச் சென்றனர். டில்லியில் பயின்ற சுப்பையாவின் புதல்வியுடன் டில்லி வாழ்க்கையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

இரவு ஏழு மணிக்கு என்னைப் பெரம்புகொல்லித் தோட்டத்தில் கொண்டு போய் விட்டார் மஞ்சுநாதய்யா. பெரம்பு கொல்லித் தோட்ட நிர்வாகி சுப்பிரமணியன் அவர்களுக்கு, மஞ்சுநாதய்யா போன்ற பெரிய மனிதர் ஒருவர் தமது தோட்டத்துக்கு வந்ததில் மகிழ்ச்சி. அதுவரை அவர் அங்கு வந்ததில்லை. மிக்க அன்புடன் உபசரித்தார் சுப்பிரமணியன்.

"நாளை நீங்கள் இருவரும் எனது வீட்டுக்குப் பகல் உணவுக்கு வந்துவிடுங்கள்" என்றார் மஞ்சுநாதய்யா. அழைப்பை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டோம்.

"சுத்தச் சைவ உணவு" என்றார் மஞ்சுநாதய்யா. எல்லோரும் சிரித்தோம். குடகில் சுத்தச் சைவ உணவு மிக அரிது.

மறுநாள் காலை அன்பர் சுப்பிரமணியனுடன் மடிக்கேரி சென்றேன். அங்கே 'சக்தி' ஆசிரியர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணனைச் சந்தித்தேன்.

"மத்திய அரசாங்க மந்திரி டாக்டர் கே.எல்.ராவ் இரண்டு தினங்களுக்குமுன் வந்திருந்தார். அணைக்கட்டு இடங்களுக்குச் சென்றார். அங்கே 'செயல் குழு' தலைவர் லிங்கையாவும் வந்திருந்தார். (அருகில் உள்ள மைசூரைச் சேர்ந்தவர்கள் லிங்கையா என்ற குடகரைத் தலைவராக வைத்து அணைக்கட்டை விரைவில் கட்டச் செய்ய 'செயல்குழு' என்ற ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்) டாக்டர் ராவ் அரசியல்வாதி அல்லர். விஷயம் அறிந்த நிபுணர். டாக்டர் ராவ்,. லிங்கையாவைப் பார்த்து 'உங்களுக்கு வேண்டியது தண்ணீர்தானே , அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். அது மட்டும் போதுமா? இல்லை 192 அடி உயரமுள்ள அணையும் கட்ட வேண்டுமா?' என்று கேட்டார். அதற்கு லிங்கையா உடனே 'அணைக்கட்டு வேண்டும்' என்றார்" என்று கூறினார் கோபாலகிருஷ்ணன்.

பகல் ஒருமணிக்கு மஞ்சுநாதய்யா வீட்டுக்குச் சென்றோம். உணவுக்குப்பின் சுப்பிரமணியன் திரும்பிவிட்டார்.

மாலை நான்கு மணிக்கு மஞ்சுநாதய்யா சுமார் பதினைந்து மைல் தூரத்திலுள்ள ஹாரங்கி-தற்பொழுது இண்டிமடா-அணைகட்டும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். எங்கும் ஒரே மூங்கில் காடு.

பின்னர் ஐந்தரை மணிக்கு வீடு திரும்பியதும், நான்கு மைல் தூரத்திலுள்ள ஹரதூர் அணை கட்டும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். அந்த இடத்தைப் பார்த்ததும், அணை கட்டினால் உண்டாகும் தீங்குகளை ஓரளவு ஊகிக்க முடிந்தது.

கடைசியாக, குடகுக்கு அதிக கேடு நேராதபடி ஹாரங்கியில்-இண்டிமடா-சிறிய அணை கட்டுவது என்று மத்திய அரசாங்கத்தார் முடிவு செய்துள்ளார்கள்.

குடகர்கள் விரும்பாதவை இரண்டு. ஒன்று மது விலக்கு; மற்றொன்று மைசூருடன் இணைப்பு.

★ ★ ★

தென் குடகு

தென் குடகின் கடைசியில் உள்ள பெரிய ஊர் குட்டா. அதனைத் தாண்டிச் செல்ல வேண்டும் பெய்த் தோட்டத்துக்கு. கேரளாவின் எல்லையில் உள்ளது அத்தோட்டம். பெரம்புகொல்லியிலிருந்து சுமார் நாற்பது மைல் தூரம்.

பெரம்புகொல்லியிலிருந்து மாலை மூன்று மணிக்குக் குட்டாவுக்குப் புறப்பட்டேன். ஐந்து மைல் தூரத்தில் உள்ள சித்தாபூர் சேர்ந்தேன். சித்தாபூரை சித்தாபுரம் என்று குடகர்கள் அழைக்கின்றனர். சித்தாபூர் சேருமுன்னே காவேரியைக் கடக்க வேண்டும். காட்டாறு போல ஓடுகிறாள் காவேரி. மழை காலத்தில் வெள்ளம் வீறிட்டுக் கரைபுரண்டு ஓடுமாம்.

சித்தாபூர் சிறிய ஊர்; பொல்லிபேட்டா பகுதியைச் சேர்ந்தது. பொல்லிபேட்டாதான் தமிழர்களின் கோட்டை. சித்தாபூரில் பெட்ரோல் விற்கும் இடம், திரைப்படக் காட்சிச் சாலை முதலியவை இருந்தன.

சித்தாபூரில் 'கன்னட தோட்ட தொழிலாளி சங்கம்' என்று எழுதியுள்ள பலகையைப் பார்த்தேன். கன்னட தோட்ட தொழிலாளி சங்கமாய் இருந்தாலும், பெயரைத் தமிழிலேயே, அழகாகவும் பிழையின்றியும் எழுதியிருந்தனர்.

சித்தாபூரிலிருந்து, விராஜ்பேட், பொல்லிபேட்டா, குஷால் நகர் ஆகிய பல இடங்களுக்குச் சாலைகள் செல்லுகின்றன. சித்தாபூரிலிருந்து பொல்லிபேட்டா சுமார் பத்து மைல். ஊருக்குள் நுழையும் வழியில், ஒரு கட்டிடத்தில், 'குடகு ஆரஞ்சு உற்பத்தியாளர் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட்' என்று தமிழில் எழுதப்பெற்ற பலகை ஒன்றைப் பார்த்தேன். தமிழ்நாட்டில் இல்லாவிட்டாலும், குடகு நாட்டிலாவது தமிழை அழகாகவும், பிழையில்லாமலும் எழுதியிருக்கிறார்களே என்று மகிழ்ந்தேன். ஆனால் அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. ஊருக்குள் சென்றபோது, 'முடி முறிக்கும் இடம்' என்று தமிழில் விகாரமாக எழுதியிருந்த

பலகையைப் பார்த்தேன். தமிழ் மொழியை மட்டுமல்லாமல், தமிழ் எழுத்தையும் முறித்தவர் ஒரு மலையாளி.

கன்சாலிடேடட் என்பது குடகில் உள்ள மிகப் பெரிய எஸ்டேட். சுமார் ஏழாயிரம் ஏகரா காப்பித் தோட்டங்களும், சுமார் மூவாயிரம் ஏகரா ஆரஞ்சுத் தோட்டங்களும் உண்டு. கன்சாலிடேடட் ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் பொல்லிபேட்டாவில் தான். தமிழர்களுடைய தோட்டங்கள் சில பொல்லிபேட்டாவில் இருக்கின்றன.

பொல்லிபேட்டாவிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள கோனிகோப்பல் என்ற ஊரை அடைந்தேன். வழி எனக்கு ஏற்கெனவே தெரியும். அதற்கு முதல் நாள் தான் ஒரு நண்பருடன் கோனிகோப்பல்வரை சென்று திரும்பினேன். அப்பொழுது வழியிலும், கோனிகோப்பிலும் இறும்பர்கள் பலரைப் பார்த்தேன். நல்ல தேகக் கட்டுடைய இறும்பர்கள், குடகில் உள்ள ஆதிவாசிகளில் ஒரு பிரிவினர்.

அன்று அவர்களுக்கு ஓர் உற்சவ நாளாம். எனவே நன்றாகக் குடித்துவிட்டு, இடுப்பிலும் தலையிலும் செடி கொடிகளைக் கட்டிக்கொண்டு, ஆனந்தமாகப் பாட்டுப் பாடிக்கொண்டு சென்றனர். கோனிகோப்பல் கடைத் தெருவில், நாலைந்து இறும்பர்கள் ஒவ்வொரு கடை எதிரிலும் சென்று நடனமாடினர். கடைக்காரர் ஏதேனும் காசு கொடுத்தால் பெற்றுக் கொண்டனர். யாரையும் தொந்தரவு செய்யவில்லை; சண்டித்தனமும் இல்லை.

கோனிகோப்பலிலிருந்து பொன்னம்பேட்டை மூன்று மைல்; நல்ல சாலை. பொன்னம்பேட்டை வழியே சென்றபோது, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தையும், அவர்கள் நடத்தும் வைத்தியசாலைக் கட்டிடத்தையும் பார்த்தேன்.

கடைசி ஊர் குட்டா. அங்கிருந்து, மடிக்கேரி செல்லா மலேயே, சித்தாபூர் வழியாக நேரே மைசூருக்குச் செல்லலாம்; பஸ் வசதியும் இருந்தது. குடகு நாட்டில் ஒவ்வோர் ஊர்களிலும் காணப்படும் மலையாளி ‘சாயா’க் கடைகள் குட்டாவில் பல இருந்தன. இன்றியமையாத கூட்டுறவுச் சங்கமும் இருந்தது.

குட்டாவைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் பெய்த்தோட்டத்தை அடைந்தேன். சாலையிலிருந்து தோட்ட பங்களா சுமார் இரண்டு மைல் தூரம். ஐந்நூறு ஏகரா காப்பித் தோட்டமும், சுமார் நானூறு ஏகரா ஆரஞ்சுத் தோட்டமும் கொண்டது பெய்த் எஸ்டேட்.

குடகில் சில தோட்டங்களில்தான் மின்சார வசதி உண்டு. பெரும்பாலும் சொந்தமாக ஜெனரேட்டர் வைத்திருந்தனர். பெய்த் தோட்டத்திலுள்ள ஜெனரேட்டரைப் பழுது பார்க்க அனுப்பியிருந்ததால், அங்கு மின்சார வெளிச்சம் இல்லை.

"எங்கள் எஸ்டேட் சூப்பிரண்டெண்டு மாச்சையா ஊரில் இல்லை. ஒரு கல்யாணத்திற்காக மடிக்கேரி சென்றிருக்கிறார். ஆனால் அவர் வீட்டை அவசியம் பார்க்க வேண்டும். இங்கிருந்து அவர் வீடு அரை மைல் தூரம். வீட்டைத் திறந்து வைக்கும்படி வேலைக்காரனுக்குச் சொல்லி யனுப்பியிருக்கிறேன்" என்றார் அங்கிருந்த இளைஞர்.

மாச்சையா வேட்டையில் நாட்டமுடையவர், அவர் வீடு ஒரு மிருகப் பொருட்காட்சிச் சாலையாக விளங்கியது. எத்தனை புலிகள்! எத்தனை கரடிகள்! அவர் கொன்ற புலிகளின் தோலை உரித்து, பதப்படுத்தி, அதனுள்ளே துணி, நார், வைக்கோல், பஞ்சு போன்றவற்றை அடைத்து, உயிருள்ள மிருகங்களோ என்று நினைக்கும் படி வைத்திருந்தார். மேலேயிருந்து பாயும் நிலையில் இருந்தது ஒரு புலி! அவ்வாறு உயிருள்ள மிருகங்களைப் போலாக்கப் பெரும் செலவாகும் என்று அறிந்தேன்.

குடகு நாட்டின் நிலப்பரப்பு 1587 சதுர மைல். அதில் 517 சதுர மைல்-அதாவது மூன்றில் ஒரு பகுதி அரசாங்கக் காடுகள். குடகின் செல்வங்களில் முக்கியமானது காட்டுச் செல்வம். தேக்கு மரம் ஏராளம். உதாரணமாக 1958-59 ஆம் ஆண்டில் காட்டிலாகா வருமானம் 74 லட்ச ரூபாய்; செலவு பதினெட்டரை லட்சம் ரூபாய்.

"நாகர்ஹோலே இங்கிருந்து ஆறு மைல் தூரம். அங்கு ஒரு பங்களா இருக்கிறது. நான்கு பழகிய யானைகள் இருக்கின்றன. காலை ஆறுமணிக்கு அங்கு யானைமீது ஏறினால், இரண்டு அல்லது மூன்று மணிநேரம் யானைப்பாகன் காட்டுக்குள் சுற்றி வருவான். நான்கு யானைகளும் ஒன்றாகச் செல்லும். ஒவ்வொரு யானையின்மீது நான்கு பேர் உட்காரலாம். யானைச் சவாரிக்கு, ஒரு யானைக்குப் பத்து ரூபாய்தான். யானைப் பாகனுக்கு இரண்டு ரூபாய் இனாம் கொடுப்பது வழக்கம். காட்டுக்குள் சுற்றி வரும்பொழுது, யானைக் கூட்டங்களைப் பார்க்கலாம். மான், காட்டெருமை, சிறுத்தை, கரடி, புலி முதலியவற்றையும் பார்க்கலாம். ஆனால் அதற்கு அதிர்ஷ்டம் வேண்டும். அதிர்ஷ்டம் இல்லாதவர்கள் வெறும் காக்கை குருவிகளைப் பார்த்துவிட்டுத் திரும்புவார்கள். வெளியூர்களிலிருந்து பிரயாணிகள் ஏராளமாக வருவதால், நான்கு நாட்கள் முன்கூட்டியே யானைகளைப் பதிவு செய்யவேண்டும்.

யானைச் சவாரி செய்துவிட்டு வீடு திரும்பினால், இரண்டு நாட்களுக்கு இடுப்பு வலியும் முதுகு வலியும் நிரந்தரமாக இருக்கும்'' என்றார் பெய்த்தோட்டத்தி லிருந்த இளைஞர்.

நாகர்ஹோலே சென்றேன். காட்டில் நுழையும் இடத்தி லிருந்து பங்களா இரண்டு மைல் தூரம். ஒரு மைல் தூரம் சென்றதும், காட்டிலாகாச் சிப்பந்திகளின் வீடுகள் இருந்தன. வழியில், சாலையின் குறுக்கே இரும்புச் சங்கிலி மாட்டியிருந்தனர். காவற்காரர் அனுமதியின்மீதுதான் கார்கள் உள்ளே செல்ல முடியும். காவற்காரர் வீட்டிலிருந்து ஓர் அழகிய ஐந்து வயதுப் பெண் குழந்தை ஓடிவந்து, புன்முறுவலுடன் சங்கிலியைக் கீழே தளர்த்தினாள். அவளுக்கு நன்றி செலுத்திவிட்டுப் பங்களாவை அடைந்தேன்.

காட்டிலாகா அதிகாரி ஒருவர் அங்கிருந்தார். கவர்ச்சியான பங்களா. ஒரு நாள் தங்குவதற்கு வாடகை ஒன்றேகால் ரூபாய்தான். முன்கூட்டியே சொன்னால் உணவு தயாரித்துக் கொடுப்பார்கள்.

''யானைகள் எங்கே?'' என்று அதிகாரியைக் கேட்டேன்.

''நான்கு பெரிய யானைகளும், ஐந்து குட்டிகளும் இருக்கின்றன. அவை வேலை செய்யச் சென்றிருக்கின்றன'' என்றார் அதிகாரி.

''யானையைக் கட்டி தீனிபோட்ட மாதிரி'' என்று சொல்லுவார்கள் அல்லவா? ''யானைக்கு ஒரு நாள் தீனிச் செலவு எவ்வளவு?'' என்று கேட்டேன்.

''தினந்தோறும் ஒரு யானைக்குத் தீனிச் செலவு இருபது ரூபாய்'' என்றார் அதிகாரி.

''யானைப் பாகனுக்குத் தீனிச் செலவு எவ்வளவு?'' என்றேன்.

''ஒவ்வொரு யானைக்கும் ஒரு டிரைவர், ஒரு கிளீனர் உண்டு. டிரைவருக்குத் தினந்தோறும் இரண்டு ரூபாய் சம்பளம்; கிளீனருக்குத் தினந்தோறும் ஒன்றரை ரூபாய் சம்பளம்'' என்றார் அதிகாரி.

விராஜ்பேட்டை சீனிவாசச் செட்டியார் என்பவர் அங்கே உதவி ரேஞ்சராக வேலை செய்து வந்தார் என்று அறிந்தேன்.

நாகர்ஹோலேயிலிருந்து, குட்டாவை அடுத்த ஹௌண்டிமல் தோட்டத்துக்குச் சென்றேன். தோட்டச் சொந்தக்காரர்களில் ஒருவரான செக்கீர மண்டன்ன உத்தப்பா என்பவர் சென்னையில் கல்வி பயின்றவர். சென்னையில் உள்ள அவருடைய பள்ளித் தோழர் ஒருவர், அவரைப் பார்க்கும்படி விலாசம் கொடுத்திருந்தார்.

நான் சென்ற சமயம் உத்தப்பா ஊரில் இல்லை. அவருடைய மூத்த சகோதரர் செக்கீர மண்டன்ன பொன்னப்பாவைச் சந்தித்தேன்.

பொன்னப்பா பூனாவில் நான்கு ஆண்டுகள் விவசாயக் கல்லூரியில் பயின்றவர். "மராத்தியரைப் போலவே மராத்தி பேசுவேன்" என்றார் பொன்னப்பா.

பொன்னப்பா தம் தாயாரையும் மனைவி பொன்னம்மாவையும் அறிமுகப்படுத்தினார். பொன்னப்பாவின் வீடு, புது வீடு. பெரிய வீடாகக் கட்டாமல், மூன்று தனித் தனிச் சிறு வீடுகளாகக் கட்டியிருந்தார். இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருந்தன வீடுகள். தனிமையின் இனிமையைப் பருகுவதில் அவர்களுக்கு ஓர் ஆனந்தம். இந்தியாவில் சதுர மைலுக்குச் சராசரி 373 பேர் வசிக்கிறார்கள். குடகில் சதுர மைலுக்குச் சராசரி 203 பேர்தான். அவர்களிலும் சிலர்,- அவ்வப்போது கூலி வேலைக்காக வெளியிலிருந்து வருபவர்கள்.

குடகர்கள் வீடுகளுக்குச் சென்றால், உபசரித்தார்கள் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. பெரிய தட்டில் தின்பண்டங்களும், பழங்களும் கொண்டு வந்தனர். "இது எங்கள் தோட்டத்துப் பழம்" என்று பெருமையோடு கூறினார் பொன்னப்பா. ஒரு சீப்பு வாழைப் பழத்தை நன்றாகக் கட்டி, காரில் வைத்து விட்டார் பொன்னப்பாவின் தாயார்.

"அடுத்த முறை குடகு வரும்பொழுது, எங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கவேண்டும். விருந்தினர்களுக்காகவே தனியாக ஒரு வீடு கட்டியிருக்கிறோம்" என்றார் பொன்னப்பா.

குட்டாவிலிருந்து திரும்பும் வழியில், பொன்னம் பேட்டையில், அம்மா குடகர்களின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் நானம்மையாவைச் சந்தித்தேன். அவர் பழைய காலத்து வைத்தியர். வயது அறுபது இருக்கலாம். ஒரு சிறிய அறைதான் அவருடைய வைத்தியசாலை. குள்ளமாக இருந்தார். கதர்க் குல்லாய் அணிந்திருந்தார். குடகில் கதர்க் குல்லாய் தரித்துக் கொண்டிருந்தவர் அவர் ஒருவரைத்தான் பார்த்தேன்.

"அம்மா குடகர்களைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காக வந்திருக்கிறேன்" என்றேன்.

உடனே அவர் அவசரமாக "எனக்கு ஒன்றும் தெரியாது. அம்மா குடகர் கல்விசங்கத் தலைவர் அப்பண்ணம்மையாவைப் போய்ப் பாருங்கள்" என்றார்.

"நீங்கள் குடகு சட்டசபையில் அங்கத்தினராக இருந்ததாக அறிந்தேன்" என்றேன்.

"ஆம்" என்றார்.

“குடகை மைசூருடன் இணைப்பதற்குச் சாதகமாக வாக்களித்தீர்களா? பாதகமாக வாக்களித்தீர்களா?” என்று கேட்டேன்.

“நான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவன், காங்கிரஸ் கட்சி இணைப்பு வேண்டும் என்று கருதியது. கட்சியின் உத்தரவுப்படி வாக்களித்தேன்” என்றார்.

“இணைப்பினால் நன்மை என்று நீங்கள் இப்பொழுதும் கருதுகிறீர்களா?” என்றேன்.

அவர் பதில் சொல்லாமல், “நீங்கள் அப்பண்ணம்மையாவைப் போய்ப் பாருங்கள்” என்று சொல்லி என்னை விரட்டினார்.

பொன்னம்பேட்டையிலிருந்து கோனிகோப்பல் மூன்று மைல். நல்ல சாலை. வழியெல்லாம் ஆங்காங்கே பல வீடுகள் இருந்தன. பொன்னம்பேட்டைக்கும் கோனிகோப்பலுக்கும் மத்தியில் உள்ள இடத்தில் ஹெம்மச்சிமனை அப்பண்ணம்மையா பி.ஏ.வசித்தார். அவர் ஓய்வு பெற்ற தாசில்தார். தற்பொழுது கோனிகோப்பலில் பெட்ரோல் வியாபாரம் செய்கிறார் என்று அறிந்தேன்.

அப்பண்ணம்மையா வீட்டுக்குச் சென்றேன். அவர் வீட்டில் இல்லை; பெட்ரோல் விற்கும் இடத்திலும் இல்லை. ஆனால் பெட்ரோல் விற்கும் இடத்தில், அப்பண்ணம்மையாவின் மூத்தபுதல்வர் சோமேஷ் இருந்தார். அவருக்கு வயது முப்பது இருக்கலாம். அழகும் பண்பாடும் நிறைந்த இளைஞர். பி.எஸ்ஸி., பி.எல்.பட்டங்கள் பெற்றவர்.மைசூர் ராஜ்யத்தில் வேலை; நஞ்சன்கூடு என்ற ஊரில் தாசில்தாராகப் பணியாற்றினார். அவருக்குப் பதிலாக அங்கு வேறொருவரை நியமித்தார்கள். அவரிடம் தமது பொறுப்பை ஒப்புவித்து ஒன்றரை மாதத்திற்கு மேலாகிறது என்றார் சோமேஷ். ஆனால் சோமேஷுக்கு வேறு வேலை இன்னும் கொடுக்கவில்லை. சம்பளம் மட்டும் கொடுக்கிறார்கள். எனவே, தாசில்தார் சோமேஷ், தமக்கு வேலையில்லாததால், தமது தந்தையின் பெட்ரோல் விற்கும் இடத்தில் பொழுதுபோக்கினார்.

“அம்மா குடகர்களிலே நீங்கள் ஒருவர்தான் வழக்கறிஞரா?” என்றேன்.

“இல்லை. சுரேஷ் என்ற மற்றொரு இளைஞர் விராஜ்பேட்டில் வழக்கறிஞராக இருக்கிறார். சமீபத்தில் ஓர் இளைஞர் எம்.ஏ. பட்டம் பெற்றுள்ளார்” என்றார் சோமேஷ்.

“குடகர்களுக்கும் உங்களுக்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகள் யாவை?” என்றேன்.

"அம்மா குடகர்கள் பூணூல் அணிவார்கள். மது மாமிசம் சாப்பிடமாட்டார்கள். இவற்றைத் தவிர வேறு எல்லாப் பழக்க வழக்கங்களும் மற்ற குடகர்களைப் போன்றவையே. அம்மா குடகர்களில் தற்கால இளைஞர்கள் பூணூல் அணிவதில்லை. நானும் பூணூல் போட்டுக்கொள்ளவில்லை. மது மாமிசமும் சிறிது சிறிதாகத் தலையெடுக்க ஆரம்பித்திருக்கின்றன. பலருடன் கலந்து பழகும்போது அனுசரித்துப்போவது இயல்புதானே" என்றார் சோமேஷ்.

"நீங்கள் ஏன் அம்மையா என்று உங்கள் பெயருடன் சேர்த்துக் கொள்ளவில்லை?" என்றேன். "இளைஞர்கள் நாகரிகமான பெயர்களைத்தான் விரும்புகிறார்கள்" என்றார் நாகரிகப் பெயருள்ள சோமேஷ்.

பொன்னம்பேட்டையில் சிறிதுநேரம் தங்கினேன். 1927 ஆம் ஆண்டில் தொடங்கிய ராமகிருஷ்ண மடத்துக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதாஸ்ரம என்று பெயர். மடத்துக்கு எதிரே, பெரிய வைத்தியசாலைக் கட்டிடம். மடத்தின் தலைவர் சுவாமி விஸ்வாம்பரானந்தா மிக்க அன்புடன் வைத்தியசாலையின் ஒவ்வொரு பகுதியையும் காண்பித்தார். புதிதாக அமைத்துள்ள எக்ஸ்-ரே கருவிகளையும் காட்டினார்.

சுவாமி விஸ்வாம்பரானந்தாவுக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். மலையாளத்தைச் சேர்ந்தவர். நல்ல தமிழில் பேசினார். ஆஸ்ரமத்தைச் சுற்றிக் காட்டினார். "காந்திஜி 1937 ஆம் ஆண்டில் இங்கு வந்தபொழுது, ஓர் இரவு இந்த அறையில்தான் தங்கினார்" என்று ஓர் அறையைக் காட்டினார். காந்திஜி, ஆசிரமத்துக்கு அருகில் புதிதாகக் கட்டியிருந்த ஹரிஜனக் குடியிருப்புக்கு விஜயம் செய்தார் என்றும், ஹரிஜனங்கள் சுத்தமாக இருந்ததைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்து பாராட்டினார் என்றும் கேள்வியுற்றேன்.

குடகர்களுக்கு ராமகிருஷ்ண மடத்தில் ஈடுபாடு உண்டு. ஆசிரமத்தையும், பெரிய வைத்தியசாலையையும் நடத்தும் செலவை நூற்றுக்கணக்கான குடகர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். என்பது நன்கொடை விவரத்திலிருந்து தெரிந்தது. நன்கொடையாளர்களில் டாக்கர் ஏ.பி.டி. முதலியார் வி.ஜி.நாராயணசாமி முதலியார், பாச்சா முதலியார், பி. முனுசாமி, பி.கே.எஸ்.பிள்ளை, திருச்சி கிருஷ்ணசுவாமி ரெட்டியார், மதராஸ் குப்புசாமி நாயக்கர் போன்ற பெயர்களையும் பார்த்தேன். "குடகர்கள் தெய்வ பக்தி உள்ளவர்கள் தான். ஆனால் குடகு நாட்டில் குறிப்பிடத்தக்க பெரிய கோயில்கள் இல்லையே" என்று கேட்டேன்.

"பெரிய கோயில்கள் இல்லை என்பது உண்மை. ஆனால் குடகர்கள் இந்து மதத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளவர்கள். உலகில் இல்லாத ஓர் அதிசயத்தை நீங்கள் குடகில் பார்க்கலாம். குடகர்கள் மேலைநாட்டு நாகரிகத்தில் மூழ்கியவர்கள். குடகிலேயே கிறிஸ்துவப் பாதிரிகள் பலர் இருக்கின்றனர். அப்படியிருந்தும் ஒரு குடகராவது மதம் மாறவில்லை" என்றார் சுவாமி விஸ்வாம்பரானந்தா.

ராணுவத்தில் ஆர்வமுடைய ஐம்பதாயிரம் மக்களுள்ள குடகர் சமூகம், ராமகிருஷ்ண மடத்துக்கு வழங்கியுள்ள காணிக்கை சுமார் ஆறு துறவிகள். அவர்களிலே மைசூர் ராமகிருஷ்ணா மடத்தின் தலைவர் சுவாமி ஷாம்புவானந்தாவும், சேலத்தில் ராமகிருஷ்ண மடத்தில் பல ஆண்டுகளாகத் தலைவராக இருந்துவரும் சுவாமி தேசிகானந்தாவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுவாமி ஷாம்புவானந்தா 1941 ஆம் ஆண்டுவரை பொன்னம்பேட்டை ஆசிரமத்தின் தலைவராக இருந்தார். குடகின் ஆன்ம வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவிய பெரியார் சுவாமி ஷாம்புவானந்தா. குடகுத் தேன் கலப்படமற்றது. அபாயமற்றது, இனிமையானது. விஞ்ஞான ரீதியில், நவீன முறையில் தேனீ வளர்ப்பு, தேன் உற்பத்தி முதலியவற்றைத் தாமே முதலில் கற்று பின்னர் பலருக்குப் பயிற்சி யளித்தார் சுவாமி ஷாம்புவானந்தா. இன்று குடகுத் தேன், தரத்திலும், குணத்திலும் நிகரற்று, உலகப் புகழ் பெற்றிருப்பதற்கு முக்கிய காரணம் சுவாமி ஷாம்புவானந்தரேயாகும். தேன் என்றால், குடகுநாட்டினர் அனைவரும் சுவாமியின் பெயரைத்தான் இனிமையுடன் நினைக்கின்றனர்.

குடகிலிருந்து திரும்பும் வழியில், மைசூரிலுள்ள ராமகிருஷ்ண வித்தியாலத்தில் சுவாமி ஷாம்புவானந்தாவைச் தரிசித்தேன். மைசூரில், ஒண்டிக்கோப்பல் என்னும் பகுதியில், மேடான இடத்தில், எழுபது ஏகரா நிலப்பரப்பில், பெரிய நீச்சல் தடாகம் உள்பட மிக நவீன வசதிகளுடன் பல லட்ச ரூபாய் செலவில் நிர்மாணிக்கப் பெற்ற நான்கு மாடிக் கட்டிடத்தில் அழகுக்கும் திறமைக்கும் பேர்பெற்ற ராமகிருஷ்ண வித்தியாலயம் அமைந்துள்ளது. சுவாமி ஷாம்புவானந்தாவின் நிர்வாகத் திறமைக்கும், காலத்தோடு ஒட்டி ஒழுகும் இயல்புக்கும் அது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக மிளிர்கிறது. பாரத நாட்டில் உள்ள சிறந்த பள்ளிகளில் அதுவும் ஒன்று.

விஞ்ஞான ரீதியிலான தேன் உற்பத்தியைத் தொடங்கிய வரலாற்றை, சுவாமியிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்பினேன்.

"தேனீ வளர்ப்பில் எனக்குப் பிரியம் உண்டு. அதை ஆராய்ச்சி செய்வதிலும் ஆர்வம் உண்டு. ஒருமுறை மைசூரில் நடைபெற்ற தேனீ

வளர்ப்பு மகாநாட்டுக்குச் சென்றேன். அந்நாளில் பதினெட்டு லித்தர் தேனின் விலை, குடகில் ஐந்து ரூபாய் தான். ஆனால் மட்டமான, கலப்பட முள்ள, ஆரோக்கியமில்லாத தேன் அது. நவீன விஞ்ஞான முறையில், நல்ல தரமுள்ள தேனை உற்பத்தி செய்து, அதனை வருவாய்மிக்க தொழிலாக்க விரும்பினேன். ஆனால் அதற்கு வேண்டிய புதிய புத்தகங்களையும், நவீன இயந்திரக் கருவிகளையும் அமெரிக்காவிலிருந்து வரவழைக்க என்னிடம் பணமில்லை. அந்நிலையில் மிஸ் மிக்லியோட் என்னும் அமெரிக்க அம்மையாரைத் தற்செயலாகச் சந்தித்தேன். அவர் சுவாமி விவேகாநந்தரின் சீடர்களில் ஒருவர். எனது கஷ்டங்களை அவரிடம் கூறினேன். அவர் அமெரிக்காவுக்குத் திரும்பியதும் அன்புடன் இருநூறு டாலர் பணம் அனுப்பினார். அதனைக்கொண்டு அமெரிக்காவிலிருந்து கருவிகளையும், புத்தகங்களையும் வாங்கினேன். ஆராய்ச்சியுடன் பக்குவப்படுத்திய தேனை, வெளிநாட்டு நிபுணர்களுக்குப் பரிசோதனைக்கு அனுப்பினேன்" என்றார் சுவாமி ஷாம்புவாநந்தா. குடகு நாட்டில் கிராமம் கிராமமாகச் சென்று, படங்கள் காண்பித்து, நவீன தேன் உற்பத்தி முறையைப் பிரசாரம் செய்தார் சுவாமி ஷாம்புவாநந்தா.

மிஸ் மிக்லியோட் அம்மையார், இரு நூறு டாலர் நன்கொடை அளித்ததோடு, டில்லியில் அப்போது வைசிராயாக இருந்த லார்டு இர்வினைச் சந்தித்து, அது சம்பந்தமாகப் பேசினார். அதன் காரணமாக லார்டு இர்வின், அப்பொழுது குடகின் சீப் கமிஷனராக இருந்த லெப்டினன்ட் கர்னல் பர்க் என்பவருக்கு எழுதி, தேன் உற்பத்தியில் சுவாமி ஷாம்புவாநந்தாவுக்கு எல்லா வழிகளிலும் உதவி செய்யும்படி தெரிவித்தார்.

1936 ஆம் ஆண்டில் சுவாமியின் பெரு முயற்சியால் விராஜ்பேட்டில், 53 அங்கத்தினர்களுடன் 314 ரூபாய் மூலதனத்தில் தொடங்கிய தேன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 1961 ஆம் ஆண்டில் வெள்ளி விழாக் கொண்டாடிற்று. அப்பொழுது அங்கத்தினர் எண்ணிக்கை 724, மூலதனம் 15,000 ரூபாய், சேமிப்பு நிதி 36,000 ரூபாய்.

பின்னர் அதைத் தொடர்ந்து, பாகமண்டலா என்ற ஊரிலும் மற்றொரு தேன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பமாயிற்று. இன்று குடகு நாட்டில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் இரண்டு லட்சம் பவுண்டு தேன் உற்பத்தி செய்கின்றனர்.

குடகர்கள் தம் சொந்த உபயோகத்திற்காகத் தயாரிக்கும் தேன், இந்தக் கணக்கில் சேரவில்லை. ஒரு குடகர் வீட்டில் காலை ஆகாரம் அருந்தினேன். அரிசி ரொட்டியும், தேனும், நெய்யும், தேநீரும்தான்

காலை ஆகாரம். போத்தல்களில் தேனை அடைத்து வைத்திருந்தனர். அனைவரும் தேனையும் நெய்யையும் ரொட்டியில் தாராளமாகக் கலந்து உண்டனர். ஆண்டு தோறும் அறுபது பவுண்டு தேன் உற்பத்தி செய்வதாகவும், அது தமது குடும்பத்துக்கே போதுமானதாக இருக்கிறதென்றும் உணவளித்த குடகர் கூறினார்.

பொன்னம்பேட்டையிலிருந்து பொலிபேட்டா செல்லும் வழியில் மைகாபேட்டா என்ற எஸ்டேட்டில் ஓர் இரவு தங்கினேன்.

குடகில் பல எஸ்டேட்டுகளுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. ஐம்பது ஏகரா முதல் ஆயிரம் ஏகரா வரையுள்ள பல எஸ்டேட்டுகளுக்குச் சென்றேன். ஆங்கிலேயர்களிடமிருந்து விலைக்கு வாங்கிய எஸ்டேட்டுகளில் உள்ள பங்களாக்கள் பெரிதாகவும், வசதியாகவும் இருந்தன. பொதுவாக இந்தியர்களுக்கு, சிறப்பாகத் தமிழர்களுக்குத் தோட்டங்களில் பெரும் பணம் செலவுசெய்து பங்களாக்கள் கட்ட மனம் வராது. ஆங்கிலேயர்கள் கட்டிவிட்டுச் சென்ற வசதியான பங்களாக்களை, அடிக்கடி பழுது பார்த்து, பராமரித்து நல்ல நிலையில் வைத்துக் கொண்டால், அதுவே பெரிய காரியம்.

சித்தாபூரிலிருந்து பெரம்புகொல்லி வரும் வழியில் 'பைஸன் பீல்டு' என்னும் எஸ்டேட்டுக்குச் சென்றேன். அதன் சொந்தக்காரர் ராவ்பகதூர் கோடீர உத்தப்பா என்னும் குடகர். 72 வயது நிரம்பிய உத்தப்பா, சுமார் ஆறரை அடி உயரம், நல்ல கம்பீரமான தோற்றம், மிக இனிய சுபாவம். கோடீர உத்தப்பா குடகு நாட்டில் ஜில்லா நீதிபதியாகப் பணியாற்றியவர். ஓய்வு பெறுவதற்குமுன், சுதந்திரக் குடகு அரசாங்கத்தின் உதவிப் பிரதம காரியதரிசியாக இருந்தார்.

குடகு நாட்டில், ஒவ்வோர் அங்குலமும் அவருக்குத் தெரியும்; ஒவ்வொருவரைப் பற்றியும் அவருக்குத் தெரியும். குடகு நாட்டின் அரசியல் அவருக்குத் தலைகீழாகப் பாடம். பொது அறிவு நிரம்பப் பெற்ற உத்தப்பா, பரந்த நோக்கமுள்ளவர்.

பல முறை அவரைச் சந்தித்து உரையாடியிருக்கிறேன். ஒரு முறை சென்றபோது, அவர் வீட்டில் இல்லை. பின்னர் அவரிடம் கேட்டபொழுது, "ஹீத்ரிக்காக எனது அயின்மனை சென்று,என் தந்தையாரை வணங்கி, ஆசீர்வாதம் பெறச் சென்றேன்" என்றார். உத்தப்பாவின் தந்தைக்கு அப்பொழுது 94 வயது. அவர்தான் ஊரு தக்கா. நல்ல திடகாத்திரத்தோடு இருக்கிறார் என்று அறிந்தேன்.

"சென்னை அரசாங்கத்தில் பணியாற்றிய சி.டி. (திருவேங்கட) முதலியார், குடகில் சில ஆண்டுகள் கமிஷனராக இருந்தார். மிக நல்லவர். முருக பக்தர்" என்றார் கோடீர உத்தப்பா.

குடகர் சமூக சம்பந்தமான எந்தக் கூட்டங்களிலும் செல்வாக்குடன் விளங்குபவர் கோடீர உத்தப்பா. குடகு நாட்டில் மக்கள் அன்புடன் போற்றும் பெரியார்களில் தலை சிறந்தவர் கோடீர உத்தப்பா.

குடகில் இரண்டாவது பெரிய நகரம் விராஜ்பேட். அதன் ஜனத்தொகை ஏழாயிரத்து ஐந்நூறுதான். என்றாலும் விராஜ்பேட்டிற்கு ஒரு நகர சபை உண்டு.

விராஜ்பேட் செல்லும் வழியெல்லாம் நெல் வயல். பஞ்சம் என்பதையோ, உணவுக் கட்டுப்பாடு என்பதையோ அறியாத நாடு குடகு.

காப்பிச் செடி வருவதற்குமுன், பயிர்த்தொழில் தான் உயிர்நாடி. அக்காலத்தில் ஒவ்வோர் ஆண்டிலும், அறுவடைக்குப் பின், தேவையானவற்றைமட்டும் வைத்துக்கொண்டு, அதிகப் படியாக உள்ள தானியத்தை மலையாளம், கன்னடம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று விற்பார்கள். அந்நாளில் குடகை விட்டுத் தாண்டியதும், வழியில் திருடர் பயமானதால் நூற்றுக்கணக்கான கூட்டு வண்டிகள் வரிசையாகச் சேர்ந்து செல்லும். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஓர் ஆண் மகன் செல்லவேண்டும் என்பது அப்பொழுதிருந்த சமூகக் கட்டுப்பாடு. அரிசியை விற்றுவிட்டு, அதற்குப் பதிலாக, தங்களுக்குத் தேவையான வெல்லம், துணி, இரும்பு, பெருங்காயம் மற்றும் உணவுப் பொருள்களைப் பண்ட மாற்றாகப் பெற்று வந்தனர்.

தற்பொழுது சுமார் ஒரு லட்சம் ஏகராவில் நெல் பயிரிடுகின்றனர். விளைச்சல் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 70 ஆயிரம் டன். அதில் ஆண்டு தோறும் 15 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்கின்றனர்.

ஜப்பானிய முறையைப் பின்பற்றி விவசாயம் செய்த ஐங்கமா சங்கையா என்பவர், சனிவாரச் சந்தை என்னும் ஊரைச் சேர்ந்தவர். அவர் ஓர் ஏகரா நிலத்தில் 12 ஆயிரம் பவுண்டு நெல் விளைச்சல் செய்தார். 9000 ரூபாய் பரிசுடன் 'கிரிஷி பண்டிட்' என்ற அரசாங்க விருதையும் பிரதம மந்திரியிடமிருந்து பெற்றார்.

அரிசியில் மூன்று விதங்கள் உண்டு. சாதாரணமாகப் பெரிய அளவில் உள்ளது தோட்டப் பட்டா. அதனை பிலியா என்றும் கூறுவர். உணவுக்கேற்ற சிறுரக அரிசி, சன்ன பட்டா; சிவப்பு நிறமுள்ள அரிசி, கேசரி.

குடகில், அரிசியின் அளவு பட்டி. ஒரு பட்டி என்பது எண்பது சேர். குடகு ராஜாக்கள் காலத்தில் ஐம்பது பேர் அரிசி ஒரு ரூபாய்; 1870 ஆம் ஆண்டில் இருபது சேர் அரிசி ஒரு ரூபாய். குடகர்கள்

அரிசிப் பிரியர்கள். அரிசியை உணவுக்காகவும், மதுவுக்காகவும் உபயோகிக்கின்றனர்.

குடகில் எந்த நகருக்குச் சென்றாலும், நம்மை முதலில் வரவேற்பது சுங்கச் சாவடிதான். சுங்கச் சாவடியைத் தாண்டியதும், ஒரு மேட்டிலிருந்து, விராஜ்பேட்டின் அழகிய தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தேன். கிறிஸ்துவ தேவாலயம் அழகிய குன்றின் மீது அமைந்திருந்தது.

கிறிஸ்துவர்களின் பூர்வீக இடம் விராஜ்பேட். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், திப்பு சுல்தானால் ஸ்ரீரங்கப் பட்டணத்தில் சிறைவைக்கப் பெற்ற குடகர்கள் தப்பி ஓடினர். தென் கன்னடத்தில் குடியேறிய கொங்கணி பேசும் கத்தோலிக்க கிறிஸ்துவர்களையும் திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப்பட்டணம் சிறையில் வைத்திருந்தான். அவர்களும் அதே சமயத்தில் தப்பி ஓடினர். அவர்களில் ஒரு பகுதியினர் குடகில் குடியேறினர். அப்பொழு திருந்த தொட்ட வீரராஜேந்திரா என்ற அரசன், தன் நாட்டில் மக்கள் தொகை குறைவாக இருந்ததால், கத்தோலிக்க கிறிஸ்துவர்களுக்கு இனாமாக நிலம் கொடுத்துக் குடியேறச் செய்தான். இப்பொழுதுள்ள மாதா கோயிலை நூறு ஆண்டுகளுக்குமுன் அரசாங்க உதவிகொண்டு பாதிரிகள் கட்டினர். மடிக்கேரி, பொல்லிபேட்டா ஆகிய இடங்களிலும் மாதா கோயில்கள் உள்ளன.

“ஆடைக்கு ஆசைப்பட்டு” படிப்பு வாசனை இல்லாத ஆதிவாசிகள் கிறிஸ்துவர்களாயினர். பாதிரிகள் மதமாற்றத்தில் வெற்றிபெறவில்லை. ஆனால் கல்வித் துறையில் நல்ல தொண்டு செய்து வருகின்றனர். கிறிஸ்துவர்கள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள் மூன்று. நாட்டின் ஜனத்தொகையில் கிறிஸ்துவர்கள் நூற்றுக்கு ஒருவர் கூடக் கிடையாது.

கடைத் தெரு நீளமானது. சமீபத்தில் நிறுவப்பெற்ற மணிக் கூண்டின் அருகே காரை நிறுத்தி, “ஏ.பி. அப்பண்ணா எம்.எல்.ஏ. வீடு எது” என்று விசாரித்தேன். வழியில் சென்ற ஓர் இளைஞர் வேகமாக ஓடிவந்து, “நான் காட்டுகிறேன் வாருங்கள்” என்று சொல்லிக் காரில் ஏறி உட்கார்ந்தார். அவரை எங்கோ பார்த்ததாக நினைவு. அவர் கடங்கமுரூர் பல்லசண்டா அயின் மனையில் சந்தித்த பல்லசண்ட சோமண்ணா என்னும் கம்யூனிஸ்டுத் தலைவர் என்று நினைவுக்கு வந்தது. அவர், விராஜ்பேட்டில் உள்ள இருபத்தேழு ஹோட்டல்களில் வேலைசெய்யும் தொழிலாளர் சங்கத் தலைவர். அப்பண்ணா வீட்டுக்குச் சென்றேன். அவர் அங்கில்லை. மறுபடியும் இரு முறை முயன்றும் அவரைச் சந்திக்க முடியவில்லை.

ஊருக்குள் சென்றேன். ஒரு விதுயான கோடியில் படிக்கட்டுகள் இருந்தன. காரை விட்டு இறங்கி நடந்து சென்றேன். பத்துப் படிகள் ஏறியதும் மாரியம்மன் கோயில் ஒன்றிருந்தது. அங்கிருந்த வேலைக்காரர், பூசாரியின் வீடு அருகில் இருப்பதாகக் கூறி அழைத்துச் சென்றார். பூசாரி மாரிமுத்து செட்டியாருக்கு வயது ஐம்பது இருக்கும். குடகுக்கு வந்து நாலைந்து தலைமுறைகள் ஆயின என்று கூறினார்.

விராஜ்பேட் நகரசபை அங்கத்தினர் சுப்பையா செட்டியார் வீட்டுக்கு என்னை அழைத்துச் செல்லும்படி வேலையாளிடம் கூறினார் மாரிமுத்து செட்டியார். கார் நிறுத்தியிருந்த வீதிக்கு வந்தேன். அந்த வீதிக்கு ‘தெலுகு வீதி’ என்று பெயர். நாலைந்து வீடுகள் தாண்டியதும் தெலுகார ஜகந்நாத சுப்பையா செட்டியார் வீட்டை அடைந்தேன். சுப்பையா செட்டியாருக்கு வயது நாற்பத்தாறு. குளிக்கும் துவாலை ஒன்றைக் கட்டிக்கொண்டு, என்னை வரவேற்றார். சுவையான காப்பி கொடுத்து உபசரித்தார். அவருடைய உறவினர் செல்வராஜ் என்பவரும் அங்கிருந்தார்.

“இங்கு நாங்கள் சுமார் அறுபது குடிகள் இருக்கிறோம். எப்பொழுது வந்தோம், எங்கள் பூர்வீகம் என்ன என்பது எங்களுக்குச் சரியாகத் தெரியாது. தமிழ் பேசத் தெரியும்; எழுதத் தெரியாது. பெரும்பாலோர் வெல்ல வியாபாரம் செய்கிறோம். சிலர் பயிரிடுகிறார்கள். சீனிவாசன் என்பவன் நாகர்ஹோலேயில் உதவி ரேஞ்சராக இருக்கிறான். கிருஷ்ணன் என்பவன் மடிக்கேரியில் கூட்டுறவுப் பாங்கியில் குமஸ்தாவாக இருக்கிறான். இந்த ஊர் நகரசபையில் மொத்தம் பதினைந்து அங்கத்தினர்கள். நகர சபைத் தேர்தலில் குடகர் ஒருவருடன் போட்டியிட்டு ஜெயித்தேன்” என்றார் சுப்பையா செட்டியார்.

அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, நகருக்குள் பெட்ரோல் விற்குமிடம் ஒன்றுக்குச் சென்றேன். உரிமையாளர் பெயர் டி. விஸ்வநாதன் என்றிருந்தது. காருக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டதும், “திருவேங்கட முதலியார் வீடு எங்கிருக்கிறது?” என்று கேட்டேன்.

“திருவேங்கட முதலியார் எனது தகப்பனார். வீடு இங்கிருந்து அரை மைல் தூரம். வழிகாட்ட ஆள் அனுப்புகிறேன்” என்று கூறி, ஒரு வேலையாளை என்னுடன் அனுப்பினார் விஸ்வநாதன்.

வசதியான பெரிய மாளிகை. வேலூர் கோவிந்தராஜ திருவேங்கட முதலியார் என்னை அன்புடன் வரவேற்றார். ஐம்பத்தொன்பது வயது நிறைந்த அவருக்கு உடல் நிலைசரியில்லை. என்றாலும், உற்சாகத்தின்

காரணமாக என்னுடன் அரைமணி நேரம் உரையாடினார்.

“இங்கு நாங்கள் நாலைந்து குடும்பங்கள்தான் இருக்கிறோம். கல்யாணம் எல்லாம் தமிழ் நாட்டில்தான். எனது பெண்ணை வேலூரில் கொடுத்திருக்கிறேன். வேலூர் வெயில்தான் உங்களுக்குத் தெரியுமே. கோடைகாலத்துக்காக, எனது மகளும், பேரக் குழந்தைகளும் இங்கே வந்திருக்கிறார்கள்” என்றார் திருவேங்கட முதலியார்.

‘காயத்திரி பஸ் சர்விஸ்’ சொந்தக்காரர் திருவேங்கட முதலியார். இரண்டு பஸ்கள் ஓடுகின்றன. காப்பித் தோட்டம் ஒன்றும் அவருக்குச் சொந்தம்.

“இந்த நாட்டில் மலேரியா மிக அதிகமாக இருந்தது. மக்கள் பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. ஜீரம் அடிக்கடி வரும். ஆளை அப்படியே உலுக்கிவிடும். மரண விகிதம் அதிகம். மலேரியா என்ற காரணத்தால், தோட்டத் தொழிலாளர்கள் விரும்பி வரமாட்டார்கள். கூலியும் ஒரு நாளைக்கு மூன்றணாத்தான். அமெரிக்கர்கள்தான் டிடிடி. மருந்தை அவர்கள் செலவில், அவர்கள் மேற்பார்வையில் தெளித்து, 1947 ஆம் ஆண்டில் மலேரியாவை அடியோடு ஒழித்தார்கள்” என்றார் முதலியார்.

★

மலேரியாவின் மூல காரணம் கொசு. அதனைக் குடகர் “சொள்ளை” என்கின்றனர். கொசுவைக் குறித்து “சொள்ளைப் பாட்டு” என்ற தலைப்பில், சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் சுவாமி ஷாம்புவாநந்தா கவிதைகூட இயற்றியிருக்கிறார். அப்புத்தகம் தற்பொழுது எங்குமே கிடைக்கவில்லை. அன்பர் பாச்சமாடா கணபதி, தம் நினைவிலிருந்து எழுதியனுப்பிய வரிகள் இவை:-

“சொள்ளேக்கா சொள்ளேக்கா எல்லின்ஜி பந்தே
சொள்ளேக்கா
கூய் கூய் பாடிக்கொண்டு என்னாங்க பந்தே சொள்ளேக்கா
கட்ரேடியிலிங்கே பந்தே
எரிசிட்டி முலேலு இஞ்சே”

அதன் பொருள்

சொள்ளை அக்கா சொள்ளை அக்கா
எங்கிருந்து வந்தாய்? சொள்ளை அக்கா
கூய் கூய் என்று பாடிக்கொண்டு
ஏன் வந்தாய்? சொள்ளை அக்கா

கொசுவின் பதில்

கட்டிலின் அடியிலிருந்து வந்தேன்
இருட்டில் மூலையில் ஒளிந்திருந்தேன்.

★

"இந்த நாட்டில் தேள் கிடையாது. பாம்புதான் உண்டு. அதற்கும் விஷம் குறைவு" என்றார் திருவேங்கட முதலியார்.

பாம்பு என்பதைக் குடகர்களும் பாம்பு என்றுதான் கூறுகின்றனர். மலைப்பாம்பை பெரும்பாம்பு என்கின்றனர். அந்நாட்டிலும் பாம்பாட்டிச் சித்தர் பாடல் ஒன்று உண்டு.

"பொம்மக்கடா மாயா மார்மாயா பாம்பே
அரியாதே திரியாதே கொரியாதே பாம்பே"

பெண்களின் மாயை பெரும்மாயை பாம்பே
அறியாமல் தெரியாமல் கடியாதே பாம்பே

என்பது பொருள.

நாங்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது, டெலிபோன் மணி அடித்தது. திருவேங்கட முதலியார் உள்ளே சென்று டெலிபோனில் பேசினார்; தமிழில் பேசினார். பின்னர் திரும்பி வந்தார்.

விராஜ்பேட் ஸ்டேட் பாங்க் கிளையின் ஏஜண்டாக இருந்தவர் திருமயத்தைச் சேர்ந்த ஐயங்கார் என்று கேள்வி யுற்றேன். சிறிது நேரத்துக்கெல்லாம் மறுபடியும் டெலிபோன் மணி அடித்தது.

"டெலிபோன் இருப்பது சௌகரியம்தான்" என்றேன்.

"இல்லிங்க, பேஜாராக யிருக்குங்க" என்று சொல்லிவிட்டு, டெலிபோனில் பேச மீண்டும் உள்ளே சென்றார் திருவேங்கட முதலியார்.

"பேஜார்" என்ற சென்னைத் தமிழ், அங்கும் வந்து விட்டது.

கடைசியாக வேலூர் கோவிந்தராஜ திருவேங்கட முதலி யாரிடம் விடைபெற்றுக் கொண்டு, இக்குதப்பா கோயிலுக்குப் பிரயாணமானேன்.

குடகில் உள்ள முக்கியமான கோயில்களில் ஒன்று இக்குதப்பா கோயில், குடகர்களில் பலர், பெயரைக் கேட்டிருக்கிறார்களே தவிர, நேரில் பார்த்ததில்லை. பலருக்கு, கோயிலுக்குச் செல்லும் திசை தெரியுமே தவிர, வழி தெரியாது.

விராஜ்பேட்டிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ளது கடங்கா பாலம். அங்கிருந்து பிரிந்து செல்லும் பாதையில் சுமார் பன்னிரண்டு மைல் பிரயாணம் செய்தேன். வழியெல்லாம் குடகர் குடியிருப்புகள். நெல் வயல்கள், எங்கு நோக்கிலும் இன்பம் தரும் இயற்கைக் காட்சிகள். கார் ஓட்டியவர் குடகில் பிறந்த மலையாளி கிறிஸ்துவர். குடகின் அந்த அழகான பகுதிக்குத் தாம் அதுவரை வந்ததேயில்லை என்று கூறினார்.

ககாபே என்னும் ஊரிலிருந்து காட்டு வழியாகச் செல்லும் சாலையில் ஒன்றே கால் மைல் தூரம் சென்றேன். சாலை அத்துடன் முடிவடைந்தது. அங்கு ஏற்கெனவே ஒரு கார் நின்றது. அதனை ஓட்டியவர் காரின் உள்ளே படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்.

எல்லாப் புறங்களிலும் மலை சூழ்ந்த பள்ளத்தாக்கில் சிறிய குன்றின் மீது கம்பீரமாகத் தோற்றமளித்தது இக்குதப்பா ஆலயம். 'குன்று தோறாடும் குமரனை', குடகர்கள் இக்குதப்பா என்ற மலையாளப் பெயரால் அழைக்கின்றனர்.

கோயில்தான் உயரத் தெரிந்ததே தவிர, அதற்குச் செல்லும் வழி தெரியவில்லை. எங்கும் வயல்கள்; மேடுகள். எனவே திசையை நோக்கிக் காட்டிலும், மேட்டிலும், முள்ளிலும் நடந்தேன். யாரையாவது வழி கேட்கலாம் என்றால், ஒருவருமே தென்பட வில்லை. குன்றின்மீது மெதுவாக ஏறினேன். கடைசியாகக் கோயிலின் அடிவாரத்தை அடைந்தேன். அங்கிருந்து சுமார் இருபது அடி உயரம் ஏறினேன்.

மலையாளத்துப் பாணியில் அமைந்த அழகான கோயில். குடகர் கோயில்களிலும் வீடுகளிலும் மலையாளத்துப் பாணியைப் பார்க்கலாம். அதற்குக் காரணம் கட்டிட வேலை செய்வோர் அனைவரும் மலையாளிகள்; அல்லது மலையாளத்திலிருந்து வந்தவர்கள். குடகர்களுக்குக் கொத்து வேலையோ, தச்சு வேலையோ தெரியாது.

கோயில் மிகவும் சுத்தமாக இருந்தது. ஏற்கெனவே குடகர்கள் ஆண்களும், பெண்களும் சுமார் பத்துப் பேர், கோயிலின் வெளியில் உள்ள திண்ணையில் அமர்ந்திருந்தனர். அபிஷேகத்திற் காகக் காத்திருக்கிறார்கள் என்று நினைத்தேன்.

கோயிலுக்கு இடது புறமுள்ள குளத்தில் கை கால் கழுவ இறங்கினேன். அங்கு ஆலய விளக்குகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்த வயதான பிராமணர் ஒருவர், கால் கழுவக் கூடாது என்று என்னைத் தடுத்தார்.

கோயிலின் இடது புற வாயில் வழியாகச் செல்ல முயன்றேன். அப்பொழுது, உள்ளே இருந்த அர்ச்சகர் ஓடி வந்து என்னை நிறுத்தி, "நீங்கள் எந்த ஊர்?" என்று கேட்டார். "சென்னை" என்று சொன்னால் அவருக்குப் புரியாது. ஆகையால் "மதராஸ்" என்று கூறினேன். முன் கதவு வழியாக வரும்படி சைகை செய்தார்.

முன் கதவு வாயில் வழியாக நுழைந்து நாலைந்து அடி தூரம் தான் உள்ளே சென்றேன். அப்பொழுது அங்கிருந்த குடகர், அரசியல் வாதிகளைப் போல ஆவேசமாகப் பேசினார். அவர் பேசியதில், 'விபரீதா' என்ற வார்த்தைதான் எனக்குப் புரிந்தது. விஷயம் இதுதான். கோயிலின் உள்ளே யாரும் செல்லக்கூடாது. குடகர் குடும்பத்தை உள்ளே வரக்கூடாது என்று சொல்லித் தடுத்தார் அர்ச்சகர். என்னை மட்டும் உள்ளே வர அனுமதித்தார். அது தவறு என்பது குடகரின் வாதம். அது நியாயமானது.

உடனே நான் வெளியில் வந்து, ஆத்திரமடைந்திருந்த குடகரிடம் சென்று, "தவறுதலுக்கு வருந்துகிறேன். ஆண்டவனை வழிபட வந்தேன். உள்ளே செல்லக் கூடாது என்பது எனக்குத் தெரியாது. அம்மாதிரி அறிவிப்புப் பலகையையும் இல்லை" என்றேன்.

"உங்கள்மீது எனக்குக் கோபமே இல்லை. உங்களுக்குத் தெரியாது என்பது எனக்குத் தெரியும். கொடவ சமாஜத்தில், ஜெனரல் கரியப்பாவுடன் நீங்கள் பேசிக் கொண்டிருந்ததை நான் பார்த்திருக்கிறேன். நீங்கள் சென்னையிலிருந்து வந்திருப்பதால், உங்களிடம் அதிகப் பணம் வாங்கலாம் என்று கருதி, அர்ச்சகர் தவறு செய்தார். ஆண்டவன் சந்நிதியில் தவறிழைக்கலாமா? அதனால்தான் அர்ச்சகரைக் கண்டித்தேன்" என்றார் குடகர். அவர் பெயர் சோமையா. காப்பித் தோட்ட முதலாளி. அவர் புதல்வனையும், மாப்பிள்ளையையும் அறிமுகம் செய்து வைத்தார். புதல்வன், கல்கத்தாவில் மிகப் பெரிய தொழிற்சாலை யொன்றில் பிரதான என்ஜினியர். "இது முருகன் கோயில்" என்று தமிழில் கூறினார் பிரதான என்ஜினியர்.

சிறிது நேரத்தில் தீபாராதனை நடைபெற்றது. கற்பூர தீபாராதனை யன்று; விளக்குத் தீபாரதனை. நாங்கள் நின்ற இடத்துக்கும், மூலஸ்தானத்துக்கும் சுமார் நூறு அடி தூரம் இருக்கும். மூலஸ்தானத்தில் விளக்கு மங்கலாக எரிந்தது. கற்பூர தீபாராதனை இல்லாமல், மூர்த்தியை சரிவரப் பார்க்க முடியவில்லை.

"ஏன் கற்பூர தீபாராதனை இல்லை" என்று கேட்டார் சோமையா.

“தேவஸ்தானத்தில் மிகவும் சிக்கனம் செய்கிறார்கள். கற்பூரம் வாங்கப் பணமில்லை”என்றார் அர்ச்சகர்.

பிரசாதம் பெற்றுக் கொண்டதும், அங்கிருந்து புறப்பட்டேன். கீழே இறங்குவதற்குச் சரியான வழியைக் காட்டினார் சோமையா. ஐந்தே நிமிஷத்தில் கீழே இறங்கினேன்.

திரும்பும் வழியில் ‘நால்க் நாடு பாலெஸ், ஒன்றரை மைல்’ என்ற கைகாட்டியைப் பார்த்தேன். வழியிலிருந்து பிரிந்து சென்று, மீண்டும் திரும்பிவர வேண்டும். அரண்மனையைப் பார்க்கச் செல்வதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். சாலை பிரியும் இடத்தில், வழக்கமாக உள்ள மலையாள காக்கா கடை ஒன்றிருந்தது. அங்கிருந்த ஒருவர், ஆங்கிலத்தில், “பெயர்தான் அரண்மனை; ஆனால் அது மிகச் சிறிய கட்டிடம். இப்பொழுது நீங்கள் சென்றால் உள்ளே சென்று பார்க்க முடியாது. வெளியில் கட்டிடத்தைத்தான் பார்க்கலாம். ஏனென்றால் அங்குள்ள காவற்காரன் சாப்பாட்டுக்காக இப்பொழுதுதான் இவ்வழியே சென்றான். இரண்டு மணி நேரம் கழித்துத்தான் திரும்புவான். அரண்மனை பார்க்கத் தகுந்த ஒரு கட்டிடம் அன்று” என்றார்.

பசி வேளையாக இருந்ததால், அரண்மனையைப் பார்க்காமல் நேரே சென்றேன். குடகர்களில் பலர் அதுவரை பார்த்திராத இக்குதப்பா ஆலயத்தைத் தரிசித்தேன் என்ற பெருமையுடன் பெரம்புகொல்லி சேர்ந்தேன்.

★ ★ ★

வட குடகு

குத்தித்தூர் என்பது தென் கன்னடத்திலுள்ள ஓர் ஊரின் பெயர். ஊரின் பெயரையே தங்கள் பெயராக வைத்துக் கொண்டிருக்கும் சிலரில் ஒருவர் குத்தித்தூர். சுமார் ஐம்பது வயதுள்ள குத்தித்தூர், ஷெட்டி என்ற வகுப்பைச் சேர்ந்தவர். ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் குடகுக் கிளையின் பிரதம அதிகாரி. அவருடன், ஒரு நாள் எட்டு மணிக்கு மடிக்கேரியிலிருந்து அவருடைய காரில் புறப்பட்டேன். வழியெல்லாம் காப்பித் தோட்டமும் நெல் வயலுமே காட்சியளித்தன. ஒரு மணி நேரத்தில் இருபத்தேழு மைல் தூரமுள்ள சோமவாரப்பேட்டையை அடைந்தோம். நேராகப் பிரயாணிகள் விடுதிக்குச் சென்றோம். விடுதிக் கட்டிடம் ஒரு மேட்டில் இருந்தது. பழைய கட்டிடம் தான்; ஆனால் நாகரிக வசதிகள் இருந்தன. சாமான்களை அங்கு வைத்துவிட்டு, ஒரு மைல் தூரத்தில் உள்ள ஊருக்குச் சென்றோம்.

சோமவாரப்பேட்டை என்னும் பெயரிலிருந்தே, சோமவாரம் தோறும் சந்தை நடைபெறும் என்று அறிந்தேன். சந்தைப்பேட்டை ஊரின் நடுவில் இருந்தது.

கணபதி என்னும் குடகர் வீட்டுக்குச் சென்றோம். சுமார் 35 வயதுள்ள கணபதி, தமது பெயருக்கு ஏற்ப கல்யாண மாகாதவர். அவர் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் அதிகாரி. அவர் வீட்டில் எப்பொழுதும் கூட்டம். வருபவர்களுக்கு எல்லாம் காப்பி அல்லது தேநீர். அவர் வீட்டிலிருந்த இருபது வயதுள்ள சமையற்காரன், சேலத்தை யடுத்த சூரமங்கலத்தைச் சேர்ந்த தமிழன். "சூரமங்கலத்தில் எங்களுக்கு நிலம் இருக்கிறது. பஞ்சத்தின்போது எனது அப்பா இங்கு வந்தார். அப்பொழுது நான் கைக் குழந்தை. எனது அப்பா பத்து மைல் தூரத்தில் உள்ள ஒரு காப்பித் தோட்டத்தில் வேலை செய்கிறார். நான் இங்கே ஐந்தாறு வருஷங்களாகச் சமையல் வேலை செய்து வருகிறேன்" என்றான் அவன்.

கணபதிக்குப் பல நண்பர்கள் உண்டு. ஆனால் இணை பிரியாத நண்பன் அவருடைய மோட்டார் சைக்கிள். வாகன வசதி

இல்லையானால், குடகில் ஒரு காரியத்தையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்யமுடியாது. பஸ்கள் மிகக் குறைவு; பல சமயங்களில் இடம் கிடைப்பது அரிது. சாலையிலிருந்து சில தோட்டங்களுக்குச் செல்ல சுமார் ஏழெட்டு மைல் தூரம் நடக்க வேண்டும். வெறும் தடம்தான். அதில் ஜீப் அல்லது மோட்டார் சைக்கிள் தான் சிரமத்தோடு செல்லலாம்.

சோமவாரப்பேட்டை, அதே பெயருள்ள தாலுகாவின் தலைநகரம். நீதி மன்றம், போலீஸ் நிலையம், பெரிய தபால் நிலையம், தாலுகா அதிகாரிகள் காரியாலயம், பொழுது போக்குச் சங்கம் முதலியன இருந்தன.

சோமவாரப்பேட்டை, சனிவாரச் சந்தைப் பகுதிகள் எல்லாம், 'ஏழு சாவீர சீமை'யைச் சேர்ந்தவை. ஏழு சாவீர சீமை என்பது ஏழு நாடுகள். குடகில் ஆரம்பத்தில் 28 நாடுகள் தான் இருந்தன. விஜயநகர மன்னர்களின் பிரதிநிதிகள் குடகை ஆண்ட பொழுது, மைசூரைச் சேர்ந்த இந்த ஏழு நாடுகளைக் குடகுடன் இணைத்தனர்.

சோமவாரப்பேட்டையின் மக்கள் தொகை சுமார் 3,000 ஆனால் பெரும்பாலான மக்கள் கௌடர்கள் என்னும் ஒக்கலிகர்களும், வீரசைவர்களுமே. கணபதி, பொன்னம் பேட்டையைச் சேர்ந்தவர். சோமவாரப்பேட்டையில், ஐந்து அல்லது ஆறு குடகர் குடும்பங்களே உள்ளன என்றார் கணபதி.

காலை பத்தரை மணிக்குமேல் குத்தித்தூர், கணபதி முதலியோருடன் சனிவாரச் சந்தைக்குப் புறப்பட்டேன். வழியில் ஒரு காப்பித் தோட்டத்துக்குச் சென்றோம். அது தமிழர்களுக்குச் சொந்தம். அதன் நிர்வாகி ஒரு தமிழர். அத் தோட்டத்தின் பங்குதாரர்கள் நால்வரும் தமிழர்கள். அவர்கள் பெயர்களை ஆங்கிலத்தில் பொறித்த பலகையைக் கண்டேன். அவர்களில் ஒருவர் தமிழ்ப் பேராசிரியர்.

வழியில் மற்றொரு தோட்டத்துக்குச் சென்றோம். அது ஒக்கலிகருடையது. வீட்டுச் சொந்தக்காரர் வெளியில் சென்றிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் கணபதிக்கு நம்பிக்கை இல்லை.

"இப் பகுதியில் உள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயிகள், ஏலக்காய் பயிரிடுவோர் பலர். விருந்தோம்பலில் மிகச் சிறந்தவர்கள். குடகிலேயே இப்பகுதிதான் பிற்போக்கானது. இங்கு கல்விகற்றோர் தொகை குறைவு. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் என்றாலே என்ன வென்று பலருக்குத் தெரியாது. 'பெரும் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பதிலுக்கு ஒரு காகிதத்தை வாங்கி வைத்திருப்பதா?' என்று சிலர்

கேட்பார்கள். இவர்களை வீட்டில் கண்டுபிடிப்பதே அரிது. இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு, தமது செல்வாக்குள்ள நண்பர்களைக் கூட்டிக் கொண்டு ஒரு விவசாயி வீட்டுக்குச் செல்வார். அப்பொழுது என்னையும் துணைக்கு அழைப்பார். காலை ஏழு மணிக்குள் சென்றால்தான், அவரை வீட்டில் காண முடியும். மோட்டார் சைக்கிள் சத்தத்தைக் கேட்டதுமே விவசாயி பின்புறமாகத் தோட்டத்துக்குப் போய்விடுவார். சுமார் அரை மணி நேரம் கழித்து, வீட்டுக்கு வந்து எங்களை அன்புடன் வரவேற்பார். வந்த காரியம் என்ன என்று கேட்கமாட்டார். பலருக்கு, 'இல்லை' என்று சொல்லத் தைரியம் இல்லை. மீண்டும் உள்ளே சென்று காப்பி கொண்டு வருவார். நான்கு பேர் விருந்தினர் இருந்தால், நான்கு கப் காப்பி தான் கொண்டு வருவார். அவரும் எங்களுடன் இருந்து காப்பி அருந்தமாட்டார். நாங்கள் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அவர் சமையல் அறைக்குள் செல்வார். அவர் காப்பி சாப்பிடுவதற்காக உள்ளே சென்றிருக்கிறார் என்று தான் நாம் சாதாரணமாக நினைப்போம். ஆனால் அவர் சமையல் அறை வழியாகப் பின்புறத்தில் தோட்டத்துக்குச் சென்றுவிடுவார். சென்றவர் திரும்பவே மாட்டார். நாங்கள் வருவார், வருவார் என்று மணிக்கணக்கில் காத்திருப்போம். மூன்று மணி நேரம் கழித்து, ஒரு வேலையாள் வந்து, 'வீட்டுக்காரர் தோட்டத்துக்குப் போயிருக்கிறார். திரும்பி வரரொம்ப நேரமாகும்' என்று சொல்லுவான். இது சர்வ சாதாரணம். ஆனால் நாங்கள் சும்மா விடுவதில்லை. அவர் வீட்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை படை எடுத்து, எப்படியாவது அவர் உயிரைப் பிடித்து விடுவோம்" என்றார் கணபதி.

பதினொன்றரை மணிக்கு, சனிவாரச்சந்தையை அடைந்தோம். சந்தைப்பேட்டை ஊரின் நடுவில் இருந்தது. சோமவாரப்பேட்டையைவிடச் சிறிய ஊர் சனிவாரச்சந்தை.

குத்தித்தூர், கணபதி ஆகிய இருவரும், அவ்வூர் ஏஜண்டுடன் குறிப்பிட்ட ஒருவரைப் பார்க்கச் சென்றனர். தபால் நிலையத்துக்கு அருகே காரை நிறுத்திவிட்டுச் சென்றனர். அவர்கள் திரும்பிவர இரண்டு மணி நேரமாயிற்று. அதற்குள்ளாக அந்தச் சிறு ஊரைச் சுற்றிப் பார்த்தேன். பசி அதிகமாய் இருந்ததால், அவ்வூரில் உள்ள ஒரே உடுப்பி ஹோட்டலுக்குச் சென்றேன். பலகாரம் சூடாகவோ, அன்றிக் கவர்ச்சியாகவோ இல்லை. குடி தண்ணீரின் நிறத்தைக் கண்டதும் எனது தாகம் அடங்கிவிட்டது.

பகல் இரண்டரை மணிக்கு எல்லோரும் சோமவாரப்பேட்டை சேர்ந்தோம். கணபதி முன் எச்சரிக்கையுடன் இருந்ததால், அவர் வீட்டில் சாப்பிட்டோம்.

வீரசைவர்கள் என்னும் லிங்காயத்துக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி சோமவாரப்பேட்டை. ஒரு காலத்தில் குடகை ஆண்ட ராஜாக்கள் லிங்காயத்துக்கள். ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தற்பொழுது காசியில் வசிக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கைச் செலவுக்கு அரசாங்கம் மான்யம் வழங்குகிறது என்று சொன்னார்கள்.

குடகில் உள்ள வீரசைவர்களின் எண்ணிக்கை சுமார் ஏழாயிரம். பெரும்பாலோர் விவசாயிகள். குடகு ராஜாக்கள் இருந்த காலத்தில் அறுபத்து நான்கு வீர சைவ மடங்களைக் கட்டி, அவற்றுக்கு மான்யம் அளித்துள்ளனர். தற்பொழுது சில மடங்களே நல்ல நிலையில் உள்ளன.

சோமவாரப்பேட்டையில் உள்ள வீரசைவ மடத்துக்கு இரவு ஏழு மணிக்குச் சென்றேன். ஊரின் கோடியில், சாலையிலிருந்து பிரியும் சந்தின் வழியாக, ஒரு பர்லாங் தூரத்தில், பதினைந்து அடி பள்ளத்தாக்கில் அமைந்துள்ள பெரிய, பழைய கட்டிடம் வீரசைவ மடம். எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. மண்ணெண்ணெய் விளக்கைப்போல பிரகாசிக்கும் சோமவாரப்பேட்டை மின்சார விளக்குகள் அப்பொழுது அணைந்திருந்தன. மின்சார விளக்குகள் அடிக்கடி அணைவது சாதாரண சம்பவம்.

மடத்தின் முன்னே சிறிய தோட்டம். மடத்தின் முன் தாழ்வாரத்தில் ஓர் அரிக்கன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அருகில், சாய்வு நாற்காலியில் மடாதிபதி அமர்ந்திருந்தார். அவருக்கு அருகில், வயதான ஒருவர் கன்னட மொழியில் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். கூட்டத்தில் இருந்தவர்கள் பத்துப் பேர் இருக்கலாம்.

மடாதிபதியை வணங்கினேன். மடாதிபதிக்கு, கன்னடம் தவிர வேறு மொழி தெரியாது. நான் அங்கு வருவதாக கணபதி ஏற்கெனவே சொல்லியனுப்பியிருந்தார்.

அங்கிருந்த வயதானவர் பெயர் ருத்ரைய சாஸ்திரி. அவர் மைசூரில் உள்ள ஒரு வீரசைவ மடத்தைச் சேர்ந்தவர். சமஸ்கிருதம் படித்தவர். மடாதிபதிக்குச் சமஸ்கிருதம் தெரியாது. எனவே ருத்ரைய சாஸ்திரி, மதத்தைப்பற்றி இளைஞர்களுக்கு விளக்க வந்திருக்கிறார் என்று அங்கிருந்த இளைஞர் ஒருவர் ஆங்கிலத்தில் என்னிடம் கூறினார். அந்த இளைஞர் தமிழ் நாட்டில் காந்தி கிராமத்தில் சில காலம் பயின்றவர். பரந்த மனப்பான்மையுள்ளவர்.

“இங்கிருக்கும் பத்துப் பேர்களும் இளைஞர்கள்; பெரும்பாலோர் பட்டதாரிகள். ஆனால் இவர்களுக்குத் தங்கள் சமயத்தில் அரிச்சுவடி கூடத் தெரியாது. தார்வார் என்ற ஊரில்

அகில பாரத சிவாநுபவ சமஸ்தா ஆண்டு தோறும் வீரசைவ சித்தாந்தம் குறித்துப் பரீட்சை நடத்துகிறார்கள். நான்கு பாடப் புத்தகங்களை ஒன்றே கால் ரூபாய்க்கு-மிகக் குறைந்த விலையில்-வழங்குகிறார்கள். பரீட்சைக் கட்டணம் ஒன்றே கால் ரூபாய். சுமார் ஐம்பது இளைஞர்கள் பரீட்சைக் கட்டணமும், பாடப் புத்தகப் பணமும் செலுத்தினர். ஆனால் பதினைந்து பேர்தான் பரீட்டைக்குச் செல்கின்றனர். மீதி முப்பத்தைந்து பேர் பரீட்சைக் கட்டணம் இருக்கிறதல்லவா? அதைக் கொண்டு, வெளியிலிருந்து பெரியோர்களை வரவழைத்து மத சம்பந்தமான நுணுக்கங்களைச் சொல்லச் செய்கிறோம்" என்றார் இளைஞர்.

மடாதிபதிக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். அவர் பெயர் குருசித்த சுவாமி. காவி வேட்டி, காவிச் சட்டை, காவித் தலைப்பாகை அணிந்திருந்தார். வீரசைவ மடாதிபதிகளில் விரக்தா, கிரகஸ்தா என இரண்டு வகை உண்டு. அதாவது பிரமசாரிகளாக இருக்கும் மடாதிபதிகள்; இல்லற வாழ்க்கை நடத்தும் மடாதிபதிகள். குருசித்த சுவாமி பிரமசாரி.

சோமவாரப்பேட்டை வீரசைவ மடம் சித்தலதுர்க்க ஆதீனத்தைச் சேர்ந்தது. சித்தலதுர்க் என்பதைப் பாளைஹொன்னூர் என்று அழைக்கின்றனர். அதைத் தவிர, ஸ்ரீசைலம், உஜ்ஜயினி, கேதார், காசி ஆகிய இடங்களிலும் ஆதீனங்கள் உள்ளன. மொத்தம் ஐந்து ஆதீனங்கள். ஒவ்வோர் ஆதீனத் தலைவருக்கும் ஜகத்குரு என்று பட்டம். வீரசைவர்களிலேயே ஐந்து ஜகத் குருக்கள் உள்ளனர். சித்தலதுர்க் ஜகத்குரு ஜய விபவமுருக ராஜேந்திர மகாசுவாமி சமீபத்தில் காலமானார். புதிதாகப் பட்டத்துக்கு வந்திருப்பவரின் பெயர் மல்லிகார்ஜுன முருக ராஜேந்திர மகாசுவாமி. ஒவ்வோர் ஆதீனத்துக்கும் பல கிளைகள் உண்டு. கிளைகளுக்கு, ஜகத்குருதான் மாடதிபதிகளை நியமிப்பார்.

கூட்டத்தின் நடுவில், குருசித்த சுவாமி என்னை அழைத்து, ஏதாவது பேசும்படி கேட்டுக் கொண்டார். "பெரியவர்களிடம் விஷயம் தெரிந்துகொள்வதற்காகத் தான் வந்திருக்கிறேன். பேசுவதற்காக வரவில்லை" என்றேன்.

ருத்ரைய சாஸ்திரி வந்து ஒரு வாரம் ஆயிற்று; அன்று தான் கடைசிப் பிரசங்கம். கூட்டத்திலிருந்த இளைஞர்கள் எதையுமே அரைகுறையாகப் படித்தவர்கள். ருத்ரைய சாஸ்திரியிடம் விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமல், அவருடன் வீண் விதண்டாவாதங்களைத் தொடங்கினர். குருசித்த சுவாமி அடிக்கடி தலையிட்டு அமைதியை உண்டாக்கினார்.

"வீரசைவர்கள் தங்களை ஏன் 'வீரசைவப் பிராமணர்கள்' என்று சொல்லிக்கொள்ளக்கூடாது?" என்பது ஓர் இளைஞரின் கேள்வி. பிராமணர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்த வீரசைவர்கள். தங்களை வீரசைவப் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ள முன்வந்தது வியப்பாக இருந்தது.

"வீரசைவப் பிராமணர்கள் என்றால், பின்னர் வீரசைவ க்ஷத்திரியர்கள், வீரசைவ வைசியர்கள், வீரசைவசூத்திரர்கள் என்றெல்லாம் வருமே. அது பொருத்தமன்று" என்றார் ருத்ரைய சாஸ்திரி.

வீரசைவர்களுக்குள் ஜாதி, உயர்வு தாழ்வு முதலியன நிறைய உண்டு என்று அறிந்தேன். வீர சைவர்களில் உயர்ந்தவர் ஜங்கமா என்பவர்கள். அதாவது ஓர் இடத்தில் நிலையாக இல்லாமல், ஜங்கம சொத்து மாதிரி பல இடங்களுக்குச் செல்வதால் ஜங்கமா என்று பெயர். அவர்கள் ஹென்னு, ஹொண்ணு, மண்ணு அதாவது பெண், பொன், மண் முதலிய ஆசைகளைத் துறந்து, சமயக் கல்வியில் தேர்ச்சி பெற்று, சமயப் பிரசாரம் செய்தல் வேண்டும். வீரசைவர்களில் புரோகிதர்களும் அவர்களே. ஜங்கமாக்கள் தான் குருவாக முடியும். யார் வேண்டுமானாலும் ஜங்கமா தீட்சை பெற்று ஜங்கமா ஆகலாம் என்ற விதி உண்டு; ஆனால் அவ்வாறு தீட்சை பெறுவது சுலபம் அன்று என அறிந்தேன்.

குருசித்த சுவாமி முடிவுரை கூறியபொழுது, "அந்நாளில் அரண்மனை, குருமனை, அதாவது ராஜ்யம், மடம் இரண்டும் ஒன்றாக இருந்தன. ராஜ்யம்தான் அதிகாரம். இப்பொழுது அரண்மனை போய்விட்டதால் குருமனைக்குச் செல்வாக்கில்லை." என்றார்.

இரவு எட்டு மணிக்குக் கூட்டம் முடிந்தது. எல்லோரும் எழுந்து நின்று, தாழ்வாரத்தின் ஒரு கோடியில் இருந்த படத்தின் எதிரே கைகூப்பி.

போதவ கொடு தேவா

ஈ மனக்கே

என்ற பாட்டைச் சேர்ந்து பாடினர். அப்படம் ஜெயதேவா என்ற வீரசைவக் குருவின் படம் என்று அறிந்தேன்.

வீரசைவர்கள், சிவனைத் தவிர வேறு உருவங்களை வெறுப்புடன் நோக்குவர். வைணவ ஆலயங்களுக்குச் செல்லவே மாட்டார்கள். சிவன் கோயிலுக்குச் சென்றாலும் லிங்கத்தை

வணங்கமாட்டார்கள். தீர்த்தம் வாங்கிச் சாப்பிடமாட்டார்கள். ஒவ்வொரு வீரசைவ ஆணும், தமது கழுத்தில் லிங்கம் கட்டியிருப்பார். அவரவர், தம் சொந்த லிங்கத்துக்குத்தான் பூஜை; லிங்கத்தைக் கழுவிய தண்ணீர்தான் தீர்த்தம். முன்காலத்தில் வீரசைவர்கள் கழுத்தில் வெள்ளியினால் செய்த பெரிய லிங்கம் கட்டியிருந்தார்கள்; பக்தியிலும் சிறந்து விளங்கினார்கள்.

"வீரசைவர்களுக்கு முக்கியமானவை எட்டு. அவை, குரு, லிங்கம், ஜங்கமா, மந்திரம், ருத்திராக்ஷம், பிரசாதம், பஸ்மா (விபூதி) பாத உதக்கா (குருவின் திருவடிகளைக் கழுவிய தண்ணீரைக் குடித்தல்)" என்றார் அங்கிருந்த ஒரு வீரசைவ இளைஞர்.

பிரார்த்தனை முடிந்ததும், ஓர் இளைஞர் ருத்ரைய சாஸ்திரிக்கு நன்றி கூறினார். அதற்கு ருத்ரைய சாஸ்திரி பதில் கூறினார். பின்னர் குருசித்த சுவாமி ஆசி கூறினார்.

ருத்ரைய சாஸ்திரி உள்பட, ஒவ்வொருவரும் குருசித்த சுவாமியின் திருவடிகளில் தம் தலையை வைத்துப் பலமுறை உருட்டி வணங்கினர். ஆயிரக்கணக்கான வீரசைவர்கள் கூடும் இடங்களில், பக்தர்கள் சுவாமியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தம் தலைகளை வைத்துப் பலமுறை உருட்டுவார்கள் என்றும், அதனால் சுவாமியின் திருவடி சில சமயங்களில் புண்ணாகிவிடும் என்றும் அறிந்தேன்.

கூட்டம் முடிந்ததும், சுமார் நாற்பது வயதுள்ள சென்ன பாஸப்பா என்பவர், என்னைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். சோமவாரப்பேட்டை கூட்டுறவு பாங்கின் காரியதரிசி சென்ன பாஸப்பா. அதோடு தாம் ஓர் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு என்றும் பெருமையுடன் கூறினார். அன்புடன் பால் கொண்டுவந்து கொடுத்தார். அணைந்திருந்த மின்சார விளக்குகள் மீண்டும் மண்ணெண்ணெய் விளக்குகள்போலப் பிரகாசிக்க ஆரம்பித்தன.

"குத்தித்தூர் பொழுதுபோக்குச் சங்கத்தில் இருக்கிறார். அவரிடம் உங்களைச் சேர்க்கும்படி கணபதி கூறினார்" என்றார் சென்ன பாஸப்பா. இருவரும் புறப்பட்டோம்.

செல்லும் வழியில் "தலைக் காவிரி சென்றிருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"காவிரியில் நாங்கள் ஸ்நானம் செய்து பூஜை செய்வதில்லை. வேடிக்கை பார்ப்பதற்காக அங்கே சென்றிருக்கிறேன்" என்றார் சென்ன பாஸப்பா. குடகு நாட்டின் குல தெய்வமான காவிரியைக்கூட, குடகில் உள்ள வீரசைவர்கள் வணங்குவதில்லை.

பொழுதுபோக்குச் சங்கக் கட்டிடத்தின் தோற்றம், போலீஸ் நிலையக் கட்டிடத்தைப் போன்றிருந்தது. நடுக்கூடத்தில் இரண்டு மேஜைகளில், ஒவ்வொன்றிலும் நான்கு பேர் வீதம் உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தனர். மங்கிய வெளிச்சத்தில் அவர்களுடைய முகங்கள் நன்றாகத் தெரியவில்லை. அமெரிக்காவில் ஒரு சில மாதங்கள் தங்கிவிட்டு, அப்பொழுதுதான் திரும்பிவந்த குடகர் இளைஞர் ஒருவர், அமெரிக்காவையே தாம் விலைக்கு வாங்கிவிட்டதைப்போல அட்டகாசமாகப் பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சூழ்நிலை எனக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. கணபதி வீட்டுக்குச் சென்று, உணவருந்திய பின்னர், அவர் வீட்டிலேயே படுத்து விட்டேன். மறுநாள் காலையில் வழக்கம் போல பலர் கணபதியின் வீட்டுக்குத் தொடர்ந்து வந்தனர்.

லிங்காயத்துகள் குடகு நாட்டின் அரண்மனையை அதாவது அதிகாரத்தை இழந்தது குறித்து குருசித்த சுவாமி கூறியதை ஒரு குடகரிடம் கூறினேன். அதற்கு அவர், "லிங்காயத்துகள் குடகு ராஜ்யத்தை இழந்து விட்டார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்கள் இப்பொழுது மைசூர் ராஜ்யத்தையே ஆளுகிறார்கள். மைசூர் ராஜ்யத்தில் முதன் மந்திரி உள்பட ஐந்துபேர் லிங்காயத்துகள்" என்றார். அந்த ஐவரில் கித்தூர் மல்லப்பா என்பவர் சோமவாரப்பேட்டையைச் சேர்ந்தவர்.

கித்தூர் மல்லப்பா வழக்கறிஞராகத் தொழில் நடத்தினார். குடகு சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். முதலாவது குடகு மந்திரி சபையில் சட்ட மந்திரியாக இருந்தார். மைசூருடன் குடகை இணைத்த பொழுது, மல்லப்பா தம் இனத்தவர்களின் ஆதரவால் மைசூர் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பின்னர் மைசூர் மந்திரி சபையில் தொழில் மந்திரியாக இருந்தார்.

சோமவாரப்பேட்டை கணபதி வீட்டுக்கு வந்த பலரில் ஒக்கலிக இளைஞர் ஒருவர். அவர்களைக் கௌடர்கள் என்றும் அழைப்பர். குடகு நாட்டில் விவசாயம் செய்வதற்குப் போதிய ஆட்கள் இல்லை என்பதற்காக, குடகு ராஜாக்கள் மைசூர் ராஜ்யத்திலிருந்து ஒக்கலிகர்களை வரவழைத்து, அவர்களுக்கு ஜம்மா பூமி கொடுத்தார்கள். அதனால் ஜம்மா குடகர் என்று பெயர் வந்தது. ஜம்மா குடகர்களின் தலைவர் காளப்பா. குடகு நாட்டிலிருந்து மைசூர் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற மூன்று அங்கத்தினர்களில் ஒருவரான கோரன தேவய்யா, ஜம்மா குடகர்.

கணபதி வீட்டுக்கு வந்த மற்றோர் அன்பர் லட்சுமணசிங், பங்களூரிலிருந்து வெளியாகும் "டெக்கான் ஹெரால்டு" (ஆங்கிலம்)

"பிரஜா வாணி" (கன்னடம்) ஆகிய தினப் பத்திரிகைகளின் குடகு ஏஜண்டும் நிருபருமான லட்சுமண சிங்குக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும். அவருடைய முன்னோர் ராஜஸ்தானிலிருந்து சென்னை வந்து குடியேறியவர்கள். லட்சுமண சிங்கின் தந்தை, சென்னை கவர்னரின் மெய்க்காப்பாளராக இருந்தார். ஓய்வு பெற்றபின் குடகில் குடியேறினார். மடிக்கேரியில் வசிக்கும் லட்சுமண சிங் ஒரு வேலையாக சோமவாரப்பேட்டைக்கு வந்திருந்தார். மடிக்கேரியில் ஒரு முறை லட்சுமண சிங்கின் வீட்டுக்குச் சென்று அவர் தாயாரைப் பார்த்தேன். மன்னார்குடியில் பிறந்த அவர், மன்னார்குடியை விட்டுவந்து நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆனதாகக் கூறினார். இளமை நினைவுகளை எல்லாம் அழகிய தமிழில் கூறினார். அருமையான காப்பியும் கொடுத்தார். தமிழர்களைப்போலச் சிறந்த முறையில் தங்களால் காப்பி தயாரிக்க முடியாது என்ற உண்மையைப் பல குடகர்கள் ஒப்புக் கொண்டனர்.

சுறுசுறுப்பான கணபதியிடம் விடை பெற்றேன். இவ்வளவு தினசரி வேலைகளுக்கு இடையிலும், கணபதி இரவு நேரத்தில் படித்து பி.ஏ. பரீட்சை எழுதுவதற்குப் புத்தகங்கள் வாங்கிப் பயின்று கொண்டிருந்தார்.

குத்தித்தூரும் நானும் காலை பத்து மணிக்கெல்லாம் புறப்பட்டோம். நாலைந்து மைல்தூரம் வந்ததும், கார் 'தகராறு' செய்ய ஆரம்பித்தது. கடக் கடக் என்ற சத்தம் அடிக்கடி கேட்டது. ஆமை வேகத்தில் சிறிது தூரம் வந்தோம். "மடிக்கேரி போய்ச் சேர்வோம் என்ற நம்பிக்கை இல்லை" என்றார் குத்தித்தூர். "ஆண்டவன் மீது நம்பிக்கை வையுங்கள். நிச்சயம் மடிக்கேரியில் நம்மைச் சேர்ப்பார்" என்றேன். பகல் ஒன்றரை மணிக்கு மடிக்கேரி நகருக்குள் வந்து சேர்ந்தோம். ஆண்டவன் அருளை எண்ணியபோதிலும், குத்தித்தூருக்கும் எனக்கும் திறமையாகச் சமாளித்து விட்டோம் என்ற எண்ணமும் ஏற்பட்டது. உடனே படீர் என்ற சத்தம் கேட்டது. காரில் கீழேயுள்ள இரும்புக் கம்பி முறிந்தது; கார் அப்படியே உட்கார்ந்து விட்டது. யாருக்கும் சேதமில்லை. பலர் உதவிக்கு ஓடிவந்தனர். கார் உட்கார்ந்த இடத்துக்கு எதிரே, மோட்டார் பழுது பார்க்கும் பட்டறை ஒன்று இருந்தது. பழுது பார்ப்பதற்காகக் காரைப் பட்டறையில் விட்டுவிட்டு, குத்தித்தூரும் நானும் அவருடைய காரியாலயத்துக்கு நடந்து சென்றோம்.

★ ★ ★

பொயிலே பொயிலே

கொட்டுடா மேதா நீ ஊது புலையா பொயிலே பொயிலே
ஊர்டா மந்துல் கோலுக் களிஞ்சா ” ”
நாடு பரம்பலு கோலுக் களிஞ்சா ” ”
தேவ பரம்பலு கோலுக் களிஞ்சா ” ”
இக்குதப்ப ண்டா கோலாட்ட கொப்பு ” ”
மாதேவப் பண்டா கோலாட்ட கொப்பு ” ”
பய்தூர் அப்பண்டா கோலாட்ட கொப்பு ” ”
கொட்டு மரியனே கோலு மரிஞ்சா ” ”
கோலு மரியனே பாலா மரிஞ்சா ” ”
பாலா மரியனே பாளி மரிஞ்சா ” ”
கோலாட்டக் கொப்புலு கோலு முறிஞ்சா ” ”
கோலாட்டக் கொப்புக்கு பாதூரே கோலு ” ”

குடகர்களின் முக்கியமான திருநாள் ஹூத்ரி; அதாவது அறுவடைத் திருநாள். தமிழர்களுக்குத் தைப்பொங்கல் எப்படியோ, அதைப்போல குடகர்களுக்கு ஹூத்ரி.

ஆண்டுதோறும் பெரும்பாலும் நவம்பர் மாதத்தில் ஹூத்ரி கொண்டாடுவார்கள். எட்டு நாட்கள் வரை தொடர்ந்து நடக்கும். எங்கும் ஆடல் பாடல்கள்தான். ஊரு மந்து அதாவது ஊர் மைதானத்தில் கோலாட்டம் நடைபெறும். கோலாட்டம் என்றால் தமிழ் நாட்டில் உள்ளதைப்போன்று பெண்கள் ஆடும் விளையாட்டு அன்று. நீளமான கோல்களை வைத்துக் கொண்டு ஆண்கள் விளையாடுவார்கள். பெண்கள் வேடிக்கை பார்ப்பார்கள். அதனைக் கோலுகளி அல்லது கோலாட்டம் என்பார்கள். நாடெங்கும் பொயிலே பொயிலே என்று முழங்கும் பாட்டைக் கேட்கலாம்.

ஹூத்ரி நடனங்களைப் பார்ப்பதற்கென்றே இரண்டாவது முறை குடகு சென்றேன். எப்பொழுது ஹூத்ரி ஆரம்பம் என்று மூன்று குடகர் நண்பர்களுக்குத் தனித் தனியே எழுதினேன். மூ வரும் மூன்று வெவ்வேறு தேதிகளைக் குறிப்பிட்டு எழுதினார்கள்.

பத்தொன்பதாம் தேதி என்றார் ஒருவர்; இருபதாம் தேதி என்றார் மற்றொருவர்; இருபத்தோறாம் தேதி என்றார் பிறிதொருவர்.

ஆரம்பத்திலேயே குழப்பம் ஏற்பட்டதால் பதினெட்டாம் தேதியே குடகு சேரத் திட்டமிட்டேன். பதினேழாம் தேதி காலையில் பங்களூர் சேர்ந்தேன். அன்றிரவு பெரம்புகொல்லி தோட்ட நிர்வாகி ஸ்ரீ சுப்பிரமணியன் பங்களூர் வந்து சேர்ந்தார்.

"இருபதாம் தேதி இரவுதான் ஹுத்ரி என்று பல்லசண்ட அப்பையா கூறியனுப்பியுள்ளார். நாளைய தினம் காரைப் பழுது பார்ப்பதற்காக, கம்பெனியில் விட முன்கூட்டியே ஏற்பாடு செய்துள்ளேன். நாளை மாலையே கார் திரும்பக் கிடைத்துவிடக் கூடும். பத்தொன்பதாம் தேதி பகல் உணவுக்குப் பெரம்புகொல்லி சென்று விடலாம்" என்றார் சுப்பிரமணியன்.

இருபதாம் தேதி மாலை 4 மணிக்குத்தான்-பலரைக் கொண்டு சிபார்சு செய்ததின் பயனாக-கார் கிடைத்தது. மாலை ஐந்தரை மணிக்குப் புறப்பட்டோம். வழியில் உணவருந்தினோம். பின்னர் மைசூருக்குள் நுழையாமலேயே, சித்தாபூருக்குக் காட்டின் வழியே செல்லும் சாலையில் சென்றோம். குடகில், மூன்றில் ஒரு பங்கு காடு. நாங்கள் சென்றுகொண்டிருந்த பகுதியை ஆனைக்காடு என்று கூறுவார்கள். மாலை ஆறு மணிக்குமேல் சாதாரணமாக யாரும் அந்த வழியில் செல்வதில்லை.

"ஒரு சமயம் அதிகாலையில் இந்த வழியாக மைசூர் சென்றோம். சுங்கச் சாவடி தாண்டி சிறிது தூரம் சென்றதும், நடுச் சாலையில் ஒரு யானை மூங்கில் மரங்களை ஒடித்துச் சாலையின் குறுக்கே போட்டுக் கொண்டிருந்தது. அதனைத் தூரத்திலேயே கண்டார் எங்கள் கார் ஓட்டுபவர். உடனே அவர் காரை நிறுத்தி, வேகமாகப் பின்னுக்கு ஓட்டி, அதிக தூரம் பின்வாங்கினார். அரை மணி நேரம் கழித்து, அவ்வழியாக ஒரு லாரி வந்தது. லாரிச் சத்தத்தைக் கேட்டதும், யானை காட்டுக்குள் ஓடிப்போய்விட்டது. லாரியிலிருந்த பத்துப் பதினைந்து பேர் கீழே இறங்கி, வழியில் இருந்த மரங்களை அப்புறப்படுத்தினர். பின்னர் அவர்கள் எங்களை வரும்படி சைகை செய்தனர். நாங்கள் செல்லுகிற வரையில் லாரியை அங்கேயே நிறுத்தி வைத்தனர். லாரி சென்று விட்டால், யானை ஒருவேளை மீண்டும் திரும்பி வந்து எங்கள் சிறிய காருக்கு அபாயத்தை உண்டாக்கலாம் என்று கருதி அவ்வாறு உதவி செய்தார்கள்" என்றார் சுப்பிரமணியன்.

அவர் இந்த விவரங்களைக் கூறியபொழுது இரவு மணி பத்தரை; காட்டுப் பகுதியை இன்னும் தாண்டவில்லை. காரில் போதிய பெட்ரோல் இருக்கிறதா என்ற சந்தேகம் கார் ஓட்டுபவருக்கு

ஏற்பட்டது. அந்தச் சந்தேகத்தைத் தம் மனத்துக்குள்ளே வைத்திராமல் எங்களிடம் சொல்ல ஆரம்பித்தார். எல்லோருக்கும் உள்ளூர அச்சம்தான். காவிரி அம்மனின் திருவருளால் இரவு பன்னிரண்டு மணிக்குப் பெரம்புகொல்லி சேர்ந்தோம்.

இரவில் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலை ஒன்பது மணிக்குள் ஹுத்ரி பார்ப்பதற்காக குட்டா செல்ல வேண்டும். பெரம்புகொல்லியிலிருந்து குட்டா சுமார் நாற்பது மைல். காலை ஐந்து மணிக்கே எழுந்து, பிரயாணத்திற்குத் தயாரானேன். காலை ஏழு மணிக்கு எஸ்டேட் குமஸ்தா ஒருவர் எனக்கு ஏற்கெனவே வந்திருந்த கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார். குட்டாவிலிருந்து செக்கீர பொன்னப்பா எழுதிய கடிதம் அது. "ஹுத்ரி தேதியில் குழப்பம் ஏற்பட்டது. இருபத்தொன்றாம் தேதிக்குப் பதிலாக இருபதாம் தேதி காலையில் ஹுத்ரி ஆரம்பம். இருபதாம் தேதியே வந்துசேருங்கள். உங்கள் வருகையை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன். வரும்பொழுது புகைப்பட காமிரா கொண்டு வருவீர்கள் என்று நம்புகிறேன். எதற்கும் எனது காமிராவில் பிலிம் மாட்டித் தயாராக வைத்திருக்கிறேன்" என்பது கடிதத்தின் வாசகம். தேர்த் திருவிழாவுக்கு மறுநாள் சென்றவன் நிலை எனக்கு ஏற்பட்டது. கார் பிரயாணத்துக்கு ஆசைப்பட்டு ஹுத்ரியைப் பார்க்காமல் போய்விட்டோமே என்று வருந்தினேன்.

"செட்டியார் ஹுத்ரிக்கு ஏன் வரவில்லை? என்று என் குழந்தைகள் கேட்டார்கள்" என்று சொல்லிக் கொண்டே பல்லசண்ட அப்பையா வந்து சேர்ந்தார். எனது கதையை அவரிடம் கூறினேன்.

"ஹுத்ரி நடனங்கள் நாடெங்கும் எட்டு நாட்கள் வரை நடைபெறும். ஒவ்வோர் ஊரிலும் ஒரு நடனம் தான் உண்டு. எட்டு நாட்களில் ஏதாவது ஒரு நாள் நடைபெறும். இன்னும் இரண்டு நாட்களில் கடங்கமுரூரில் கோலாட்டம். காலையிலேயே அங்கு சென்று, மாலையில் திரும்புவோம்" என்றார் பல்லசண்ட அப்பையா.

ஹுத்ரி என்பது புடியரி அதாவது புது அரிசி என்னும் வார்த்தையின் சிதைவு என்றார் ஒரு குடகர்.

ஹுத்ரிக்காக ஒவ்வொரு குடகர் வீட்டையும், சுத்தம் செய்து வெள்ளையடித்து, மெழுகிக் கோலமிட்டு வைப்பார்கள். வீடுகளில் முக்கிய இடங்களில் நெற்பயிர்களைத் தோரணங்களாகக் கட்டித் தொங்கவிடுவார்கள். அதிகாலையில் அனைவரும் எழுந்து நீராடி, புதிய ஆடை அணிந்து, அலங்காரம் செய்துகொண்டு நடு வீட்டில், உள்ள குத்து விளக்கை வணங்கிப் பிரார்த்தனைச் செய்வார்கள்.

பிரார்த்தனைக்குபின், ஒருவர் புனிதமான மண் விளக்கைத் தட்டில் ஏந்திக்கொண்டு முன்செல்ல மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்து வயலுக்குச் செல்வார்கள். வயலை அடைந்ததும், அவர்களிலே குறிப்பிட்ட ஒருவர், கிழக்கு நோக்கி நின்று, பிரார்த்தனை செய்து முதலாவது அறுவடை செய்வார். அப்பொழுது துப்பாக்கி வேட்டு ஒன்று வெடிப்பார்கள். அனைவரும் "போலி போலி தேவா" என்று உரக்கக் கூறுவார்கள். எங்கும் ஒரே ஆரவாரம். பின்னர் வாத்தியங்கள் முழங்க வீட்டுக்கு வருவார்கள். முதலாவது அறுவடை செய்தவருக்குத் தனி மரியாதை உண்டு. அவர் வீட்டுக்கு வந்ததும், அவருடைய பாதங்களைக் கழுவி, அவருக்குப் பால் கொடுப்பார்கள். எல்லோரும் நடு வீட்டில் குத்துவிளக்குமுன் கூடி வணங்குவார்கள். ஹூத்ரிக்கான விசேஷ உணவு ஹூத்ரி காளஞ்சி அல்லது தம்புட்டு என்பது, வறுத்த அரிசி மாவும் வாழைப்பழமும் கலந்த சுவையான உணவு, ஹூத்ரியைப் பற்றிக் கேள்வியுற்றேனே தவிர நேரில் பார்க்க முடியவில்லை.

குறிப்பிட்ட நாளில், பல்லசண்ட அப்பையாவுடன் காலை பதினொரு மணிக்குக் கடங்கமுரூர் சென்றேன். பல்லசண்ட அப்பையா குடும்பம் தான் ஊரு தக்கா; நாடு தக்கா. எனவே ஊரில் உள்ள அனைவருக்கும் அன்று அவ்வீட்டில் விருந்து. அதற்கு ஊர் ஓர்மை அதாவது ஊர் ஒற்றுமை விருந்து என்று பெயர். அந்த ஊரில் மொத்தம் ஆறு குடும்பங்கள் தான். விருந்துக்கு வந்தவர் தொகை சுமார் முப்பது.

வீட்டுக்குச் சென்று படிக்கட்டில் ஏறியதும், ஓர் அம்மையார் ஒரு செம்பில் தண்ணீரும், சலவை செய்த துவாலை ஒன்றும் கொண்டுவந்து வைத்தார். கைகால் முகம் கழுவி, துடைத்துக் கொண்ட பின்னர்தான் வீட்டுக்குள் செல்ல வேண்டும். அது குடகர் வழக்கம்.

ஊரில் உள்ள இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு, ஊரு தக்கா வீட்டின் நடுமுற்றத்தில் நடனமாடுவது வழக்கம். அவர்களுக்கு ஊரு தக்காவும், மற்றும் உள்ளூர்க்காரர்களும் நன்கொடை வழங்க வேண்டும். அன்று நடனமாட வந்தவர்கள் ஐந்து கோஷ்டியினர். ஒவ்வொரு கோஷ்டியிலும் இருவர். அவர்களில் பிராமண வகுப்பைச் சேர்ந்த கணவனும் மனைவியுமாக நடித்த இளைஞர்கள்தான், எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றனர். மனைவியாக நடித்த இளைஞனின் தோற்றமும், பாட்டும், பேச்சும், நடிப்பும் முதல்தரமாக இருந்தது. நான்கு பேர் உடுக்கை போன்ற மத்தளத்தை அடித்துக்கொண்டு பாடினர். பாட்டுக்குத் தக்கபடி நடிகர்கள் ஆடினர். இரண்டு இளைஞர்கள் மாப்பிள்ளா முஸ்லிம்கள்

வேடம் பூண்டு அட்டகாசம் செய்தனர். இருவரும் குடிவெறியில் இருந்ததால், கட்டுக்கடங்காமல் ஆடினர். சில சமயங்களில் தமிழ் நாட்டு முதலியார் போலவும், அவர் மனைவி போலவும் வேடம் போடுவார்கள் என்று கேள்வியுற்றேன்.

வீட்டுக்குள் நடனங்கள் முடிந்ததும், வெளியே நடனமாடினர். ஹரிஜனங்களின் சங்கீதத்தைப் பின்னணியாகக்கொண்டு ஆடுகின்ற பாம்பு நடனம் சர்வ சாதாரணம். அதில் இளைஞர் முதல் பெரியோர்வரை ஆண்களும், பெண்களில் சிறுமிகள்மட்டும் கலந்து கொள்வார்கள். அதற்குப் பயிற்சி ஒன்றும் கிடையாது; தேவையுமில்லை. ஒவ்வொருவரும் தம் மனம்போன போக்கின்படி உடம்பையும் கைகால்களையும் வளைத்து ஆடினர்.

உணவுக்குமுன், பல்லசண்ட அப்பையாவுடனும், அவருடைய நண்பர்கள் சிலருடனும் சேர்ந்து ஊரு மந்து சென்றேன். கோலாட்டத்திற்குமுன் ஐந்து இரவுகள் ஊரு மந்துவில் பயிற்சி நடைபெறும். பயிற்சியைக் குடகர்கள் ஈடு என்று சொல்லுகின்றனர். ஐந்து இரவுகளில், ஏதாவது இரண்டு இரவுகளில், ஈடில் ஈடுபட்டவர்களுக்கு ஊரு தக்கா உணவளிக்க வேண்டும்.

ஊரு தக்கா வீட்டில் நடைபெற்ற பொது விருந்தில் நான் கலந்து கொள்ளவில்லை. பல்லசண்ட அப்பையா, தமது சகோதரர் மனைவியிடம் கூறி, எங்களுக்குத் தனியே சமையல் செய்ய ஏற்பாடு செய்திருந்தார்.

உணவுக்குப்பின் சிறிது நேரம் ஓய்வு. பிற்பகல் நான்கு மணிக்கு பல்லசண்ட தேவய்யா-அவர்தான் ஊரு தக்காவும் நாடு தக்காவும்-நாட்டுடை அணிந்து ஊர்வலம் புறப்பட்டார். அவருக்கு முன்னே, ஹரிஜனங்கள் கொம்பு தப்பட்டை முழக்கிக்கொண்டு சென்றனர். சுமார் மூன்று பர்லாங் தூரத்தில் உள்ள நாடு மந்து என்றும் மைதானத்தை ஊர்வலம் அடைந்தது. வழியில் குறிப்பிட்ட இடங்களில், ஒவ்வொரு வீட்டுக்காரர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். அது எத்தனையோ ஆண்டுகளாக நடைபெற்று வரும் வழக்கம்.

நாடுமந்து, ஓர் அழகிய பெரிய மைதானம். சுமார் ஐயாயிரம் பேர் உட்கார வசதி உண்டு. அன்று வந்தவர் தொகை சுமார் நானூறு. மைதானத்தை அடைவதற்குப் பல திசைகளிலிருந்து நாலைந்து நடைபாதைகள் இருந்தன. ஒரே ஒரு பாதையில் மட்டும் தான் கார் வரலாம். மைதானத்தில் இரண்டு கார்களை நிறுத்தி யிருந்தனர்.

ஒவ்வொரு திசையிலிருந்து ஒவ்வோர் ஊர்க்காரர்கள் மேள வாத்தியங்களுடன் வந்தனர். சில திசைகளிலிருந்து ஒன்றன்பின்

ஒன்றாக இரண்டு ஊர்வலங்கள் வந்தன. கொம்பு தப்பட்டையுடன் வந்த ஊர்வலங்களில் முதல் வரிசையில் நான்குபேர் கைகளில் உடுக்கையுடன் பாட்டுப்பாடிக்கொண்டு வந்தனர். அடுத்த வரிசையில் நான்கு பேர் கோல்விளையாட்டு விளையாடிக் கொண்டு வந்தனர். அவர்களின் பின்னே, அந்த ஊர் ஆண்கள் வந்தனர். அதற்குப் பின்னர், நாடு தக்கா கம்பீரமாக நடந்து வந்தார். எல்லோரும் நாட்டுடை அணிந்திருந்தனர். நாடு தக்காவுக்குப் பின், அந்த நாட்டுப் பெண்களும், குழந்தைகளும் நன்கு அலங்காரம் செய்து கொண்டு வந்தனர்.

ஊர்வலமாக வந்த ஒவ்வோர் ஊர்க்காரர்களும், மைதானத்தின் நடுவில் இருந்த மரத்தடிக்குச் சென்று, தாம் கொண்டுவந்த உடுக்கைகளை மரத்தடியில் வைத்துவிட்டு, அனைவரும் கிழக்கு நோக்கி நின்று ஒரு நிமிஷம் பிரார்த்தனை செய்தனர். பிரார்த்தனை முடிவில், அனைவரும் தங்கள் தலைப்பாகையைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு, "போலி போலி தேவா" என்று உரக்கக் கூறினர். பின்னர் மைதானத்தின் கோடியில் அதற்காகவே அமைக்கப் பெற்றிருந்த ஒரு சிறு பந்தல் அருகில் வந்து கூடினர். ஏற்கெனவே அங்கு வந்திருந்தவர்களுடன் கால்பிடி மரியாதைசெய்தனர். அம்மாதிரி ஏழு ஊர்க்காரர்கள் தனித்தனியாக பல திசைகளிலிருந்து ஊர்வலமாக வந்துசேர்ந்தனர்.

"ஒய்ம்பது ஊருக்கார வந்து கோல்களி டான்ஸ்" என்றார் பல்லசண்ட அப்பையா.

ஒவ்வொருசீமைக்கும் இரண்டு சீமை தக்கா உண்டு. ஆனால் குறிப்பிட்ட ஒருவர்தான் வருவார். சீமை தக்கா வந்துதான் ஆட்டம் தொடங்கவேண்டும். அது பல நூற்றாண்டுகளாக இருந்து வரும்முறை.

சீமை தக்காவுக்காக அரை மணி நேரம் காத்திருந்தனர். சீமை தக்கா வரவில்லை. நேரமாகிக் கொண்டிருந்தது. ஏற்கெனவே வந்திருந்த ஏழு ஊர் தக்காக்களும், இரண்டு நாடு தக்காக்களும் கூடிப் பேசி கோலாட்டம் ஆரம்பிப்பது என்று முடிவு செய்தனர். முதலில் ஏழு பேர், மரத்தடிக்குச் சென்று இறைவனை வழிபட்டனர். பின்னர் எல்லோரும் சேர்ந்து ஒரு வட்டமாக அமைந்து கோல்களி தொடங்கினர். கோலாட்டத்தில் பங்குகொண்டவர் சுமார் ஐம்பது பேர் இருக்கும். மொத்தம் ஏழு வகையான ஆட்டங்கள் உண்டு. அன்று மூன்று வகையான ஆட்டங்கள்தான் ஆடினர். ஆடியவர்களில் ஒருவர், அறுபது வயதான ஏ.சி. திம்மையா, அவர் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் பயின்றவர். கேம்பிரிட்ஜ் மல்யுத்த விளையாட்டில் வெற்றி பெற்றவர். குடகர்களிலேயே

பெரிய தோட்ட முதலாளி. மேலை நாட்டு நாகரிகளில் மூழ்கிய குடும்பங்களில் ஒன்று ஏ.சி. திம்மையா குடும்பம். ஆட்டத்தின் இடைவெளியின்போது அவரிடம் சென்று பேசினேன். சென்னை நண்பர் ஒருவர், திம்மையாவுக்கு ஏற்கெனவே ஓர் அறிமுகக் கடிதம் கொடுத்திருந்தார்.

மைதானத்தில் ஆடுபவர்களும் சரி, வேடிக்கை பார்ப்பவர்களும் சரி, வெறும் காலுடன் தான் செல்ல வேண்டும். மைதானத்தை மிகப் புனிதமான இடமாகப் போற்றுகிறார்கள்.

ஆட்டம் தொடங்கிச் சிறிது நேரம் சென்றதும், சீமை தக்கா கம்பீரமாக ஊர்வலம் வந்தார். அவருக்கு உரிய மரியாதைகளைச் செய்தனர். அவர் வந்ததும், சிறு அலங்காரப் பந்தலில் அவருக்குப் பாய் விரித்தனர். மூன்று பிராமணர்கள் சீமை தக்காவை ஆசீர்வதித்து, தாம் கொண்டு வந்த தங்கள் தங்கள் கோயில் பிரசாதங்களைக் கொடுத்து மாலையிட்டனர். ஒவ்வொரு பிராமணருக்கும் சீமைதக்கா ஒவ்வொரு பணம் அதாவது மூன்றணாக் கொடுக்க வேண்டும். பந்தல் அமைத்தவர்களுக்கு ஒன்றரை ரூபாய் கொடுக்க வேண்டும. பந்தல் அமைத்தவர்கள் அவ்வேரி என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பந்தல் அமைக்கும் உரிமை அவர்களுக்குத்தான்.

சீமை தக்கா மாத்தாண்ட பொன்னப்பாவுக்கு உடல் நலமில்லாததால் அவர் தமது இளைய சகோதரர் மாத்தாண்ட செங்கப்பாவை அனுப்பியிருந்தார்.

சீமை தக்கா மாத்தாண்ட செங்கப்பா பாயில் அமர்ந்தார். அவருக்கு இரு புறங்களிலும் இரண்டு நாடு தக்காக்கள் அமர்ந்தனர். பின் வரிசையில் ஊர் தக்காக்கள் அமர்ந்தனர். மற்றவர்கள் யாருக்குமே உட்காரும் உரிமையில்லை. நின்றுகொண்டுதான் பேச வேண்டும். ஏ.சி.திம்மையா தக்கா இல்லை. ஆகையால் நின்று கொண்டே பேசினார்.

சீமை தக்கா நேரில் பேசுவதில்லை. அவர் தம் கருத்தை நாடு தக்காவிடம் சொல்லுவார். நாடு தக்கா எழுந்து நின்று சீமை தக்கா இவ்வாறு சொல்லுகிறார் என்று சபையோருக்குச் சொல்லுவார்.

தாம் வராமல் எப்படி ஆட்டம் தொடங்கலாம்? என்றார் சீமை தக்கா. "தாங்கள் வர நேரமாயிற்று. எனவே கூடியிருந்தோர் முடிவு செய்தனர்" என்றனர் சபையினர். வாதங்களும் வாதப் பிரதிவாதங்களும் நடைபெற்றன. அப்பகுதியில் வாழும் குடகர் சமூகத்துக்கு அதுதான் சுப்ரீம்கோர்ட். "எப்போதும் வாக்குவாதம், வாக்குவாதம் தான். சந்தோஷமாக விளையாட வந்திருக்கிறோம். சீமை தக்கா பஞ்சாயத்துக்கு வந்தால் காத்திருக்க வேண்டும்.

விளையாட்டுக்கு ஏன் காத்திருக்க வேண்டும்? எது எப்படியானாலும் நான் ஆட்டம் ஆடிவிட்டேன். அது போதும்'' என்று கரும்புத்துண்டு ஒன்றைக் கடித்துச் சுவைத்துக்கொண்டே கூறினார் ஏ.சி.திம்மையா.

“சீமை தக்காவுக்கு நல்ல பாடம். அடுத்த ஆண்டில் தாமதமாக வரமாட்டார். உரிய காலத்திற்கு முன்பாகவே வந்துவிடுவார்'' என்றார் பல்லசண்ட அப்பையா.

வாக்குவாதத்தில் இரண்டு கட்சிகள்; ஒன்று பழங்காலத்து முறை, மற்றொன்று புதிய ஜனநாயகம். மாலை ஐந்தே முக்கால் மணிவரை வாக்குவாதம் முடியவில்லை. சூரியனும் அஸ்தமிக்கத் தொடங்கி விட்டான். நாங்கள் புறப்பட்டோம். ஊரெல்லாம் கோலாட்டம் பார்க்கத் திரண்டிருந்தது. ஆனால் நாங்கள் வரும் வழியில் ஊரு மந்துவில் பத்து குடகர் இளைஞர்கள் ஹாக்கி விளையாடிக் கொண்டிருந்தனர்!

ஞாயிறு பிற்பகல் மூன்று மணிக்கு மடிக்கேரியில் மான் மைதானத்தில் நடனம் நடைபெறவிருந்ததை அறிந்து அங்கு சென்றேன்.

அப்பொழுது கோலாட்டம் ஆரம்பமாகி விட்டது. சுமார் ஆயிரம் பேர் கூடியிருந்தார்கள். மைதானத்தில் ஒரு புறத்தில் நாற்காலிகளிலும், பெஞ்சுகளிலும் பிரமுகர்கள் உட்கார்ந்திருந்தனர்.

காரிலிருந்து இறங்கி தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். கூட்டத்திலிருந்து இரண்டு இளைஞர்கள் என்னிடம் வந்து, “உங்களை ஒருவர் கூட்டிவரச் சொல்லுகிறார்'' என்றனர். அவர்களைப் பின் தொடர்ந்தேன்.

அறுபத்து மூன்று வயதான நெரவண்ட குட்டப்பா என்னை அன்புடன் வரவேற்றார். “அரை மணி நேரமாக உங்களையே தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்றார் அவர். விளையாட்டுக்கள் முடியும் வரையில் என் அருகிலேயே இருந்து ஒவ்வொன்றையும் விளக்கிக் கூறினார். எனக்குப் பின்னால் குடகர் சமூகத்தைச் சேர்ந்த கல்லூரிமாணவிகள் சிலர் மேனாட்டு உடையணிந்து நின்றுகொண்டிருந்தனர். அவர்களும் என்னைப்போலவே எல்லா நிகழ்ச்சிகளையும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

முதலில் கோலாட்ட நடனம் நடைபெற்றது. அதிலேயே பல்வேறு வகையான ஆட்டங்கள். பங்கு கொண்டோர் சுமார் ஐம்பது பேர். அனைவரும் சேர்ந்து பாடினர்.

பின்னர் சவரி நடனம். சவரி செண்டுகளைக் கைகளில் ஏந்தி நடனமாடினர்.

முக்கியமானது வாள் நடனம். ஒவ்வொருவரும் கைகளில் இரண்டு வாள்களை ஏந்தி-ஒன்று பெரிது, ஒன்று சிறிது-கோலாட்டம் போலவே வாளாட்டம் ஆடினர். அதில் பங்கு கொண்டோர் சுமார் இருபது பேர்தான். எல்லோரும் பயிற்சிபெற்ற கிராமவாசிகள்.

“வாள் நடனம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. நிறையப் பயிற்சி வேண்டும். ஒருவர் ஓர் அடி தப்பினால் காயம் ஏற்பட்டுவிடும். மிகவும் அபூர்வமாக நடைபெறுவது இந்த வாள் நடனம்” என்றார் நெரவண்ட குட்டப்பா.

அந்நாளில் குடகர்கள் சிலர், வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக, வாள் நடனத்தில் எதிரிகளை வெட்டி விடுவார்களாம். ஏதாவது சண்டை நேரிட்டால், “உன்னை ஊரு மந்துவில் ஒரு கை பார்க்கிறேன்” என்பார்களாம்.

ஆட்டம் நடந்துகொண்டிருந்தபொழுது, நாற்காலி பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தவர்களுக்குத் தேநீர்வழங்கினர். பின்னர் ஆட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் தேநீர் வழங்கினர்.

மாலை ஐந்தரை மணிக்கு ஆட்டம் முடிந்தது; கூட்டமும் கலைந்தது.

“ஒப்பிச்சிட்டு வாரேன்” என்றார் நெரவண்ட குட்டப்பா.

“எதை?” என்று கேட்டேன்.

தம் கையிலிருந்த இரண்டு கோல்களைக் காட்டி, “இவை கொடவ சமாஜத்தைச் சேர்ந்தவை. அவர்களிடம் சேர்ப்பிக்கவேண்டும்” என்றார். அப்பொழுது அங்கிருந்த கொடவ சமாஜத் தலைவர் செங்கப்பாவை அறிமுகப்படுத்தினார். எழுபது வயதுள்ள செங்கப்பா அன்புடனும் உற்சாகத்துடனும் பேசினார்.

குடகை விட்டு வரும்போது எனக்கு வருத்தம்தான். குடகர்களுடைய அன்பையும் விருந்தோம்பலையும் எவ்வாறு மறக்க முடியும்?

குடகு நாட்டில் என்ன அதிசயத்தைக் கண்டீர்கள் என்று யாராவது கேட்டால் சுலபமாகப் பதில் சொல்லி விடலாம். அந்நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லை!

விரும்பத்தக்க நற்பண்புள்ள மக்கள் குடகர்கள்.

அவசியம் பார்க்கவேண்டிய அழகான நாடு, குடகு.

★ ★ ★

1. குடகு
2. தமிழகம்
3. சதுரகராதி
4. வள்ளுவம்
5. கோபுர தீபம்
6. நீதி நூல்கள்
7. மொழிவளம்
8. கல்வி நிலை
9. இசைத்தமிழ்
10. ஔவையார்
11. முத்தொள்ளாயிரம்
12. லெனின் வாழ்கிறார்
13. பழந்தமிழர் நாகரிகம்
14. புகழேந்தி நளன் கதை
15. இலக்கியக் கட்டுரைகள்
16. வெளிச்சத்தை நோக்கி...
17. பாரதியின் புதிய ஆத்திசூடி
18. தமிழர் திருமணத்தில் தாலி
19. சங்கப் புலவர் சன்மார்க்கம்
20. கனவுகளின் பலாபலன்கள்
21. பாரதிதாசனின் சிறு கதைகள்
22. சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
23. அண்ணா போற்றிய பெருமக்கள்
24. தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு
25. புதுமைப்பித்தன் கதைகள் விமர்சனங்களும் விஷமதனங்களும்
26. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா
27. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்

T156

தமிழ் வளர்ச்சித் துறை

100.00